திருநறுங்கொண்டை வரலாறு

ஏ. ஏகாம்பரநாதன்



ஜைன இளைஞர் மன்றம்
சென்னை-17

மன்றவெளியீடு : 25

திருநறுங்கொண்டை வரலாறு

டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன்,
எம்.ஏ.(தொல்லியல்),எம்.ஏ. (வரலாறு), பிஎச்.டி.,
தொல்லியல் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-5.

ஜைன இளைஞர் மன்றம்
சென்னை-17.
1988

விலை. ரூ. 15-00

இந்நூலினை ஆய்வு நோக்கில் ஆக்கித்தந்த **டாக்டர் ஏகாம்பர நாதன்** துடிப்புமிக்க தொல்லியல் ஆய்வாளர். அவர் எட்டு ஆண்டு களுக்கு முன்னர் **''கல்வெட்டில் சமணம்''** எனும் நூலினையும் மன்றத்திற்கு ஆக்கித்தந்து உதவினார்கள். மேலும் **''சித்தாமூர் வரலாறு''** மற்றும் ''Jaina Inscription in Tamilnadu'' எனும் நூலினையும் சிறப்பாக எழுதியுள்ளார்கள். ஜைனஇயல் துறையில் ஈடுபாடு கொண்டு சமண நினைவுச்சின்னங்களை வரலாற்று அடிப் படையில் பாதுகாக்க முற்பட்டுள்ள டாக்டர் ஏகாம்பரநாதனுக்குத் தமிழ்நாட்டுச் சமணர்கள் என்றும் கடமைப்பட்டவர்கள். அவருக்கு தமிழ்நாட்டுச் சமணர்கள் சார்பில் மன்றம் பாராட்டுதல்களையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறது. அவரது ஆய்வுப்பணி மேலும்சிறப்புற வாழ்த்துகிறது.

ஜைனம் காட்டிய இல்லறநெறியின் அங்கமாக விளங்கும் சாஸ்திரதானம் எனப்படும் கல்விக்கொடை சிறப்பான ஒன்றாகும். ஜைன இல்லற நெறியினர் தங்களது வருமானத்தில், நான்குவித தானங்களாகிய அபய, அன்ன, ஔஷத, சாஸ்திர தானங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது அறவோர் காட்டிய பெருநெறி யாகும். இவற்றுள் சாஸ்திரதானம் பொருட்டு இந்நூலின் வெளி யீட்டிற்கென நன்கொடை வழங்கி ஊக்குவித்தவர்களுக்கு, மன்றம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சமணச்செம்மல் திரு. அ. ஜெ. அப்பாவு ஜெயின் அவர்கள் தலா ரூ 1001/ம்; **திருப்பறம்பூர் பொறியாளர் விஜயகீர்த்தி** B.E,M.Sc., செஞ்சி ஓய்வுபெற்ற ஆசிரியை **செல்வி. மதனசுந்தரி,** வேதாரண்யம் **சுவஸ்திக் புகையிலை தொழிற்சாலை** ஆகியோர் தலா **ரூ.** *500*/ம் நன்கொடை அளித்து இந்நூல் வெளிவர துணைநின்றனர் என்பதை மன்றம் நன்றிகலந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறது.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த எஸ். தன்யகுமார் அச்சகத்தாருக்கு நன்றி.

தமிழகம் இந்நூலை ஏற்றுப் போற்றும் என நம்புகிறோம்.

ஜைன இளைஞர் மன்றம்

முன்னுரை

தமிழகத்தில் வாழும் திகம்பரப்பிரிவு சமண சமயத்தவரால் போற்றப்பட்டு வரும் கோயில்களுள் முதன்மை வாய்ந்தது திருநறுங்கொண்டையிலுள்ள அப்பாண்டைநாதர் கோயிலாகும். ஓராயிரம் ஆண்டிற்கு மேற்பட்ட வரலாற்றினையுடைய இக்கோயிலுக்குத் தமிழகத்தை அரசோச்சிய பல அரசபரம்பரையினர் ஏராளமான தானங்களை அளித்து அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்துள்ளனர். அருளறம் பூண்ட அண்ணலார் **வீரசங்கம்** நிறுவி அறநெறிபோற்றியதும், திருப்பருத்திக்குன்றத்திலிருந்த சைன மடம் வீழ்ச்சியுற்ற பின்பு அது புத்துயிர் பெற்றதும் திருநறுங்கொண்டையில்தான். அனந்தவிசயர் போன்ற அரும்புலவர்கள் பாமாலை சூட்டிப்படைத்து மகிழ்ந்ததும் இங்கு எழில்கோலம் கொண்டிருக்கும் இறைவனையேஆகும். இவ்வாறு சீரும், சிறப்பும் பெற்றிலங்கிய இத்திருத்தலத்தின் முழுமையான வரலாற்றினை யாவரும் அறியும் வண்ணம் இந்நூல் வெளியிடப்படுகிறது.

இந்த நூலுக்கு முழுவடிவம் கொடுக்க முனைந்துள்ள சமணப் பெருந்தகையோருக்கும், ஜைன இளைஞர் மன்றத்திற்கும் எனது நன்றி என்றும் உரித்தாகுக! திருநறுங்கொண்டை பற்றிய ஆய்வினைத் தொடங்கியதிலிருந்து துணைநின்று வழிகாட்டியும், நல்ல கருத்துக்கள் வழங்கியும் ஊக்கம் அளித்த பேராசிரியர் சிரே. தன்யகுமார் அவர்களுக்கும் நன்றிக்கடன்பட்டுள்ளேன். இதனைச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய எஸ். தன்யகுமார் அச்சகத்திற்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஏ. ஏகாம்பரநாதன்

உள்ளுறை

பக்கம், பத்தி, வரி	பிழை	திருத்தம்
15:1:2	துண்டுகளே	துண்டுகளோ
22:1:1	அத்தியாத்தில்	அத்தியாயத்தில்
31:1:4	உட்பகுதில்	உட்பகுதியில்
35:3:5	மதியின்	மதிலின்
50:2:3	மாலையை	மலையை
50:2:7	கவசங்களில்	கலசங்களில்
59:4:2	கக்சி நாயகர்	கச்சி நாயகர்
67:5:1-2	திருவுருவத்தில் முன்பு விளங்கிடுவதற்கு	திருவுருவத்தின் முன்பு விளக்கிடுவதற்கு
71:2:2-3	இப்பசுக்கனை	இப்பசுக்களை
74:3:3	திருங்கொண்டை	திருநறுங்கொண்டை
76:3:2	கு.அனந்தநாதநயியினர்	கு. அனந்தநாத நயினர்
80:2:5	(கி.பி. 893)	(கி.பி. 898)
80:4:5-6	பார்பரதவ ஆச்சாரியார்	பார்பரதேவ ஆச்சாரியார்
80:4:6-7	செய்யப்படார்	செய்யப்படா
91:1:11	இன்றள	இன்றளவும்
98:1:4	ஆகியவர்களுடள்	ஆகியவர்களுடன்
98:2:2	கொண்டை	கொண்ட
98:2:8	சயணத்	சமணத்
102:2:6	ஆழல்நிற	அழல்நிற
108:2:1	சமணந்	சமணத்

ABBREVIATION

ARE - Annual Report of Epigraphy

SII – South Indian Inscriptions

SITI - South Indian Temple Inscriptions

TAS – Travancore Archaeological Series

மன்றவெளியீடு : 25

நறுங்கொண்டை நாயகர்

ஸ்ரீ அப்பாண்டை நாதர் (பகவான் பார்சுவநாதர்)

நற்காட்சித் திருவிழா பத்தாவது ஆண்டு

நினைவு வெளியீடு



Lord of Narungondai

Sri Appandainathar

(Bhagavan Parswanathar)

10th year Narkaatchi Festival

Commemorative Publication.

31-1-88.

1

தோற்றுவாய்

இந்திய நாட்டில் தோன்றியபல்வேறு சமயங்களுள் சமண சமயமும் தொன்மை வாய்ந்த ஒன்ருகும். இச்சமயத்தின் தோற்றத்தினைப் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. வேத காலத்திற்கு முன்பே இச்சமயம் தோன்றியதென ஒரு சாராகும், கி.மு. ஆரும் நூற்ருண்டில் தோற்றுவிக்கப்பட்டதென மற்ரெருரு சாராரும் கருதுகின்றனர். பொதுவாக வரலாற்று அறிஞர்கள் இருபத்தி மூன்ருவது தீர்த்தங்கரராகிய பார்சுவ நாதரையும், இருபத்தி நான்காவது தீர்த்தங்கரராகிய மகாவீரரையும் கி.மு. ஆரும் நூற்ருண்டில் வாழ்ந்தவர்கள் எனவும், இவர்கள் காலத்தில் தான் சமண சமயம் புதிய முறையில் நெறிப்படுத்தப்பட்டது எனவும் கூறுகின்றனர். இது எவ்வாருயினும் கி.மு. ஆரும் நூற்ருண்டில் நம் நாட்டில் மட்டுமின்றி உலகின் பல்வேறு பாகங்களிலும் புதிய சிந்தனையாளர்கள் தோன்றி ஆக்க பூர்வமான கருத்துக்களை மக்களிடையே பரப்பி வந்துள்ளனர். இவர்களது புதிய சிந்தனைகள் முந்திய சமய, சமுதாய அமைப்புகளின் குறைகளைச் சுட்டிக் காட்டியும், பாமர மனிதனுக்கும் ஏற்ற வகையில் அரிய கருத்துக்களை எளிய முறையில் விளங்க வைத்தும் சமுதாய எழுச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்திய மண்ணில் இத்தகைய எழுச்சியினைப் புத்த சமயமும், சமண சமயமும் உருவாக்கியதென்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

சமணம் தென்னகம் போந்தமை

சமண சமயம் வடஇந்தியாவின் பல்வேறு பாகங்களிலும் வேரூன்றித் தழைத்த பின்னர் படிப் படியாகத் தென்னகத்திற்கும் பரவலாயிற்று. தென்னிந்தியாவிற்குச் சமணம் வந்தமை பற்றியும் அறிஞரிடையே வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. வடமொழிக் காப்பியமாகிய வால்மீகி இராமாயண காலத்திலேயே இங்கு சமண சமயம் வந்திருக்க வேண்டுமென அவ்விலக்கியத்திலுள்ள ஒரு சில குறிப்புகளைக் கொண்டு இலக்கிய அறிஞர்கள் பகருவர். ஆனுல் வரலாற்றுப் பேரறிஞர்களும், தொல்லியல் வல்லுநரும் கி.மு. நான்காம் நூற்ருண்டின் இறுதியில் சந்திரகுப்த மௌரிய மன்னனும், பத்திரபாகு முனிவரும் கர்நாடக மாநிலத்

திற்கு வந்த பின்னர் தென் பகுதியில் சமணம் வேரூன்றலாயிற்று எனக் கூறுவர். மேலும் இவர்களுக்குப் பிறகு விசாகாச்சாரியார் முதலான பல அறவோர்கள் தமிழகத்திற்கு வந்து இப்பகுதியில் சமண சமயத்தைப் பரப்ப வழிகோலினர் எனவும் மொழிவர்.

சமண சமயத் துறவியர் அச் சமயத்தைச் சார்ந்த இல்லறத் தவரிடமின்றிப் பிற சமயத்தவரிடமிருந்து உணவு ஏற்கும் வழக்கம் இல்லாதவராதலின், விசாகாச்சாரியார் வழிவந்த எண்ணிறந்த துறவியரைப் பேணும் வகையில் அவர்கள் இங்கு வருவதற்கு முன்பே சமணப் பெரு மக்கள் (ஸ்ராவகர்) இருந்திருக்க வேண்டும் என்பதும் மற்றெரு கருத்தாகும். அதாவது இச்சமய இல்லறத் தவர் முன்பே தமிழகத்தில் வாழ்ந்தமையால் தான் துறவறம் பூண்டோர் இங்கு வருவதற்கு ஓர் வாய்ப்பு ஏற்பட்டது என்ப தாகும். இக் கூற்றின்படி விசாகாச்சாரியாருக்கு முன்பே தமிழ கத்தில் சமண சமயம் சிறப்புற்றிருந்தது என்னும் கருத்து வெளிப் படுகிறது.

இவ்வாறு சமண சமயம் தென்னகத்தில் பரவியமை பற்றி வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றனவேயன்றி, குறிப்பாக அது எப்போது இங்கு அடியெடுத்து வைத்தது என்பதனை அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற வகையில் வரையறை செய்ய இயலவில்லை. மேற் கூறப்பட்ட கருத்துக்கள் யாவும் இலக்கியங்கள், கல்வெட்டுக் கள், செவிவழிச் செய்திகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு வலியுறுத்தப் பெறுபவையாகும். ஒருவேளை பிற்காலத் தில் செய்யப்பட இருக்கும் தொல்லியல் அகழ்வாய்வுகள் இவ்வினு விற்குரிய விடையினை அளிக்க வல்லதாகத் திகழலாம். பண்டைக் காலத்தில் அழிவுற்ற நாகரீகங்களின் வெவ்வேறு கூறுகளையும், அவற்றின் சின்னங்களையும் அகழ்வாய்வுகள் வெளிக் கொண்டு வருவதை நாம் நன்கறிவோம்.

பிராமிக் கல்வெட்டுக்கள்

தமிழகத்தில் தற்போது நமக்குக் கிடைத்துள்ள காலத்தால் முந்திய சமணச் சான்றுகள் பிராமி வரிவடிவம் கொண்ட தமிழ் கல்வெட்டுக்களாகும். இவை சமண சமய அறவோர்கள் உறை வதற்கென கற்படுக்கைகள் அமைத்துக் கொடுத்ததைக் குறிப்பிடு வனவாகும். இத்தகைய சாசனங்கள் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை முதலிய தென் மாவட்டங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றின் வரிவடிவ அமைப் பினைக் கொண்டு இச்சாசனங்கள் கி.மு. 3,2 ஆம் நூற்றுண்டி லிருந்து கி.பி. 1,2 ஆம் நூற்றுண்டுகள் வரையுள்ள காலக் கட்டத்

தைச் சார்ந்தவை எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மேலும் இவற்றிற்குச் சற்று பிந்திய காலத்தைச் சார்ந்த பிராமிக் கல்வெட்டுக்கள் வட மாவட்டங்களாகிய செங்கற்பட்டு, தென்னார்க் காடு, வட ஆர்க்காடு ஆகியவற்றில் அரிதாக இடம் பெற்றுள்ளன. இவற்றிலிருந்து தமிழகத்தின் தென் பகுதியில் சமண சமயம் ஆரம்ப காலத்தில் சிறப்புற்றிருந்தது எனவும், அங்கிருந்து படிப் படியாக வட மாவட்டங்களுக்குப் பரவியிருக்க வேண்டும் எனவும் கூறலாம். மதுரையை அடுத்துள்ள மாங்குளம் என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு பாண்டியன் நெடுஞ்செழியன், அவனது அதிகாரியாகிய கடலன் வழுதி முதலியோரது பெயர்களையும்; திருச்சிக்கு அண்மையி லுள்ள புகழூரில் காணப்பெறும் கல்வெட்டு சேரர் கிளைக்குடியின ராகிய இரும்பொறை அரசர்களுள் இளங்கடுங்கோ, பெருங் கடுங்கோ, ஆதன்செல்லிரும்பொறை ஆகியவர்களது பெயர்களை யும்; தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த ஜம்பையிலுள்ள சாசனம் அதியமான் நெடுமானஞ்சியின் பெயரையும் கொண்டு விளங்குவது மிகுந்த பெருமைக்குரியதாகும்.

பொதுவாக பிராமிக் கல்வெட்டுகள் ஆங்காங்குள்ள மலைக் குகைகளில் சமணத்துறவியர் உறைவதற்காக கற்படுக்கைகளை உருவாக்கிய செய்தியினைக் கொண்டிலங்குகின்றன. எனவே கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலே சமண அறவோர் இம்மலைக் குகைகளில் தவம் புரிந்திருந்திருக்கின்றனர் என்பதனை மறுக்க இயலாது. கற்படுக்கைகள் அடங்கிய மலைக் குகைகள் பாழிகள் எனவும், பள்ளிகள் எனவும் பெயர் பெற்றன. இவை காலப் போக்கில் சீரும், சிறப்பும் பெற்று பெரும் பள்ளிகளாகவும், கோயில்களாகவும் உருவெடுக்கலாயின.

பாழிகளும் கோயில்களும்

ஆரம்ப காலத்தில் இயற்கையாக அமைந்த மலைக் குகைகளில் சமணத் துறவியர் துறவறம் நோற்றதோடு மட்டுமின்றி, தங்கள் சீடர்களாகிய துறவியருக்குச் சமய போதனையும் செய்து வந்தனர். இவ்வாறு சமயக் கல்வியும் போதிக்கப்பட்டமையால் தான் அக் குகைகள் பாழி எனவும், பள்ளி எனவும் பெயர் பெற்றிருத்தல் வேண்டும். இவை பண்டைக் காலத்தில் கோயில் என்ற முழு அமைப்பாக உருவாகவில்லை. காலப்போக்கில்தான் பாழிகள் கோயில்களாக மாறலாயின. அதுவும் முதலில் துறவியர் மட்டும் வழிபடுகின்ற கோயிலாக ஆரம்பித்துப் பின்னர் சமுதாயத்துடன் ஏற்பட்ட பிணைப்பால் மக்களும் வழிபடக் கூடிய கோயிலாக மாறி யிருக்க வேண்டும்.

தொடக்க காலத்தில் துறவியர் உறைந்த மலைக் குகைகள் மக்கள் வாழ்ந்த ஊரினின்றும் ஒதுங்கிய இடத்தில் இருந்ததாலும், மக்கள் எளிதில் சென்றடைய முடியாத வண்ணம் கரடு முரடான தும், உயரமானதும் ஆகிய இடத்தில் அமைந்திருந்ததாலும் துறவியருக்கும், இல்லறத்தவருக்கும் இடையே மிகுந்த இடைவெளி இருந்தது. துன்பம் நிறைந்த இல்லற வாழ்க்கையினின்று விடுபட்ட அறவோர்கள் தங்களது உணவிற்காக மட்டும் ஊர்களில் வாழ்ந்த மக்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். எனவேதான் பாழிகள் ஆரம்ப காலத்தில் இல்லறத்தவரை ஈர்க்கும் வகையிலான கோயில்களாக அமையவில்லை.

மாருக, சமண சமய இல்லறத்தவர் தங்களது ஊர்களில் சிறிய அளவிலான கோயில்களை ஏற்படுத்தித் தங்களது வழிபாட்டுத் தேவைகளை நிறைவு செய்து கொண்டனர். இந்த கோயில்கள் மக்களது இறையுணர்வினையும், சமுதாயத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்வனவாகத் திகழலாயின. சமயக் கருத்துக்கள், வழிபாட்டு முறைகள் முதலியவையாவும் வளர்ந்து வரும் சமுதாய அடிப்படைத் தேவைகளுக்கேற்ப விரிவாக்கம் செய்யப்பட்டதனல் இத்தகைய கோயில்கள் காலப்போக்கில் எண்ணிக்கையில் பெருகியதோடு மட்டுமின்றி பெரிய அளவில் கட்டப்பட்டு வலிமை மிக்க அமைப்புகளாகத் திகழ்ந்தன.

காலம் செல்லச் செல்ல மலைக் குகைகளில் தவம் புரிந்த சமணத் துறவியரும் தங்களுக்குள்ளேயும், தமது சீடர்களுக்குள்ளேயும் பரிமாறி வந்த சமயத் தத்துவங்களைப் பொதுமக்களும் பயனடையும் வகையில் போதித்து வரலாயினர். மேலும் கல்வி, மருத்துவம், உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு தானங்களையும் சமுதாயம் பயன்பெறும் வகையில் நிறைவேற்றி வந்தமையால் துறவியருக்கும், பொதுமக்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இதனல் மலைக் குகைகளாகிய பாழிகளும், மக்கள் தங்கள் வாழிடங்களில் கட்டி வழிபட்டு வந்த கோயில்களும் ஒருங்கிணைக்கப்பட்டன. இத்தகைய பிணைப்பினுல் காலம் செல்லச் செல்ல மலைக் குகைப் பள்ளிகளைத் தோற்றுவிப்பதைக் காட்டிலும், மக்கள் வாழும் பகுதிகளில் கட்டடக் கோயில்களை எழுப்புவதற்கு அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. மிகச் சில இடங்களில் மலையிலுள்ள முந்திய பள்ளிகள் விரிவு செய்யப்பட்டு அவற்றை ஒட்டியே புதியதாகக் கோயில்களும் கட்டப்பட்டிருக்கின்றன. தமிழக வரலாற்றில் மலைப் பள்ளிகள் காலத்தால் முந்தியவையாகவும், கட்டடக் கோயில்கள் சற்று பிற்காலத்தைச் சார்ந்தவையாக இருப்பதும் இக்கருத்தினை வலியுறுத்துவதாகும். இவ்வாறு

சமுதாயத் தொண்டிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து மக்களிடையே இருந்த ஏற்றத் தாழ்வுகளைச் சரி செய்வதற்கு எடுத்த முயற்சிகளுடன், சமயக் கருத்துக்களும் எளிய முறையில் மக்களுக்கு ஊட்டப் பெற்றமையால் சமண சமயம் ஓர் வலிமை மிக்க இயக்கமாக உருவெடுத்தது என்று கூறினால் அது மிகையாகாது.

அரசர்களின் ஆதரவு

தமிழகத்தை ஆட்சி புரிந்த பல்லவ, பாண்டிய, சோழ, விஜய நகரப் பேரரசர்களுள் பெரும்பாலானோர் சைவ, வைணவ சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும், சமண சமயத்தையும் நன்கு ஆதரித்துள்ளனர். இவர்கள் அளித்த ஆதரவின் பயனாக பல சமணக் கோயில்கள் புதியதாகக் கட்டப்பட்டும், திறந்த வெளிப் பாறைச் சிற்பங்கள் தோற்றுவிக்கப்பட்டும், முன்பிருந்த கோயில்கள் விரிவாக்கம் செய்யப்பட்டும் உள்ளன.

மன்னர்கள் மட்டுமின்றி பொருள் படைத்த செல்வந்தரும், சமயப் பற்றுள்ள பொதுமக்களும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோயில்களைக் கட்டி, அவற்றிற்கு பொன், பொருள், நிலம் முதலிய பலவகையான தானங்களைச் செய்துள்ளனர். இவ்வாறு அளிக்கப்பட்ட தானங்களினால் கோயில்களின் வளர்ச்சி பெருகியதோடு, சமுதாயமும் சிறப்புற வழி ஏற்படலாயிற்று. சமயப் பணியே அடிப்படை நோக்கமாக இருப்பினும், இக்கோயில்கள் வசதி மிக்க அமைப்புகளாக மாறியபோது மக்களுக்கு கடன்உதவி, வேலை வாய்ப்பு, குளங்களையும், ஏரிகளையும், சீர் செய்தல், நிலங்களை விவசாயத்திற்கு ஏற்றபடி செம்மையாக்குதல், பயிரிடுதல் போன்ற பல பணிகளில் ஈடுபடலாயின. இவற்றிற்கும் மேலாக சமயக் கல்வி, அன்னதானம், மருத்துவ வசதி முதலிய தொண்டுகளையும் செய்து வந்தன. கோயில்களின் நிர்வாகத்தினைக் கவனிப்பதற்கென்றே தனியாக பல குழுக்கள் அமைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படலாயிற்று. சிலசமயம் மடங்களே கோயிலை நிர்வகிக்கும் பணியை மேற்கொள்ள வேண்டியதிருந்தது. இவ்வாறு காலப்போக்கில் சமயமும், சமுதாயமும் ஒன்றுக்கொன்று இணைந்து இயங்கியதால் மக்கள் வாழ்க்கை முறையும் மேம்பட்டது. பொருளாதார ஏற்றம் பெற்ற கோயில்களும், மடங்களும் சமுதாய அமைப்புகளையே கட்டுப்படுத்தும் அளவிற்கு வலிமை பெற்றன என்று கூறினால் அது மிகையாகாது.

கால்ச் சூழலில் ஏற்பட்ட சோதனைகள்

தமிழகத்தின் சமய வரலாற்றில் கி.பி. ஏழாம் நூற்றுண்டு ஒரு திருப்பு முனையாக அமைந்தது எனலாம். அக் காலத்தில் சைவ,

வைணவ சமயங்கள் பக்தி மார்க்கத்தின் அடிப்படையில் புத்துயிர் பெற்றதனல் புத்த சமயமும், சமண சமயமும் சிறிது பாதிக்கப் படலாயிற்று. சைவ சமய நாயன்மார்களும், வைணவ சமய ஆழ்வார்களும் பக்தி நெறியினை மக்களிடையே பரப்புவதற்கு மேற் கொண்ட முயற்சிகளினுல் புத்தமும், சமணமும் பல்வேறு சோதனை களுக்குள்ளாயின. இச் சமயங்கள் புறச் சமயங்கள் என ஒதுக்கப் பட்டும், இவற்றின் கருத்துக்கள் மெய்யறிவுக் கருத்துக்கள் அல்ல என இடித்துரைக்கப்பட்டும் உள்ளன. சமய வாதங்கள் நிகழ்ந்து அதில் வெற்றி பெற்ருேர் மற்றவர்களுக்கு இன்னு விளைவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சமயங்களுக்குள் வேறுபாடு காட்டிய மையால் மக்கள் மனதில் சமயக் காழ்ப்புணர்வும் தோன்றியிருக்க வேண்டும். இவற்றின் பிரதிபலிப்பினை தேவாரம், திவ்விய பிரபந்தம், பெரியபுராணம் போன்ற நூல்களில் காணலாம். இவ்வாறு சமயக் காழ்ப்புணர்வுகளினுல் தோன்றிய சோதனை களுக்கு புத்த சமயம் அதிக ஈடு கொடுக்க முடியாமற் போனுலும், சமண சமயம் அவற்றையெல்லாம் தாங்கி பிற்காலம் வரை தொடர்ந்து நன்னிலையில் இருந்தது.

கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டில் நிறுவப்பெற்ற சோழப் பேரரசு இந்து சமயத்தின் நிலைக்களனுக இருந்த போதிலும், சோழ அரசர்கள் பலர் சமண சமயக் கோயில்களைக் கட்டுவித்து அவற்றிற்கு வேண்டிய தானங்களை வழங்கியுள்ளனர். இப்பேரரசர் களுக்குப் பின் வந்த விசயநகர மன்னர்கள் காலத்திலும் சமணம் ஓரளவு தழைத்திருந்தது. ஆனுல் நாயக்கர்கள், முகமதிய சுல்தான்கள், நவாப்புகள் ஆகியோர் சமண சமயத்தை ஆதரிக்க வில்லை. மேலும் மேலைநாடுகளின் ஆதிக்கம், தமிழ்ச் சமுதாய அமைப்புகளில் ஏற்பட்ட பெரும் மாற்றங்கள், பொருளாதார நெருக்கடி போன்ற பல காரணங்களினுல் சமணம் மீண்டும் மிகுந்த பாதிப்பிற்குள்ளாயிற்று. சமணரின் எண்ணிகையும் குறைந்து, நாளடைவில் அவர்களுடைய செல்வாக்கும் தமிழகத்தின் வட மாவட்டங்களுக்குள் மட்டும் இருக்கலாயிற்று.

சமணக் கோயில்கள்

தமிழகத்தில் சமண சமயம் செல்வாக்குற்றிருந்த போது ஆங்காங்கே பல கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. முன்பு மலைக் குகைகளாக இருந்த பல பள்ளிகளும் விரிவாக்கம் பெற்றிருக் கின்றன. பெரிய பாறைகளின் முகப்பில் ஏராளமான சிற்பங்கள் செதுக்கப்பட்டு அவை வழிபாட்டிற்குரியனவாகத் திகழ்ந்திருக் கின்றன. அண்டை மாநிலத்தவரையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் படைத்தவையாகப் பல கோயில்கள் விளங்கியிருக்கின்றன. சிறப்

புற்றிருந்த சில கோயில்களுடன் இணைந்திருந்த மடங்களும் சமய, சமுதாயப் பணிகளில் ஈடுபட்டு மக்களை நன்னெறிப்படுத்தி வந்தன. ஆனால் இவற்றுள் பெரும்பாலானவை காலச் சுழலில் அழிந்திருக்கின்றன. அவற்றின் சுவடுகள் கூட இருந்த இடம் தெரியாமல் மறைந்திருக்கின்றன. எஞ்சியுள்ளவற்றுள் பல கோயில்கள் சரிவர கண்காணிக்கப் படாமல் பாழடைந்த நிலையில் உள்ளன. மிகச் சில கோயில்களே தற்காலத்திலும் வழிபாட்டிற்குரியனவாய் நல்ல நிலையில் இருக்கின்றன.

முன்பிருந்த கோயில்கள் பலவற்றைப் பற்றிய செய்திகளை ஆங்காங்கே காணப்படும் கல்வெட்டுக்கள், சுவடிகள் போன்றவற்றின் வாயிலாக அறிய வருகிறோம். இக்கல்வெட்டுக்களை இந்திய தொல்லியல் துறையின் கல்வெட்டாய்வுப் பிரிவினர் படியெடுத்திராவிடின் அந்த செய்தி கூட நமக்குத் தெரியாமற் போயிருக்கும். மேலும் வரலாற்றுச் சிறப்புடைய சில கோயில்களையும், திறந்த வெளிப் பாறைச் சிற்பங்களையும் மத்திய, தமிழக அரசுகளின் தொல்லியல் துறைகள் கண்காணித்துப் பாதுகாத்து வருவதால் அவை அழிவுறாமல் தடுக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் இன்னும் ஏராளமான கோயில்கள் பாதுகாப்பாற்ற நிலையில் தான் இருந்து வருகின்றன.

சமண சமயத்தைச் சார்ந்த மக்களும் பெரும்பான்மையற்றவராகவும், பொருளாதார மேம்பாடற்றவராகவும் இருப்பதால் தற்போது எஞ்சியுள்ள கோயில்கள் அனைத்தையும் சரிவர பராமரிக்க இயலாமற் போய்விட்டது. ஓரளவு நல்ல நிலையில் இருக்கின்ற கோயில்களைக் கூட கண்காணிப்பதென்பது சிறிது சிரமமாகவே இருந்து வருகிறது. அண்மைக் காலத்தில் தமிழகச் சமணப் பேரவை என்ற அமைப்பினை ஏற்படுத்தி பாதுகாப்பாற்ற கோயில்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து, வழிபாடு நடத்த இந்த அமைப்பு முயற்சிகள் எடுத்து வருகிறது. இதைப் போன்று தமிழகத்திலுள்ள திகம்பர பிரிவு மக்களின் தலைமைப் பீடமாக இயங்கும் சித்தாமூர் மடமும் வழிபாடற்ற நிலையில் இருக்கும் கோயில்களையும், பாழடைந்த நிலையிலிருக்கும் கோயில்களையும் செம்மை செய்து சிறப்புற வழிபாடு நடப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய முயன்று வருகிறது. சுவேதம்பர பிரிவு சமணரும் சென்னைக்கு அருகிலுள்ள புழல் எனும் ஊரிலுள்ள பண்டைய கோயிலைப் புதுப்பித்ததோடு மட்டுமின்றி, அதில் தொடர்ந்து வழிபாடு நடைபெற்று வருவதற்கு வேண்டிய அனைத்து உதவிகளும் செய்து வருகின்றனர். சென்னை போன்ற பெருநகர்களில் சமண சமயத்தவரின் இறையுணர்வினைப் பூர்த்தி செய்யும் வகையில் பல

பகுதிகளில் புதியதாகவும் கோயில்களைக் கட்டுவித்துள்ளனர். கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளுண்ணாமை போன்ற நற்கருத்துக்களை தங்களது சமய அமைப்புகள் மூலமாகப் பொது மக்களுக்கு அறிவுறுத்தியும் வருகின்றனர்.

திருநறுங் கொண்டை ஆய்வு

தமிழகத்தில் சமண சமயம் சிறப்புற்றிருந்த காலை இச் சமய அறவோர் தமிழ்த் தாய்க்கு ஏராளமான இலக்கிய, இலக்கண நூல்களைச் சூட்டி மகிழ்ந்ததோடு மட்டுமின்றி, ஆங்காங்கே பல கோயில்களையும், கவின்மிகு சிற்பங்களையும், செப்புத் திருமேனிகளையும், ஓவியங்களையும் உருவாக்கிச் சென்றுள்ளனர். அன்றைய சமுதாயத்தில் புரையோடிக் கொண்டிருந்த வேறுபாடுகள் பலவற்றை அகற்றி சமுதாய சமநிலை காண முற்பட்டிருக்கின்றனர். இத்தகைய அருந்தொண்டாற்றிய சமயத்தின் வரலாறும், இச் சமய அறவோர் செய்த சமுதாய நற்பணிகளும் முன்பு நமக்குத் தெரியாமலே இருந்து வந்தது. இதனைக் கருத்திற்கொண்டு அறிஞர் பலர் சமண சமயம் பற்றிய ஆய்வினை மேற் கொண்டனர். அதன் பயனாக **சமணமும் தமிழும், தென்னிந்தியாவில் சமணர், சமணரின் இலக்கண நன்கொடை, சைனத் தமிழிலக்கியங்கள், சைன கட்டடக் கலை** முதலிய பல நூற்கள் உருவாயின. இவையன்றி ஆய்வாளர் பலரும் அவ்வப்போது சமண சமயம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வந்துள்ளனர்.

இவை ஒருபுறமிருப்பினும், தமிழகத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்களைப் பற்றிய விரிவான செய்தியினைப் பொது மக்களும், சமண சமய ஆய்வில் ஈடுபட்டிருப்பவர்களும் அறியும் வண்ணம் வெளிக்கொணர வேண்டும் என்பதே இப்புத்தக ஆசிரியரின் உள்ளக் கிடக்கையாகும். அந்த முயற்சியில் முதன் முதலாக உருவானதே **"சித்தாமூர் வரலாறு"** என்னும் நூலாகும். அதனைத் தொடர்ந்து திருநறுங்கொண்டையிலுள்ள கோயிலைப் பற்றியும் விரிவான முறையில் ஆய்வினைச் செய்து வெளியிட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

திருநறுங் கொண்டையில் எழுந்தருளியிருக்கும் பார்சுவநாதர் மீது பாடப் பெற்ற **அப்பாண்டை நாதர் உலா** என்னும் இலக்கியம் ஏட்டுச் சுவடி வடிவில் இருந்ததை யாவரும் அறியும் வகையில் புலவர் மு. சண்முகம்பிள்ளை அவர்கள் பதிப்பித்து, அதனைச் சென்னைப்பல்கலைக்கழகம் புத்தக வடிவில் வெளியிட்டது. அதைத் தொடர்ந்து அவ்வாசிரியரே **திருநறுங்கொண்டைத் தல வரலாறு** என்னும் சிறிய நூலையும் எழுதியுள்ளார். இந்த நூல்களில்

திருநறுங்கொண்டைத் தலத்தின் முழுமையான வரலாறு வெளிக்கொணரப் படவில்லை. இங்குள்ள கோயிலின் கட்டடக் கலை, சிற்பக்கலை, படிமங்கள், கல்வெட்டுக்கள் முதலியவை பற்றிய விரிவான செய்திகள் மேற்கூறிய நூல்களில் இடம் பெறவில்லை. எனவே இத்தலத்தின் பெருமை, அதன் வரலாற்றுப் பின்னணி, கட்டட, சிற்பக் கலைகள், கல்வெட்டுச் செய்திகள் முதலியவை பற்றிய தெளிவான ஆய்வினை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படலாயிற்று. அந்த முயற்சியின் விளைவே இன்று இப்புத்தக வடிவம் பெறுகிறது.

இந்த ஆய்வினை மேற்கொள்வதற்குப் பலவகையான சான்றுகள் துணையாக இருந்தன. குறிப்பாக இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் அவற்றுள் இன்றியமையாதவையாகும். சமண நூல்களாகிய **அப்பாண்டைநாதர் உலா, திருமேற்றிசை அந்தாதி, தோத்திரத்திரட்டு** ஆகியவை மட்டுமின்றி, சைவ சமய இலக்கியங்களாகிய தேவாரம், பெரியபுராணம் ஆகியவையும் பல்வேறு செய்திகளைத் தருவனவாக அமைந்துள்ளன. இங்குள்ள சாசனங்கள் இந்த பகுதியின் அரசியல் வரலாற்றையும், எந்தெந்த அரச பரம்பரையினர் இக்கோயிலை ஆதரித்தனர் என்பதையும், என்னென்ன தானங்களை வழங்கினர் என்பதையும் விளக்குவதற்குப் பேருதவி புரிபவையாகும். இந்த கோயிலின் கட்டடக்கலை, சிற்பக்கலை, படிமங்கள், கற்படுக்கைகள் ஆகியவற்றை நேரில் கண்டறிந்து ஆய்வு நோக்கில் படைக்கப்பட்டிருக்கிறது. இவையனைத்தும் திருநறுங்கொண்டையின் சமய வரலாற்றை இனிது தெளிவு படுத்தும் என்பதில் ஐயமில்லை.

2

திருநறுங்கொண்டை

தென்னார்க்காடு மாவட்டத்தில் உளுந்தூர்ப்பேட்டைத் தாலுகாவைச் சார்ந்த சிற்றூர் திருநறுங்கொண்டையாகும். இது திருக்கோயிலூரிலிருந்து இருபத்தொரு கிலோமீட்டர் தென்கிழக்கிலும், உளுந்தூர்ப்பேட்டையிலிருந்து பதினாறு கிலோமீட்டர் வடமேற்கிலும் அமைந்திருக்கிறது. திருக்கோயிலூரிலிருந்தும், உளுந்தூர்ப்பேட்டையிலிருந்தும் பேருந்து மூலமாக இவ்வூரை அடைய இயலும். இதுவன்றி உளுந்தூர்ப்பேட்டையிலிருந்து திரு-வெண்ணெய் நல்லூர் செல்லும் பேருந்து மூலம் பிள்ளையார் குப்பம் என்னும் ஊரில் இறங்கி, அதிலிருந்து வடமேற்காக நான்கு கிலோமீட்டர் நடந்து சென்றும் இந்த ஊரை அடையலாம். பிள்ளையார் குப்பத்திற்கு விழுப்புரத்திலிருந்தும் பேருந்துவசதி செய்யப்பட்டிருக்கிறது. திருநறுங்கொண்டை தேசிய நெடுஞ்சாலையிலிருந்து ஒதுக்குப் புறமாக இருப்பதாலும், இவ்வூருக்கு அண்மையில் மக்கள் தொகை மிகுந்த பேரூர்கள் எவையும் இல்லாததாலும் பேருந்து போக்குவரவு வசதிகள் அதிகரிக்கப்படாமலிருக்கிறது.

இயற்கையமைப்பு

நறுங்கொண்டை ஊர் 584 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட நிலப்பரப்பாகும். இது மலைப்பிரதேசமாக இல்லாவிடினும் ஆங்காங்கே பல பாறைகள் காணப்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை தற்காலத்தில் உடைக்கப்பட்டு கட்டடங்கள் கட்டுவதற்கென வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இந்த பாறைகளுக்கு நடுப்பகுதியில் உயர்ந்த குன்றுகக் காணப்படுவதைத்தான் திருநறுங்கொண்டை மலை என்று குறிப்பிடுகின்றனர். இதிலும் அடிவாரப் பகுதியில் முன்பு கற்கள் உடைக்கப் படலாயின எனவும், பின்னர் சமணப் பெருமக்களது வேண்டுதலின் பேரில் அது நிறுத்தப்பட்டுள்ளது எனவும் அறிய வருகிறோம்.

குன்றினைச் சுற்றிலும் வயல்கள் சூழ்ந்த பெரும் பரப்பு காணப்படுகிறது. குன்றிற்கு வடகிழக்கிலும், தென் கிழக்கிலும் இரண்டு ஏரிகள் உள்ளன. இவற்றுள் வடகிழக்கிலுள்ளது குந்தவை ஏரியாகும். சோழப் பேரரசன் முதலாம் இராசராசனது தமக்கை

யாராகிய குந்தவைப் பிராட்டியாரது அரும்முயற்சியினுல் தோற்றுவிக்கப்பட்டமையால் அவ்வம்மையாரது பெயரினுல் குந்தவைப் பேரேரி என அழைக்கப்பட்டு வந்தது. தற்போது இப்பெயர் மருவி 'கொந்தனேரி' என அழைக்கப்பட்டு வருகிறது. முன்பு இந்த ஏரி பெரிய அளவில் இருந்தது எனவும், பின்னர் காலச் சுழலில் மழைவளம் குறைந்ததாலும், ஏரி பலநூற்ருண்டு களாகத் தூர்வாங்கப்படாமையாலும் பரப்பளவு குறைந்ததாய் திகழ்கிறது. தென்கிழக்கில் காணப்படும் ஏரி பெரியஏரி எனத் தற்போது அழைக்கப்படுகிறது. பண்டைக் காலத்திலிருந்தே இந்த ஏரிகள் இங்குள்ள விளைநிலங்களுக்குத் தண்ணீர் வழங்கும் நீர் நிலைகளாகத் திகழ்ந்து வந்திருக்கின்றன. மழைவளம் சிறந் திருக்கும் காலத்தில் இந்த விளைநிலங்கள் அனைத்தும் பச்சைப் பசேல் என எழிலுறக் காட்சியளிப்பதைக் காணலாம்.

திருநறுங் கொண்டையின் இயற்கையான சூழ்நிலையும், எழில் மிக்க தோற்றமும் புலவர் பெருமக்களது உள்ளத்திற் குடிகொண்டு கவிதை மலர்களாக மலர்ந்திருப்பதை அப்பாண்டைநாதர் உலா போன்ற இலக்கியங்களில் பரவலாகக் காணலாம். தெளிந்த நீரினையுடைய சிற்றருவிகளும், இயற்கையாக அமைந்த சுனைகளும், குற்றமற்ற அறவோர் உறையும் மலைக்குகையும், விலை மதிப்பற்ற, வைரம், வைடூரியம், மாணிக்கம் முதலிய கற்களும் நறுங்குன்றிற்கு நீங்கா ஒளியைக் கொடுப்பனவாகத் திகழும். இக் குன்றைச் சுற்றியுள்ள நிலப் பரப்பில் பல்வேறு மணம் பரப்பும் நறிய மலர்களைக் கொண்ட பூங்காக்களும், அவற்றில் இன்னிசை பாடித்திரியும் பறவை, தும்பியினங்களும், மரங்களில் தாவித்திரியும் மந்தியினங்களும் காண்பவர் நெஞ்சைக் கவர்வனவாகும். மலை யிலிருந்து இழிந்து வரும் அருவி நீரானது மணம் பரப்பும் மலர் களையும், மரங்களிலிருந்து வீழ்ந்த கனிகளையும் கொண்டு சென்று வயல்கள் தோறும் பாய்ந்து அவற்றிற்கு வளமையூட்டும் என நறுங்குன்றின் இயற்கைஎழிலைக் கவிஞர்பெருமான் கற்பனை நயத்துடன் பாடிக் காவியம் படைத்திருக்கிருர்.[1]

மக்கள்

பண்டைக் காலத்தில் இவ்வூரில் சமண சமயத்தவர் பெரு மளவில் வாழ்ந்திருக்கின்றனர். ஆனுல் காலப்போக்கில் இவர் களது வழிவந்தவர்கள் வேறூர்களுக்குச் சென்று குடியேறியதாகக் கூறப்படுகிறது. தற்போது இரண்டு தெருக்களைக் கொண்ட இவ்வூரில் நான்கு குடும்பத்தினர் மட்டுமே சமண சமயத்தவராவர். எஞ்சியவர்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள். சமணர் வடக்குத் தெருவிலும், எஞ்சியுள்ளோர் தெற்குத் தெருவிலும்

வாழ்ந்து வருகின்றனர். இவர்களது முக்கிய தொழில் விவசாயம் செய்வதாகும். இப்பகுதி பயிர் செய்வதற்கேற்ற நிலங்களை யுடையதால் நெல், சோளம், கரும்பு, வேர்க்கடலை ஆகியவை பயிரிடப் படுகின்றன. பெரும்பாலானோர் மழையை நம்பிப் பயிர் செய்ய வேண்டியிருப்பதால், வானம் பொய்த்தால் சிரமங்களை மேற்கொண்டுதான் வாழ்க்கையை நடத்தவேண்டிய நிலையி லுள்ளனர். பயிர்த்தொழில் மட்டுமின்றி கல்லுடைக்கும் தொழிலும் இங்கு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கடின வகைப் பாறைகள் இங்கிருப்பதால் சேலம் மாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும் கல்லுடைக்கும் தொழிலுடைய பல குடும்பத் தினர் இங்கு வந்து பணி புரிகின்றனர். இவர்களும் ஆங்காங்கே சிறு குடில்களை அமைத்துக் கொண்டு இவ்வூர்க் குடிமக்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

பொருளாதார மேம்பாடற்ற இந்த மக்கள் வேறு வேறு தொழில்களைச் செய்பவர்களாக இருந்த போதிலும் ஒருவருக் கொருவர் வேற்றுமை பாராட்டாது ஒற்றுமையுடனும், அன்புடனும் செயல் படுகின்றனர். வறுமையான வாழ்க்கை முறையினைக் கொண்ட இவர்கள் எளிமையிலும் இனிமை காணும் நல்லுணர்வு படைத்தவர்களாகத் திகழ்கின்றனர். சாதி, சமய வேறுபாடின்றி ஒன்று கூடிப்பழகும் இவர்களது பண்பாடு இந்த தமிழ் மண்ணின் பாரம்பரியத்தினைப் பறைசாற்றுவதாக உள்ளது. சமண சமயத்த வரல்லாதவராக இருந்த போதிலும், தங்களது வீட்டிலுள்ள பசு அல்லது எருமை கன்று ஈன்றவுடன் அதிலிருந்து கிடைக்கப் பெறும் முதல் நாள் பாலை பார்சுவநாதப் பெருமானுக்கு அபிடேகம் செய்வ வதற்கென இன்றளவும் அளித்து வருவதைக் காணலாம். அப்பாண்டைநாதர் கோயில் திருவிழாக்களில் கலந்து கொள் வதும், அப்பெருமானுக்குக் காணிக்கை செலுத்துவதும் வழக்கமாக இருந்து வருகிறது குறிப்பிடத் தக்கதாகும். சமுதாய, பொருளா தார ஏற்றத் தாழ்வுகளை இந்த பாமர சமுதாயத்தில் அதிகம் காண இயலாததால் தான், இங்குள்ள மக்களிடம் இறையுணர்வில் அதிக வேறுபாடு தோன்றுவதில்லை.

கோயில்கள்

வரலாற்றுச்சிறப்புமிக்க நறுங்கொண்டையில் சமண அறவோர் உறைந்த குகையும், பார்சுவநாதர், சந்திரநாதர் ஆகியோரது கோயில்களும் காணப்படுகின்றன. மலையின் மேற் பகுதியில் இயற்கையாய் அமைந்த குகை ஒன்றுள்ளது. இதில் பண்டைக் காலத்தில் துறவறம் நோற்ற அருந்தகையோர் வாழ்ந் தனரென்பதை அறிவுறுத்தும் வகையில் பன்னிரண்டு கற்படுக்கை

கள் விளங்குகின்றன. இந்த குகைப் பாழியில் தான் முன்பு **வீரசங்கம்** தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் இதனைச் சுற்றியுள்ள பகுதி மேடாக்கப்பட்டிருப்பதாலும், குகையினுள் சுவர் எழுப்பியிருப்பதாலும் கண்காணிப்பின்றி சீர்கெடலாயிற்று. இதனுள் இடம் பெற்றிருந்த சில கற்படுக்கைகளும் உடைக்கப் பட்டிருக்கின்றன. கொண்டைமலையில் காலத்தால் முந்திய சமணச் சான்றுகள் இந்த கற்படுக்கைகள் தாம்.

இதனை அடுத்துள்ள இருபாறைகளை இணைத்து பார்சுவப் பெருமானுக்கு மண்டபக் கோயில் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. பார்சுவதேவரது திருவுருவம் கிழக்கிலுள்ள பாறையில் மேற்கு நோக்கியவாறு புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பாக பாறைகளுக்கு இடைப்பட்ட பகுதி கி.பி. 9 ஆம் நூற்றுண்டில் மண்டபமாக அமைக்கப்பட்டிருக்கிறது. பார்சுவ நாதர் சிற்பமடங்கிய பாறையுடன் கூடிய இம் மண்டபத்தையே கல்வெட்டுக்கள் **மேலைப் பள்ளி** எனக் குறிப்பிடுகின்றன. இதனை யடுத்து சந்திரநாதருக்குக் கருவறை, மண்டபம் ஆகியவற்றைக் கொண்ட தனிக்கோயிலும் கி.பி. 9 ஆம் நூற்றுண்டிலேயே கட்டப்பட்டிருக்கிறது. கிழக்கு நோக்கிய இக்கோயிலே **கீழைப் பள்ளி** எனப்படுவதாகும். காலம் செல்லச் செல்ல இவ்விரு பள்ளி களும் விரிவாக்கம் பெற்று மகாமண்டபம், சித்திரக் கூட மண்டபம், முகமண்டபம், திருச்சுற்று மதில், அழகம்மை மண்டபம் முதலிய பல கட்டட அமைப்புகளுடன் திகழலாயிற்று. இக்கோயிலின் வளர்ச்சிக்கு மன்னர்களும், பொதுமக்களும் பேராதரவு அளித் திருக்கின்றனர்.

ஊரின் தென்கிழக்குப் பகுதியில் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு விநாயகப் பெருமானுக்கு இந்து சமயத்தவர் சிறிய அளவிலான கோயில் ஒன்றைக் கட்டியிருக்கின்றனர். இக்கோயிலின் கட்டு மானப் பணிகள் இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படா மலேயே இருக்கிறது. இந்து சமயத்தவர்களுக்கிடையில் சைவம், வைணவம், சாக்தம் போன்ற உட்பிரிவுகள் காணப்படவில்லை. எனவே தான் விநாயகரைப் பொதுவாக கிராமப்புற தெய்வமாக எளிமையான முறையில் வணங்கி வருகின்றனர்.

ஊரின் பெயர்கள்

திருநறுங்கொண்டை என்பது தற்போது ஊருக்கும், மலைக்கும், பொதுவாக வழங்கி வருகின்ற பெயராகும். இதனை அண்மைக் காலத்தில் திருநறுங்குன்றம் எனவும் அழைத்து வருகின்றனர். இங்குள்ள சோழர்காலக் கல்வெட்டுக்களிலும்

திருநறுங்கொண்டை எனும் பெயர் காணப்படுகிறது. கொண்டை என்னும் சொல் சிகரம், மலை எனப் பொருள்படும். அழகிய அல்லது சிறந்த மலை என்னும் பொருள்பட இங்குள்ள மலை நறுங் கொண்டை எனப் பெயர் பெறலாயிற்று. சமய முக்கியத்துவம் வாய்ந்த தலங்களின் பெயர்களுடன் ‘திரு’ எனும் அடைமொழிச் சொல்லினைச் சேர்த்துக் கூறும் வழக்கப்படி இது திருநறுங் கொண்டை என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

திருநறுங்கொண்டை மலையைச் சுற்றியிருந்த மக்கள் வாழ் குடியிருப்பிற்கும் இம் மலையின் பெயரே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மலைக்கு இப்பெயர் மட்டுமின்றி வேறு சில பெயர்கள் இருந்ததாகவும் அறிய வருகிறோம். அப்பாண்டைநாதர் உலா போன்ற இலக்கியங்களில் ஸ்ரீகொண்டை, ஜினகிரி, உச்சயந்த வாழ்மலை என்னும் பெயர்களும் கூறப்பட்டிருக்கின்றன.[2] கல்வெட்டுக்கள் சிலவற்றிலும் ஜினகிரி என்னும் பெயர் இந்த மலை யினைக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.[3] சமஸ்கிருத மொழியில் இதற்கு ஸ்கந்தவேணுகிரி எனவும் பெயர் வழங்கப்பட்டிருந்ததாக மெக்கன்சி சுவடித் தொகுப்பு கூறுகிறது.[4]

திருமேற்றிசை, திருத்தீபை என்னும் பெயர்களும் திருநறுங் கொண்டை மலையைக் குறிப்பதாகும். திருமேற்றிசை அந்தாதி எனும் நூல் இந்த மலையில் மேற்குத் திசையை நோக்கித் திருக் கோலம் கொண்டிருக்கும் பார்சுவப் பெருமானைப் போற்றிக் கூறுங் கால் இவ்விரு பெயர்களையும் குறிப்பிடுகிறது.[5] இறைவன் மேற்கு நோக்கியுள்ளதால் அத்திசையின் அடிப்படையில் திருமேற்றிசை எனப்பெயர் எழுந்துள்ளது. இப்பெயர் மிக்க வாறான பாடல்களில் பார்சுவப்பெருமானை மட்டிலும் குறிப்பிடுவ தாக இருக்கிறது. சில இடங்களில் ‘திருத்தீபையின் மேற்றிசை விண்ணவனே’ என்று வருவதால் இங்குள்ள மலைக்கு அல்லது ஊருக்குத் திருத்தீபை எனப்பெயர் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். இதுவும் தீபங்குடி என்ற ஊரின் பெயரடிப்படையில் குறுக்கம் செய்யப்பட்டு அல்லது மருவி தீபை, திருத்தீபை என்று ஆகியிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.[6] இவ்வாறு இத்தலத் திற்குப் பல்வேறு பெயர்கள் இருந்த போதிலும் திருநறுங் கொண்டை எனும் பெயரே இன்றளவும் நிலைத்து வந்திருக்கிறது.

ஊரின் தொன்மை

சிறப்பு மிக்க இத்தலம் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த தடயங்களைக்கொண்டிருக்கின்றதா என்ற கருத்தில் இங்கு ஆசிரியரால் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்

போது பண்டைக்காலத்தைச் சார்ந்த கற்கருவிகளோ அல்லது மட்பாண்டத்துண்டுகளோ எவையும் கிடைக்கப்பெறவில்லே. ஆனல் குன்றினே ஒட்டித் தென்பகுதியிலுள்ள ஓடைக்கரையினில் செவ்வந்திக்கல் (Jasper) போன்ற சிறுசிறு கற்களும், தேய்ந்து உருத்தெரியாதபடியுள்ள சிறு ஒட்டுத்துண்டுகளும் காணப்படுகின்றன. இவை தொல் பழங்கால மக்கள் பயன் படுத்தியவை தான் என்று உறுதியாகக்கூறுவதற்கில்லே. ஒருவேளே இங்கு அகழ்வாய்வுகள் செய்து பார்த்தால் இந்த ஐயப்பாட்டினேத் தெளிவு படுத்தும் வாய்ப்பு உண்டு.

சங்க காலத்தில் திருக்கோவலூர் பகுதியனேத்தையும் மலேயமான் சிற்றரச பரம்பரையினர் ஆட்சி புரிந்து வந்தனர். அவர்கள் காலத்தில் திருநறுங்கொண்டை மக்கள் வாழ்ந்த ஊராக இருந்ததா என்பது பற்றித்தெரியவில்லே. இங்குள்ள காலத்தால் முந்திய சான்றுகள் குகையிலுள்ள கற்படுக்கைகளும். பார்சுவநாதர் சிற்பமும், ஒரு சில கல்வெட்டுக்களும் ஆகும், குகையில் படுக்கைகள் அமைத்தது பற்றிக்கல்வெட்டுச் செய்தி எதுவும் இல்லே யென்ருலும், இவற்றின் அமைப்பினேக்கொண்டு கி.பி. 7 அல்லது 8 ஆம் நூற்ருண்டில் இவை தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றுகூறலாம். எனவே இந்த காலக்கட்டத்தில் இங்கு சமண சமயம் வேரூன்றியிருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது. பார்சுவநாதர் சிற்பம் கி.பி. 9 ஆம் நூற்ருண்டின் தொடக்க காலக் பாணியைக்கொண்டு விளங்குகிறது. இந்த 9 ஆம் நூற்ருண்டில் சந்திரநாதர் கோயிலும் கட்டப்பட்டிருக்கிறதென்பதைக் கல்வெட்டுக்கள் அறிவுறுத்துகின்றன. எனவே தற்போது எஞ்சியுள்ள சான்றுகளின் அடிப்படையில் இங்கு கி.பி. 7 அல்லது 8 ஆம் நூற்ருண்டில் சமணம் வேரூன்றியிருக்க வேண்டும் எனக் கூறலாம். அக்காலத்தில் இம்மலேயை அடுத்துள்ள பகுதிகளில் மக்களும் வாழ்ந்திருக்க வேண்டும்.

அருகிலுள்ள ஊர்கள்

திருநறுங்கொண்டையை ஒட்டி கிழக்கிலுள்ள ஊர் ஆற்றூர் எனப்படும். சிறிய அளவிலான இந்த ஊர் பண்டைக்காலத் திலேயே இப்பெயருடன் திகழ்ந்திருக்கிறது. சோழர் காலச் சாசனங்களில் ஆற்றூர் என்னும் பெயரும், அதற்குத் திருநறுங் கொண்டையிலிருந்து கிழக்காகச் செல்லும் வழியும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. நறுங்கொண்டைக்கு மேற்கிலுள்ளது குண்ணத் தூராகும். இதன் இயற்பெயர் குன்றத்தூராகும். இந்த குன்றத் தூரின் பெயரில் நாட்டுப்பிரிவு ஒன்று ஏற்படுத்தி (குன்றத்தூர் நாடு) அதிலுள்ள ஒரு ஊராகத் திருநறுங்கொண்டை இருந்த

ாகக்கல்வெட்டு கூறுகிறது. இங்குள்ள சாசனங்கள் சிலவற்றில் சிறுசாத்தநல்லூர், ஏறுதிமங்கலம், ஆதனூர், செம்பூர், நரியப்பாடி, சினநாகள்ளூர் முதலிய ஊர்கள் குறிப்பிடப்படுகின்றன.[7] இந்த பெயர்களைக்கொண்ட ஊர்கள் தற்போது திருநறுங்கொண்டைக்கு அண்மையில் எவையும் இல்லை. இதற்குத் மிகவும் தொலைவிலுள்ள சில ஊர்களுக்கு இந்த பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இவையும், கல்வெட்டு குறிப்பிடுபவையும் ஒன்றுதான் என்று கூற இயலவில்லை.

அடிக்குறிப்புகள்

1. அப்பாண்டைநாதர் உலா, கண்ணிகள் 95-118
2. அப்பாண்டைநாதர் உலா, கண்ணிகள் 94, 119, 83, 86, 55, 438.
3. ARE, 299/1939-40
4. Mackenzie Manuscripts, Mss No. 19, Sec 7
5. திருமேற்றிசை அந்தாதி, 37, 46, 72, 75, 88.
6. அப்பாண்டைநாதர் உலா, பக்கம் 113, 114.
7. SII, Vol, VII, No. 1011, 1012, 1015, ARE, 303, 308, 309, 315/1939-40.

3

அரசியல் வரலாற்றுப் பின்னணி

நம் நாட்டிலுள்ள சிறப்பு வாய்ந்த கோயில்களுக்கும், வெவ்வேறு காலக் கட்டங்களில் ஆட்சி புரிந்த அரச பரம்பரையினருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. இத்தொடர்பினுல் அக்கோயில்கள் நல்லவளர்ச்சி பெற்று சமய-சமுதாயப் பணிகள் பலவற்றைச் செய்து வந்திருக்கின்றன. பல்வேறு அரச பரம்பரையினரின் ஆதரவில் செம்மையுற்ற திருநறுங்கொண்டைக் கோயிலுக்கு நீண்ட கால அரசியல் வரலாற்றுப் பின்னணி உண்டு. இவ் வரலாற்றுப் பின்னணியினை அறிந்து கொள்வதற்கு இத்தலத்திலும், இதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் காணப்படும் கல்வெட்டுச் சான்றுகள் பெரிதும் துணைபுரிகின்றன. இம்மூலச்சான்றுகளின் அடிப்படையில் இக்கோயிலுக்கும். பல்வேறு அரச பரம்பரையினருக்கும் இருந்த தொடர்பு, அவர்கள் அளித்த ஆதரவு, அதனுல் கோயில் பெற்ற சிறப்பு இன்ன பிற செய்திகளை இங்கு காண்போம்.

சங்க கால மன்னர்கள்

தமிழகத்தில் கிறித்தவஊழியின் முதல் மூன்று நூற்றுண்டு கால வரலாற்றினைப் பொதுவாக சங்க காலம் என அழைப்பர். தமிழிலக்கியங்களுள் காலத்தால் முந்திய எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகியவை இச்சங்க காலத்தைச்சார்ந்தவையாகும். இந்த சங்க காலத்தில் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு மலையமான் என்னும் சிற்றரச பரம்பரையினர் அரசோச்சி வந்தனர். இவ்வழியில் வந்தவர்களுள் மலையமான் திருமுடிக்காரி என்பவன் சிறப்புற ஆட்சி புரிந்தவனுகும்.[1] இந்த அரசனது காலத்தில் திருக்கோவலூரிலிருந்து இருபத்தொரு கிலோமீட்டர் தென் கிழக்கிலுள்ள திருநறுங்கொண்டையும் இவன் ஆண்ட பகுதிக்குட் பட்டதாகவே இருந்திருக்க வேண்டும். ஆனுல் இந்த அரசனைப் போற்றும் சங்க இலக்கியப்பாடல்களில் திருநறுங்கொண்டையைப் பற்றிக் குறிப்புகள் எவையும் இல்லை. அக்காலத்தில் இதற்கு என்னபெயர் வழங்கப்பட்டிருந்தது என்பதனைக்கூட அறிவதற் கில்லை. இது எவ்வாருயினும் திருநறுங்கொண்டைப் பகுதி திருமுடிக்காரியின் ஆட்சிக்குட்பட்டுதான் இருந்திருக்க வேண்டு மென்பதில் கருத்து வேறுபாடில்லை.

இந்த மலையமான் திருமுடிக்காரியைத் தகடூரைத்தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்த அதியமான் நெடுமானஞ்சி என்பவன் போர் புரிந்து வெற்றிவாகை சூடியிருக்கிருன். அதனுல் மலையமான் ஆட்சி செய்த திருக்கோவலூர், திருவெண்ணெய் நல்லூர், திருநறுங்கொண்டைப் பகுதியனைத்தும் அதியமான் ஆட்சிக்குட்படலாயிற்று. இதனைத் தெளிவு படுத்தும் வகையில் திருக்கோவலூருக்குச்சற்று தொலைவிலுள்ள ஜம்பை என்னும் இடத்தில் காணப்படும் கி.பி. 2 ஆம் நூற்ருண்டைச் சார்ந்த பிராமிக் கல்வெட்டு அமைந்துள்ளது. இச்சாசனம் சத்திய புத்திரஞன அதியமான் நெடுமானஞ்சி சமணத் துறவியருக்கெனப் பள்ளி ஒன்றை ஏற்படுத்தியதாகக் கூறுகிறது.[2] இப்பள்ளி இங்குள்ள மலைக்குகையினையே குறிப்பதாகும். சிவ வழிபாட்டின ஞகிய அதியமான் நெடுமானஞ்சி தான் வெற்றிவாகை சூடிய நாட்டில் சமணத் துறவியருக்குப்பள்ளியமைத்தது சிறப்பிற்குரிய ஒன்ருகும். இதுபோன்று திருநறுங்கொண்டையில் இம்மன்னன் பள்ளி எதுவும் அமைக்காவிட்டாலும், இவ்வூர்ப்பகுதி இவனது ஆட்சிக்குட்பட்டே இருந்தது.

சங்ககாலச் சிற்றரசர்களாகிய திருமுடிக்காரி, நெடுமானஞ்சி ஆகியோரது ஆட்சிக்குட்பட்ட பகுதியாக திருநறுங்கொண்டை இருந்த போதிலும், அதன் அப்போதைய வரலாற்றினை அறிந்து கொள்ள இயலவில்லை. அக்காலத்தில் இது மக்கள் வாழ்ந்த குடியிருப்புப் பகுதியாக இருந்ததா என்பதனை உறுதி செய்யவும் முடியவில்லை. மேலும் சங்க காலத்தில் இங்கு சமண சமயம் வேரூன்றியிருந்ததாகக் கூறுவதற்கும் போதிய ஆதாரங்கள் இல்லை. இந்த அரசர்களுக்குப் பின்னர் பல்லவர் காலம் வரை (கி.பி. 7 ஆம் நூற்ருண்டு வரை) எந்தெந்த அரசர்களது ஆட்சி யின் கீழ் இப்பகுதி இருந்ததென்பதையோ அல்லது திருநறுங் கொண்டையின் அக்கால வரலாறு என்ன வென்பதையோ வரையறை செய்ய வழிவகையில்லை.

திருநறுங்கொண்டைமலையில் கோயிலை ஒட்டியுள்ள குகையில் பல கற்படுக்கைகள் காணப்படுகின்றன. இப்படுக்கைகள் சமண சமயத்துறவியர் உறைவதற்கென உருவாக்கப்பட்டவையாகும். இங்கு கோயில் என்ற அமைப்பு தோன்றுவதற்கு முன்பே இவற்றைத் தோற்றுவித்திருக்க வேண்டும். ஆனல் இவை குறிப்பாக எந்த நூற்றண்டில் ஏற்படுத்தப்பட்டவை என்பதைக் கூறுவதற்கு உரிய சான்றுகள் எவையும் இல்லை. செஞ்சிப் பகுதி யில் திருநாதர்குன்று, பழையன்பட்டு போன்ற இடங்களிலுள்ள

மலைகளில் கி.பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டில் சமணத் துறவியர் தங்கியிருந்தமையையும், இங்கு உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தமையையும் இங்குள்ள கல்வெட்டுக்களின் வாயிலாக அறிய வருகிறோம்.[3] இவற்றைக் கருத்திற்கொண்டு இதே காலக் கட்டத்தில் இல்லாவிடினும் இதற்கு சற்று பிற்பட்ட காலத்திலாவது நறுங்கொண்டையிலும் சமணசமய அறவோர் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கூறலாம். இக்கருத்து ஏற்புடையதாக இருக்குமெனில் திருநறுங்கொண்டை கி.பி. 7 அல்லது 8 ஆம் நூற்றாண்டிலேயே சமண சமயத்தலமாக விளங்கியிருக்கக் கூடும்.

பல்லவப் பேரரசர்கள்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சி மாநகரைத் தலைநகரமாகக் கொண்டு தொண்டை மண்டலத்தைப் பல்லவப் பேரரசர்கள் ஆட்சி புரியத் தொடங்கினர். இத்தொண்டை மண்டலம் தற்போதைய செங்கல்பட்டு, தென்னார்க்காடு, வடஆர்க்காடு, திருச்சி மாவட்டத்தின் வடபகுதி, சித்தூர் பகுதி முதலியவற்றை உள்ளடக்கிய நிலப்பரப்பாகும். பல்லவ மன்னர்கள் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட குடைவரைக் கோயில்கள் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிங்கவரம், தளவானூர், மேலைச்சேரி ஆகிய இடங்களிலுள்ளன. மேலும் இவர்கள் காலக் கல்வெட்டுக்கள் அகலூர், அருவாகூர், மேல்கூடலூர், ஒலக்கூர், பெருமண்டூர் முதலிய பல இடங்களில் காணப்படுகின்றன. இந்த அரசர்களது ஆட்சியின் கீழ் திருநறுங்கொண்டைப் பகுதி இருந்த போதிலும், இவர்களது கல்வெட்டுக்கள் எவையும் இங்கு இடம் பெறவில்லை.

திருநறுங்கொண்டையிலுள்ள பார்சுவநாதர் திருவுருவம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலக் கலைப்பாணியைக் கொண்டிலங்குவதால், இது பல்லவப் பேரரசாட்சியின்போது உருவாக்கப்பட்டதென்பது தெளிவாகிறது. ஆனால் குறிப்பாக எந்த பல்லவ மன்னர் காலத்தில் இச்சிற்பம் சமைக்கப்பட்டதெனக் கூறுவதற்குச் சான்றுகளில்லை. இந்த நூற்றாண்டில் திருநறுங்கொண்டையைச் சார்ந்த துறவியர் திருச்சாரணத்துமலை, கழுகுமலை, ஐவர்மலை முதலிய தென்மாவட்டத்தலங்களுக்குச் சென்று அறநெறி போதித்து வந்தமையை ஆங்குள்ள கல்வெட்டுக்கள் அறிவிப்பதின் வாயிலாக,[4] இந்த காலகட்டத்தில் திருநறுங்கொண்டையில் சமணம் சிறப்புற்றிருந்தது அறியற்பாலதாகும்.

வாணர்கள் (பாணர்கள்)

வாணர் என்னும் சிற்றரச பரம்பரையினர் தொண்டை மண்டலத்தின் வடபகுதியாகிய தென்னார்க்காடு, வடஆர்க்காடு, சித்தூர்

ஆகிய மாவட்டங்களடங்கிய நிலப்பரப்பை ஆட்சி புரிந்து வந்தனர். இந்நிலப்பரப்பு வாணநாடு எனவும், வாணராட்டிரம் எனவும் அழைக்கப்பட்டு வந்தது. இச்சிற்றரசு முதலில் பல்லவர்களுக்கு அடங்கியும், பின்னர் சோழருக்கு அடங்கியும் அரசு புரிந்தது.

திருநறுங்கொண்டையிலுள்ள கி.பி. 9 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த கல்வெட்டொன்று வாணகோவரையர் என்னும் சிற்றரசனைக் குறிப்பிடுகிறது.[5] இச்சாசனம் மிகவும் சிதைந்துள்ளமையால் இம்மன்னன் இக்கோயிலுக்கு என்ன தொண்டு ஆற்றினுன் என்பதனையோ அல்லது இவனது இயற்பெயர் என்னவென்பதையோ அறிய முடியாமற்போய் விட்டது. இருப்பினும் வாணகோவரையனுக்கும், பார்சுவநாதர் கோயிலுக்கும் ஏதோ ஒரு வகைத் தொடர்பு இருந்தமை தெரிய வருகிறது.

செஞ்சிக்கு சற்று தொலைவிலுள்ள தொண்டூரிலிருந்த **வழுவாமொழிப் பெரும் பள்ளி** என்னும் சமணக்கோயிலுக்கு விண்ணகோவரையன் வைரிமலையன் என்னும் வாண அரசன் சில நிலங்களையும், அவற்றிலுள்ள கிணறுகளையும் அளித்ததாக அறிய வருகிறோம்.[6] இவனைப் போன்று திருக்கோயிலூருக்கு அருகிலுள்ள ஜம்பையில் பொறிக்கப்பட்டுள்ள சாசனத்தில் வாண கோவரையன் வீரவர்மன் என்பவனும், கீழையூரிலுள்ள சாசனத்தில் கோநக்கனர் வாண கோவரையன் என்பவனும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.[7] இந்த சிற்றரசர்கள் அனைவரும் கி.பி. 9 ஆம் நூற்றுண்டில் ஆட்சி புரிந்தவர்களாவர். இவர்களுள் எந்த மன்னன் திருநறுங்கொண்டைக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறுன் என்று உறுதி செய்வதற்கில்லை. மன்னனின் இயற்பெயர் குறிப்பிடப்படாமல் வாணகோவரையன் எனப் பொதுவாகக் கூறப்பட்டிருப்பதால், மேற்குறிப்பிடப்பட்டவர்களன்றி வேறு ஒரு மன்னனுகவும் இருக்கலாம். இது எவ்வாருயினும் வாணகுல சிற்றரசன் ஒருவன் திருநறுங்கொண்டை கோயிலுக்கு ஏதோ ஒருவகையில் ஆதரவு அளித்திருக்கிறுன் என்பது மட்டும் திண்ணம்.

சோழர்கள்

கி.பி. 9ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் பல்லவராட்சி வீழ்ச்சியுற்று சோழப்பேரரசு எழுச்சிபெறலாயிற்று. இதனுல் பல்லவர்கள் ஆண்ட தொண்டைமண்டலம் சோழர்வசமாயிற்று. இச்சோழப்பெருவேந்தர்கள் காலத்தில் திருநறுங்கொண்டையிலுள்ள கோயில் சீரும், சிறப்பும் பெற்றிலங்கியது. இங்கு காணப்படும் பெரும்பாலான கல்வெட்டுக்கள் சோழ அரசர்கள் காலத்தவையாகும். இப்பரம்பரையில் வந்த அரசர்களுள் முதலாம்

இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், மூன்றும் குலோத்துங்கன், மூன்றும் இராசராசன் ஆகிய மன்னர்கள் ஆட்சியில் இங்குள்ள பள்ளி பல்வேறு வகையான தானங்களைப் பெற்றிருக்கிறது. இங்குள்ள கோயில் முறைப்படி கட்டப்பட்டு, விரிவாக்கப்பெற்றதும் இம்மன்னர்கள் காலத்தில்தான். இந்த அரசர்கள் அனைவரும் சைவ சமயத்தினராயினும், சமயப்பொறையுடையவராகத் திகழ்ந்தனர் என்பதற்கு இவர்களது சாசனங்களே சான்றுபகருபவையாகும். இவர்களது ஆட்சியில் பலஇடங்களில் சமணக்கோயில்கள் கட்டப் பட்டிருப்பதையும், பலகோயில்களுக்கு ஏராளமான தானங்கள் அளிக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

சோழ அரசியருள் முதலாம் இராசராசனது தமக்கையராகிய குந்தவைப் பிராட்டியார் தமிழகச் சமயவரலாற்றில் சிறப்புமிக்க இடத்தினைப் பெறுபவராவார். இந்த அரசி இந்து சமயக் கோயில்கள் மட்டுமின்றி சமணசமயக் கோயில்களுக்கும் மிகுந்த பொருட்களைத் தானமாக அளித்துள்ளார். திருமலையில் குந்தவை ஜிஞலயம் என்னும் சமணக்கோயிலைக் கட்டுவித்து, அதற்குப் பொன்னையும், பொருட்களையும் வாரிவழங்கியுள்ளார். திருநறுங் கொண்டைகோயிலுக்கு இத்தகையதானங்களை இப்பேரரசி அளித்த தாகத் தெரியவில்லையாயினும், இங்கு ஏரிஒன்று அமைப்பதற்கு இவர் காரணமாக விளங்கியிருக்கிருர். இந்த அரசியின் பெயரிலேயே இது குந்தவைப்பேரேரி என அழைக்கப்பட்டுவந்தது. இவ்வேரி கொண்டைமலைக்கு வடகிழக்கில் சிறிய அளவில் காணப் படுகிறது. இப்பகுதியிலுள்ள பயிர்நிலங்கள் அனைத்தும் மிகுந்த விளைச்சல்கொடுத்து மக்கள் வளம்பெறவேண்டும் என்ற கருத்தில் குந்தவைப்பிராட்டி இந்த ஏரியினை உருவாக்கியிருக்கவேண்டும். குறிப்பாக திருநறுங்கொண்டை மலையைச்சுற்றியுள்ள பெரும் பாலான நிலங்கள் பார்சுவநாதர் கோயிலுக்குச் சொந்தமானதாக இருந்தமையால், அவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் தானியவகை களின் பெரும்பகுதியும் கோயிலுக்குரியதாக இருந்திருக்கவேண்டும். எனவே இந்த அரசியின் தொண்டினுல் இங்குள்ள மக்களும், கோயிலும் பெரும் பயன்பெற்றிருக்கவேண்டும். இது குந்தவையின் சமயத்தொண்டு மட்டுமின்றி சமுதாயத்தொண்டும் ஆகும். இவ் வகையில் இப்பிராட்டியார் சோழஅரசியருள் தனக்கு ஒப்பொருவரு மில்லாதவராகத் தனிச்சிறப்புடன் திகழ்கிருர்.

சோழ அரசர்கள் இங்குள்ள பள்ளிகளுக்கு வழங்கிய கொடை யினைப் பற்றி விரிவாக **"கல்வெட்டுக்கள் கூறும்செய்திகள்"**

என்னும் அத்தியாத்தில் கூறப்பட்டிருக்கிறது. பொதுவாக முதலாம் இராசராசன் காலத்தில் கோயிலின் வழிபாட்டுச் செலவுகளுக்கும், நந்தா விளக்கு எரிப்பதற்கும் சில நிலங்கள் அளிக்கப்பட்டிருக் கின்றன. இவனது மைந்தனுகிய முதலாம் இராசேந்திரன் காலத் தில் கோயிலில் தவருமல் விளக்கெரிப்பதற்கென 96 ஆடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இராசாதிராசன், முதலாம் குலோத் துங்கன் ஆகியோர் காலத்திலும் விளக்கிடும் செலவிற்காக நெல், பசுக்கள் முதலியவை வழங்கப்பட்டிருப்பதாக அறியவருகிரேம்.

விக்கிரமசோழன் அரசுபுரிந்த காலே குந்தவைப் பேரேரி உடைப்பெடுத்தமையால் பாழாகிக் கிடந்த நிலங்கள் திருத்தி யமைக்கப்பட்டு, பயிர் செய்து அதிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு கோயிலில் விழாக்கள் நடத்தப்பெற்றிருக்கின்றன.

மூன்ரும் குலோத்துங்க மன்னனே இக்கோயிலின் வளர்ச்சியில் நேரடியாகப் பங்கு வகித்திருக்கிருன். இவன் கனகஜினகிரியப்ப ராகிய அப்பாண்டைநாதர் கோயிலுக்கு சிறுசாந்தை எனப்படும் சிறுசாத்த நல்லூரையே அளித்திருக்கிருன்.

திருநறுங்கொண்டையில் ஏற்படுத்தப்பட்ட நிவந்தங்களுள் மிக்கவாருனவை சோழர்களுக்கு அடங்கி ஆட்சிசெய்த மலேயமான், காடவராயர் முதலிய சிற்றரச பரம்பரையினர் அளித்தவையாகும். சோழமன்னனுகிய முதலாம் இராசராசனது படைத்தளபதியாகிய மும்முடிச் சோழபிரம்மராயன், சோழஅரசில் பணிபுரிந்த ஐயாறன் என்னும் அதிகாரியின் மனேவி முதலிய பலரும் இக்கோயிலுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பலதானங்களேச் செய்திருக் கின்றனர். இத்தகைய ஆதரவினுல் திருநறுங்கொண்டைக்கோயில் மேன்மேலும் வளர்ச்சிபெற்று சமண சமுதாயம் நன்னிலே அடை வதற்கு வழிவகை பெறலாயிற்று.

கிளியூர் மலேயமான்

சங்ககாலத்தில் திருக்கோவலூரைத் தலேநகராகக் கொண்டு மலேயமான் திருமுடிக்காரி முதலான சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனரென முன்பு கண்டோம். இந்த பரம்பரையில் வந்த அரசர் கள் பிற்காலத்தில் கிளியூரைத் தலேநகராகக் கொண்டு சோழப் பேரரசர்களுக்குட்பட்டு ஆட்சிபுரியத் தொடங்கினர். இவர்களது தலேநகராகிய கிளியூர் திருக்கோவலூரை அடுத்துள்ள கீழையூரா கும். இந்த சிற்றரசர்கள் சேதிராயர், கோவலராயர் என்னும் பட்டபெயர்களேக் கொண்டிருந்தனர். திருநறுங்கொண்டைப்பகுதி இவர்களது நேரடி ஆட்சியின் கீழ்இருந்தமையால் அங்குள்ள பள்ளி கள் இவர்களிடமிருந்து மிகுந்த தானங்களேப் பெற்றுள்ளன.[8]

கிளியூர் மலையமான்களுள் இராசேந்திர சோழசேதிராயன், விக்கிரமசோழமலையமல்லன், அத்திசொக்கன் என்னும் ராஜகம்பீர சேதிராயர் ஆகியோர் பார்சுவநாதர் கோயிலுக்குத் தானம் அளித்த வராவர். இராசேந்திர சோழ சேதிராயன் முதலாம் குலோத்துங்க சோழனுக்கு அடங்கி ஆட்சிபுரிந்தவராவார். இவரது ஆட்சியில் திருநறுங்கொண்டைக்கோயிலில் தினமும் விளக்கெரிப்பதற்காகும் செலவிற்காக நெல் வழங்கப்பட்டிருக்கிறது. விக்கிரமசோழனுக்குட் பட்டு ஆட்சி செய்த விக்கிரமசோழ மலையமல்லன் குந்தவைப் பேரேரி உடைந்ததனுல் அழிவுற்றுப் பயிரேருமல் கிடந்த சில நிலங்களைத் திருத்தியமைத்து, அவற்றைக் கோயிலுக்கே தான மாகக் கொடுத்துள்ளார். இந்த நிலங்களிலிருந்து கிடைத்த வரு மானம் கோயிலில் நடைபெறும் வைகாசித்திருவிழாவின் போது நித்தியகல்யாணதேவர், அருண்மொழித்தேவர் ஆகிய தீர்த்தங்கரர் திருவுருவங்களுக்குப் பல்லக்குச் சேவை சிறப்புறச் செய்வதற்கெனப் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. இரண்டாவது இராசராசசோழனுக் கடங்கிய கிளியூர் மலையமான் அத்திசொக்கன் திருநறுங்கொண் டையிலிருந்து தமக்குச் சேரவேண்டிய சிலவரிகளைக் கோயில் செலவுக்கென ஒதுக்கியிருக்கிருர். இவ்வாறு மலையமான் சிற்றர சர்களும் தங்களால் இயன்ற அளவு பார்சுவநாதர் கோயிலின் வளர்ச்சிக்குப் பாடுபட்டிருக்கின்றனர்.

காடவராயர்

மலையமான் சிற்றரசர்களைப் போன்று சோழ அரசர்களது ஆணைக்குட்பட்டு ஆட்சி செலுத்திய மற்ெருரு பரம்பரையினர் காடவராயராவர். இவர்கள் திருமுனைப்பாடியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தனர். திருநறுங்கொண்டைப்பகுதி யும் இவர்களது நேரடி ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. இந்த வழியில் தோன்றிய சிற்றரசர்களுள் ஆளப்பிறந்தான் மோகன், வீரசேகரகாடவராயர், கூடல் ஆளப் பிறந்தான் ஏழிசை மோகன் காடவராயர், ஆளப்பிறந்தான் மோகன் கச்சியராயன் என்பவர் கள் பார்சுவப்பெருமான் கோயிலுக்குப்பலவகையான தான தருமங் களைச்செய்திருக்கின்றனர்.

ஆளப்பிறந்தான் மோகன் எனப்படும் குலோத்துங்க சோழ காடவராயர் ஜனநாதமங்கலம் என்னும் ஊரிலிருந்து தமக்குச் செலுத்தப்பட வேண்டிய பாடிக்காவல் என்னும் வரியிலிருந்து நானூற்று இருபது கலம் நெல்லினை திருநறுங்கொண்டை கோயிலில் வழிபாட்டுச்செலவிற்கென அளித்துள்ளார். மூன்றும் குலோத்துங்க சோழன் ஆணைப்படி ஆற்றூர் பள்ளிச்சந்தம் ஏறுதிமங்கலம் முதலிய ஊர்களை இப்பள்ளிக்கு வீரசேகர

காடவராயர் வழங்கியுள்ளார். ஏழிசை மோகன் காடவராயரும் இக்கோயிலில் சிறப்புற வழிபாடு நடைபெறுதற்பொருட்டு தமக்குச் சேர வேண்டிய சில வரிகளையும், சில நிலங்களையும் கொடுத்திருக்கிறார். அப்பாண்டைநாதர் கோயிலிலுள்ள கச்சிநாயகர் என்னும் தீர்த்தங்கரர் திருவுருவம் ஆளப்பிறந்தான் மோகன் கச்சியராயரால் நிறுவப்பட்டதாகும். இச்செப்புத்திருமேனி சந்திரபிரபா தீர்த்தங்கரரைக் குறிப்பதாகும்.

காடவர் பரம்பரையில் வந்த அரசருள் சிறப்புமிக்கவன் கோப்பெருஞ்சிங்கனாவான். இவன் சோழப்பேரரசு வலிமை குன்றியிருந்த போது தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதியையே தன்னாட்சிக்குக் கீழ் கொண்டு வந்தவனாவான். ஒருமுறை இவன் மூன்றாம் இராசராச சோழனையே எதிர்த்துப்போரிட்டு அம்மன்னனைச் சேந்தமங்கலத்தில் சிறை வைத்த ஆற்றல் பெற்றவனாகும். அத்தகைய பெருவீரனாகத்திகழ்ந்த கோப்பெருஞ்சிங்கனது ஆட்சியில் (கி.பி. 1246, 1249) சந்திரநாதர் கோயிலின் உள் திருச்சுற்று மதில் கட்டப்பட்டிருக்கிறது. இவ்வாறு காடவ சிற்றரசர் பலரும் பார்சுவநாதர் கோயிலுக்குப் பலவகைகளில் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வந்திருப்பதை அறிய வருகிறோம்.

பாண்டியர்கள்

சோழப்பேரரசு பதிமூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் வீழ்ச்சியடைந்து பாண்டியப்பேரரசு எழுச்சி பெறலாயிற்று. இதனால் சோழர் ஆண்ட பெரு நிலப்பரப்பு பாண்டியர் வசமாயிற்று. இதனை வலியுறுத்தும் வகையில் வடஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கல்பட்டு முதலிய மாவட்டங்களில் பாண்டியர் காலச் சாசனங்கள் காணக்கிடைக்கின்றன. திருநறுங்கொண்டையிலும் பாண்டியர்காலக் கல்வெட்டுக்கள் உள்ளன. முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியனது ஆட்சியின்போது (கி.பி. 1251-1268) இங்குள்ள கோயிலில் கொண்டாடப்பெறும் வைகாசி மாதத் திருவிழாவிற்கும், தைமாதத்திருவிழாவிற்கும் வேண்டிய செலவுகளுக்கென நிலங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயிலிலிருந்த சமணத்துறவியருக்கும் பத்துவேலிநிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.[8a] மாறவர்மன் விக்கிரமபாண்டியனது ஆட்சிக்காலத்தில் (கி.பி.1283-1296) இங்குள்ள நாற்பத்தெண்ணாயிரப் பரம பள்ளிக்கு நில தானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் நறுங்கொண்டை கோயிலின் வழிபாட்டுச் செலவுகளுக்கும், அங்கு நந்தாவிளக்கு எரிப்பதற்கும் குன்றத்தூர் கூற்றம் என்னும் பிரிவிலிருந்து கிடைக்கப்பெற்ற சிலவரிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.[9]

விசயநகர-நாயக்கர்கள்

பாண்டியராட்சிக்குப் பிறகு தமிழகம் விசயநகரப் பெரு வேந்தரின் ஆட்சிக்குக் கீழ்வந்தது. இந்த மன்னர்களின் பிரதிநிதி களாகிய நாயக்கர்கள் செஞ்சி, தஞ்சாவூர், மதுரை முதலிய இடங் களிலிருந்து நாட்டின் நிர்வாகத்தினைக் கண்காணித்துவந்தனர். செஞ்சியைத் தலைநகராகக்கொண்டு தென்ஞர்க்காடு உட்பட்ட பகுதியை ஆட்சிபுரிந்தவர்கள் செஞ்சிநாயக்கர் எனப்பொதுவாக அழைக்கப்பெறுவர். இந்த நாயக்கர்களது ஆட்சியில் சித்தாமூர் போன்ற ஓரிரு சமணத்தலங்களைத்தவிர எஞ்சியவற்றிற்கு அதிக முக் கியத்துவம் அளிக்கப்படவில்லை. திருநறுங்கொண்டை இவர்களது ஆட்சிக்குட்பட்டிருந்தபோதிலும், இவர்கள் இங்குள்ள கோயிலுக்கு தானங்கள் எவையும் செய்ததாகத்தெரியவில்லை. இந்த நாயக்கர் களின் ஆதரவு இக்கோயிலுக்கு இல்லாவிடினும், கி.பி. 16, 17 ஆம் நூற்ருண்டுகளிலும் இந்த கோயில் நல்லநிலையிலிருந்து வந் திருக்கிறது. இக்காலத்தில் தரைவிந்யா சக்கரவர்த்தி, சமயநாத முனீஸ்வரர், குணபத்திரர் முதலிய அறவோர்கள் இங்கு நல்லறம் போற்றி வந்திருக்கின்றனர். இவர்களுள் குணபத்திரர் வீர சங்கத்தை மீண்டும் தாபித்தவர் எனவும், வடமொழி, தமிழ்மொழி ஆகியவற்றில் மிகுந்த புலமை பெற்றவர் எனவும் அறிய வருகிருேம். இந்த கோயிலுடன் இணைந்த மடமும் குணபத்திரர் காலத்தில் சிறந்த முறையில் செயல்பட்டு வந்திருக்கிறது. கி.பி. 1636 ஆம் ஆண்டு அப்பாண்டைநாதர் கோயிலின் கோபுரம் கட்டப்பட்டு, குடமுழுக்காட்டும் இனிது நடைபெற்றிருக்கிறது.[10]

கி.பி. 17 ஆம் நூற்ருண்டின் இடைப்பகுதியிலிருந்து இந்த நூற்ருண்டின் தொடக்க காலம் வரை இக்கோயிலின் வரலாற்றுப் பின்னணியினை அறிந்துகொள்ளும் வாய்ப்பில்லை. ஆங்கிலேயர் ஆட்சியின்போது அவர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் அடிக் கடி போர் ஏற்பட்டு செஞ்சியை சுற்றியுள்ள பகுதி அனைத்தும் மிகுந்த பாதிப்பிற்குள்ளாயிற்று. இதனல் பொருளாதார நெருக் கடி அமைதியின்மை முதலிய சிரமங்கள் மக்களுக்கு ஏற்படலாயிற்று. இப்பகுதியிலுள்ள பெரும்பாலான கோயில்கள் வழிபாடற்ற நிலை யிலும், கண்காணிப்பின்றியும் இருந்திருக்கின்றன. திருநறுங் கொண்டையிலுள்ள கோயிலுக்கு இத்தகைய பாதிப்பு ஏற்பட்டதா என்பது பற்றிக்கூறுவதற்கு உரிய ஆதாரங்கள் இல்லாவிடினும், 17ஆம் நூற்ருண்டிற்குப் பின்னர் இங்கு சமணசமயம் அதிக செல்வாக்குடன் திகழ்ந்ததெனக் கூறுவதற்கில்லை. மெக்கன்சி சுவடித்தொகுப்பில் குணபத்திராச்சாரியாருக்குப் பின்னர் திருநறுங் கொண்டையிலிருந்த மடம் அழிவுற்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதற்குரிய சரியான காரணத்தினை அச்சுவடிகள் எடுத்துரைக்கா

விட்டாலும், பதினேழாம் நூற்ருண்டினைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், பொருளாதாரச்சிக்கல் போன்றவை இதன் வீழ்ச்சிக்கு வழிகோலியிருக்கலாம் என்று கருதுவதில் தவறில்லை. மேலும் ஆங்காங்கே அரசுரிமை பெற்றிருந்த நவாப்புகளும் சமணக் கோயில்களுக்கு எந்தவித ஆதரவும் அளிக்கவில்லை. இத்தகைய பல சூழ்நிலைகளினுல் அப்போது திருநறுங்கொண்டையில் சமணம் மேன்மேலும் தழைத்திலங்க முடியாமற் போய்விட்டது எனலாம்.

இவ்வாறு பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்ருண்டுகளில் திருநறுங்கொண்டைக்கோயிலின் வரலாற்றினை அறிந்து கொள்ளப் போதிய சான்றுகளில்லை எனினும், இந்த கோயில் வழிபாடற்ற நிலையிலிருந்ததாகத் தெரியவில்லை. இந்த நூற்ருண்டின் தொடக் கத்தில் திருப்பறம்பூரைச்சார்ந்தவரும், சென்னை இராஜதானியில் மாவட்ட உதவி ஆட்சியாளராகவும் இருந்த ஸ்ரீபாலையா என்ப வரும், கரடிப்பாக்கத்தைச் சார்ந்த சக்கரவர்த்தி நயினுரும் இக்கோயில் மீண்டும் சிறப்பு பெற அருந்தொண்டாற்றியிருக் கின்றனர். இவர்களது அரும்முயற்சிகளினுல் கோயில் புதுப்பிக்கப் பட்டதோடு மட்டுமின்றி, மலையடிவாரத்தில் வழிபடவருவோருக்கு வசதி செய்யும் பொருட்டு சத்திரமாகிய நூற்றுக்கால் மண்டபமும், மற்ருெருமண்டபமும் கட்டப்பட்டிருக்கின்றன. இதனைத் தொடர்ந்து பல ஊர்களிலுமுள்ள மக்கள் இங்கு வழிபடுவதற்கு வந்த தாகக் கூறப்படுகிறது. இந்த சமயத்திலிருந்து பல உலோகத் திருவுருவங்களும் கோயிலுக்கு அளிக்கப்படலாயின. திருவிழாக் களும் தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வந்துள்ளது. இன்றளவும் அந்த வகையில் நித்தியவழிபாடு, சிறப்பு வழிபாடுதிரு விழாக்கள் ஆகியவையாவும் குறைவற நடத்தப்பட்டு வருகின்றன.

ஆட்சிப்பிரிவுகள்

பல்லவப் பேரரசர்கள் ஆட்சி புரிந்த நிலப்பரப்பு தொண்டை மண்டலம் என அழைக்கப்பட்டது. இம்மண்டலம் இருபத்தி நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவை மேலும் கூற்றம், நாடு, ஊர் முதலிய சிறிய ஆட்சிப்பிரிவுகளாகப்பகுக்கப் பட்டிருந்தன. இந்த பிரிவுகள் தற்காலத்தில் மாநிலம், மாவட்டம், தாலுகா, பஞ்சாயத்து, ஊர் என்னும் ஆட்சிப்பிரிவுகளைப் போன்றவை என்று பொதுவாகக் கூறலாம். திருநறுங்கொண்டை யைச்சுற்றியுள்ள பகுதிகள் அக்காலத்தில் எந்த கோட்டத்தை அல்லது கூற்றத்தைச் சார்ந்திருந்தது என்பது பற்றிக் கூறுவதற் குரிய கல்வெட்டுச் சான்றுகள் எவையும் இங்கு இடம் பெறவில்லை.

சோழ மன்னர்கள் காலத்தில் தொண்டை மண்டலம் ஜெயங் கொண்ட சோழ மண்டலம் எனப்பெயர் மாற்றம் பெற்றது.,

இப்பெரு மன்னர்களாட்சியில் இந்த மண்டலம் பல்வேறு வளநாடு களாகவும், அவற்றின் உட்பிரிவுகளாகிய நாடு, ஊர் ஆகியவை யாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. சில பகுதிகள் முன்பு போலக் கூற்றம் என்ற பெயரைக் கொண்டே விளங்கின. பொதுவாக இத்தகைய பெயர் மாற்றம் முதலாம் இராசராசசோழன் ஆட்சி யிலிருந்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த அரசன் காலத்தில் திருவெண்ணெய்நல்லூர், திருமுனைப்பாடி, திருநறுங்கொண்டை முதலிய ஊர்களடங்கிய பகுதி இராசராசவள நாடு என அழைக்கப் படலாயிற்று. இந்த வளநாட்டின் உட்பிரிவு திருமுனைப்பாடி நாடாகும், திருநறுங்கொண்டை குறிப்பாக இந்த திருமுனைப்பாடி நாட்டுப் பிரிவிலுள்ள ஒரு ஊராகும். இதனை இங்குள்ள கல்வெட்டுக்கள் இராசராசவளநாட்டுத் திருமுனைப்பாடி நாட்டுத் திருநறுங்கொண்டை எனக்குறிப்பிடுகின்றன.[11] திருமுனைப்பாடி நாடு என்பது வடவெள்ளாற்றிற்கும், தென்பெண்ணை ஆற்றிற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும்.

சற்று பிற்காலத்தில் இந்த திருமுனைப்பாடியுடன் குன்றத்தூர் என்னும் ஊரும் இணைக்கப்பட்டு இந்நாடு திருமுனைப்பாடி குன்றத் தூர் நாடு என அழைக்கப்பெறலாயிற்று. எனவேதான் விக்கிரம சோழன், குலோத்துங்கன் முதலிய அரசர்கள் காலக்கல்வெட்டுக் களில் இராசராச வளநாட்டுத்திருமுனைப்பாடி குன்றத்தூர் நாட்டுத் திருநறுங்கொண்டை என இவ்வூர் குறிப்பிடப்பட்டிருக்கிறது.[12] ஆனால் குறிப்பாக எந்த ஆண்டிலிருந்து திருமுனைப்பாடியுடன் குன்றத்தூர் இணைக்கப்பட்டதென்பது தெரியவில்லை. பெரும் பாலும் விக்கிரமசோழன் ஆட்சியின்போது (கி.பி. 1118) தான் இத்தகைய மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

கி.பி. 13 ஆம் நூற்றுண்டில் திருமுனைப்பாடி உள்ளிட்ட பல ஊர்கள் சேர்ந்து நடுவில் மண்டலம் எனப்பெயர் பெறலாயிற்று. ஆனால் திருமுனைப்பாடி என்னும் நாட்டுப்பெயர் மாற்றம் பெருமலே இருந்திருக்கிறது. இதற்குப் பின்னர் திருநறுங்கொண்டை ஆதனூர் என்னும் பேரூரைச் சார்ந்த ஊர் எனவும், இது குறுக்கைக் கூற்றத்திலிருந்தது எனவும் அறிய வருகிறோம். மேலும் குறுக்கைக் கூற்றம் நடுவில் மண்டலத்திலுள்ள திருமுனைப்பாடி நாட்டைச் சார்ந்த பகுதி எனவும் கூறப்பட்டுள்ளது.[13] எனவே நடுவில் மண்டலம், குறுக்கைக்கூற்றம் ஆகிய பிரிவுகள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. என்பதும், அச்சமயத்தில் திரு நறுங்கொண்டை ஆதனூரினைச்சார்ந்த ஊராகத்திகழ்ந்திருக்கிறது என்பதும் தெளிவாகும். பொதுவாக ஒரு அரச பரம்பரையினர் ஆட்சி புரிந்த போது ஊர்களுக்கு அல்லது பிற ஆட்சிப்பிரிவுகளுக்கு

இடப்பட்ட பெயர்கள் பின்னர் வந்த மன்னர்கள் காலத்தில் மாற்றம் செய்யப்பட்டதையும், சில வேளைகளில் ஆட்சிப்பிரிவுகளின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டதையும் பண்டைத்தமிழக வரலாற்றில் பரவலாகக் காணலாம்.

அடிக்குறிப்புகள்

1. அகநானூறு, பாடல் 35, குறுந்தொகை, பாடல்கள் 198, 312

1. **Express Magazine**, 6 12.1981

3. **ARE**, 239/1904,

   G. Krishnamurthi, "New Jaina Inscription from Gingee region", **Mukkudai**, July, 1985

4. திருநறுங்கொண்டையும், பிறதலங்களும் எனும் அத்தியாயத்தில் காண்க.

5. **ARE**, 307/1939-40

6. **ARE**, 83,84/1934-35

7. **ARE**, 109/1906, **Epi.Ind.**, Vol. VI , p. 139.

8. மலையமான், காடவர்கள் அளித்ததானங்களின் விபரம் கல்வெட்டுச் செய்திகள் எனும் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

8a. **ARE**, 382,384/1902

9. **SITI**, Vol. I, No. 75, 78.

10. **ARE**, 315/1939-40.

11. **SII**, Vol. VII, No. 1011

12. **SII** Vol. VII, No. 1012, 1015

13. **ARE**, 303/1939-40.

4

கோயில்-கட்டடக்கலை

திருநறுங்கொண்டையில் வரலாற்றுச் சிறப்புமிக்க அப்பாண்டைநாதர் கோயிலைத்தவிர பழமையான கோயில் வேறு எதுவும் இல்லை. இங்குள்ள மலையில் சமணத்துறவியர் உறைந்த குகையும், பார்சுவநாதருக்குத்தனியாக மண்டப அமைப்புடைய கோயிலும், சந்திரபிரபா தீர்த்தங்கரருக்குக் கருவறை, மண்டபம் ஆகியவற்றைக்கொண்ட கோயிலும், யக்ஷிக்கென கட்டப்பட்ட தூங்கானை மாடக்கோயிலும் காணப்படுகின்றன. இவையன்றி சில ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட பத்மாவதியம்மன் கோயிலும் தென்புறத்தில் உள்ளது. இவையனைத்தையும் ஒன்ருகச்சேர்த்து அப்பாண்டைநாதர் கோயில் என்று குறிப்பிடுவது வழக்கமாகும்.

குகைப்பாழி

நறுங்கொண்டை மலையின் மேற்பகுதியில் இயற்கையாக அமைந்த குகை ஒன்றுள்ளது. இக்குகையில் பண்டைக்காலத்தில் சமண சமய ஆன்ருேர் துறவறம் பூண்டு தவமியற்றியிருக்கின்றனர். துறவற நோன்பியர் உறைந்த குகைகள் பாழி எனவும் பள்ளி எனவும் பொதுவாக அழைக்கப்பெறுவதுண்டு. கோயில் என்னும் முழு அமைப்பு தோன்றுவதற்கு முன்பு இவையே கோயில்களாகவும் திகழ்ந்திருக்கின்றன. திருநறுங்கொண்டையிலுள்ள குகை ஏறத்தாழ நாற்பது அடி நீளத்தை உடையதாய் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இதனுள் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட கற்படுக்கைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவை பத்து அடி நீளமுடையவையாகவும், மூன்றடி அகலமுடையதாகவும் காணப்படுகின்றன. இவற்றுள் ஒருசில படுக்கைகள் உடைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இந்த படுக்கைகளின் தலைப்பகுதியில் படிக்கட்டு போன்ற தலையணைகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

இக்கற்படுக்கைகளுக்கு அருகில் குகையின் வடக்குப்பக்கமாக பதினைந்து அடி நீளமும், ஐந்து அடி அகலமும் உடைய மேடை போன்ற அமைப்பு ஒன்று காணப்படுகிறது. இதனை ஒட்டிக்கீழாக சிறிய அளவில் மற்ருெரு மேடையும் இடம் பெற்றுள்ளது. இது

இங்கிருந்த துறவியர் குழாத்தின் தலைவர் வீற்றிருந்த ஆசன மாகவோ அல்லது அருகப்பெருமானுக்கு வழிபாடு நடத்தப்பெற்ற மேடையாகவோ இருக்க வேண்டும். பண்டைக்காலத்தில் வீர சங்கம் இங்குதான் தாபிக்கப்பட்டிருக்க வேண்டுமென உறுதியாகக் கூறலாம். ஏனெனில் இதைத்தவிர அப்போது வேறு கோயிலோ அல்லது முனிவர்களது உறைவிடமோ இங்கு கிடையாது.

இந்த குகைப்பாழியில் எப்போது படுக்கைகள் வெட்டுவிக்கப் பட்டன என்று வரையறை செய்வதற்குச் சான்றுகள் எவையும் இல்லை. இருப்பினும் இங்குள்ள வீரசங்கத்துறவியர் கி.பி. 9ஆம் நூற்றுண்டில் தமிழகத்தின் தென்கோடியிலிருந்த திருச்சாரணத்து மலை, கழுகுமலை போன்ற தலங்களுக்குச் சென்று சிற்பங்களை நிறுவி யிருப்பதையும்,[1] இங்குள்ள பார்சுவநாதர் சிற்பம் கி.பி. 9ஆம் நூற்றுண்டின் தொடக்ககாலக் கலைப்பாணியைக் கொண்டிருப்பதை யும் கருத்திற்கொண்டு, இந்த படுக்கைகள் கி.பி. 7 அல்லது 8ஆம் நூற்றுண்டில் தோற்றுவிக்கப் பட்டிருக்க வேண்டுமென்பது புலனு கிறது. இந்த குகையின் முகப்புப்பகுதியிலுள்ள கி.பி. 9ஆம் நூற்றுண்டைசார்ந்த இரண்டு கல்வெட்டுக்களுள் ஒன்று வாண கோவரையன் என்னும் சிற்றரசனையும், மற்றென்று கீழைப்பள்ளி யாகிய சந்திரநாதர்கோயில் கட்டியதையும் குறிப்பிடுகின்றன.[2] எனவே கி.பி. 9ஆம் நூற்றுண்டிற்கு முன்பே படுக்கைகள் தோற்று விக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதில் ஐயம் சிறிதுமில்லை. அவ் வகையில் மிக்கவாறும் கி.பி 7 அல்லது 8 ஆம் நூற்றுண்டில் இங்கு சமணம் வேரூன்றியிருக்கவேண்டும்.

கி.பி. 9 ஆம் நூற்றுண்டில் இயற்கையாக உள்ள பாறையில் பார்சுவநாதர் (அப்பாண்டைநாதர்) சிற்பமும், சந்திரநாதர் கோயிலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள்ளும் பார்சுவ நாதர் சிற்பம் காலத்தால் முந்தியதாகும். இங்குள்ள குகையின் நடுப்பகுதி பள்ளமாக இருந்தமையால் பிற்காலத்தில் அதனை செங்கல், கற்கள் ஆகியவற்றைக் கொண்டு நிரப்பியிருக்கின்றனர். மேலும் குகையின் முன்பகுதியில் தடுப்புச்சுவர் ஒன்றும் எழுப்பி யிருக்கின்றனர். அப்பாண்டைநாதர் கோயிலைச்சுற்றியுள்ள பகுதி மேடு, பள்ளமின்றி இருப்பதற்காக குகையைச்சுற்றிலும் கல், மண் ஆகியவற்றைக் கொண்டு சமதளப்பகுதி ஏற்படுத்தியிருக் கின்றனர். இத்தகைய செயல்களினுல் குகை தற்போது தாழ்வாக அமைந்திருப்பது போலத்தோன்றுகிறது. இதனுல் குகையின் நுழைவாயிலினுள் நுழைந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது. பண்டொருகால் அறநெறி பகர்ந்த ஆன்ருேர் வீற்றிருந்த பாழி இன்று சிதைக்கப்பட்டும், கண்காணிப்பின்றியும் இருக் கிறது.

பார்சுவநாதர் மண்டபக்கோயில்

நறுங்கொண்டை மலையுச்சியில் குகைக்குச் சற்று வடக்காக இரண்டு உயரமான பாறைகள் உள்ளன. கிழக்கும், மேற்குமாக நிற்கும் இப்பாறைகளுக்கிடையில் சிறிய இடைவெளிப்பகுதியுள்ளது. இப்பாறைகளுள் கிழக்கிலுள்ளதின் உட்பகுதில் மேற்கு திசை நோக்கியவாறு பார்சுவநாதர் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இத்திருவுருவம் பாறையிலேயே செதுக்கப்பட்ட புடைப்புச்சிற்பமாதலால், இதற்கென்று தனியாகக் கருவறை கிடையாது. இச் சிற்பம் கி.பி. 9 ஆம் நூற்றுண்டின் தொடக்க காலக்கலைப்பாணியைக் கொண்டு மிளிர்கிறது.

ஒன்பதாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் இருபாறைகளுக்கும் இடைவெளியினில் தூண்களும், புறச்சுவர்களும், கூரையும் நிறுவி இதனை ஒரு மண்டபமாக உருவாக்கியிருக்கின்றனர். எனவே இதனை மண்டபக்கோயில் என அழைப்பதே சாலச்சிறந்ததாகும். இந்த மண்டபத்திற்கு நுழைவாயில் தென்புறம் உள்ளது. மண்டபத்திலுள்ள தூண்கள் உருண்டையாகவும், அவற்றின் மேலுள்ள போதிகைகள் நீள் சதுரவடிவினைப் பெற்று, அவற்றின் விளிம்பில் முக்கோண அமைப்பினைக் கொண்டிலங்குன்றன. அலங்கார வேலைப்பாடின்றி எளிமையாகத் திகழும் இத்தூண்கள் கி.பி. 9 ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதி கலைப்பாணியை விளக்குபவையாக இருக்கின்றன. இந்த நீண்ட இடைவெளி மண்டபத்திலுள்ள எட்டுதூண்களுள் ஒன்று காலப்போக்கில் உடைந்தமையால், அதற்குப்பதிலாக வேறுஒரு சதுரவடிவத்தூண் நிறுவப்பட்டுள்ளது. பார்சுவநாதர் திருவுருவத்திற்கு அடிப்பகுதியில் வழிபாடு நிகழ்த்துவதற்கென கல்லால் மேடை ஒன்றும், அதற்கு கீழாகப் பலிபீடமும் பிற்காலத்தில் எழுப்பப்பட்டிருக்கின்றன.

பார்சுவப்பெருமான் மண்டபத்திற்கு மேற்கூரையைச் செங்கற்களின் உதவியினுல் அமைத்திருக்கின்றனர். இரண்டுபாறைகளுக்கும் இடையிலுள்ள மேற்பகுதியில் இந்த கூரை அமைந்துள்ளது. கிழக்கிலுள்ள பாறையின் உச்சியில்தான் செங்கல்லாலான விமானம் காணப்படுகிறது. இந்தவிமானம் மூன்று தளங்களையுடையதாய் அவற்றில் கூடம், சாலை எனப்படும் சதுர, நீள்சதுரவடிவுடைய சிறியகோயில் அமைப்புகளைக் கொண்டுள்ளது. இந்த அமைப்புகளுக்கிடைப்பட்ட பகுதியில் காவலர்கள், பார்சுவதேவர், மகாசாத்தன் ஆகியோரது சுதைஉருவங்கள் இடம் பெறுகின்றன. விமானத்தின் மேற்பகுதியில் சதுரவடிவ சிகரமும்,

அதற்கு மேலாகக் கலசமும் காணப்படுகின்றன. பொதுவாகக் கட்டடக்கோயில்களில் கருவறைக்கு மேலாக விமானமேற்பகுதி எழுப்பப்படுவது வழக்கம். ஆனால் இங்கு தனியாகக் கருவறையின்றி மூலவர் பாறையிலே செதுக்கப்பட்டிருப்பதால், விமானம் பாறையின் உச்சியில் தனியாகக்கட்டப்பட்டிருக்கிறது. இந்த விமானம் பிற்காலஅமைப்புடையதாக இருப்பதால் கி.பி. 9ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்டதல்ல என்பது தெளிவாகிறது. வெளியிலிருந்து பார்க்கும்போது இந்தவிமானம் பாறையின்மேல் தனியாக நிற்பதுபோலத் தோன்றும். மண்டபத்தின் வடக்கு, தெற்குச் சுவர்களும் பலமுறை புதுப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். முன்பு வடக்குச்சுவரிலிருந்த நுழைவாயில் அண்மைக்காலத்தில் மூடப்பெற்று சுவர்எழுப்பப்பெற்றிருக்கிறது. எனவே இந்த மண்டபத்தில் தூண்களைத்தவிர பண்டைய கட்டடக் கலையம்சத்தினைக் காணஇயலாது.

சந்திரநாதர் கோயில்

குகைப்பாழிக்கும், பார்சுவநாதர் சன்னதியிலுள்ள பாறைக்கும், அதற்கு மேற்கிலுள்ள மற்றொரு பாறைக்கும் இடைப்பட்ட பகுதியில் சந்திரபிரபா தீர்த்தங்கரருக்குத் தனிக்கோயில் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு நோக்கி விளங்கும் இக்கீழைப் பள்ளியும், அதனை ஒட்டியுள்ள முன்மண்டபமும் கி.பி. 9 ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்டதென குகையின் முகப்பில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டொன்று கூறுகிறது.[3]

கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றைக்கொண்ட இக்கோயிலின் உட்சுவர்கள் கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் பிற்காலத்தில் இதன் புறச் சுவர்கள் மீது செங்கல், சுண்ணும்புச்சாந்து ஆகியவற்றைக்கொண்டு சுவரின் திண்மை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. எனவே இக்கோயிலின் பண்டைய கட்டடக் கலையம்சத்தினை அறிய வாய்ப்பில்லை. புறச்சுவர்களை அரைத் தூண்களும், அவற்றிற்கு மேலாக புரு வடிவங்களும் அலங்கரிக்கின்றன. கருவறையின் தெற்கு, வடக்குச் சுவர்களில் இறைத்திருவுருவங்கள் நிறுவுதற்குரிய மாடங்கள் (தேவகோட்டங்கள்) அமைக்கப்படவில்லை. ஆனால் மேற்குச்சுவரின் பின்பகுதியில் பார்சுவநாதரின் சுதை உருவம் கொண்ட மாடம் இடம் பெற்றுள்ளது. இதனை ஒட்டி சிறிய அளவில் மண்டபம் போன்ற அமைப்பும் எழுப்பப்பட்டிருக்கிறது.

இக்கோயில் மூன்று தளங்களையுடைய விமானமாகத் திகழ்கிறது. ஒவ்வொரு தளத்தினையும் பார்சுவநாதர், மகாவீரர்,

சந்திரநாதர், அம்பிகா, பத்மாவதி, சுவாலமாலினி, சாத்தன், காவலர் ஆகியோரது சுதை வடிவங்கள் அணி செய்கின்றன. மேற் பகுதியில் உருண்டை வடிவ சிகரமும், அதற்கு மேல் ஒற்றைக் கலசமும் காணப்படுகின்றன. விமானத்தின் தளங்கள் பிற்காலத் தில் தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டுமேயன்றி ஒன்பதாம் நூற்ருண்டில் உருவாக்கப்பட்டதல்ல. எனவே ஆரம்ப காலத்தில் இக்கோயில் கருவறை, முன்மண்டபம் ஆகிய இரு பகுதிகளை மட்டும் கொண்டிருந்திருக்கிறது என்பது தெளிவாகும்.

திருநடை மாளிகை (உள்திருச் சுற்ருலே)

சந்திரநாதர் கருவறை, மண்டபம் ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதி கரடு, முரடாகவும்; மேடு, பள்ளமாகவும் இருந்தமையால் இவற்றைச் சுற்றிலும் மேடை போன்ற அமைப்பு கி.பி. 12 ஆம் நூற்ருண்டில் ஏற்படுத்தப்பட்டு, மக்கள் இக்கோயிலே வலம் வருவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த மேடையின் அடிப்பகுதியில் விக்கிரமசோழன், இரண்டாம் இராசராசன், மூன்ரும் குலோத்துங்கன் முதலிய சோழ அரசர்களது கல்வெட்டுக் கள் பொறிக்கப்பட்டிருப்பதை நோக்குமிடத்து,[4] கி.பி. 12ஆம் நூற்ருண்டிற்கு முன்பு இந்த மேடைப்பகுதி கட்டப்படவில்லே எனக் கூறலாம்.

இவ்வாறு சுற்று மேடையாக இருந்த அமைப்பு கி.பி. 13ஆம் நூற்ருண்டில் உள்திருச் சுற்ருலேயாக மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது இந்த மேடையில் தூண்களே நிறுவியும், வரிக்கற்களா லான கூரை எழுப்பியும், சுற்றுச் சுவர்களேக் கட்டியும் திருநடை மாளிகையாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதனைக் காடவ சிற்றரச ஞகிய கோப்பெருஞ்சிங்கனது மூன்ருவது (கி.பி. 1246), ஆருவது (கி.பி. 1249) ஆட்சியாண்டுகளில் பாலேயூர் சிங்கன் என்பவரும், மற்ரெருருவரும் கட்டியதாக இங்குள்ள இரு சாசனங்கள் கூறு கின்றன.[5] அதாவது இந்த திருநடை மாளிகை கி.பி. 1246 லிருந்து 1249 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப் பெற்றிருக்கிறது. இதிலுள்ள தூண்கள் சதுர, எண்கோண வடிவங்களேக் கொண்டு, மேற் பகுதியில் நீள் சதுர போதிகைகளேயுடையதாய் கி.பி. 13 ஆம் நூற்ருண்டுக் கலேப்பாணியில் மிளிர்வதும் குறிப்பபிடத்தக்கதாகும்.

மகாமண்டபம், சித்திரக் கூட மண்டபம், முகமண்டபம்

சந்திரநாதர் கோயில் அர்த்த மண்டபத்திற்கு அடுத்தாற் போன்றும், பார்சுவநாதர் மண்டபத்தினே ஒட்டியும், இரண்டிற்கும் பொதுவாக மகாமண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இது கட்டப் பட்டது பற்றிக் கல்வெட்டு எவையும் குறிப்பிடா விட்டாலும்,

மிக்கவாறும் கி.பி. 13 அல்லது 14 ஆம் நூற்றுண்டில் தோற்று விக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த மகாமண்டபமும் புதுப்பிக்கப் பட்டிருப்பதால் இதன் கலைப்பாணியினைத் தெளிவுறக் கூறுவதற் கில்லை.

இந்த மண்டபத்தை அடுத்துள்ள சித்திரக்கூட மண்டபமும், முகமண்டமும் கி.பி. 16 ஆம் நூற்றுண்டில் கட்டப் பெற்றவை யாகும். இவற்றிலுள்ள தூண்களும், முகமண்டபத்தில் பொறிக்கப் பட்டுள்ள கி.பி. 16 ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டுக்களும் இதனை வலியுறுத்துபவையாகும்.[6] இதற்கு முன்பாக உள்ள இடத்தில் பலிபீடமும், மானஸ்தம்பமும் காணப்படுகின்றன. இந்த நூற் ருண்டின் தொடக்கத்தில் பலிபீடத்தையும், மானஸ்தம்பத்தையும் உள்ளடக்கியவாறு மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டிருக்கிறது. இதிலுள்ள தூண்கள் அப்பாண்டைநாதர் கோயிலின் தெற்குப் புறத்தில் முன்பிருந்த மண்டபத்திலிருந்து கொண்டு வரப்பட்டவை எனக்கூறப்படுகிறது.

அழகம்மை மண்டபம்

சித்திரக் கூட மண்டபத்திற்கு வடக்காகவும், பார்சுவநாதர் சிற்பம் உள்ள பாறையை ஒட்டி கிழக்காகவும் ஒரு மண்டபம் காணப்படுகிறது. இதனை அழகம்மை மண்டபம் என அழைக் கின்றனர். கி.பி, 13 ஆம் நூற்றுண்டிலேயே இக்கட்டடம் இங்கு இருந்திருக்கிறதென்பதை இதன் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றும் இராசராச சோழனது (கி.பி. 1221) கல்வெட்டொன்று அறிவுறுத்துகிறது.[7] இது மிக்கவாறும் யக்ஷிக்கென கட்டப்பட்ட மண்டபக் கோயிலாகும். பார்சுவநாதருக்கும் தனியாக கருவறை கிடையாதது போன்று, யக்ஷிக்கும் கருவறையில்லாத மண்டபம் மட்டிலும் கட்டியிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. அப் பாண்டார் கோயிலிலுள்ள கி.பி. 13 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த இருசாசனங்கள் மேலைப்பள்ளியிலுள்ள யக்ஷியின் முன்பு விளக்குகள் எரிய விடுவதற்கென தானம் அளித்ததைக் குறிப்பிடு கின்றன.[8] இங்கு 'மேலைப்பள்ளியிலுள்ள யக்ஷி' என குறிப்பாகக் கூறியுள்ளதால், இந்த மண்டபம் பார்சுவ தேவரின் யக்ஷியாகிய பத்மாவதிக்குக் கட்டப்பட்டதெனத் தெளிவாகிறது. ஆனல் இங்கு நிறுவப்பட்ட பத்மாவதி யக்ஷி சிற்பம் தற்போது இல்லை. பத்மாவதி, கூஷ்மாண்டினி முதலிய யக்ஷிகளைப் பொதுவாக அழகம்மை (அழகிய அம்மை) என அழைப்பதை முன்னிட்டு, பிற்காலத்தில் இந்த மண்டபத்தை அழகம்மை மண்டபம் என்றே அழைத்து வந்திருக்கின்றனர்.

தூங்கானை மாடக்கோயில்

அழகம்மை மண்டபத்தை ஒட்டி கிழக்கில் கருவறை, அந்தராளம், முக மண்டபம் ஆகியவற்றைக் கொண்ட சிறிய கோயில் ஒன்று பாழடைந்த நிலையிலுள்ளது. செங்கல்லால் கட்டப்பெற்ற இக்கோயிலின் கருவறை அரை வட்ட வடிவ அமைப்பிலுள்ளதால் கஜபிருஷ்டக்கோயில் அல்லது தூங்கானை மாடக்கோயில் வகையைச் சார்ந்ததாக இருக்கிறது. இது தீர்த்தங்கரர் திருவுருவத்தினையோ அல்லது யக்ஷி சிற்பத்தினையோ கொண்டு விளங்கவில்லை. எனவே இது யாருக்காகப் பிற்காலத்தில் கட்டப்பட்டது என்பதனை வரையறை செய்ய இயலவில்லை.

பத்மாவதியம்மன் கோயில்

அண்மைக்காலத்தில் திருநறுங்கொண்டைக்கோயில் பிரசித்தி பெறத் தொடங்கியதால், மலையின் தெற்குப் பகுதியிலுள்ள சமதளப்பரப்பில் பத்மாவதிக்கென கோயில் கட்டப்பட்டிருக்கிறது. தமிழகத்திலுள்ள சமணப் பெருந்தகையோர் ஏராளமான நன்கொடை வழங்கி இதனைக் கட்டியிருக்கின்றனர். சிறிய அளவிலான கருவறையும், அதற்கு முன்பாக வழிபட வருவோர் வசதியை முன்னிட்டு பெரியதாக மண்டபமும் கட்டப்பட்டிருக்கின்றன. கருவறையில் பத்மாவதி, பார்சுவநாதர் ஆகியோரின் சலவைக் கல்லாலான திருவுருவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

கோபுரம், பிரகாரம்

மலையின் மீதுள்ள குகை, சந்திரநாதர் கோயில், பார்சுவநாதர் கோயில், அழகம்மை மண்டபம் முதலியவற்றை உள்ளடக்கியவாறு பிரகாரச் சுவர் கட்டப்பட்டிருக்கிறது. இந்த வெளித் திருச்சுற்று மதில் பல முறை பழுதடைந்தமையால் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த திருச்சுற்று மதியின் தென்புறச் சுவர் மேலும் விரிவு படுத்தப்பட்டு பத்மாவதியம்மன் கோயிலையும் உள்ளடக்கியவாறு சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த திருச்சுற்று மதிலுக்கு வலிமையூட்டும் வகையில் குன்றின் கிழக்குப் பகுதியில் வரிக்கற்களை அடுக்கிக் கட்டியும் உள்ளனர்.

பிரகாரச் சுவரை ஒட்டி கிழக்குப் புறம் கோபுரமும், அதற்குக் கீழாக மலையில் ஏறுவதற்குப் படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக எல்லா கோயில்களிலும் கருவறைக்கு நேர் எதிராக கோபுரம் இருக்கும். ஆனால் இக்கோயில் மலையின் மீது எழுப்பப்பட்டிருப்பதாலும், கருவறைக்கு நேர் கிழக்காக செங்குத்தான பள்ளம் இருப்பதாலும், கோபுரம் கருவறையிலிருந்து சற்று

தள்ளி தென் கிழக்கில் அமைக்கப்பட வேண்டியதாயிற்று. தரையிலிருந்து மலைக்குச் செல்வதற்கு ஏற்றவாறு ஐம்பத்தொரு படிகள் அழகுற அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் இருமருங்கிலும் மேல் நோக்கி வளைந்து, வளைந்து செல்லும் வண்ணம் கைப்பிடிச் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது.

கோபுரம் ஏறத்தாழ முப்பத்தைந்து அடி உயரமுடையதாகும். இதன் அடிப்பகுதி கருங்கல்லாலும், கொடுங்கைக்கு மேலுள்ள பகுதி செங்கல், சுண்ணும்புச் சாந்து ஆகியவற்ருலும் கட்டப்பட்டிருக்கிறது. ஐந்து நிலைகளையுடைய இக்கோபுரத்தின் உச்சியில் சிகரமும், அதற்கு மேல் ஐந்து கோபுரக்கலசங்களும் இடம்பெற்றிருக்கின்றன. இந்த ஐந்து தளத்திலும் சிறிய அளவில் காவலர், பார்சுவநாதர் முதலியோரது சுதை உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. கோபுர வாயிலின் அருகில் பொறிக்கப்பட்ட கல்வெட்டிலிருந்து இந்த கோபுரத்தின் கருங்கல் பணி (அதாவது அடிப்பகுதி) 1636 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், 28 ஆம் தியதி ஞாயிற்றுக் கிழமை முடிவு பெற்றதாக அறிய வருகிரும். மேலும் இப்பணியினை பரமஜினதேவர் என்பவர் செய்திருக்கிருர் எனவும் அறியக் கிடக்கிரும்.[9] இதிலிருந்து பிரகாரச்சுவரும், கோபுரத்தின் அடிப்பகுதியும் 1636 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டதென்பது தெளிவாகிறது. கோபுரத்தின் மேற் பகுதியினிலுள்ள ஐந்து தளங்களும் பிற்காலத்தில் தான் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

நூற்றுக்கால் மண்டபம்

நறுங்கொண்டை மலையின் அடிவாரத்தில் நூற்றுக்கால் மண்டபமும், அதற்கு வடக்கில் சிறிய அளவிலான மற்ருெரு மண்டபமும் காணப்படுகின்றன. இந்த நூற்றுக்கால் மண்டபத்தைச் சத்திரம் எனக்குறிப்பிடுகின்றனர். இது திருப்பறம்பூரைச் சார்ந்தவரும், மாவட்ட உதவி ஆட்சியாளராகவும் இருந்த ஸ்ரீபாலையா, கரடிப்பாக்கத்தைச் சேர்ந்த சக்கரவர்த்தி நயினர் ஆகியோரது அரும் முயற்சியினல் இந்த நூற்ருண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது. இதனைப் போன்று வடக்கிலுள்ள சிறிய மண்டபமும் இப்பெரியோரர்களது முயற்சியின் விளைவேயாகும். விழாக்காலங்களில் இங்கு கூடும் மக்கள் தங்குவதற்கேற்ற வகையில் நூற்றுக்கால் மண்டபம் அமைந்துள்ளது. வைகாசி, தை மாத விழாவின் போது பெருந்திரளாக வரும் பக்தர்கள் இங்கு உணவருந்தி ஓய்வெடுத்துச் செல்கின்றனர். வடக்கில் உள்ள சிறிய மண்டபத்தில் தற்காலத்தில் தடுப்புச் சுவர்கள் எழுப்பி, ஒரு பகுதி கோயிலில் பூசை செய்பவர்கள் வசிப்பதற்கேற்ற வகையிலும், அதனையடுத்து கோயில் திருப்பணிக் குழு அலுவலகமாகவும் மாற்றப்பட்டிருக்கிறது.

சுனையும், தாமரைக் குளமும்

பார்சுவநாதர் கோயில் பிரகாரத்திற்கு வடபுறத்தில் பாறையில் இயற்கையாய் அமைந்த சுனை ஒன்றுள்ளது. நீண்ட வடிவமான இச்சுனை முன்பு எப்போதும் தூய நீரையுடையதாக இருந்ததெனக் கூறப்படுகிறது. இச்சுனையிலிருந்து கீழிறங்கிச் சென்றால் வடக்குப் பக்கம் சிறிய அளவிலான குளம் ஒன்று காணப்படும். இந்த குளத்தினைத் தாமரைக்குளம் என அழைப்பர். இக்குளத்தினைச்சுற்றி வரிக்கற்கள் சிதறிக்கிடக்கின்றன. முன்பு இது நல்ல நிலையில் இருந்த போது இதன் நான்கு பக்கங்களிலும் படிக்கட்டுக்கள் இருந்திருக்க வேண்டும். இந்த குளத்திலிருந்து அபிடேகத்திற்குத் தண்ணீர் எடுத்துச்செல்வது வழக்கமாகும். மலையின் மேற் பகுதியிலிருந்து கீழிறங்கி இக்குளத்தை அடைவதற்குச் சிறிய படிகளும் பாறையிலே வெட்டப்பட்டிருக்கின்றன. கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் திருநறுங்கொண்டையைச் சேர்ந்த தட்டாரகிய குணவீரதேவன் பண்டிததேவன் என்பவர் இப்படிகளை வெட்டுவிக்க ஏற்பாடு செய்தார் எனக் கல்வெட்டொன்று கூறுகிறது.[10] பிரகாரச் சுவரின் வடபகுதியில் தண்ணீர் எடுத்து வருவதற்கேற்ற வகையில் முன்பு நுழைவாயில் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அண்மைக்காலத்தில் அவ்வாயிலைக்கற்களினால் அடைத்துச் சுவர் எழுப்பியுள்ளனர்.

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளின் அடிப்படையில் நோக்கும் போது திருநறுங்கொண்டையிலுள்ள குகையில் கற்படுக்கைகள் கி.பி. 7 அல்லது 8 ஆம் நூற்றாண்டிலும், பார்சுவநாதர் சிற்பம் 9 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், சந்திரநாதர் கோயில் கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவையும் அதே நூற்றாண்டிலும் தோற்றுவிக்கப்பட்டிருப்பது அறியற்பாலதாகும். சந்திரநாதர் கோயிலைச் சுற்றியுள்ள மேடைப்பகுதி 12 ஆம் நூற்றாண்டிலும், உள் திருச்சுற்றுமதில், மகாமண்டபம், அழகம்மை மண்டபம் ஆகியவை 13 ஆம் நூற்றாண்டிலும்; சித்திரக்கூட மண்டபம், முகமண்டபம் ஆகியவை 16 ஆம் நூற்றாண்டிலும்; கோபுரம், வெளிப்பிரகாரம் ஆகியவை 17 ஆம் நூற்றாண்டிலும் கட்டப்பட்டிருக்கின்றன. எஞ்சியவை இந்த நூற்றாண்டினைச் சார்ந்தவையாகும். ஆகவே இங்கு ஓராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே சமண சமயம் நிலை பெற்றிருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

அடிக்குறிப்புகள்

1. **TAS**, vol p. 126, **ARE**, 28/1894
2. **ARE**, 306, 307,/1939-40
3. **ARE**, 306/1939-40
4. **SITI**, Vol.I, No. 73 **ARE**, 299, 317/1939-40.
5. **SITI**, Vol. I, No. 77, **ARE**, 314/1939-40
6. **SITI**, Vol. I, No. 82
7. **ARE**, 313/1939-40
8. **SITI**, vol. I, No. 76, 81
9. **ARE**, 315/1939-40
10. **SITI**, vol. I, No. 82-E

5

சிற்பங்கள், படிமங்கள்

தமிழகத்தில் கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்துதான் இறைவடிவங்களைக் கல்லில் வடிக்கும் வழக்கம் ஏற்பட்டதாக அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர். அதற்கு முற்பட்டகாலத்தில் இறந்தவர்களின் நினைவுச்சின்னங்களுக்கு மட்டிலும் கருங்கல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஏழாம் நூற்றாண்டிற்கு முந்திய கல்சிற்பங்கள் எவையும் இதுவரை கிடைக்காமையால் இக்கருத்து மேலும் வலிமைபெறுகிறது. திருநறுங்கொண்டையில் பாறைச்சிற்பங்களும் தனிசிற்பங்களும், உலோகப்படிமங்களும், சுதைவடிவங்களும் காணப்படுகின்றன, இவற்றைக் காலவரிசைப்படி இப்பகுதியில் காண்போம்.

பார்சுவநாதர் சிற்பம் (மூலவர்)

நறுங்குன்றில் இயற்கையாக அமைந்த பாறையின்மீது நின்ற கோலத்தில் செதுக்கப்பட்டுள்ள பார்சுவப்பெருமான் வடிவம் பாறைச்சிற்ப வகையைச் சார்ந்ததாகும். நீண்ட உடலமைப்பினையும், தொங்கவிட்டகரங்களையும், அமைதியான முகஅமைப்பினையும் கொண்டு இத்திருவுருவம் அழகுறக்காட்சியளிக்கிறது. ஆடை, அலங்கார வேலைப்பாடுகள் எவையும் இன்றி அணியாத அழகராய் இயற்கையான தோற்றத்துடன் இப்புடைப்புச்சிற்பம் விளங்குகிறது. இவரது தலைக்கு மேற்பகுதியில் ஐந்துதலைப்பாம்பு படம்விரித்த நிலையிலுள்ளது. அதற்குமேலாக முக்குடை வடிவம் மெல்லியதாக வடிக்கப்பட்டிருக்கிறது. கால்களுக்கு அடிப்பகுதியில் தாமரைமலர் வடிவமும் மெல்லியதாகவே காட்டப்பட்டிருக்கிறது. இவரது தோள்களுக்கு இணையாக இருமருங்கிலும் இரண்டு சாமரம் வீசுவோர் உருவங்கள் மென்கோட்டுச் சிற்பங்களாகத் தீட்டப் பெற்றிருக்கின்றன. இவற்றில் கிரீடமகுடம், வட்டவடிவ குண்டலங்கள், கழுத்தணிகள், கைவளைகள் முதலியன எளிமையாகக் காட்டப்பெற்றிருக்கின்றன. பாறையில் படைக்கப்பட்ட இப் பார்சுவப் பெருமான் சிற்பம் பண்டைக் காலத்தில் இந்த மலையில் வதிந்த துறவியர் வழிபட்டு வந்த தரிசன பிம்பமாகும்.

இச்சிற்பத்தின் இயற்கையான உருவ அமைப்பு, சாமரம் வீசுவோர் திருவுருவங்களிலுள்ள ஆடை, அலங்கார, பக்க

வாட்டில் வட்டமாகத்தோன்றும் குண்டலங்கள் முதலியவற்றின் அடிப்படையில் நோக்கும் போது, இப்பார்சுவநாதர் திருவுருவம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தோற்றுவிக்கப் பட்டிருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது.

பார்சுவதேவர் சிற்பத்தில் கால்முட்டுக்கு சற்று மேலுள்ள பகுதி சிதைந்து காணப்படுகிறது. இதனை வேடன் ஒருவன் கிழங்கு தோண்டியபோது அவனது தோண்டு கருவிபட்டதால் ஏற்பட்ட வடு என்று சொல்லப்படுகிறது. ஆனால் இங்கு கால்களில் மட்டு மின்றி அதற்கு இணையாகப் பக்கவாட்டிலும் பாறையில் இயற்கையான சிதைவு ஏற்பட்டிருப்பதைக்காணலாம். அதாவது காலச்சுழலில் பாறையில் ஏற்பட்ட விரிசலின் காரணமாக இத்தகைய சிதைவு ஏற்பட்டிருக்கிறதென்பது புலனாகும்.


சந்திரநாதர் திருவுருவம் (சுதை உருவம்)

கீழைப்பள்ளியாகிய சந்திரப்பிரபா தீர்த்தங்கரரது கோயிலின் கருவறையில் பெரிய அளவிலான இவரது சுதை உருவம் காணப் படுகிறது. தாமரை மலர் மீது தியான ரூபியாய் அமர்ந்திருக்கும் இப்பெருமான் பரந்த உடலமைப்பினையும், அகன்றமார்பினையும், தவமேற் கொள்ளுதலால் மூடிய கண்களையும், கருணை தவழும் முகப்பொலிவினையும் பெற்றிலங்குகிறார். ஆண்டு தோறும் வெள்ளை வண்ணம் பூசுவதால் இச்சுதைவுருவம் பளிங்கினைப் போன்று காட்சியளிக்கிறது. இவரது இருபுறமும் சாமரம் வீசுவோர் இருவரது சுதை வடிவங்கள் இடம் பெற்றுள்ளன.


கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் கீழைப்பள்ளியாகிய இக்கோயில் கட்டப்பட்டதாகக் கல்வெட்டுச்சான்று கூறிய போதிலும், இந்த சுதை உருவம் அந்த நூற்றாண்டைச் சேர்ந்த தெனக்கூறுவதற்கியல வில்லை. இச்சுதைவுருவங்களில் தொடர்ந்து வண்ணம் பூசி வருவதால் பண்டைய கலையம்சத்தினை அறியும் வாய்ப்பில்லை. (சந்திரநாதர் கல்சிற்பமாக இருந்து அதன் மீது சுண்ணச்சாந்து பூசி தற்போதைய அமைப்பினில் ஆக்கப்பட்டிருந்தாலும் வியப்படை வதற்கில்லை)

ரிஷபநாதர் சிற்பம்


அப்பாண்டைநாதர் சன்னதிக்குச் செல்லும் வழியிலுள்ள மண்டபத்தின் வடக்குப் பகுதியில் தனியாக ரிஷபநாதர், மல்லி நாதர், மகாவீரர், தருமதேவி, மகாசாத்தன் முதலியோரைக் குறிக்கும் சிற்பங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை முன்பு தனியாகச் சிறிய கருவறைகளில் வைக்கப்பட்டவையாக இருக்க லாம்.




திருக்கோயில் தோற்றம்



ஸ்ரீ அப்பாண்டை நாதர்



சந்திரநாதர்



தருமதேவி

இந்த சிற்பத்தொகுதியில் காலத்தால் முந்தியதும், கலையம் சங்களைக்கொண்டதும் ரிஷபநாதரது திருவுருவமாகும். இச்சிற்பம் அகன்று பரந்த உடலமைப்புடனும், சதுர வடிவ முகத்துடனும் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறது. தியானத்தைக் குறிக்கும் மூடிய கண்களும், வடித்த காதுகளும், மெய்யறிவை மிளிரவைக்கும் மலர்ந்த முகமும், நிமிர்ந்து அசைவற்ற உடலும் இதற்குக் கம்பீரமான தோற்றத்தை அளிக்கின்றன. இத்தன்மைகள் அனைத்தும் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு சோழர் கலைப்பாணியினை தெள்ளத்தெளிவாக விளக்குபவையாகும். இந்த கலைச்செல்வம் திருக்கோயிலூருக்கு பதினைந்து கிலோ மீட்டர் தென் கிழக்கிலுள்ள பாவண்டூரிலிருந்து இங்கு கொணரப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் முன்பு இது மலையடிவாரத்திலுள்ள படிக்கட்டுகளின் வட புறம் நிறுவப்பட்டு, சமீபகாலத்தில் அப்பாண்டைநாதர் சன்னதியை அடுத்துள்ள மண்டபத்தில் கொண்டு வைக்கப்பட்ட தாகவும் சொல்லப்படுகிறது.

மல்லிநாதர், மகாவீரர் சிற்பம்

ரிஷபநாத தீர்த்தங்கரரை அடுத்து மல்லிநாதர், மகாவீரர் ஆகியோரது சிற்பங்கள் இடம் பெறுகின்றன. இச்சிற்பங்களும் தியான நிலையில் அமர்ந்த வண்ணம் காட்சியளிக்கின்றன. ரிஷப தீர்த்தங்கரரைக் காட்டிலும் இவை சற்று சிறியவை. அமைதியான முகச்சாயலும், அகன்று நிமிர்ந்த உடலமைப்பும், நீண்ட புருவங் களும் சிறிது கூர்மையான மூக்கும், நன்றாகக் காட்டப்பெற்ற உதடுகளும் இவற்றை அணி செய்பவையாகும். இச்சிற்பங்களில் இந்த தீர்த்தங்கரர்களுக்குரிய இலாஞ்சனை எதுவும் பொறிக்கப்பட வில்லை. இவை கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக் கலைப்பாணியைப் பெற்றிலங்குகின்றன.

தருமதேவி, பிரம்மதேவர்

மகாவீரர் சிற்பத்திற்கு அண்மையில் தருமதேவியின் சிற்பம் உள்ளது. இருகரங்களையுடையவளாய் இத்தேவி பீடமொன்றில் அமர்ந்தவாறு காணப்படுகிறாள். இவளது திருமேனியை கிரீட மகுடம், குண்டலங்கள், கழுத்தணிகள், கைவளைகள் ஆகியவை அலங்கரிக்கின்றன இச்சிற்பத்திலுள்ள ஆடை, அலங்காரம் அனைத்தும் 19 ஆம் நூற்றாண்டுக்கலையினை உணர்த்துவனவாக உள்ளன.

பார்சுவநாதர் மண்டப நுழைவாயிலின் கிழக்குப்புறம் சுவரில் சிறிய அளவிலான பிரம்மதேவர் எனப்படும் மகாசாத்தனது புடைப்புச்சிற்பம் நிறுவப்பட்டிருக்கிறது. இது ஒரு காலைப்

பீடத்தில் மடக்கி வைத்த நிலையிலும், அடுத்த காலைக் குத்துக் காலிட்ட நிலையிலும் இலாவகமாக அமர்ந்தவாறு காணப்படுகிறது. கையினில் செண்டு எனப்படும் வளைந்த கோல் (லாக்குடம்) உள்ளது. இது இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நிறுவப்பட்டதாக இருக்க வேண்டும்.

மண்டபத்தில் தருமதேவி சிற்பத்தை ஒட்டி இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களை வரிசையாகக்கொண்ட 'சதுர்விம்சதி' கற்பலகை ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. சிறிய அளவிலான இச் சிற்பத்தொகுதியும் இந்த நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இம் மண்டபத்தில் இடம்பெற்றிருக்கும் சிறிய அளவிலான பார்சுவப் பெருமான் சிற்பமும் 20 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டதாகும்.

சனீஸ்வரர் சிற்பம்

மலையின் அடிவாரத்தில் படிக்கட்டுகளுக்குத் தென்புறத்தில் அமைக்கப்பட்ட மேடையில் நவக்கிரகங்களுள் ஒன்றான சனிபகவானது புடைப்புச்சிற்பம் நிறுவப்பட்டிருப்பதைக்காணலாம் பொதுவாக நவக்கிரகச்சிற்பங்களை ஒருதொகுதியாக நிறுவுவது தான் வழக்கம். ஆனால் இங்குமட்டும் சனீஸ்வரர் தனியாக நிறுவப்பட்டிருக்கிறார்.

நீண்ட அரைவட்டவடிவ கற்பலகையில் இவர் நின்ற கோலத்தில் விளங்குகிறார். இவரது நான்கு கைகளுள் மேலுள்ள இரண்டில் வஜ்ரம், பாசக்கயிறு ஆகியவையும், கீழுள்ளகைகள் அபய, வரதமுத்திரைகளைக் குறித்தும் காணப்படுகின்றன. சனியின் வாகனமாகிய காகம் இவருக்குப் பின்பகுதியில் வடிக்கப் பட்டிருக்கிறது. இச்சிற்பத்தின் அடிப்பகுதியில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு, கரடிப்பாக்கத்தைச் சார்ந்த சக்கரவர்த்தி நயினாரின் மனைவியாகிய சிவதேவியம்மாள் 1935ஆம் ஆண்டு இதனைத் தாபித்ததாகக் கூறுகிறது. இவ்வம்மையார் தமக்கு மகப்பேறின்மையால், இச்சிற்பத்தை நிறுவி நெடுநாட்கள் நோன்பிருந்து வழிபட்டதன் பயனாகப் பெண்மகவு பெற்றெடுத்தார் எனக்கூறப்படுகிறது. கோயிலுக்கு வருவோர் தங்களது வழிபாடுகளை முடித்துவிட்டுத் திரும்பும்போது, இச்சனிபகவானுக்கும் கற்பூரம் கொளுத்தி வணங்கிய பின்னரே பயணத்தைத் தொடர்வது வழக்கமாகும்.

பார்சுவநாதர் சிற்பம்

மலையடிவாரத்திலுள்ள படிக்கட்டுகளுக்கு வடபுறம் பார்சுவநாதர் புடைப்புச் சிற்பம் ஒன்று சிறிய அளவில் காணப்படு

கிறது. இதனையும் சக்கரவர்த்திநயினரின் துணைவியாகிய சிவதேவியம்மாள் நிறுவியதாக் கூறப்படுகிறது. அரைவட்டவடிவ கற்பலகையின் மேற்பகுதியில் பார்சுவப்பெருமான் அமர்ந்த கோலத்தில் தியான மூர்த்தியாக விளங்குகிறார். இவரது தலைக்கு மேலாக ஐந்துதலை நாகமும், அதற்குமேல் முக்குடையும் காணப் படுகின்றன. பாம்பின் உடல் பார்சுவநாதரின் ஒருபுறத்தில் வளைந்து செல்வதாகக் காட்டப்பட்டுள்ளது. இவருக்கு அடிப் பகுதியில் தரணேந்திரயக்ஷனும், பத்மாவதி யக்ஷியும் அமர்ந்த வாறு மிகவும் மெல்லியதாகத் தீட்டப்பெற்றிருக்கின்றனர்.

சேத்திரபாலர் சிற்பம்

படிக்கட்டுகளுக்கு அருகிலுள்ள பார்சுவநாதர் சிற்பத்தினை ஒட்டி சேத்திரபாலகர் சிற்பமும், பூதகணங்கள் சிற்பமும் நிறுவப் பட்டிருக்கின்றன. இந்த தலத்தினைக் காவல்புரியும் தெய்வமாகக் கருதப்படும் சேத்திரபாலர், சைவசமயக் கோயில்களில் இடம் பெறும் பைரவரைப் போன்றிருக்கிறது. இதுவும் இந்த நூற் றாண்டில் உருவாக்கப்பட்ட கலைச்செல்வம்தான். ஆடையின்றித் திகழும் சேத்திரபாலகர் நான்கு கரங்களுடையவராய், அவற்றில் உடுக்கை (தமருகம்), பாசக்கயிறு, கபாலம், குறுவாள் ஆகிய வற்றைக் கொண்டுள்ளார். இவரது தலையினைக் கிரீடமகுடம் அலங் கரித்த போதிலும், அதனைச்சுற்றி நெருப்புச் சுவாலைகள் காட்டப் பட்டுள்ளன. இத்தேவரது வாகனமாகிய நாய் பின்பகுதியில் சிறியதாக வடிக்கப்பட்டிருக்கிறது. இந்த சிற்பத்திற்கு அருகில் சிங்கமுக அமைப்புகள் நிறுவப்பட்டு அவற்றையே பூதகணங்கள் எனக்குறிப்பிடுகின்றனர். அப்பாண்டைநாதர் கோயிலுக்கு வருவோர் முதன் முதலில் தேங்காய் உடைத்து சேத்திரபாலரை வணங்கிவிட்டுத்தான் படிகளில் ஏறத்தொடங்குவது வழக்கமாகும். அவ்வாறு முதல்வழிபாடு செலுத்தாது மலையில் ஏறும் பக்தர்களுக்கு ஏதாவது வகையில் குறை ஏற்படும் எனவும், அவர்களது வழிபாடு நிறைவுபெறுவதில்லை எனவும் கூறப்படுகிறது.

ப ,மங்கள் (உலோகத்திருமேனிகள்)

அப்பாண்டைநாதர் கோயிலில் இருபத்தைந்துக்கும் அதிகமான உலோகத்திருமேனிகள் உள்ளன. பெரியதும், சிறியதுமான இப் படிமங்களுள் பெரும்பாலானவை 16, 20 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவையாகும். ஒருசில செப்புத்திருவுருவங்கள் மட்டிலும் சோழர்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவையாகும். இவற்றுள் முக்கியமானவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டிலும் இங்கு இடம் பெறுகின்றன.

தருமதேவி

தருமதேவி என அழைக்கப்பெறும் கூஷ்மாண்டினி திருவுருவங்களுள் இரண்டு படிமங்கள் மிகவும் அழகு வாய்ந்தவையாகும். முதல்திருமேனி இரண்டு கரங்களையுடையதாய் திரிபங்க உடல் வளைவுடன் நின்ற கோலத்திலுள்ளது. இந்த யக்ஷியின் திருமேனியை கரண்டமகுடம், கந்தமாலை, கழுத்தணிகள், கேயூரம், கங்கணம், கைவளை, பத்ரகுண்டலம், மேகலை முதலியன அணி செய்கின்றன. கரண்டமகுடத்தின் பின்புறம் தாமரைப்பூ போன்ற சிரச்சக்கரம் உள்ளது. இவளது வலதுகை கடகமுத்திரையைக் குறித்தும், இடதுகை அருகில் நிற்கும் பணிப்பெண்ணின் தலையைத் தொடுவது போன்றும் காணப்படுகின்றன. இத்தேவியின் வலதுபுறம் ஒருகுழந்தையும் (மற்றொரு குழந்தை வடிவம் சிதைந்துள்ளது), இடதுபுறம் பணிப்பெண்ணும் நிற்கின்றனர். தருமதேவியின் கருணைவடிவான முகமும், பருத்துத்திரண்ட மார்பகமும், ஒடுங்கிய இடையும், ஒருபுறம் ஒயிலாகச் சாய்ந்து நிற்கும் எழில் கோலமும் சோழர்காலப் படிமக்கலைஞனின் கைவண்ணத்தைக் காட்டுவனவாகும். இவ்வரியகலைச்செல்வம் கி.பி. 10ஆம் நூற்றாண்டுக் கலைப்பாணியைக் கொண்டுமிளிர்கிறது.

இரண்டாவது தருமதேவி மேற்கூறிய உருவ அமைப்புகளைக் கொண்டிருந்த போதிலும் ஆடை, அலங்கார வேலைப்பாடு சற்று அதிகம் உடையதாகத்திகழ்கிறது. இதன் கரண்டமகுடத்தின் பின்புறமுள்ள சிரச்சக்கரம் வட்டவடிவம் பெற்று. நடுப்பகுதியில் தொங்குகின்ற குஞ்சங்களை உடையதாய் இருக்கிறது. கழுத்தணிகள், பூணூல், மேகலை முதலியனயாவும் கி.பி. 12ஆம் நூற்றாண்டுக் கலைப்பாணியை உணர்த்துவனவாகும். இவளது வலதுபுறம் இருகுழந்தைகளும், இடதுபுறம் பணிப்பெண்ணும் நின்றவண்ணம் உள்ளனர். இத்தேவியின் இடதுகை சிதைந்து காணப்படுகிறது.

இவை தவிர மேலும் இரண்டு தருமதேவி படிமங்களும் இக்கோயிலில் உள்ளன. ஆனால் இவை 20ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். இக்கோயிலில் தருமதேவிக்கு அதிக முக்கியத்துவம் அளித்திருப்பதை இப்படிமங்களே தெளிவுபடுத்துகின்றன

சந்திரநாதர்

தீர்த்தங்கரர் படிமங்களுள் அழகும், கலைத்திறமையும் வாய்ந்தது சந்திரநாதர் திருவுருவமாகும் ஏறத்தாழ இரண்டடி உயரமுள்ள இத்திருமேனி நீண்டு ஒடுங்கிய உடலமைப்பையும், தொங்கவிடப்பட்ட கைகளையும், வளைவின்றி அமைந்த கால்களையும் கொண்டுள்ளது. சதுரவடிவ முகஅமைப்பும், மூடியகண்களும்,

எடுப்பான மூக்கும், வடிக்கப்பட்ட இதன்காதுகளும் இயற்கையாக உள்ளன. இத்திருவுருவத்தைக் கி.பி. 13 ஆம் நூற்றண்டில் ஆட்சிபுரிந்த ஆளப்பிறந்தான் மோகன் என்னும் காடவ சிற்றரசன் இக்கோயிலுக்கு வழங்கியிருக்கிருன் என இதன் பீடத்திலுள்ள சாசனம் அறிவுறுத்துகிறது. இந்த படிமம் கச்சிநாயகர் எனப் பெயர்பெற்றிருந்தது என்றும் அறியவருகிரேம்.

நேமிநாதர்

சந்திரநாதர் திருவுருவத்தினையொத்த அமைப்புடைய நேமிதீர்த்தங்கரரின் படிமம் ஒன்றும் இங்குள்ளது. நின்ற கோலத்தில் காட்சியளிக்கும் இவரது தோற்றம் கம்பீரமாக உள்ளது. உருண்டை வடிவ தலையமைப்பும், அதில் கோர்க்கப் பட்ட முத்துக்களைப் போன்ற முடியமைப்பும், புன்முறுவல் பூத்த முகமும், மெல்ல மூடிய கண்களும், நீண்டுபருத்த உடலமைப்பும், தசைமடிப்புடைய வயிற்றுப்பகுதியும் இப்படிமத்திற்கு அழகூட்டு வனவாகும். இதன் பீடத்தில் பொறிக்கப்பட்டிருந்த சாசனம் அழிந்தபோதிலும் அவற்றின் ஒருசில எழுத்துக்கள் ஆங்காங்கே தெரிகின்றன. இத்திருவுருவத்தின் கலைப்பாணியும், எழுத்துக் களின் வரிவடிவமும் கி பி. 13-14ஆம் நூற்றண்டிற்குரியவை யாகும்.

ரிஷபநாதர்

ஆடை எதுவும் இன்றி, அழகிய உடலமைப்புடனும், அமைதி யான முகச்சாயலுடனும் ரிஷபதீர்த்தங்கரர் அருட்கோலங் கொண்டுள்ளமையை இங்கு காணலாம். இப்படிமத்தின் பீடத்தில் ஸ்ரீ குணபத்திராச்சாரியார் வீரசங்கபிரதிஷ்டாச்சாரியார் எனப் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் குணபத்திரரின் சிறிய வடிவம் தீர்த்தங்கரரை வணங்கியவாறு பீடத்திலேயே இடம் பெற்றிருக் கிறது. எனவே கி.பி. 16ஆம் நூற்றண்டில் குணபத்திர முனிவர் இத்தீர்த்தங்கரர் திருவுருவத்தை நிறுவியிருக்கிருர் என்பது தெளி வாகிறது.

மேற்கூறப்பட்டவையன்றி சற்று பெரிய அளவிலான சில தீர்த்தங்கரர் திருவுருவங்கள் இங்கு காணப்படுகின்றன. ஆனல் இவை குறிப்பாக எந்த தீர்த்தங்கரரைக் குறிப்பவை என்று கூறுவதற்கில்லை. இவர்களது இலாஞ்சனைகளும் படிமத்தில் இடம் பெறவில்லை. ஆனல் இவை கி.பி. 16ஆம் நூற்றண்டில் தோற்று விக்கப்பட்டிருக்க வேண்டுமென இவற்றின் கலைப்பாணியைக் கொண்டு கூறலாம்.

சிறு படிமங்கள்

சிறிய அளவிலான படிமங்களுள் பார்சுவநாதர், மகாவீரர், சர்வானயக்ஷன், தருமதேவி, பிரம்மதேவர், பூரணபுஷ்கலை, நவதேவதை ஆகியோரைக் குறிப்பவையும்; தர்மச்சக்கரம், சித்த சக்கரம், முக்குடை, மேரு, அஷ்டமங்கலச்சின்னங்கள் முதலியவையும் அடங்கும். இவற்றுள் நவதேவதைகள் 1913-லும், பார்சுவநாதர் 1914-லிலும் தர்மச்சக்கரம் 1930 ஆம் ஆண்டும் நிறுவப்பட்டவையென அவற்றின் பீடத்திலுள்ள சாசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. எஞ்சியுள்ள சிறு படிமங்களும் இந்த நூற்றாண்டைச்சார்ந்தவையேயன்றி, பழமையும், கலைத்திறமையும் உடையவையல்ல. எவ்வாறாயினும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே ஏராளமான திருவுருவங்கள் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டிருப்பது நன்கு புலனாகிறது.

6

திருவிழாவும் வழிபாட்டு முறையும்

நமது நாட்டில் இறையுணர்வை வளர்க்கும் கோயில்களில் பல்வேறு தரப்பட்ட மக்களும் ஒற்றுமையுடன் கூடிமகிழும் வண்ணம் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. சமயச் சடங்குகளும், வழிபாட்டு முறைகளும் அதிகரித்து வந்தமையால் அடிக்கடி திருவிழாக்கள் எடுக்கப்படலாயின. இதனுல் உலோகங்களில் வார்த்தெடுக்கப்பட்ட இறைத்திருவுருவங்களை ஊரிலுள்ள முக்கிய சாலைகளின் வழியே ஊர்வலமாக எடுத்துச் செல்லும் வழக்கமும் ஏற்பட்டது. பொதுவாக திருவிழாக்கள் ஒரு சமயத்தைப் பின் பற்றும் மக்கள் பல்வேறு ஊர்களில் வாழ்பவர்களாக இருந்த போதிலும், அவர்கள் ஒன்ருகக் கூடி மகிழ்வதற்கும்; இறையுணர்வை அவர்களுக்குள் பகிர்ந்து கொள்வதற்கும்; உற்ருர், உறவினருடன் அன்பாகப் பழகி விருந்தோம்பல் செய்வதற்கும் வழி வகைசெய்வனவாகத் திகழ்கின்றன. மனிதன் தனது அன்ருட வாழ்வில் செய்து வரும் பல்வேறு தொழில்களிலிருந்து சிறிது விடுபட்டு உள்ளத்திற்கு உவகையூட்டும் வகையில் திருவிழாக்கள் அமைகின்றன. இதனுல் இறையுணர்வு மேம்பட்டு, சமுதாய அமைப்புகள் ஒற்றுமையுடன் செயல்படவும் அரிய வாய்ப்பு கிடைக்கிறது.

பிற சமணக்கோயில்களைப் போன்று திருநறுங்கொண்டை கோயிலிலும் பண்டைக்காலத்திலிருந்தே விழாக்கள் கொண்டாடப் பட்டு வந்திருக்கின்றன. முன்பு இங்கு வைகாசி, தை ஆகிய இரு மாதங்களிலும் சிறப்புற விழாக்கள் நடத்தப்பெற்றதாகச் சாசனங் களே தெளிவுபடுத்துகின்றன. வைகாசி மாதத்தில் நடைபெற்ற விழா தேர்த்திருவிழா எனவும், தைமாதத் திருவிழா அஸ்தத் திருவிழா எனவும் அழைக்கப்பெற்றிருக்கின்றன.

வைகாசிப் பெருவிழா (தேர்த்திருவிழா)

பொதுவாக சமண சமயக்கோயில்களில் தேர்த்திருவிழா பெருவாரியாகக் கொண்டாடப்பட்டதாகச் செய்திகளில்லை எனினும், திருநறுங்கொண்டை, சித்தாமூர் போன்ற முதன்மை வாய்ந்த தலங்களில் இவ்விழா நடைபெற்றதாக அறிய வருகிருேம்,

தற்காலத்தில் சித்தாமூரில் மட்டிலும் தேர்த்திருவிழா சிறப்புறக் கொண்டாடப்பட்டு வருகிறது. திருநறுங்கொண்டையில் பெரிய அளவிலானதேர் தற்போது இல்லாமலிருந்த போதிலும், இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் சிறிய அளவிலான இரதம் இருந்த தாகக் கூறப்படுகிறது.

அப்பாண்டைநாதர் உலா என்னும் இலக்கியம் திருநறுங் கொண்டையில் நடைபெற்ற தேர்த்திருவிழாவினை மையமாக வைத்துப்படைக்கப்பட்டதாகும். வைகாசி மாதம் நடைபெற்ற இவ்விழாவின் போதைய வழிபாட்டு முறைகளை அப்பாண்டைநாதர் உலா குறிப்பிடவில்லையெனினும், இறைவன் தேரில் பவனிவரும் காட்சியினை விரிவாகக்கூறுகிறது. இந்த விழாவின் போது பார்சுவப் பெருமானின் திருவுருவம் பல்லியங்கள் முழங்க அலங்காரம் செய்யப்பட்டு பல்லக்கில் நிறுவப்படும். நறிய மலர்களினாலான மாலைகள், அணிகலன்கள் ஆகியவற்றை அருகதேவனது திருமேனி யில் சார்த்துவது இல்லையாதலால், அலங்காரம் அனைத்தும் தீர்த் தங்கரரைச் சுற்றியுள்ள திருவாசியில் (பிரபாவளி) செய்யப்படும். பல்லக்கில் தீர்த்தங்கரரை நிறுவி மணியோசை ஒலிக்க, தூப, தீபங்கள் காட்டி வழிபாடு செய்தல் வழக்கமாகும். இதனைப் பல்லக்குச் சேவை என அழைப்பதுண்டு.[1] இத்தகைய பல்லக்குச் சேவை சிறப்புற நடைபெறுவதற்கென பண்டைக்காலத்தில் நிவந்தங்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயிலிலுள்ள கல்வெட்டொன்று, வைகாசி மாதம் நடைபெறும் திருவிழாவின் போது உற்சவமூர்த்திகளாகிய நித்தியகலியாணதேவரையும் (பார்சுவநாதர்), அருண்மொழித்தேவரையும் (சந்திரநாதர்) பல்லக்கில் எழுந்தருளுவித்து வழிபாடு செய்வதற்குரிய செலவு களுக்கென திருநறுங்கொண்டையில் சில நிலங்கள் சிவிகைப் புறமாக வழங்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது.[2] சிவிகைப்புற மென்பது பல்லக்குச் சேவை செய்வதற்காகத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலத்தினைக்குறிப்பதாகும்.

பல்லக்குச்சேவை முடிந்த பின்னர் தீர்த்தங்கரர் திருவுருவங்களை அடியவர்கள் பல்லக்கில் வைத்துச் சுமந்து மலையடிவாரத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் தேரினில் நிறுவுவர். அதன் பிறகு தொண்டர் குழாம் பண்சுமந்த பாடல்களைப்பாடியும், இறைவனுக்குரிய கொடி, கொற்றக்குடை, ஆலவட்டம் முதலிய பல்வேறு சின்னங்களைத் தாங்கியும், இசைக்கருவிகளை ஒலித்தும் தேர்முன்பாகச்செல்ல, அருகப் பெருமான் திருவுலாச்செல்வார். அப்போது மங்கல மடந்தையரும், சிறுமியரும் நறுமணம் மிக்க மலர்களையும், வண்ணம், நறுஞ்சாந்து ஆகியவற்றையும் கொணர்ந்து இறை

வழிபாடு செய்வர். தேர் வீதிகள் தோறும் செல்லுங்கால் சிறுமியர் முதல் பருவ மங்கையர் வரையுள்ளோர் ஆடல்களை ஆடியும், பாடல்களைப்பாடியும் நறுங்கொண்டை நாதனைப் போற்றிப்பரவுவர். இவ்வாறு பல்வேறு மக்களும் கண்டுகளிக்க அருகதேவன் திரு வீதிகள் அனைத்தும் திருவுலாக் கொண்டபின்னர், உரிய வழிபாடு கள் செய்யப்பட்டு உற்சவமூர்த்திகள் கோயிலினுள் கொண்டு வைக்கப்படும்.[3] இத்தகைய சிறப்புமிக்க தேர்த்திருவிழா காலப் போக்கில் நடைபெறுமல் போயிருக்கிறது. சமண சமுதாயம் இங்கு நலிவுறத் தொடங்கிய பின்னரே இவ்விழா கைவிடப்பட்டிருக்க வேண்டும். தற்காலத்தில் தேர் இல்லாவிடினும் வைகாசி மாதத்தில் பிரம்மோத்ஸவம் என்னும் பெருவிழா சிறப்புற கொண் டாடப்பட்டு வருவதைக் காணலாம்.

தைத்திருவிழா (அஸ்தத் திருவிழா)

வைகாசி மாதம் பெரிய அளவில் கொண்டாடப்பட்ட திருவிழா வினைப் போன்று தை மாதத்தில் அஸ்த நட்சத்திரம் விளங்கும் நன்னாளிலும் விழா எடுக்கப்பட்டதாக அறிய வருகிருேம். ஆனல் இந்த விழா நடைபெற்ற விதத்தினைப் பற்றிய செய்தி கள் எவையும் நமக்குக் கிடைத்தில. அஸ்த நட்சத்திரம் கூடிய நாளில் கொண்டாடப் பெற்றமையால், இது ஒரு நாள் மட்டிலும் நடத்தப்பெறும் விழாவாக இருக்க வேண்டுமென்பது தெளிவா கிறது. திருநறுங்கொண்டையிலுள்ள சாசனம் ஒன்று இருங்கோளப் பாடி நாட்டைச் சேர்ந்த தவத்தாளன் தேவன் இராசாக்கள் நாயகன் என்பவர் தை மாதத்தில் அஸ்தத்திருநாளினைக் கொண்டாடுவதற் காகத் திருநறுங்கொண்டையில் பயிர்செய்யப்படாமல் கிடந்த சில நிலங்களைத் திருத்திப் பயிரிட்டு இக்கோயிலுக்கு வழங்கியதாகக் கூறுகிறது. இந்த விழாவிற்கு இவர் ஏற்பாடு செய்தமையால் இவ் விழா இவரது பெயராலே இராசாக்கள் நாயகன் திருவிழா என அழைக்கப்பட்டதாகவும் அறியவருகிருேம்.[4]

தற்காலத்தில் தை மாதத்தில் அஸ்தத்திருவிழா என நடை பெருவிட்டாலும், இம் மாதத்தில் நற்காட்சிவிழா சிறப்புற கொண் டாடப்பட்டு வருகிறது. காலச்சூழலினுலும், மக்களது பொருளா தார மேம்பாடற்ற நிலைமையினுலும் பண்டைய இவ்விழாக்கள் மறைந்த போதிலும், தை, வைகாசி ஆகிய மாதங்களில் இன்னமும் இங்கு திருவிழாக்கள் கொண்டாடப் பட்டு வருவதே சிறப்பிற்குரிய ஒன்ருகும்.

தற்போது நடைபெறும் விழாக்கள்

பிரம்மோத்ஸவம்

தற்காலத்தில் ஆண்டுக்கொரு முறை வைகாசி மாதத்தில் பிரம்மோத்ஸவம் எனப்படும் திருவிழா ஏழு நாட்கள் தொடர்ந்து சிறப்புற கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழா பண்டைய தேர்த் திருவிழாவின் தொடர்ச்சியே அன்றி புதிய விழாவன்று. தற்போது இங்கு தேர் இல்லாததால், அதற்குப் பதிலாக அருகப்பெருமானை வாகனத்தில் எழுந்தருளவித்து ஊர்வலமாக எடுத்துச் செல்லுகின்றனர்.

ஏழு நாட்கள் நடத்தபெறும் இப்பெருவிழாவின் முதல்நாளன்று பிரம்மதேவர், பூரண புட்கலை ஆகியோர் திருவுருவங்களை நறுங் கொண்டை மாலையைச் சுற்றி வலம்வரச்செய்து (கிரிபிரதட்சிணம்) கொடியேற்றுவர். ஏறத்தாழ பன்னிரண்டு மீட்டர் நீளமுள்ள புதுத் துணியில் பிரம்மதேவரின் சித்திரங்களைத் தீட்டி, அதனை மானத் தம்பத்தில் சுற்றுவது வழக்கம். இந்த நிகழ்ச்சியே கொடியேற்றம் என அழைக்கப்பெறும். அப்போது கவசங்களில் விதைகளை இட்டு கடபாலிகா ஸ்தாபனமும் செய்வதுண்டு. இந்த கொடியேற்று விழா வினைக் கோயிலின் தர்ம கர்த்தாவே தொடங்கிவைப்பது மரபாகும். இரண்டாம் நாள் மூலமூர்த்தியாகிய பார்சுவப்பெருமானுக்கு அபிடேகம், பூசை ஆகியவை சிறப்புற செய்து விட்டு, சுபார்சுவ தீர்த்தங்கரர் திருவுருவத்தினைக் காலையில் உலாவரச் செய்வர். ஊர்வலத்தின் முன்பாக சர்வான யக்ஷனது திருவுருவம் எடுத்துச் செல்லப்படும். அன்று இரவு உற்சவமூர்த்தியை எழுந்தருளச் செய்து, விழா காணவந்திருக்கும் சமணப் பெருங்குடி மக்களுக்குப் பொரி, கடலை முதலியவற்றை வழங்கி, அதன்பின்னர்தான் சுபார்சுவநாதரை குதிரை வாகனத்தில் ஊர்வலமாக எடுத்துச்செல்வர். இந்த இரண்டாம் நாள் விழாவிற்குரிய செலவை பிடாகம், ஆக்கனூர், வீரமடை, வீரசோழபுரம் ஆகிய சமணத்தலங்களில் வாழும் மக்கள் ஆண்டுக்கொரு ஊரார் வீதம் செய்து வருகின்றனர்.

மூன்றும் நாள் பூசைகள், வழிபாடுகள் அனைத்தும் செய்த பின்னர் அருகப்பெருமானை தேவேந்திர வாகனத்தில் எழுந்தருளச் செய்து உலாகாணச் செல்லுதல் வழக்கமாகும். இம்மூன்றும் நாள் விழாவிற்குரிய செலவினைப் பெருமண்டூர் வாசியான அப்பாண்டை ராஜன் நயினார் என்பவர் ஏற்றுக்கொள்கிறார். நான்காம் நாளும் உற்சவமூர்த்தி தேவேந்திர வாகனத்தில் திருக்கோலம் கொள்வது முறையாகும். இந்த விழாவினைப் பெருமண்டூரைச்சார்ந்த ஜீவ ரெத்தினம்மாள் என்பவர் செய்துவருகிறார். ஐந்தாவது நாள்

திருவிழாவின்போது பிண்டிக்கடவுள் சிம்மவாகனத்தில் காட்சியளிக்கிறார். இந்த விழாவிற்கு ஆகும் செலவினை வடமருதூரில் வாழும் சைனர்கள் கொடுத்து வருகின்றனர். ஆறுவது திருநாளில் யானைவாகனத்தில் இறைவன் எழுந்தருளுவது வழக்கமாகும். இந்த விழாவினை ஆண்டுக்கொருவர் வீதம் கரடிப்பாக்கத்தைச் சார்ந்த பட்டுசாமி நயினார், அழகப்ப நயினார் ஆகியோர் நடத்தி வருகின்றனர். பொதுவாக இந்த ஆறு நாட்களிலும் காலையில் நூற்றெட்டு கலச அபிடேகமும், மாலையில் நவகலச அபிடேகமும் தவறாமல் நடத்தப்பெறுவதுண்டு.

பிரம்மோத்ஸவத்தின் இறுதி நாளாகிய ஏழாவது நாள் இருநூற்றுப்பதினாறு கலசங்களை நிறுவி மகா அபிடேகம் செய்கின்றனர். அன்று உற்சவமூர்த்தியை எந்தவாகனத்திலும் எழுந்தருளுவித்து ஊர்வலமாகக் கொண்டு செல்லுதல் கிடையாது. மகா அபிடேகம் முடிந்தபின்பு இரவில் கொடியிறக்கம் செய்வர். அதன்பின்னர் கலசங்களில் விதைக்கப்பட்ட பாலிகைகளுடன் சர்வானயக்ஷன் ஊர்வலத்தின் முன்செல்ல விழாக்காணவந்தோர் குளக்கரைக்குச் சென்று அவற்றை நட்டு வைத்துவிட்டுக் கோயிலுக்குத்திரும்புவதுடன் விழா இனிது நிறைவுபெறும். இந்த இறுதி நாள் விழாவிற்குரிய செலவினையும் ஆறும் நாள் திருவிழா செய்பவர்களே அளித்துவருகின்றனர்.[5] இந்த வைகாசிப் பெருவிழாவினைக் கண்டுகளிக்க நெடுந்தொலைவிலிருந்தும் சமணசமயப் பெருமக்கள் பெருமளவில் வந்து கூடுகின்றனர். இவர்கள் தங்கியிருப்பதற்கும், உணவு தயாரிப்பதற்கும் மலையடிவாரத்திலுள்ள சத்திரம் என அழைக்கப்பெறும் மண்டபம் பயன் படுத்தப்படுகிறது.

நற்காட்சி விழா

தை மாதத்தில் ஒரு நாள் கொண்டாடப்பட்டு வருகின்ற விழா நற்காட்சி விழா எனப்படும். முன்பொருகால் தை மாதத்தில் அஸ்தத்திருவிழா கொண்டாடப்பட்டது போன்று, அதனையொட்டி இவ்விழா நடைபெறுகிறது எனக்கூறலாம். பொதுவாகப் பல்வேறு ஊர்களிலும் வாழும் சமணசமயத்தவர் தை மாதத்தில் நோன்பு கடைப்பிடித்து அதனை நிறைவு செய்யும் வகையில் இக்கோயிலுக்கு வந்து விழாவெடுக்கின்றனர். நற்காட்சி விழாவன்று வெவ்வேறு ஊர்களிலிருந்து வரும் பக்தர்கள் இவ்வூரின் ஒரு கோடியில் வந்து கூடுகின்றனர். அங்கிருந்து அருக தேவனின் திருப்புகழைப் பக்திப் பரவசத்துடன் பாடியாடி மலையடிவாரத்தை அடைகின்றனர். அங்கு பார்சுவநாதர், சேத்திரபாலர், பூதகணங்களுக்கு முதன் முதலாக வழிபாடு நடத்துகின்றனர். அதனை முடித்து விட்டு

பிடிக்கட்டுகளைக்கடந்து அப்பாண்டார் கோயிலை வலம் வருகின்றனர். அதன் பின்னர் பார்சுவநாதருக்கும், சந்திரநாதருக்கும் சிறப்பு பூசைகள் செய்யப்படுகின்றன. பார்சுவநாதருக்கு அபிடேகம், ஆராதனை யாவும் சிறப்புற நடத்தப்பெற்று, விரதம் நோற்றவர்கள் மனித சமுதாயம் நலம் பெற வேண்டி வாழ்த்தி வணங்கி தங்களது விரதங்களை முடித்துக் கொள்கின்றனர். இறுதியில் இவ்விழாவில் பங்கெடுத்தவர்களுக்கு அன்னதானம் செய்வதும் வழக்கமாகும். இந்து சமயத்தவர் விரதங்களை ஏற்று நெடுந்தொலைவிலுள்ள கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்து தங்களது நோன்பினை முடிப்பது போன்று சமணசமயத்தவர் திருநறுங்கொண்டையில் குழுமி விரதங்களை முடித்துக் கொள்கின்றனர். அருகதேவனது அருளினால் நல்வாழ்வு பெற வேண்டும் என்ற நோக்கில் இந்த நற்காட்சி விழா கொண்டாடப்படுகிறது.

வழிபாட்டு முறைகள்

உபாத்தியரர்

சமணக்கோயில்களில் வழிபாட்டினைத்தினமும் செய்து வருபவர்கள் உபாத்தியார் என அழைக்கப்படுகின்றனர். கோயில்களில் பூசைகளை நிறைவேற்றிய பின்னர் இவர்கள் முன்பு குழந்தைகளுக்குக் கல்வியறிவைப் புகட்டும் ஆசிரியர்களாகவும் பணியாற்றி வந்தமையால் உபாத்தியார்கள் எனப் பெயர் பெறலாயினர். இவர்கள் ஒழுக்க சீலராகவும், சமணநெறிகளைக் குறைவறக் கடைப்பிடிப்பவராகவும், சாத்திரங்களைக் கற்றறிந்தவராகவும், வழிபாட்டினைச்செவ்வனே செய்யும் ஆற்றல் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

திருநறுங்கொண்டை கோயிலில் நித்திய பூசைகளை தற்சமயம் பரதசக்ரவர்த்தி என்பவர் செய்து வருகிறார். கோயிலுக்கு அடிக்கடி சமணப்பெருமக்கள் வழிபாடு செய்ய வந்து கொண்டிருப்பதால், இவர் கோயிலின் அண்மையிலேயே வசிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எளிமையான வாழ்வினை மேற்கொண்டுள்ள இவருக்குக் கோயில் நிலங்களிலிருந்து கிடைக்கும் நெல்லின் ஒரு பகுதி சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. பண்டைக்காலத்தில் அப்பாண்டைநாதர் கோயிலில் திருவாராதனை செய்வதற்கென் இருவர் நியமிக்கப்பட்டதாக இங்குள்ள கல்வெட்டொன்றின் வாயிலாக அறியக்கிடக்கிறோம்.[6]

நித்திய வழிபாட்டு முறைகள்

திருநறுங்கொண்டையில் தினமும் காலை வேளையில் பூசை நடத்தப்பெற்று வருகிறது. பார்சுவநாதர் திருவுருவத்திற்கு

தண்ணீர், பால், சந்தனம் ஆகியவற்ருல் அபிடேகம் செய்யப்படுகிறது. அபிடேகம் செய்யும்போது வழிபாட்டு மந்திரங்களைக் கூறிக்கொண்டே உபாத்தியார் பணிகளைச் செய்வது வழக்கமாகும். இறைவனது திருமேனியில் மலர்மாலைகளோ அல்லது அணிகலன்களோ சூட்டுவது கிடையாது. ஆனல் மலர்மாலைகளை இவரைச் சுற்றியுள்ள பகுதியில் தொங்கவிடப்படுவதுண்டு. பார்சுவப் பெருமானின் பாதங்களில் மட்டும் மலர்களை வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. பின்னர் இறைவனுக்கு அன்ன நைவேத்தியம் படைத்து கற்பூர தீப ஆராதனை செய்யப்படுகிறது. தனி நபர் வேண்டுதலின் பேரில் சகஸ்ரநாம அர்ச்சனை முதலியவையும் செய்யப்படுகிறது. விசேட நாட்களில் சிறப்புவழிபாடும் நடத்துவதுண்டு.

சந்திரநாதர் கோயிலிலுள்ள மூலவர் திருவுருவம் சுதைஉருவம் ஆதலால் இதற்கு அபிடேகம் செய்யப்படுவதில்லை. இவரது பாதங்களில் மலர்கள் படைத்து தீபஆராதனை மட்டும் செய்து வருகின்றனர்.

சிறப்பு வழிபாடு

நித்திய பூசைகள் தவிர விசேடநாட்களில் சிறப்பு வழிபாடுகளும் இக்கோயிலில் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஆஸ்டானிகம், கார்த்திகை தீபம், முக்குடை வழிபாடு ஆகியவை இவற்றுள் முக்கியமானவையாகும். ஆடி, காத்திகை, மாசி முதலிய மாதங்களில் எட்டுநாட்கள் ஆஸ்டானிக நோன்பு ஏற்று சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. பொதுவாக ஆடி, மாசி மாதங்களில் இச்சிறப்பு வழிபாட்டினைத் தர்மகர்த்தாவும், கார்த்திகை மாதம் வடமருதூரிலுள்ள சைனப்பெருமக்களும் நிகழ்த்தி வருகின்றனர்.

கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை தீபவழிபாடும் சிறப்புற நடத்தப்படுகிறது. இந்தநாளில் தேங்காய், பழம், கடலைப்பருப்பு, வெல்லம், பால் அல்லது நெய் ஆகியவற்றைக் கொண்டு செய்யப்பட்ட பஞ்சாமிர்தத்தினல் அபிடேகம் செய்து வழிபாடு நடத்தப்பெறுகிறது. மேலும் அன்று கோயிலின் கோபுரத்திலும், விமானத்திலும் தீபங்களை ஏற்றிவைக்கின்றனர்.

மார்கழி மாதம் முப்பது நாளும் நடைபெறும் சிறப்பு வழிபாடு முக்குடை வழிபாடாகும். வழக்கம்போல அபிடேகம், பூசை முதலியவை செய்தபோதிலும், இந்த முப்பது நாட்களிலும் 364

விளக்குகளை முக்குடை போன்ற அமைப்பினில் நிறுவி வழிபடுவது ஒரு சிறப்பாகும். விவசாயப்பெருங்குடி மக்களும், பிறஅலுவல்களில் ஈடுபட்டிருப்பவர்களும் தங்களது பணியின் காரணமாகத் தினமும் கோயிலுக்குச் சென்று வழிபட இயலாமற் போய்விடுவதுண்டு. எனவே அக்குறையினை நிறைவு செய்யும் வகையில் ஆண்டுமுழுவதும் அதாவது 364 நாட்களும் கோயிலுக்குச் சென்று வழிபடுவதற்குப் பதிலாக 364 விளக்குகளை மொத்தமாக முக்குடை அமைப்பினில் ஏற்றி வணங்குவதைக் குறிக்கும் வகையில் இச்சிறப்பு வழிபாடு அமைகிறது.

சில சமயச் சடங்குகள்

மேற்கூறப்பட்ட வழிபாடுகள் மட்டுமின்றி இக்கோயிலில் சில சடங்குகளும் மக்களால் செய்யப்பட்டு வருகின்றன. குழந்தைகளுக்கு முடிஎடுத்தல் (மொட்டையடித்தல்), காதுகுத்துதல் போன்ற சடங்குகள் இக்கோயிலில் வைத்து நிகழ்த்தப்படுகின்றன. அப்போது விசேடபூசை செய்வது வழக்கமாகும். இதுபோன்று நோயிலிருந்து குணமடையவும், திருமணம் நடைபெற வேண்டியும், மனக்குறையகலவும் நேர்த்திக்கடன் செய்யப்படுகிறது. சிலர் கோயிலை 108 முறை வலம்வந்து (ஆலயப்பிரதட்சிணம்) தங்களது நேர்த்திக்கடனை முடிப்பதுண்டு. பார்சுவநாதருக்கு மட்டுமின்றி சேத்திரபாலருக்கும் சிலசமயம் நேர்த்திக் கடன் செய்வதுண்டு. இச்சேத்திரபாலருக்கு 108 வடைகளை மாலையாகக் கோர்த்து வடைமாலை சார்த்துவது வேறெந்த சமணக் கோயிலிலும் இல்லாத தனிச்சிறப்பாகும். பொதுவாக இந்து சமயத்தவர் ஆஞ்சநேயருக்கு வடைமாலை சார்த்தும் வழக்கத்தினை ஒட்டி இங்கு சேத்திரபாலருக்கு வடை மாலை சார்த்தப்படுகிறதென்பது தெளிவாகிறது.

அப்பாண்டைநாதர் கோயிலுக்கு வரும் பக்தர்கள் கோயில் படிகளில் ஏறத்தொடங்குவதற்கு முன்பும், வழிபாடு முடித்துவிட்டுவரும்போதும் சேத்திர பாலருக்குத் தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி விட்டுச்செல்வது முறையாகும். தேங்காய் உடைக்காவிட்டாலும் கற்பூரமாவது ஏற்றிச்செல்ல வேண்டுமென்பது மரபாகும். அவ்வாறு செய்யாதவர்களுக்கு ஏதாவது ஒருவிதத்தில் குறை ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

கோயில் நிர்வாகம் :

முன்பொரு சமயத்தில் திருநறுங்கொண்டை கோயிலின் நிர்வாகத்தினைப் பொறுப்பேற்று நடத்துவதற்குத் தானத்தார் என்

னும் குழுவினர் இருந்திருக்கின்றனர்.[7] கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானங்களையும், நிலங்களையும் கண்காணிப்பது இவர்களது கடமையாகும். திருநறுங்கொண்டையில் மடம் என்ற அமைப்பு பண்டைக்காலத்தில் இருந்தமையால், மடாதிபதியின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு இந்த தானத்தார் பணிகளை மேற்கொண்டிருக்க வேண்டும். காலப்போக்கில் மடம் அழிந்துபட்டதனால் கோயிலின் நிர்வாகத்தினைக் கவனிப்பதற்குத் தர்மகர்த்தாக்கள் நியமிக்கப்படவேண்டியதாயிற்று. இங்கு பரம்பரையாகவே தர்மகர்த்தாக்கள் உள்ளனரேயன்றி தேர்தல் முறையில் எவரும் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. குறிப்பாக கரடிப்பாக்கம் ஊரைச் சார்ந்த சக்ரவர்த்தி நயினர் வழிவந்தவர்களே பரம்பரை தர்மகர்த்தாவாக இருந்து வந்திருக்கின்றனர். தற்போது இவ்வூரைச் சார்ந்த பட்டு சாமி நயினர் என்பவர் தர்மகர்த்தாவாக இருக்கிறார். கோயிலுக்குரிய வரவு செலவுகளைக்கவனிப்பதும், வழிபாடுகள், திருவிழாக்கள் தவறாமல் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்வதும் இவரது முக்கிய கடமைகளாகும். மேலும் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைக் கண்காணிப்பதும் இவரது பொறுப்பாகும்.

முன்பு அப்பாண்டைநாதர் கோயிலுக்குத் திருநறுங்கொண்டையில் மட்டுமின்றி, சிறு சாத்தநல்லூர், ஆற்றூர், ஏனாதிமங்கலம் முதலிய பல ஊர்களில் ஏராளமான நிலங்கள் இருந்திருக்கின்றன.[8] ஆனால் காலப்போக்கில் இவை பொது மக்களது சொத்துக்களாக மாறியிருக்கின்றன. தற்போது இக்கோயிலுக்கு மூன்று ஏக்கர் நஞ்சை நிலமும், ஐந்தரை ஏக்கர் புஞ்சை நிலமும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நிலங்களைப் பயிர் செய்து அவற்றிலிருந்து கிடைக்கும் நெல் முதலிய தானிய வகைகள் கோயில் வழிபாட்டுச் செலவிற்கும், திருவிழாச் செலவிற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கோயிலில் பூசை செய்பவர்களுக்கும் இந்நிலங்களிலிருந்து பெறப்படும் நெல்லில் ஒரு பகுதி சம்பளமாக அளிக்கப்பட்டு வருகிறது. எவ்வாறாயினும் இந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் கோயிலில் சிறந்த முறையில் வழிபாடுகளையும், திருவிழாக்களையும் நடத்துவதற்குப் போதிய அளவில் இல்லையெனத் தெரிகிறது.

அடிக்குறிப்புகள்

1. அப்பாண்டைநாதர், உலா கண்ணிகள் 180-195
2. **ARE,** 310/1939-40.
3. அப்பாண்டைநாதர் உலா, கண்ணிகள் 222-235
4. **SII**, Vol. VII, No. 1014.
5. பிரம்மோத்ஸவம் பற்றிய செய்திகள் தற்போதைய தர்மகர்த்தாவால் கூறப்பட்டவையாகும்.
6. **SII** Vol. VII. No 1017.
7. **SII**, Vol. VII No 1014
8. **SITI**, Vol. I, No. 71, **ARE**, 384/1902.

7

கல்வெட்டுச்செய்திகள்

திருநறுங்கொண்டைத் தலத்தில் இதுகாறும் முப்பத்தெட்டு கல்வெட்டுக்கள் இந்திய தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பிரிவினரால் படிஎடுக்கப்பட்டிருக்கின்றன. இவையன்றி இன்னும் ஒருசில சாசனங்கள் இப்புத்தக ஆசிரியரால் வெளிக்கொணரப் பட்டுள்ளன. இவற்றுள் சில கல்வெட்டுக்கள் முழுமையாக இன்றியும், சிதைந்த நிலையிலும் காணப்படுகின்றன. மேலும் சில சாசனங்கள் கோயிலைப் புதுப்பிக்கும் பணியினைச் செய்தபோது அழிக்கப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டுக்கள் கி.பி. 9ஆம் நூற்றுண்டிலிருந்து கி.பி. 20ஆம் நூற்றுண்டு வரையுள்ள காலக்கட்டத்தைச் சார்ந்தவையாகும். இவற்றுள் பெரும்பாலானவை சோழராட்சியின் போதும், ஒருசில சாசனங்கள் பாண்டியர்காலத்திலும், எஞ்சியவை பிந்திய நூற்றுண்டுகளிலும் பொறிக்கப்பட்டவையாகும். பொதுவாக சோழப்பெருவேந்தர்களும், அவர்களுக்குட்பட்டு ஆட்சிபுரிந்த மலையமான், காடவராயர் முதலிய சிற்றரச பரம்பரையினரும் இக்கோயிலின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தவர்களாவர். இந்த அரசர்களது ஆட்சிக்காலம் திருநறுங்கொண்டைக் கோயிலின் வரலாற்றில் பொற்காலமாகத் திகழ்ந்திருக்கிறது. இங்கு நறுங் கொண்டையில் பொறிக்கப்பட்டுள்ள சாசனங்களால் அறியப்பெறும் உண்மைகளைக் காண்போம்.

பள்ளிகள்

சமண, புத்தசமயத்துறவியர்கள் தவம்புரிந்த மலைக்குகைகளும், அச்சமயக் கடவுளருக்கு எழுப்பப்பட்ட கோயில்களும் பொதுவாக பாழி, பள்ளி என்னும் பெயர் பெறலாயின. இவற்றிற்குத் தான மாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் பள்ளிச்சந்தம் என அழைக்கப் பெறும். திருநறுங்கொண்டையில் பார்சுவநாதருக்கு எடுக்கப் பட்ட கோயில் மேலைப்பள்ளி (மேலிற்பள்ளி) எனவும், சந்திரபிரபா தீர்த்தங்கரருக்குக் கட்டப்பட்டகோயில் கீழைப்பள்ளி எனவும் பெயர் பெற்றிருந்தன.[1] இப்பெயர்கள் சிலசாசனங்களில் முறையே மேலைப்பள்ளி பெரிய ஸ்ரீகோயில் என்றும், பெரியபாழி என்றும் குறிப்பிடப்படுகின்றன.[2] மலையின் மேற்பகுதியில் மேற்குத் திசை

நோக்கிப் பார்சுவநாதர் எழில்கோலம் கொண்டுள்ளதால் அக்கோயில் மேலைப்பள்ளி எனவும், சந்திரநாதர்கோயில் அதற்குச் சற்று கீழாக கிழக்குநோக்கி அமைந்துள்ளதால் கீழைப்பள்ளி எனவும் அழைக்கப்படலாயிற்று. இவ்விரண்டு பள்ளிகளுள் பார்சுவநாதர் சிற்பத்தினைக் கொண்ட மண்டபம் காலத்தால் சிறிது முந்தியதாகும். சந்திரபிரபா தீர்த்தங்கரைக் கொண்டுள்ளகோயில் கி.பி. 9ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்டிருக்கிறது. இந்த இருபள்ளிகளும் மேலைப்பள்ளி, கீழைப்பள்ளி எனப்பெயர்களை உடையதாக இருந்தபோதிலும், பிற்காலத்தில் ஒன்ருகச்சேர்த்து நாற்பத்தெண்ணுயிரப் பெரும்பள்ளியென அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் நோக்கினுல், இப்பெயர் முதலாம் குலோத்துங்கசோழனது எட்டாவது ஆட்சியாண்டாகிய கி.பி. 1078-லிருந்து வழங்கப்பட்டிருக்கிறது.[3]

இங்குள்ள கோயிலுக்கு நாற்பத்தெண்ணுயிரப் பெரும்பள்ளி என்னும் பெயர் வழங்கப்பட்டமைக்குரிய காரணம், மிக்கவாறும் இக்கோயிலுக்கு நாற்பத்தெண்ணுயிரவர் என்னும் வணிகக்கூட்டத்தவர் (Merchant Guild) ஏதாவதுநிவந்தங்கள் அல்லது தானங்கள் செய்திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. அவர்களது தொண்டு மிகவும் பயனுள்ள வகையில் அமைந்திருந்ததால் இப்பள்ளிகளுக்கும் அந்த வணிகக்கூட்டத்தின் பெயரையே சூட்டியிருக்கலாம் எனக்கருதுவதற்கு இடமுள்ளது. ஆனுல் இதனை மெய்ப்பிக்கும் வகையில் கல்வெட்டுச் சான்றுகள் எவையும் இங்கு காணப்படவில்லை. அதே சமயத்தில் திருநறுங்கொண்டையிலுள்ள கோயிலுக்கு நடுவில் மண்டலத்தைச் சார்ந்த மகாநாயக வணிகர்குழு ஒன்று தானம் அளித்ததாக அறியவருகிருேம்.[4] எனவே இந்த குழுவினரைப் போன்று நாற்பத்தொண்ணுயிரவர் குழுவும் ஏதாவது சிறப்புமிக்க பணியினை இக்கோயிலுக்குச் செய்திருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. பண்டைக்காலத்தில் திசையாயிரத்து ஐநூற்றுவர், மணிகிராமத்தார், பதினெண் விஷயத்தார், அஞ்சுவண்ணத்தார். நாற்பத்தெண்ணுயிரவர் முதலிய பல வணிகக்குழுக்கள் இருந்தமை வரலாறுகூறும் உண்மையாகும்.

சதுர்முகத்திருக்கோயில்

கீழைப் பள்ளியாகிய சந்திர பிரபா தீர்த்தங்கரர் கோயில் சதுர்முகத்திருக்கோயில் எனவும் அழைக்கப்பட்டிருக்கிறது. இந்த சதுர்முகத்திருக்கோயிலையும், அதற்கு கிழக்காக உள்ள மண்டபத்தையும் கி.பி. 9ஆம் நூற்றுண்டில் விசயநல்லுழான் குமரன்தேவன் என்பவர் கட்டியிருக்கிருர். இவர் காவிரியாற்றின் தென்கரையிலுள்ள மிறை நாடு என்னும் நாட்டுப் பிரிவினுள் அடங்கிய நழக்குடி என்

னும் ஊரைச் சார்ந்தவராவர்.[5] இந்த கோயிலும், மண்டபமும் குறிப்பாக எந்த ஆண்டில் கட்டப்பட்டன என்பதை வரையறை செய்வதற்கில்லே. எவ்வாருயினும் காவிரி பாயும் சோழ நாட்டிலுள்ள ஒருவர் இத்தலத்தில் சந்திரபிரபாகோயிலே உருவாக்கியுள்ளமை சிறப்பிற்குரிய ஒன்ருகும். அப்பாண்டைநாதர் உலா போன்ற இலக்கியங்கள் பொதுப்படையாக அருகக்கடவுளைச் சதுர்முகத்தான் எனச் சாற்றுகின்றன.[6] ஆனுல் இங்குள்ள கல்வெட்டு சந்திரநாத தீர்த்தங்கரரையே சதுர்முகக்கடவுள் எனக் குறிப்பிடுகிறது.

கச்சிநாயகர் திருவுருவம்

திருநறுங்கொண்டையிலுள்ள ஒருசில சாசனங்கள் சந்திரபிரபா தீர்த்தங்கரரை கச்சிநாயகர் எனவும் கூறுகின்றன. முதலாவது குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1078) நாற்பத்தெண்ணுயிரப் பெரும்பள்ளியிலுள்ள கருவறையில் அருட்கோலம் கொண்டிருந்த கச்சிநாயகர் திருவுருவத்தின் முன்னர் நந்தாவிளக்கு ஒன்று ஏற்றி வைப்பதற்காகத் தானம் வழங்கப்பட்டிருக்கிறது.[7] இரண்டாவது குலோத்துங்கன் ஆட்சியிலும் (கி.பி. 1137) இக்கச்சிநாயகர் வழிபாட்டுச் செலவிற்கென நானுற்றிருபது கலம் நெல் கொடுக்கப்பட்டிருக்கிறது.[8] இங்கு கச்சிநாயகர் எனக்குறிப்பிட்டிருப்பது சந்திரநாதர் கருவறையில் இடம் பெற்ற மூலவர் சிற்பத்தையாகும்.

மூன்ருவது இராசராசசோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி.1216-1246) அவனுக்குக் கீழடங்கி அரசு புரிந்த ஆளப்பிறந்தான் மோகன் கச்சியராயன் என்னும் சிற்றரசன் இக்கோயிலில் கச்சிநாயகர் என்னும் சந்திரநாதர் படிமத்தை நிறுவியுள்ளார். இதனே சந்திரபிரபாதீர்த்தங்கரர் உலோகத்திருவுருவத்தின் பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள சாசனம் தெளிவு படுத்துகிறது.[9] இதிலிருந்து ஆரம்பகாலத்தில் சந்திரநாதர் திருவுருவம் கருவறையில் நிறுவப்பட்டது என்றும், பின்னர் திருவிழா, சமயச்சடங்குகள் முதலியவற்றின்போது ஊர்வலமாக எடுத்துச் செல்வதற்காக அத்தீர்த்தங்கரரது திருவுருவம் உலோகத்திருமேனியாகச் செய்துவைக்கப்பட்டிருக்கிறது என்பதும் நன்கு புலனுகும்.

சந்திரபிரபா தீர்த்தங்கரர் திருவுருவம் கச்சிராயன் என்னும் சிற்றரசன் நிறுவியதால் அவனது பெயரை ஒட்டி கச்சிநாயகர் என்று அழைக்கப்பெறவில்லே. இச்சிற்றரசன் பிறப்பதற்கு முன்பே அதாவது முதல் குலோத்துங்கன் காலத்திலேயே (கி.பி. 1078), கச்சிநாயகர் எனும் பெயர் இத்தீர்த்தங்கரருக்கு வழங்கப்பெற்று வந்திருக்கிறது. மிக்கவாறும் கச்சி மாநகரமாகிய காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியாக விளங்கும் திருப்பருத்திக்குன்றத்தில் சந்திரநாதருக்குப்பல்லவர் காலத்தில் தனிக்கோயில் கட்டப்பெற்று, அது

சிறப்புடன்திகழ்ந்ததால், அதன் அடிப்படையில் இவருக்குக் கச்சிநாயகர். (கச்சிக்கு நாயகர்) எனப்பெயர் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த கச்சிநாயகர் என்னும் பெயரினைக் கருத்திற் கொண்டு, முன்பு காஞ்சிபுரத்திலிருந்த சமணமடம் அழிவுற்ற பின்னர் திருநறுங்கொண்டையில் நிறுவப்பட்டதாகவும், பிறகு அங்கிருந்து சித்தாமூருக்கு மாற்றப்பட்டதாகவும், அதனால்தான் சித்தாமூர் மடம் இன்றளவும் ஜினகஞ்சி மடம் (ஜினகாஞ்சி-திருப்பருத்திக் குன்று) என அழைக்கப்பெற்று வருவதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது.[10]

திருநறுங்கொண்டையில் நடைபெறும் வைகாசித் திருவிழாவின் போது தீர்த்தங்கரர்களது செப்புத்திருவுருவங்களை பல்லக்கில் வைத்து எடுத்துச் செல்வதும், பின்னர் அவற்றைத் தேரில் ஏற்றி உலாவரச் செய்வதும் வழக்கமாக இருந்திருக்கிறது. இச்செய்தி அப்பாண்டை நாதர் உலாவில் மட்டுமின்றிக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகிறது. இந்த வைகாசித் திருவிழாவின்போது அருண்மொழித்தேவரையும், நித்தியகல்யாணதேவரையும் பல்லக்கில் எழுந்தருளவிக்கும் பல்லக்குச் சேவைக்கான செலவிற்குச் சிவிகைப் புறமாகச் சில நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.[11]

பஞ்சகல்யாணத்திற்குரியவரான பார்சுவநாதரைத்தான் நித்திய கல்யாணத்தேவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அருண்மொழித்தேவர் என்பது மிக்கவாறும் சந்திரபிரபா தீர்த்தங்கரரைக் குறிக்கும். முதலாவது இராசராசசோழனது இயற்பெயர் அருண்மொழித்தேவராகும். இந்த மன்னனது பெயரினையே தீர்த்தங்கரர் திருவுருவத்திற்கும் இடப்பட்டிருக்கிறது. பொதுவாக கோயிலில் விழாக்களும், சமயச்சடங்குகளும் அதிகரித்தமையால் தீர்த்தங்கரர்களின் திருவுருவங்கள் உலோகத்தினால் ஏராளமாகச் செய்யப்பட வேண்டியதாயிற்று. திருநறுங்கொண்டையிலும் சோழப்பேரரசாட்சியின்போது பலசெப்புத் திருமேனிகள் உருவாக்கப்பட்டு, திருவிழாக்காலங்களில் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டிருக்கின்றன என்பதை அறியக்கிடக்கிறோம்.

திருநடைமாளிகை கட்டியமை

கோயிலில் வழிபாடுசெய்பவர்கள் இறைவனை வணங்கிய பின்னர் அக்கோயிலைச்சுற்றி வலம் வருதல் வழக்கமாகும். இவ்வாறு வலம்வரும் வழியை ஒட்டி திருச்சுற்றுமதில் கட்டுவது பன்னெடுங்காலமாக வந்த மரபாகும். இம்மதில் கோயிலுக்குப் பாதுகாப்பாக அமையும் வகையில் எழுப்பப்பட்டிருப்பதைக்காணலாம். இந்த மதிலினைத் திருச்சுற்று மதில், திருநடைமாளிகை

எனப்பலவாறுக அழைப்பதுண்டு. சந்திரநாதர் கோயிலை ஒட்டி யமைக்கப்பெற்ற உள்திருச்சுற்று மதில் கோப்பெருஞ்சிங்கன் என்னும் காடவசிற்றரசனது ஆட்சியில் கட்டப்பெற்றிருக்கிறது. இந்த அரசனது மூன்றாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1246) பாலை யூரைச் சேர்ந்த சிங்கன் என்பவரும்,[12] ஆறாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1249) கக்கியராயன் (கச்சியராயன்) என்பவரும்[3] இத் திருநடைமாளிகையைக் கட்டியுள்ளனர். எனவே கி.பி. 1246ஆம் ஆண்டில் திருச்சுற்றுமதிலின் கட்டுமானப்பணிகள் தொடங்கப் பெற்று, கி.பி. 1249 ஆம் ஆண்டில் முடிவுற்றிருக்க வேண்டும் எனக்கூறலாம். இச்செய்திகளைத்தரும் சாசனங்களின் பெரும்பகுதி சிதைந்துள்ளமையால் இவை தொடர்பான விளக்கங்களை அறிய முடியாமற்போய்விட்டது.

படிக்கட்டுகள்

அப்பாண்டைநாதர் கோயிலில் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் திருநறுங்கொண்டையைச் சார்ந்த குணவீரன்தேவன் என்னும் பொற்கொல்லன் படிக்கட்டு அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.[14] கோயிலில் முகமண்டபத்தின் வடபுறம் பொறிக்கப்பட்டுள்ள இச் செய்தியடங்கிய கல்வெட்டு, கோயிலுக்கு வடபுறமுள்ள குளத்தி லிருந்து தண்ணீர் எடுத்துவருவதற்கு வசதியாக பாறையில் வெட்டப்பட்டிருக்கும் படிக்கட்டுகளைக் குறிப்பிடுகிறது.

கோபுரப்பணி

திருநறுங்கொண்டைகோயிலின் கோபுரம் கி.பி. 17ஆம் நூற் றாண்டில் கட்டப்பட்டிருக்கிறது. இக்கோபுரத்தில் இடம் பெற் றுள்ள கல்வெட்டின்படி அப்பாண்டார் கோபுரத்தின் கல்திருப்பணி யுவவருடம் பங்குனிமாதம் இரண்டாம் தியதி, ரேவதி நட்சத்திரத் துடன் கூடிய ஞாயிற்றுக்கிழமை பரமஜினதேவஜியரால் கட்டி முடிக்கப்பட்டு, குடமுழுக்காட்டும் (கும்பாபிஷேகம்) நிறைவேற்றப் பட்டதாக அறியவருகிறோம்.[15] இந்த பரமஜினதேவஜியர் என்பார் அக்காலத்தில் இங்குள்ள கோயிலைப்பொறுப்புடன் நிர்வகித்து வந்த ஆன்றோராகவோ அல்லது அப்போதைய மடாதிபதியாகவோ இருக்கலாம். ஆனால் இதுபற்றி முடிவாகக் கூறுவதற்கியலவில்லை. இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்வருடமானது ஆங்கில ஆண்டுக்கணக்கின்படி 1636ஆம் வருடம், பிப்ரவரிமாதம், 28ஆம் தியதியாகிய ஞாயிற்றுக்கிழமைக்குப் பொருந்தி வருவதாகும்.[16] நறுங்கொண்டைக்கோயிலின் கோபுரப்பணி கி.பி. 1636 ஆம் ஆண்டு நிறைவுபெற்றிருப்பதிலிருந்து தொடர்ந்து இக்கோயில் வழிபாட்டிலிருந்தமையும், இந்த ஆண்டிற்குப்பிறகும் நன்னிலையில் விளங்கியிருக்கவேண்டுமென்பதையும் உணரமுடிகிறது.

கோயிலுக்கு அளித்த நிவந்தங்கள்

நிலம்கொடுத்தமை

தமிழகத்திலுள்ள பெரும்பாலான கோயில்களுக்குப் பண்டைக் காலத்தில் அரசர்களும், குடிமக்களும் ஏராளமாக நிலங்களை அளித்துள்ளனர். இந்த நிலங்களிலிருந்து பெறப்படும் வருமானத்தைக் கொண்டு கோயில்களில் பூசை, வழிபாடு முதலிய சமயச்சடங்குகள் தவருமல் நடத்தப்பெற்று வந்திருக்கின்றன. மேலும் திருவிழாக் களுக்கும், சிறப்புவழிபாட்டிற்கும் இந்த நிலங்களிலிருந்து கிடைக்கப்பெறும் பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. கோயிலில் பணிபுரிந்த பல்வேறுதரப்பட்ட மக்களுக்கும் நிலங்களி லிருந்து கிடைக்கும் நெல்முதலியவை கொடுக்கப்பட்டிருக்கிறது. மிக்கவாறும் ஒருகோயில் வலிமைவாய்ந்த அமைப்பாகத் திகழ் வதற்கு அதற்கு அளிக்கப்பட்ட விளைநிலங்களே உறுதுணையாகத் திகழ்ந்திருக்கின்றன.

திருநறுங்கொண்டையிலுள்ள அப்பாண்டைநாதர் கோயி லுக்குப் பல்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு அரசபரம்பரை யினரும், பொதுமக்களும் நிலங்களை அளித்துள்ள செய்தி அங்குள்ள கல்வெட்டுக்களில் இடம்பெறுகிறது. முதன்முதலாக சோழ மன்னனுன முதலாம் இராசராசனது ஆட்சிக்காலத்தில்தான் நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இம்மன்னனது பத்தாவது ஆட்சியாண்டில் (கி.பி. 995) இங்குள்ள கோயிலின் வழிபாட்டுச் செலவுகளுக்காக ஐயாறன் என்னும் அதிகாரியின் மனைவி சில நிலங்களைத் தானமாகக் கொடுத்துள்ளார். திருநறுங்கொண்டை யிலுள்ள இந்த நிலங்கள் முன்பு பயிர் செய்யப்படாமல் கிடந்து, பின்னர் திருத்தியமைக்கப்பட்டு பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற நெல் திருப்பலி, திருவாராதனை முதலிய வழிபாட்டுச்செலவிற்கும், அவற்றைச் செய்துவந்த பூசாரி களுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்நிலங்கள் பெருமாள் கோட்டைக்குத் தெற்கில் இருந்தனவென்றும் அறியவருகிறோம். இதன் பிற எல்லைகள் பற்றிய செய்தியடங்கிய கல்வெட்டுப் பகுதி மிகவும் சிதைந்துள்ளதால் மேற்கொண்டு விபரங்கள் அறிய முடியாமற்போகிறது.[17]

இராசராசனது பதினேழாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1002) இந்த அரசன் எல்லாநலமும் பெற்றுத்திகழும் பொருட்டு இவனது படைத்தலைவனுகிய மும்முடிச்சோழ பிரம்மராயன் என்பவர் மேலைப் பள்ளி, கீழைப்பள்ளி ஆகிய இரண்டு கோயில்களிலும் இரண்டு

நந்தாவிளக்குகள் தினமும் எரிக்கப்பட வேண்டுமெனக் கருதி பத்து மா அளவுள்ள நிலத்தை வழங்கியிருக்கிறார். இவர் சோழநாட்டில் வெண்ணாடு எனும் நாட்டுப்பிரிவிலுள்ள கேரளாந்தகசதுர்வேதி மங்கலம் என்னும் ஊரைச் சார்ந்தவராவார். இவர் அளித்த நிலங்கள் திருநறுங்கொண்டையிலுள்ள குந்தவைப் பேரேரியின் கிழக்காகவும், இவ்வேரியின் கீழுள்ள வாய்க்காலுக்கு வடக்காகவும், ஏரியின் மதகினை ஒட்டியமைந்த பெரிய வாய்க்காலுக்கு வடகிழக்காகவும், ஆற்றூர் என்னும் ஊருக்குச் செல்லுகின்ற வழிக்குத் தெற்காகவும் அமைந்திருந்தன எனஅறிய வருகிறோம்.[18] தானமாகக் கொடுக்கப்பட்ட நிலத்தின் அளவு, அதன் எல்லைகள் முதலியனயாவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பாகும்.

கி.பி. பதினொராம் நூற்றாண்டில் அப்பாண்டைநாதர் கோயிலுக்குச் சில நிலங்கள் ஒற்றியாகக்கொடுக்கப்பட்டு, அவற்றிலிருந்து கிடைத்த வருமானம் கோயில் செலவுகளுக்குப்பயன் படுத்தப்பட்டிருக்கிறது.[19] இச்செய்தியினைக்கூறும் சாசனம் மிகவும் சிதைந்துள்ளமையால் எந்த நிலங்கள் எந்தெந்த அளவிற்கு ஒற்றியாகக்கொடுக்கப்பட்டன என்பதையும், கோயிலில் எத்தகைய செலவுகளுக்கு அந்த வருமானம் பயன் படுத்தப்பட்டது என்பதையும் தெரிய முடியாமற் போகிறது.

ஒரு சமயம் குந்தவைப்பேரேரியில் உடைப்பு எற்பட்டதால் அதனையடுத்துள்ள பல வயல்கள் மிகவும் பாதிக்கப்பட்டு பயிராகாமல் கிடந்திருக்கின்றன. இத்தகைய நிலங்கள் விக்கிரம சோழனது ஆட்சியின்போது சீர்செய்யப்பட்டு கோயிலுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன. கி.பி. 1128 ஆம் ஆண்டு மலையமல்லனை விக்கிரமசோழ மலையமான் என்னும் சிற்றரசன் பயிர்செய்யப் படாமல் கிடந்த நிலங்களின் வரப்புகளில் கற்களை வைத்துக் கரையெழுப்பியும், அவற்றைச்சீர்செய்து மீண்டும் பயிரிடுமாறு செய்தும், பின்னர் அந்த நிலங்களை இறையிலியாக்கி கோயிலுக்கே அளித்தும் நற்பணி செய்துள்ளார். இவ்வாறு வழங்கப்பட்ட நிலங்கள் கல்லினால் எழுப்பப்பட்ட கரைக்குத்தெற்காகவும், தவுக்கால் (?) என்னும் கால்வாய் வரை கிழக்காகவும், ஏரிவரை மேற்காகவும் பரந்து காணப்பட்டது. இந்நிலத்திலுள்ள கிணறுகளும், மரங்களும் கூட கோயிலுக்குச் சொந்தமானதாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தை வைகாசித் திருவிழாவின் போது அருண்மொழித்தேவரையும், நித்திய கல்யாணத்தேவரையும் திருவுலாவிற்காக எடுத்துச் செல்லும் பொருட்டு விழாப்புறமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது.[20]

இது போன்று இம்மன்னனது பதினாறாவது ஆட்சியாண்டிலும் (கி.பி. 1134) முன்பு ஏரி உடைத்ததனால் பயிரேறாமல் கிடந்த சில நிலங்கள் திருத்தப்பட்டு, திருவிழாக்காலத்தில் பல்லக்கு சேவை செய்வதற்காக அவை சிவிகைப்புறமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.[21] இதிலிருந்து குந்தவைப்பேரேரி அக்காலத்தில் மழை நீர்ப்பெருக்கினால் பலமுறை உடைப்பெடுத்திருக்கிறதென்பதும், அதனால் ஏரியின் சுற்றுப்புறத்திலுள்ள விளைநிலங்கள் நாசமாகி பயிரேற்றப்படாமலிருந்திருக்கின்றன என்பதும் நன்கு புலனாகும்.

திருநறுங்கொண்டைக்கோயிலுக்கு நில தான மளித்தவர்களுள் மூன்றாம் குலோத்துங்க சோழனும் (கி.பி. 1178-1216) ஒருவனாவான். இதனை,

''வீரன் திருவறம் பேணுமெய் வீரசங்கத்தவரே
சேருங் கனகச்சினகிரி யப்பர்க்குத்தெய்வ மணம்
கூருந்தெரியற் குலோத்துங்க சோழன் கொடுத்த நல்லூர்
சாரும் பழனச் சிறுசாந்தை காத்தமடபதியே.[22]

எனும் கல்வெட்டுப்பாடல் அறிவுறுத்தும். அதாவது கருமவீரனாகிய ஜினதேவனது மெய்யறத்தினைப் பேணிவருகின்ற வீரசங்கத்தவர் சேர்ந்துள்ள கனகஜினகிரியில் குடிகொண்ட அப்பாண்டைநாதருக்கு குலோத்துங்க சோழன் சிறுசாந்தை எனும் நல்லூரை அளித்தான் எனப்பொருள்படும். மேலும் இவ்வூர் அப்போதைய மடாதிபதியின் பொறுப்பில் விடப்பட்டது என்றும் அறிய வருகிறோம். சிறுசாந்தை என்பது சிறுசாத்த நல்லூரைக் குறிக்கும் எனக்கருதப்படுகிறது. குலோத்துங்க மன்னனே நேரடியாக மனமுவந்து ஒரு ஊரைத்தானமாக இக்கோயிலுக்குக் கொடுத்திருக்கிறான் என்றால் அது அவனது சமயப்பொறையையும், பரந்த நோக்கினையும் எடுத்துக்காட்டுகிறது.

இந்த அரசனது ஒன்பதாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1187) நறுங்கொண்டையில் திருக்கோலம் கொண்டிருக்கும் அருகப்பெருமானுக்குத் திருநாமத்துக் காணியாக ஆற்றூர், உள்ளூர் (திருநறுங்கொண்டை), ஏனாதிமங்கலம் ஆகிய ஊர்களில் பல நிலங்கள் பள்ளிச்சந்தமாக வழங்கப்பட்டிருக்கின்றன. இத்தானத்தைச் செய்தவர் அரச நாராயணன் ஆளப்பிறந்தான் என்னும் வீரசேகர காடவராய சிற்றரசனாவார். இந்த நிலங்களிலிருந்து வசூலிக்கப் பெறும் நன்செய், புன்செய் வரிகளும், தறியிறை, தட்டார் பாட்டம் ஆகிய வரிகளும் கோயிலுக்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன.[23]

மூன்றும் இராசராசசோழன் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1226) மேலைப்பள்ளியிலுள்ள பார்சுவநாதர் முன்பு நந்தா விளக்கொன்று எரிப்பதற்காக பத்து மா அளவுள்ள நிலத்தினைக் கூடல் ஆளப்பிறந்தான் ஏழிசை மோகன் என்னும் காடவ சிற்றரசன் வழங்கியுள்ளார். இந்நிலம் குந்தவைப் பேரேரியின் கீழ்ப்புறத்தில் காணப்பட்டது. இதனை பதினாறு சாண்தடி என்ற நீட்டலளவைக்கோலின் உதவியால் அளந்து அதன் எல்லைகளையும் நிர்ணயித்திருக்கின்றனர்.[24]

திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் எனும் பட்டப்பெயர் கொண்ட சடாவர்மன் சுந்தரபாண்டிய மன்னன் காலத்தில் (கி.பி. 1251-1268) திருநறுங்கொண்டைக்கோயிலில் வைகாசி மாதம் நடைபெறும் திருவிழாவிற்கும், தை மாதத்தில் கொண்டாடப்பெறும் அஸ்தத்திருவிழாவிற்கும் வேண்டிய செலவுகளுக்கென இருங்கோளப்பாடி என்ற ஊரினராகிய தவத்தாளன் தேவன் என்பவர் நறுங்கொண்டையிலிருந்த சில நிலங்களைக் கொடுத்துள்ளார். இந்த நிலங்கள் நெடுநாட்களாகப்பயிர் செய்யப்படாமல் தரிசாகக் கிடந்தனவென்றும், பிறகு சீர்செய்யப்பட்டு பயிராக்கப்பட்டதென்றும் அறிய வருகிறோம். இந்த நிலங்கள் இங்குள்ள கோயிலை நிர்வகித்து வந்த தானத்தார் என்னும் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இச்செய்திகளடங்கிய கல்வெட்டு திருநறுங்கொண்டையிலுள்ள இரு பள்ளிகளையும் ஒன்றாக நாற்பத்தெண்ணாயிரப்பெரும் பள்ளி எனக்குறிப்பிடுகிறது.[25] நாற்பத்தெண்ணாயிரவர் எனும் வணிகக்கூட்டத்தவர் இக்கோயிலுடன் தொடர்பு கொண்டிருந்த பின்னரே, இப்பள்ளிகளுக்கு இந்த பெயர் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

இதே கோனேரின்மைகொண்டானது மூன்றாவது ஆட்சியாண்டில் இங்குள்ள பள்ளிகளுக்கும், அப்பள்ளிகளில் இருந்த அமண்பிடாரர்களாகிய துறவியருக்கும் பத்துவேலி நிலம் பள்ளிச்சந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தநிலம் கூடலிலாடற்பாடிவானவன் மாதேவிபுரத்திலும், அதனை அடுத்துள்ள சிறுசாத்த நல்லூரிலும் இடம் பெற்றிருந்தன. இதிலிருந்து எந்த விதமான வரியும் வசூலிக்கப் படக்கூடாதாகையால் இது இறையிலி நிலமாக (tax free land) ஆக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலத்தைப் பயிர்செய்தவர்கள் ஒரு வேலி நிலத்திற்கு இருபது கலம் நெல் வீதம் இருநூறு கலம் நெல் அளிக்கவேண்டும் என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது.[26]

மாறவர்மன் விக்கிரம பாண்டியன் காலத்தில் (கி.பி. 1283-1296) நடுவில் மண்டலத்தைச் சேர்ந்த மாநாயகவணிகக் கூட்டத்

தவர் நறுங்கொண்டைக் கோயிலுக்குச் சில நிலங்களை அளித்துள்ளனர். இத்தானம் பற்றிக்கூறும் கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளதால், இது தொடர்பான விபரங்களை அறிய இயலவில்லை.[27] இதே விக்கிரம பாண்டியனது ஏழாவது ஆட்சியாண்டில் (கி. பி. 1290) அப்பாண்டார் கோயிலில் நித்திய அமுதுபடி முதலிய வழிபாட்டுச் செலவுகளுக்காக திருநறுங்கொண்டையில் ஆறு மா அளவுள்ள நன்செய் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலங்கள் ஒரு மா என்பது இருபது அடிகோலால் அளக்கப்பட்ட இருநூறு குழி பரப்பினைக் கொண்டது எனவும் கூறப்பட்டுள்ளது.[28]

மேற்கூறப்பட்ட செய்திகளை எல்லாம் ஆய்ந்து பார்க்கின், திருநறுங்கொண்டை ஊரில் இருந்த விளை நிலங்களின் பெரும்பகுதியும் அப்பாண்டைநாதர் கோயிலுக்கு ஒரு காலத்தில் தானமாக அளிக்கப்பட்டவை என்பது நன்கு புலனாகும். இவையன்றி நல்லூர், ஏனாதி மங்கலம், ஆற்றூர், கூடலிலாடற்பாடி வானவன்மாதேவிபுரம், சிறு சாத்தநல்லூர் முதலிய பல்வேறு ஊர்களிலும் இக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் இருந்திருக்கின்றன. இவைகளிலிருந்து கிடைத்த வருவாயினால் இங்குள்ள கோயிலில் வழிபாடு, விழாக்கள் முதலிய பணிகள் சிறப்புற செய்யப்பட்டதோடு மட்டுமின்றி கோயிலும் மேன்மேலும் வளர்ச்சி பெறலாயிற்று. ஆனால் காலச் சுழலில் இந்த நிலங்கள் கவனிப்பாரன்றி பொதுமக்களின் கைக்கு மாறி இருக்கின்றன. தமிழகத்திலுள்ள பெரும்பாலான பண்டைய கோயில்களின் சொத்துக்கள் காலப்போக்கில் தனிநபர் சொத்தாக மாறியிருப்பதை நாம் பரவலாகக் காணமுடிகிறது.

விளக்கெரிக்க நிவந்தங்கள்

பண்டைத் தமிழ்மக்கள் இறைவனுக்கு எழுப்பப்பட்ட கோயில்களுக்கு அளித்த நிவந்தங்களுள் விளக்கிடுவதற்காகச் செய்த தானமும் ஒன்றாகும். கோயில்களில் திருவிழா போன்ற பெரிய அளவிலான சமயச்சடங்குகள் நிகழ்த்தப் பெறமுடியாமற் போய் விட்டாலும், இறைவனின் திருமுன்னர் தினமும் தொடர்ந்து விளக்காவது எரியவிடப்படவேண்டும் என்ற நல்லெண்ணத்தால் பல்வேறு தரப்பட்ட மக்களும் விளக்கெரிக்கதானம் செய்துள்ளமையைக் காணலாம். மனித வாழ்விற்கு வழிகாட்டும் இறைமையே ஒளியின்றியிருப்பது முறையில்லையல்லவா !

அப்பாண்டைநாதர் கோயிலைப் பொறுத்தவரை அதற்கு ஆடுகள், நிலம், நெல், காசு, பொன் முதலியவை தானமாக வழங்கப்பட்ட செய்திகளைக் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

முதலாவது இராசராசனது படைத்தலைவனுகிய மும்முடிச்சோழ பிரம்மராயன் மேலைப்பள்ளியிலும், கீழைப்பள்ளியிலும் இரண்டு நந்தா விளக்குகள் எரிப்பதற்காகச் சில நிலங்களைக் கொடுத்திருக்கிருர். தனது மன்னன் எல்லா நலனும் பெற்று திகழ வேண்டுமென்பதற்காக இந்த நிலங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன[29]

இராசராசனது மைந்தனுகிய முதலாம் இராசேந்திரன் ஆட்சியில் (கி.பி. 1012-1044) பாழியிலாழ்வாராகிய பார்சுவநாதர் முன்னர் ஒரு நந்தாவிளக்கு எரித்தற்பொருட்டு கலிமானன் விசயாலயமல்லன் என்பவர் தொண்ணூற்ருறு ஆடுகளை வழங்கியிருக்கிறார்.[30] இந்த ஆடுகளிலிருந்து பெறப்படும் நெய்யினைக் கொண்டு விளக்கு ஏற்றப்பட்டிருக்கிறது.

பார்சுவநாதர் கருவறையில் தொடர்ந்து விளக்கு எரிக்கப் படுவதற்கென பிற்காலத்திலும் பலதானங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. கி.பி. 1226 ஆம் ஆண்டு கூடல் ஆளப்பிறந்தான் ஏழிசைமோகன் எனும் சிற்றரசன் பார்சுவநாதர் முன்பு தினமும் தவருமல் ஒரு நந்தா விளக்கு எரிக்கப்பட வேண்டி பத்து மா அளவுள்ள நிலத்தைக் கொடுத்திருக்கிருர்.[31] கி.பி. 1290 ஆம் ஆண்டில் குன்றத்தூர்கூற்றத்திலிருந்து வசூலிக்கப்பட்ட தறியிறை, கடமை, தட்டார்பாட்டம் முதலிய வரிகள் பார்சுவநாதர் முன்பு ஒரு நந்தா விளக்கெரிப்பதற்கும், அத்தேவருக்கு நைவேத்தியம் செய்வதற்கும் செலவழிக்கப்பட்டிருக்கின்றன.[32] கி.பி. 1361 ஆம் வருடத்தில் ஆதனூர் பற்று என்னும் ஊரிலுள்ள சபையினர் அப்பாண்டைநாதர் திருக்கோயிலில் ஒரு விளக்கிடுவதற்காகச் சிறிது நிலத்தினை அளித்திருக்கின்றனர்.[33] இதே ஆண்டில் பழம்பட்டினம் என்னும் ஊரைச்சார்ந்த செம்பாதி வில்லவதரையர் என்பவரது மைந்தனும் சில நிலங்களைக் கொடுத்ததாக அறிய வருகிருேம். இத்தானத்தைச் செய்வதற்கு கோபண்ண உடையார் என்பவர் மூலகாரணமாகத் திகழ்ந்திருக்கிருர் எனவும் கூறப்பட்டுள்ளது.[34]

கி.பி. பதினைன்காவது நூற்ருண்டிலும் பார்சுவநாதர் கோயிலில் விளக்கு ஏற்றுவதற்காகப் பல பசுக்கள் தானமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் இச்செய்தியினைக் கொண்ட சாசனம் சிதைந்துள்ளமையால் எத்தனை பசுக்கள், யாரால் வழங்கப்பட்டன என்று சொல்வதற்கில்லை.[35]

மேலைப்பள்ளியிலுள்ள பார்சுவநாதர் திருவுருவத்தில் முன்பு விளங்கிடுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டது போன்று, இக்

கோயிலிலுள்ள யக்ஷியின் முன்பும் விளக்கேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மூன்ரும் இராசராசனது ஆட்சியின் போது இந்த யக்ஷி திருவுருவத்தின் முன்பாக ஒரு சந்தி விளக் கெரிக்க வேண்டி கொல்லியூர் உடையான் என்பவரது சம்மதத்தின் பேரில் ஆதிபட்டாரகன் புஷ்பசேனன் என்பவர் ஆறு காசுகளைக் கொடுத்திருக்கிருர்.[36] சற்று பிற்காலத்திலும் இந்த யக்ஷியின் முன்பு ஒரு சந்தி விளக்கெரிப்பதற்காக மூன்ரும் இராசராசனது அனுமதி பெற்றுக் கொல்லியூர்உடையாரின் விருப்பத்திற்கிணங்க ஆதிபட்டாரக புஷ்பசேனன் மூன்று மா அளவுள்ள நிலத்தை வழங்கியிருக்கிருர்.[37]

முதலாவது குலோத்துங்க மன்னன் காலத்தில் (கி.பி. 1070-1120) உடையார் மல்லிசேன தீர்த்தங்கரர் திருவுருவத்திற்கும் (மல்லிநாதர்) ஒருவிளக்கு ஏற்றுவதற்காக இராசேந்திர சோழ சேதிராயன் என்பவர் நெல்லினைத்தானமாகக்கொடுத்திருக்கிருர்.[38] இந்த செய்தியைக்கூறும் கல்வெட்டிலுள்ள எழுத்துக்கள் மிகவும் அழிந்த நிலையிலிருப்பதால் எவ்வளவு நெல் அளிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. இதே குலோத்துங்கனது எட்டாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1078) கச்சிநாயகராகிய சந்திரபிரபா தீர்த்தங்கரது முன்னர் நந்தா விளக்கொன்று எரிப்பதற்கு நாற்பது பசுக்கள் தானமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பசுக்கள் மங்கலமுடையான் நயச்சன்தேவன், ஆற்றூர் உலகுடையான், தீபங்குடி ஓமைநாதன் முதலிய பலரிடமிருந்து பெறப்பட்டவை யாகும்.[39]

பொதுவாக திருநறுங்கொண்டையிலுள்ள பார்சுவநாதர், சந்திரபிரபா, யக்ஷி ஆகியோரது திருவுருவங்களின் முன்பு நந்தா விளக்குகள் தவருமல் தொடர்ந்து எரியவேண்டுமென்பதற்காகத் தான் வெவ்வேறு காலங்களில் பலர் தானம் செய்துள்ளனர். இத் திருவுருவங்கள் முன்னர் ஏற்றப்பட்ட தீபங்கள் ஒன்று அல்லது இரண்டாக இருந்த போதிலும், ஒவ்வொரு கல்வெட்டும் ஒரு விளக் கெரிப்பதற்குத் தானம் கொடுத்ததாகக் கூறுவது தனித்தனியாக வைக்கப்பட்ட பல்வேறு விளக்குகளின் எண்ணிக்கையைக் குறிப் பதாகாது. நந்தா விளக்குகள் எரிப்பதில் இடையூறு நிகழாதவாறு தொடர்ந்து கவனித்துக்கொள்வதற்காகத்தான் ஒவ்வொருவரும் தான் ஒரு விளக்கிற்கு வேண்டிய தானத்தை அளிக்கிறேன் என்று கூறுவதாகக் கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன. இச் சாசனங்களில் இந்த தானங்கள் அனைத்தும் சந்திரனும், சூரியனும் உள்ளவரை (சந்திராதித்தவல்) நடைபெறவேண்டும் என விண்ணப்பம் செய் துள்ளமையையும் காணலாம். இறைவழிபாட்டில் மக்களுக்கு எத்

துணை நம்பிக்கை இருந்தது என்பதை இது படம் பிடித்துக் காட்டுவதாகும்.

பொன் வழங்கியமை

திருநறுங்கொண்டை மலையிலுள்ள குகையின் மேற்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இரண்டு சாசனங்கள் இங்குள்ள பள்ளிகளுக்குப் பொன்னைக் கொடுத்தசெய்தியைக் கொண்டிலங்குகின்றன. ஒருகல்வெட்டு நரியப்பாடி என்னும் ஊரைச்சார்ந்த சிங்கனார் பெரியவடுகனார் என்பவர் மேலைப்பள்ளிக்கும், கீழைப்பள்ளிக்கும் பத்துபொன் வழங்கியதாகக் கூறுகிறது.[40] மற்றொரு சாசனம் சிதைந்தநிலையிலிருந்த போதிலும், நரியப்பாடியைச் சார்ந்த பெரியநக்கனாரது மகன் பொன்கொடுத்ததாகக் குறிப்பிடுகிறது.[41] ஆனால் எவ்வளவு பொன்தானம் செய்யப்பட்டதென்பதனை அறிவதற்கில்லை. பிற்காலத்தில் கீழைப்பள்ளியின் வழிபாட்டுச் செலவுகளுக்காக ஸ்ரீதரன் என்பவர் பதினைந்து கழஞ்சு பொன்னை அளித்ததாகத் தெரியவருகிறோம்.[42]

பிறதானங்கள்

மேற்கூறப்பட்ட நிலம், பசுக்கள், ஆடுகள் முதலியவைமட்டுமின்றி நெல், வரிகள் முதலியவையும் கோயில் வழிபாட்டிற்கென ஒதுக்கப்பட்டிருப்பதைக் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியக்கிடக்கிறோம். கி.பி. 1137ஆம் ஆண்டில் ஜனநாதமங்கலம் என்ற ஊரிலிருந்து வசூலிக்கப்பட்ட பாடிக்காவல் வரியிலிருந்து 420 கலம் நெல் கச்சிநாயகர் (சந்திரபிரபா) வழிபாட்டுச் செலவுகளுக்காக ஆளப்பிறந்தான் மோகன் என்னும் காடவராய சிற்றரசனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நெல்லும் ஆட்கொண்டான் எனப்பெயர்கொண்ட மரக்காலினால் அளந்து கொடுக்கப்பட்டதெனத் தெரியவருகிறோம்.[43] பாடிக்காவல் என்பது காவல்புரியும் படையினருக்காக மக்களிடமிருந்து பெறப்பட்டவரியாகும். இதனைப்போன்று கி.பி. 1155ஆம் வருடம் கீழையூர் மலையமானாகிய அத்திசொக்கன் என்பவர் பாழியிலாழ்வார் திருவுருவத்திற்கும், அப்பாண்டார் திருவுருவத்திற்கும் நைவேத்தியம் முதலான வழிபாட்டுச் செலவுகளுக்காகத் திருநறுங்கொண்டையிலிருந்து வசூலிக்கப்பட்ட சிலவரிகளை ஒதுக்கியுள்ளார்.[44] கூடல் ஆளப்பிறந்தான் ஏழிசைமோகன் என்ற காடவராயரும் தமக்குத் திருநறுங்கொண்டையிலிருந்து கிடைக்கவேண்டிய சிலவரிகளைக் கோயிலுக்குச் செலுத்தியுள்ளார்.[45]

இன்னும் சிலகல்வெட்டுக்களில் தறியிறை, தட்டார்பாட்டம், கடமை முதலிய பலவரிகள் அப்பாண்டைநாதர்கோயிலில் நித்தியப்

படிச் செலவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப் பட்டுள்ளது.[46] தறியிறை என்பது நெசவு செய்பவர்களும், தட்டார்பாட்டம் என்பது பொற்கொல்லர்களும் அரசாங்கத்திற்குச் செலுத்தும் வரிகளாகும்.

அப்பாண்டைநாதர் கோயிலை அடுத்துள்ள மண்டபத்தில் காணப்படும் கி.பி. 16ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டொன்று அறம்-வளர்த்தான் என்பவரின் மைந்தனுகிய அனந்தப்பன் சதாசேவை என்று குறிப்பிடுகிறது.[47] மிக்கவாறும் அனந்தப்பன் என்பவர் இம்மண்டபத்தின் தூண்களையோ அல்லது மண்டபத்தில் பயன் படுத்தப்பட்டிருக்கும் கற்களையோ தானமாகக் கொடுத்திருக்க வேண்டும். எப்போதும் அக்கற்கள் கோயிலுக்குப் பயன்படுபவை யாகத்திகழ்வதால் இவரதுதொண்டு 'சதாசேவை' எனக் குறிப் பிடப்படுகிறது. பல இந்து சமயக்கோயில்களிலுள்ள தூண்களில் அல்லது படிக்கட்டுகளில் இத்தகைய சேவையைக் குறிக்கும் செய்தி பொறிக்கப்பட்டுள்ளதைக் காணஇயலும்.

தானத்திற்கு இடையூறு செய்தல் பாவம்

பொதுவாக கல்வெட்டுக்களின் இறுதிப்பகுதியில் கோயில் களுக்கு அளிக்கப்பட்ட தான, தர்மங்கள் சரிவரக் கண்காணிக்கப் படவேண்டும் எனவும், அவ்வாறு செய்யாமல் அத்தானத்திற்கு இடையூறு விளைவித்தவர்கள் பலவகையான பாவங்களைப் புரிந்தவர் களாவார்கள் எனவும் கூறப்பட்டிருப்பதைக்காணலாம். அப்-பாண்டைநாதர் கோயிலிலுள்ள சாசனங்கள் சிலவும் இத்தகைய செய்தியைக் கொண்டிலங்குகின்றன. இராசராசனது படைத்தலை வனுகிய மும்முடிச்சோழ பிரம்மராயன் திருநறுங்கொண்டைக் கோயிலுக்கு நிலம் வழங்கிய செய்தியினை முன்பே கண்டோம். இந்த நிலத்தினைச் சரிவர கண்காணிக்காமலிருப்பவர்கள் அறத் திற்குப் புறம்பானவர்களாகவும், கங்கைக்கும், குமரிக்கும் இடைப் பட்ட எழுநூறுகாத தூரத்தில் வாழுபவர் செய்த பாவம் அனைத் தையும் அடையப்பெறுபவர்களாகவும் கருதப்படுவர் எனக்கூறப் பட்டுள்ளது.[48]

மேலைப்பள்ளியிலுள்ள பார்சுவநாதர் திருவுருவத்தின் முன்பு நந்தா விளக்கெரிப்பதற்காக நிலம், சில வரிகள் ஆகியவை கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நந்தா விளக்குகள் சூரியனும், சந்திரனும் உள்ள வரை எரிய விடப்பட வேண்டும் என்றும், அவ்வாறு செய்யாது அத்தர்மத்தினை அழித்தவர்கள் கங்கை யிடைக்குமரியிடைப் பாவம் செய்தவர்களாகக் கருதப்படுவர் என்று

கூறப்பட்டிருக்கிறது.[49] இதைப் போன்று யக்ஷியின் முன்பும் சந்தி விளக்கேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனைச் சரிவர செய்யாது விடுபவர்கள் அறத்தினையே மறுத்தவராவார்கள்.[50]

திருநறுங்கொண்டைப்பள்ளிக்கு குலோத்துங்கசோழன் காலத்தில் நாற்பது பசுக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப்பசுக்களைக்கவனிக்காமல் இந்த தர்மம் அழிவு பெறச் செய்பவர்கள் பெண்களுக்குப் பாதகம் செய்தவர்களாவர் என மொழியப்பட்டிருக்கிறது.[51] பெண்டிரைப் போன்று பசுக்களும் போற்றப்பட வேண்டியவை என்பதனை இக்கூற்று வலியுறுத்துகிறது. மேலும் பெண்மைக்கு அநீதி இழைப்பது எவ்வளவு பாவமான செயலோ அதைப் போன்றதுதான் தானம் செய்யப்பட்ட பசுக்களை கண் காணிக்காமல் அழிய விடுவதுமாகும்.

நற்காரியங்களன்றி அறமற்ற செயல்களை மக்கள் செய்தல் பாவம் என்னும் கருத்தினைப்புகட்டவே இத்தகைய செய்திகள் கல்வெட்டுக்களில் இடம்பெறலாயின. மேலும் சில சாசனங்களில் ''அறமறவற்க; அறமல்லது துணையில்லை'' எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம்.[52] அறச்செயல்களை மானிடர்கள் ஒரு பொழுதும் மறந்துவிடக்கூடாது என்பதனையும், அறமற்ற காரியங்கள் மனிதவாழ்விற்குத் துணையாக இருக்கப்போவதில்லை என்பதையும் மக்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் இவ்வாறு கல்லில் எழுதிவைத்துச் சென்றுள்ளனர்.

குந்தவைப்பேரேரி

திருநறுங்கொண்டை மலைக்கு வடகிழக்காகவுள்ள குந்தவை ஏரி பண்டைக்காலத்தில் மிகவும் பெரியதாக இருந்திருக்கிறது. இது சோழ மன்னன் முதலாம் இராசராசனது தமக்கையாராகிய குந்தவையின் பெயரால் குந்தவைப்பேரேரி என அழைக்கப் பட்டது.[53] மிக்கவாறும் இப்பேரேரியினை உருவாக்குவதற்குக் குந்தவைப்பிராட்டியார் காரணமாகத் திகழ்ந்திருக்கவேண்டும். இயற்கையாகப் பெறப்படும் மழைநீரைத் தேக்கி இங்குள்ள பயிர் நிலங்களின் விளைச்சலைப்பெருக்கும் பொருட்டு இந்த ஏரியினைத் தோற்றுவித்திருக்க வேண்டும்.

இக்குந்தவைப்பேரேரியில் மிகுதியான அளவு தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு, அதனால் பயிர்களுக்கு நீண்ட நாள் பாசன வசதி கிடைக்கப்பெறும் வகையில் ஆறை என்னும் ஊரைச்சார்ந்த

பெருமாள் என்பவர் ஏரியில் தூம்பு (மதகு) ஒன்றினைக்கட்டியதாக அறிய வருகிறோம். இதனை,

''மாடமதிளாறை மன்னுபுகழ் பெருமாள்
நீடு நறுங்கொண்டை நெல்விளையப்-பீடார்ந்த
காருக்கு நேராகு மண்கையன் கார்கடல்போல்
ஏரிக்குத் தூம்பமைத்தான் இன்று''[54]

என்னும் சாசனப்பாடல் தெளிவு படுத்துகிறது. இந்த மதகு அமைத்ததனால் நறுங்கொண்டையிலுள்ள நிலங்கள் மிகுதியான நெல் மகசூலை அளித்து மக்கள் வளம்பெறப் பெரிதும் துணைபுரிந்திருக்க வேண்டும். குந்தவைப்பேரேரி முன்பு மிகுந்த பரப்பளவைக் கொண்டிருந்தமையால் கார்கடலைப் போன்ற ஏரி எனப்புகழ்ப் பட்டிருக்கிறது. இவ்வேரியில் தூம்பமைத்த பெருமாள் ஆறை என சுருக்கமாக அழைக்கப்படும் ஆற்றூரைச்சார்ந்தவராவார். இவ்வூர் திருநறுங்கொண்டைக்கு அண்மையிலுள்ள ஊர் எனவும், அதற்கும் திருநறுங்கொண்டைக்கும் வழி (சாலை) இருந்தது எனவும் இங்குள்ள வேறொரு கல்வெட்டினால் அறியக்கிடக்கிறோம்.[55]

இந்த குந்தவைப்பேரேரியிலிருந்து பல கால்வாய்களின் மூலம் தண்ணீர் வயல் நிலங்களுக்குப் பாய்ச்சப்பட்டிருக்கிறது. கல்வெட்டுக்கள் சிலவற்றில் அப்பாண்டைநாதர் கோயிலுக்கு அளித்த நிலங்களின் எல்லைகளைக் கூறும்போது இந்த வாய்க்கால் சில வற்றைப்பற்றிய செய்திகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏரிக்குக் கிழக்காக வெட்டப்பட்டிருந்த வாய்க்கால் ஏரிக்கீழ் வாய்க்கால் என்றும், பெரிய அளவிலாக அமைக்கப்பட்டிருந்த கால்வாய் பெரு வாய்க்கால் என்றும் பெயர் பெற்றிருந்தன. இந்த பெருவாய்க் கால் ஏரியிலிருந்து தூம்பு (மதகு) வழியாகப்பாயும் தண்ணீரைக் கொண்டு செல்லும் முக்கியமான கால்வாயாகும். இதனைத் ''தூம்பினின்றும் போந்த பெருவாய்க்கால்'' என்னும் சொற்றொடர் தெளிவு படுத்தும்.[56] குந்தவைப்பேரேரியிலிருந்து மேற்காகப் பாய்ந்து செல்லும் வாய்க்கால் தவுக்கால் (?) என அழைக்கப் பட்டிருக்கிறது.[57]

குந்தவைப்பேரேரியில் பலமுறை வெள்ளப்பெருக்கெடுத்து உடைப்பு ஏற்பட்டு பயிர்கள் நாசமாகியதாகவும், அதைத் தொடர்ந்து அங்குள்ள நிலங்கள் பாழ்பட்டுப் பயிர்செய்யப்படாமல் கிடந்ததாகவும் அறிய வருகிறோம். முதலாம் இராசராசசோழன் காலத்தில் (கி.பி. 995) ஏரி உடைப்பெடுத்ததால், தண்ணீரால் குளமாகிக்கிடந்த (குளப்பட்டு கிடந்த) நிலங்கள் சிலவற்றை

ஐயாறன் என்னும் அதிகாரியின் மனைவி திருத்தியமைக்க ஏற்பாடு செய்து பின்னர் அவற்றை அப்பாண்டார் கோயிலுக்கே வழங்கி யிருக்கிறார்.[58]

விக்கிரம சோழன் ஆட்சி செய்த போதும் (கி.பி. 1128) குந்தவைப்பேரேரியில் உடைப்பு ஏற்பட்டு அந்த ஏரியின் கிழக்குப் பகுதியிலுள்ள நிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைத் திருத்தியமைத்துப் பயிர்செய்ய ஏற்றவையாக மாற்றி யிருக்கின்றனர். மேலும் உடைப்பினால் பாதிக்கப்பட்ட நிலங்களில் கற்களினால் கரை (வரப்பு) எழுப்பி மீண்டும் உடைப்பு ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிய வருகிறோம்.[59]

இதுவன்றி முன்பு பயிரேற்றப்பெறாமல் தரிசாகக் கிடந்த நிலங்கள் சிலவற்றையும் இந்த ஏரியிலுள்ள தண்ணீரைக்கொண்டு பயிர் செய்வித்ததாகவும் அறியக்கிடக்கிறோம். ஒரு சமயம் அப்பாண்டைநாதர் கோயிலுக்குச்சொந்தமான சில இறையிலி நிலங்கள் பயிர் செய்யப்படாமல் தரிசாகக் கிடந்திருக்கின்றன. இவற்றை இருங்கோளப்பாடி நாட்டைச்சார்ந்ததவத்தாளன்தேவன் என்பவர் திருத்தியமைத்துப் புதியதாகப் பயிர் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்.[60] திருத்தியமைக்கப்பட்டு பயிர் செய்யப்பட்ட நிலங்கள் அனைத்திற்கும் குந்தவைப் பேரேரியிலுள்ள தண்ணீர் முழுமையாகப் பயன்பட்டிருக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அளவு வகைகள்

சோழர் ஆட்சியில் நிலவரி வசூலிப்பதற்காக நிலங்கள் அவற்றின் வளமைக்கேற்ப பல்வேறு தரங்களாகப் பிரிக்கப்பட்டதாகவும், அவற்றின் தரத்திற்கேற்ப வரிகள் நிர்ணயிக்கப்பட்டதாகவும், அந்த நிலங்கள் பலவகையான நீட்டலளவைக்கோல்களால் அளக்கப்பட்டதாகவும் அறிய வருகிறோம். திருநறுங்கொண்டையிலுள்ள சில சாசனங்கள் நீட்டலளவை, முகத்தலளவை போன்றவை பற்றிய குறிப்புகளைக் கொண்டு விளங்குகின்றன.

அப்பாண்டைநாதர் கோயில் பிரகாரத்திற்கு அருகிலுள்ள பாறை ஒன்றில் இரண்டு குறியீடுகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு இடைப்பட்ட நீளம் பதினாறு சாணாகும். இந்த பதினாறு சாண் அக்காலத்தில் பயன் படுத்தப்பட்ட நீட்டல் அளவு என அதன் கீழ்ப்பகுதியில் பொறிக்கப்பட்டிருக்கிறது.[61] முதலாம் இராசேந்திரனது கல்வெட்டொன்று இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலம் பதினாறு சாண் கோலால் அளக்கப்பட்டதாகக் கூறுகிறது.

மேலும் ஒரு மா என்னும் அளவுள்ள நிலம் நூற்றறுபது குழி பரப்பினை உடையதெனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.[62] மற்ருெரு சாசனம் இருபது அடிக்கோலினைக்குறிப்பிடுகிறது. இந்த இருபது அடிக்கோலால் அளக்கப்படும்போது ஒரு மா அளவுள்ள நிலம் இருநூறு குழி பரப்பினைக்குறிக்கும்.[63] இதிலிருந்து அக்காலத்தில் ஒரு அடி என்பது ஒரு சாண் அளவினை விடக்குறைந்ததாக இருந்திருக்கிறது என்பது தெளிவாகும். இங்குள்ள வேருெரு கல்வெட்டில் இருபத்திரண்டு அடிக்கோலும், இதனுல் அளக்கப்படும் ஒரு மா நிலமானது நூற்றிருபது குழியினைக்கொண்டது எனவும் கூறப்பட்டுள்ளது.[64] எனவே பதினுறு சாண்கோல், இருபது அடிக்கோல், இருபத்திரண்டு அடிக்கோல் முதலிய நீட்டலளவைகள் பற்றிய செய்தியினை இங்குள்ள கல்வெட்டுக்கள் தருகின்றன. ஆனுல் இந்த அளவுகளுக்கான விகிதாசாரத்தினைத் தற்போது சரிவர வரையறை செய்ய முடியுமா என்பது தெரியவில்லை.

முகத்தலளவைகளுள் ஆட்கொண்டான் மரக்கால் என்னும் அளவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. திருநறுங்கொண்டைக் கோயிலுக்கு இந்த ஆட்கொண்டான் மரக்காலினுல் ஒருமுறை நானூற்று இருபது கலம் நெல் அளந்து கொடுக்கப்பட்டிருப்பதை கல்வெட்டொன்றின் வாயிலாக அறிய வருகிருேம்.[65] பிற முகத்தலளவைகள் பற்றிய குறிப்புகள் எவையும் இங்குள்ள சாசனங்களில் இடம் பெறவில்லை.

அண்மையில் தெரிய வந்துள்ள புதிய சாசனங்கள்

இந்திய தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பிரிவைச் சார்ந்த அதிகாரிகள் 1902 ஆம் ஆண்டிலும், 1939 40 ஆம் ஆண்டுகளிலும் திருங்கொண்டையிலுள்ள பெரும்பாலான கல்வெட்டுக்களைப் படியெடுத்து வெளியிட்டிருக்கின்றனர். இவை தவிர சில சாசனங்கள் இக்கோயிலைச்சார்ந்த உலோகத் திருவுருவங்களின் பீடங்களில் பொறிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. இப்புத்தக ஆசிரியர் அப்பாண்டைநாதர் கோயிலில் ஆய்வு மேற்கொண்ட போது இச்சாசனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவை அனைத்தும் இந்த நூற்ருண்டைச் சார்ந்தவையாகும்.

1 சனீஸ்வரர் கல்சிற்பத்தின் அடியிலுள்ள கல்வெட்டு

மலையடிவாரத்தில் படிக்கட்டிற்குத் தென்புறமுள்ள மேடையில் நிறுவப்பட்டிருக்கும் சனீஸ்வரர் சிற்பத்தின் அடியில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டிருக்கிறது.

சக்கரவர்த்தி நயினர் பாரியாளான சிவதேவியம்மாள் சதாசேவை கறடிப்பாக்கம் 1935 ஆடு

அதாவது கரடிப்பாக்கம் ஊரைச்சார்ந்த சக்ரவர்த்தி நயினரின் துணைவியாரான சிவதேவியம்மாள் 1935 ஆம் ஆண்டு இச் சிற்பத்தினை நிறுவினர் என்பது இதன் பொருளாகும். திருநறுங் கொண்டைக்கோயிலுக்கு இந்த நூற்றாண்டின் முதற்பகுதியில் தர்மகர்த்தாவாக இருந்தவர் கரடிப்பாக்கத்தைச்சார்ந்த சக்ரவர்த்தி நயினர். அவரது மனைவி தமக்கு மகப்பேறு இல்லாமையால் இந்த சிற்பத்தினையும், படிக்கட்டின் வடபகுதியிலிருக்கும் பார்சுவ நாதர் சிற்பத்தையும் நிறுவி, நாற்பத்தெட்டு நாட்கள் நோன்பு ஏற்று வழிபாடு செய்ததன் பயனாக அவருக்குப் பெண்மகவு பிறந்த தாகக் கூறப்படுகிறது.

2. நவதேவதை உலோகத்திருவுருவத்தின் பீடத்திலுள்ள சாசனம்.

ஸ்ரீ திருநறுங்கொண்டை சைத்தியாலயத்திற்கு
கறடிப்பாக்கம் பாரிஸநயினர் சக்ரவர்த்தி
நயினர் ரிஷபதாஸ் நயினர் ஆதித்ய
வார நோன்பு நிமித்தம் செய்யப்பட்டது
பிரமாதிஸ வருஷம் கார்த்திகை மாதம் 1913

திருநறுங்கொண்டையிலுள்ள கோயிலுக்கு கரடிப்பாக்கத்தைச் சார்ந்த பார்சுவநயினர், சக்கரவர்த்தி நயினர், ரிஷபதாஸ் நயினர் ஆகியோர் ஆதித்தவார நோன்பு நோற்று இந்த நவதேவதை திருவுருவத்தினைப் பிரமாதி வருடம் கார்த்திகை மாதத்தில் வழங்கினர் எனத் தெரிவிக்கிறது. தமிழ் ஆண்டாகிய பிரமாதிக்கு இணையான ஆங்கில வருடம் 1913 என்பதையும் இச் சாசனம் தெளிவு படுத்துகிறது.

3. பார்சுவநாதர் படிமத்தின் பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள சாசனம்.

ஆனந்த வருஷம் வைகாசி மாதம் பெருமண்டூர் அப்பாண்ட நாத நயினர் தர்மம்.

அதாவது பெருமண்டூரைச்சார்ந்த அப்பாண்டைநாத நயினர் என்பவர் இப்பார்சுவதேவர் திருவுருவத்தை ஆனந்த வருடம் வைகாசி மாதத்தில் கோயிலுக்கு அளித்துள்ளார் எனப்பொருள் படும், இதில் குறிப்பிட்டுள்ள தமிழ் மாதம், வருடம் ஆகியவை

ஆங்கில ஆண்டுக் கணக்கின்படி 1914-க்கும், மே மாதத்திற்கும் பொருந்தி வருபவையாகும். மிக்கவாறும் இக்கோயிலில் வைகாசி மாதம் நடைபெற்ற பிரம்மோத்ஸவ விழாவின் போது இப்படிமம் கோயிலுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

4. தர்மச்சக்கரத்தின் பீடத்திலுள்ள சாசனம்.

உலோகத்திருவுருவங்களுள் மூன்றடுக்குச் சக்கரங்களைக் கொண்ட தர்மசக்கரத்தினைப் பூதயக்ஷன் தன் தலையின் மீது சுமந்து கொண்டிருப்பதைக் குறிக்கும் பீடத்தில் இந்த சாசனம் பொறிக்கப் பட்டிருக்கிறது.

திருநறுங்கொண்டை ஸ்ரீபார்சுவநாதர் சன்னதிக்கு கூனம் பாடி அப்பாச்சி நயினார் கு. அனந்தநாத நயினார் தர்மம்
22-11-1930

கூனம்பாடியைச் சேர்ந்த அப்பாச்சி நயினார், அனந்தநாத நயினார் ஆகிய இருவரும் நறுங்கொண்டையிலுள்ள பார்சுவநாதர் சன்னதிக்கு, ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டு, நவம்பர் மாதம் இருபத்தி இரண்டாம் தியதி இந்த தர்மச்சக்கரத் தினை அளித்திருக்கின்றனர் என்பது புலனாகிறது.

5. மேரு திருவுருவத்தின் அடிப்பகுதியில் எழுதப்பட்ட சாசனம்:

திருநறுங்கொண்டை ஸ்ரீகோயிலுக்கு கறடிப்பாக்கம் சக்ர வர்த்தி நயினார் பாரியாள் அம்மணியம்மாள் தர்மம்.

அதாவது கரடிப்பாக்கத்தைச் சார்ந்த சக்கரவர்த்தி நயினாரின் மனைவியாகிய அம்மணியம்மாள் இந்த மேருவினைக் கோயிலுக்குத் தர்மமாகக் கொடுத்திருக்கிறார் எனப்பொருள் படும்.

இந்த சாசனங்களிலிருந்து கரடிப்பாக்கத்தைச் சார்ந்தவர் களும், இக்கோயிலின் தர்மகர்த்தாவாக விளங்கியவர்களும், வேறு பலரும் இந்த நூற்றாண்டில் அப்பாண்டைநாதர் கோயிலுக்குப் பல வகையானச் செப்புத்திருவுருவங்களை வழங்கியுள்ள உண்மை நன்கு புலப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. **ARE,** 300, 306/1939-40
2. **SII** Vol. VII, No. 1015
3. **SITI**, Vol I, No. 75, 76, 78, 80, **ARE,** 384/1902
4. **SITI,** Vol. I, No. 78
5. **ARE,** 306/1939-40
6. அப்பாண்டைநாதர் உலா, கண்ணி–62, 326, 418
7. **SITI**, Vol. 1, No. 80
8. **ARE**, 311/1939 40
9. **ARE**. 319/1939–40
10. **SITI**, Vol I, No. 80, Notes.
11. **ARE**, 310/1939–40, **SITI**, Vol. I, No. 73
12. **ARE,** 314/1939–40
13. **SITI**, Vol I, No 77
14. **ARE**, 316/1939-40
15. **ARE**, 315/1939-40
16. **ARE**, 1939 40 pt 11, Para 110
17. **ARE**, 385-B/1902
18. **ARE**, 385/1902, **SII**, Vol. VII, No. 1015
19. **SITI,** Vol. I, No. 79
20. **SITI**, Vol I, No 73
21. **ARE,** 310/1939-40
22. **SITI,** Vol. I, No 71
23. **ARE**, 381/1902
24. **SITI**, Vol. I, No. 74
25. **ARE,** 384/1902, **SII,** Vol, VII, No 1014
26. **ARE**, 382/1902, **SII,** Vol. VII, No 1012
27. **SITI**, Vol. I, No 78
28. **SITI,** Vol I, No 75
29. **ARE,** 385/1902
30. **ARE**, 300/1939-40
31. **SITI**, Vol. I, No. 74

32. **SITI**, Vol. I, No. 75
33. **ARE**, 304/1939-40
34. **ARE**, 303/1939-40
35. **ARE**, 312/1939-40
36. **SII**, Vol. VII, No. 1013, **ARE**, 383/1902
37. **SITI**, Vol. I, No 76
38. **ARE**, 301/1939-40
39. **SITI**, Vol. I, No. 80
40. **ARE**, 308/1939-40
41. **ARE**, 309/1939-40
42. **ARE**, 385-A/1902
43. **ARE**, 311/1939-40
44. **ARE**, 317/1939-40
45. **ARE**, 313/1939-40
46. **SITI**, Vol. I, No. 74, 75
47. **SITI**, Vol I, No. 82-c
48. **SII** Vol. VII, No. 1015, **SITI**, Vol. I, No. 70
49 **SITI**, Vol. I. No. 74, 75
50. **SITI**, Vol I, No. 76
51. **SITI**, Vol. I, No. 80
52. **SITI**, No. I, No. 70; 73; 75
53. **ARE**, 385-B/1902
54. **ARE**, 320/1939-40
55. **SII**, Vol VII, No. 1015
56. **SII**, Vol VII, No. 1015, **SITI**, Vol. I, No 70
57. **SITI**, Vol. I, No. 73
58. **SII**, Vol. VII, No. 1017
59. **SITI**, Vol, I. No. 73
60. **SII**, Vol VII, No. 1014
61. **ARE**, 318/1939-40
62. **SITI**, Vol. I, No 70
63. **SITI**, Vol, I, No. 75
64. **SITI**, Vol. I, No 76
65. **ARE**, 311/1939-40

8

வீரசங்கமும் மடமும்

பண்டைக்காலத்தில் திருநறுங்கொண்டையில் துறவறம் நோற்ற சமண சமய அறவோர் வீரசங்கம் என்ற அமைப்பினையும், மடத்தினையும் நிறுவியிருக்கின்றனர். இவை முதன்முதலாக எப்போது, யாரால் தோற்றுவிக்கப்பட்டன என்பதுபற்றி அறுதியிட்டுக் கூற இயலவில்லை. பொதுவாக சமண சங்கங்கள் பற்றிய செய்திச் சிதறல்கள் மெக்கன்சி சுவடித்தொகுப்பு, அப்பாண்டைநாதர் உலா, திருநறுங்கொண்டையிலுள்ள சாசனங்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. இச்சான்றுகளை ஒப்பிட்டு நோக்கிய போதிலும் இவற்றின் முழுமையான வரலாற்றினை அறிந்து கொள்ள முடியவில்லை.

வீரசங்கம்

மெக்கன்சி சுவடியொன்றில் காணப்படும் செய்தியின்படி முன் பொருகாலத்தில் பத்திரபாகு முனிவரின் சீடராகிய அர்ஹத்பலி ஆச்சாரியார் சேனசங்கம், நந்திசங்கம், வீரசங்கம், தேவசங்கம் என்னும் நான்கு சங்கங்களை ஏற்படுத்தி அவற்றிற்கு நான்கு ஆச்சாரியார்களைத் தலைமைப் பொறுப்பேற்று நடத்திவருமாறு செய்தார் எனத்தெரியவருகிறோம். பின்னர் தமிழகத்தில் சகஆண்டு 820-ல் (கி.பி. 898) வள்ளிகிராமத்தைச் சேர்ந்த பார்பரதேவ ஆச்சாரியார், சித்திரகூடத்து ஹேலாச்சாரியார், வீரசேனுச் சாரியார், ஜினசேனுச்சாரியார் ஆகியோர் சமணசமய அறங்களைப் போதித்து வரலாயினர்.[1]

மேற்கூறப்பட்ட அறவோர்களுள் ஹேலாச்சாரியார் பொன்னூரைச் சார்ந்தவராவார். வீரசேனுச் சாரியார் உப்புவேலூரைச் சார்ந்தவர். இவர் செஞ்சிப் பகுதியை ஆட்சி செய்த வெங்கடபதி நாயக்கரது கொடுமைகளுக்கு அஞ்சி சிரவணபெல்கோலாவிற்குச் சென்று சமய நூற்களைக் கற்றுத் தேர்ந்த பின்னர் தமிழகத்திற்கு வந்து சித்தாமூரில் மடத்தினைத் தோற்றுவித்தவராவார்.[2] பார்பர தேவ ஆச்சாரியார் வள்ளிகிராமத்தைச்சார்ந்தவராவார். இவ்வூர் மிக்கவாறும் வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வள்ளிமலையாக இருக்க வேண்டும். ஆனால், ஜினசேன ஆச்சாரியார் குறிப்பாக

எந்த தலத்தில் வாழ்ந்து நல்லறம் போதித்து வந்தனர் என்று கூறப்படவில்லை. இருப்பினும் ஜினசேன ஆச்சாரியார் திருநறுங் கொண்டையுடன் தொடர்பு கொண்டவராக இருந்திருக்கக்கூடும் எனக்கருதுவதற்கு இடமுள்ளது.

மெக்கன்சி சுவடித்தொகுப்பில் ஜினசேனுச்சாரியார் சேத்துப் பட்டுப் பகுதியினைச்சார்ந்த ஊர்களில் வாழ்ந்த சமணர்களது பழக்க வழக்கங்கள் பற்றிய செய்திகளை ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுலோகங்களாக வகுத்தமைத்தவர் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இவர் சக ஆண்டு 820-ல் (கி.பி. 893) தமது சீடராகிய அமோகவர்ஷ அரசனுக்கு சமண சமய நெறிகளை அறிவுறுத்தும் பொருட்டு மகாபுராணத்தைத்தொகுத்தவர் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.[3] இந்த அரசன் தக்காணத்தை ஆட்சிபுரிந்த இராட்டிர கூட அரச பரம்பரையில் தோன்றிய முதலாம் அமோக வர்ஷனுவான்.

சேத்துப்பட்டு பகுதியில் கி.பி. 9 ஆம் நூற்றுண்டில் சமணத் தலங்கள் எவையும் சிறப்பிற்குரியதாகத் திகழவில்லை. ஆனுல் சேத்துப்பட்டினின்றும் தொலைவிலுள்ள திருநறுங்கொண்டை கோயில்தான் அப்போது பெருமையுடன் விளங்கியதாக அறிய வருகிறோம். எனவே அந்த காலத்தில் சேத்துப்பெட்டினை ஒட்டி யுள்ள பகுதி மக்களது பழக்க வழக்கங்களைப் பற்றிய செய்திகளை விரிவாக எழுதித்தொகுத்த பேரறவோராகிய ஜினசேனுச்சாரியார் திருநறுங்கொண்டையில் வாழ்ந்தவராதல் வேண்டும் என்று கருதுவதில் தவறில்லை. இது ஒரு யூகமான கருத்தேயன்றி முழுமையாக வரையறை செய்யப்பட்ட முடிவல்ல. இது ஏற்புடைய தாக இருந்தாலும், ஜினசேனுச்சாரியார்தான் திருநறுங்கொண்டை யில் முதன் முதலாக வீரசங்கத்தை நிறுவினுர் என்றோ அல்லது முன்பே இருந்த வீரசங்கத்தைச்சார்ந்தவர் இவர் என்றோ கூறு வதற்கு எந்த விதமான ஆதாரங்களும் கிடைக்கவில்லை.

இந்த ஆச்சாரியார்களைப்பற்றி இன்னும் ஒரு கருத்தினை நாம் மனதிற் கொள்ள வேண்டியிருக்கிறது. பொன்னூரைச்சார்ந்த ஹேலாச்சாரியார், ஜினசேனுச்சாரியார், பார்பரதேவ ஆச்சாரியார், சித்தாமூர் மடத்தினை நிறுவிய வீரசேனுச்சாரியார் ஆகியோர் சமகாலத்தில் வாழ்ந்தவர்களல்லர். ஹேலாச்சாரியார், பார்பர தவ ஆச்சாரியார் ஆகியோரின் காலம் சரிவர முடிவு செய்யப்படா விட்டாலும், ஜினசேனுச்சாரியார் கி.பி. 9 ஆம் நூற்றுண்டையும், வீரசேனுச்சாரியார் கி.பி. 15 அல்லது 16 ஆம் நூற்றுண்டையும் சார்ந்தவர்கள் என்பது வரையறை செய்யப்பட்டுள்ளது. எனவே

மெக்கன்சி சுவடி குறிப்பிடும் இந்த நான்கு அறவோர்களும் வெவ்வேறு காலத்தில் தோன்றியவர்கள் என்பது நன்கு தெரிய வருகிறது.

முன்பு கூறியதுபோல திருநறுங்கொண்டையில் எப்போது வீர சங்கம் தொடங்கப்பட்டது என்பதை வரையறை செய்ய போதிய ஆதாரங்கள் இல்லாமலிருந்த போதிலும், இங்கு கி.பி. 9 ஆம் நூற்றுண்டிலேயே இச்சங்கம் செயல்பட்டு வந்திருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. குமரி மாவட்டத்தில் திருச்சாரணத்து மலையிலும், திருநெல்வேலியில் கழுகுமலையிலும் இடம் பெற்றுள்ள கி.பி. 9 ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டுக்கள் திருநறுங்கொண்டைப் பள்ளியிலிருந்து இத்தலங்களுக்குச் சென்று சிற்பங்களை அமைக்க ஏற்பாடு செய்த வீரநந்தியடிகளையும், பலதேவக் குரவடிகளின் மாணவராகிய கனகவீர அடிகளையும் குறிப்பிடுகிறது. மேலும் ஐவர்மலையிலுள்ள சாசனம் பெருமடை (பெருமண்டூர்) ஊரைச் சார்ந்தவரும், வீரசங்கத்தைச் சேர்ந்தவருமாகிய மல்லிசேனப் பெரியாரைப் பற்றி கூறுகிறது. இவர்கள் அனைவரும் திருநறுங் கொண்டையிலுள்ள வீரசங்கத் துறவியர் என்பதும், கி.பி. 9 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்கள் என்பதும் வெள்ளிடை மலை.

ஒன்பதாம் நூற்றுண்டிற்குப் பின்னர் பன்னிரண்டாம் நூற்றுண்டுவரை இச்சங்கத்தினைப் பற்றிய செய்திகளை அளிக்கவல்ல சான்றுகள் எவையும் கிடைக்காமையால், அதன் அக்கால நிலையினை அறிந்துகொள்ள இயலவில்லை. அந்த காலக் கட்டத்தில் சமண சங்கம் இங்கு அழிந்திருக்கும் என்று கூறுவதற்கில்லை. ஏனெனில் கி.பி. 10-11 ஆம் நூற்றுண்டுகளில் திருநறுங்கொண்டைக் கோயில் சோழ அரச பரம்பரையினரிடமிருந்து பல தானங்களைப் பெற்று விரிவாக்கம் பெற்றிருக்கிறது. எனவே இந்த நூற்றுண்டுகளில் சங்கமும் கீர்த்தி பெற்றிலங்கியிருக்க வேண்டுமேயொழிய மறைந்திருக்க வாய்ப்பில்லை.

கி.பி. 12 ஆம் நூற்றுண்டில் இவ்வீரசங்கம் பெயரும், புகழும் பெற்றிருந்ததை சந்திரநாதர் கோயில் திருச்சுற்றுலையின் அடிப் பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றும் குலோத்துங்க சோழன் காலக் (கி.பி. 1178-1216) கல்வெட்டுப்பாடல் ஒன்று இனிது இயம்புகிறது. அப்பாடல்,

> ''வீரன் திருவறம் பேணுமெய் வீரசங்கத்தவரே
> சேருங் கனகச் சினகிரியப்பருக்குத் தெய்வமணங்
> கூருந் தெரியற் குலோத்துங்க சோழன் கொடுத்த நல்லூர்
> சாரும் பழனச் சிறுசாந்தை காத்த மட்பதியே''

என்பதாகும்.[4]

அதாவது அருகன் அருள்நெறி பரப்பும் வீரசங்கத்தவர் வீற்றிருக்கும் கனக ஜினகிரியாகிய திருநறுங்கொண்டையில் திருக்கோலம் பூண்டிருக்கும் அப்பராகிய பார்சுவநாதப்பெருமானுக்கு குலோத்துங்க சோழ மன்னன் சிறுசாந்தை என்னும் நல்லூரினைத் தானமாக வழங்கியுள்ளான் என்பதாகும். சிறுசாந்தை என்பது சிறுசாத்த நல்லூரைக் குறிப்பதாகும்.

திருநறுங்கொண்டை மலைப்பதிகம் வீரசங்கத்தினை,

"இடரழுங் கும்பரிசு சுடர் விளங்கு கனகம்
என வருந்துந்திருவுளத்
திட தவங்கொண்டு செறிப வர்கடஞ் சங்கம்
வளர் திருநறுங்கொண்டைமலையே"[5]

எனக்குறிப்பிடுகிறது. அதாவது இடர்களை எல்லாம் கடந்து அறிவாகிய ஞானஒளியினைப் பெறும் வகையில், திடமான மனதினைப்பெற்றுத் தவநோன்பை மேற்கொள்ளும் துறவியரைக் கொண்ட சங்கம் இலங்குகின்ற திருநறுங்கொண்டைமலை என்பது இதன் பொருளாகும்.

அப்பாண்டைநாதர் கோயில் மண்டபத்தின் கிழக்குச்சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கி.பி. 16 ஆம் நூற்றாண்டு சாசனம் ஒன்று வீரசங்கத்தை குணபத்திராச்சாரியார் பிரதிட்டை செய்தார் எனப் பகருகிறது.[6] இந்த குணபத்திர முனிவர் தமிழ், வடமொழி ஆகியவற்றில் சிறந்த புலமை வாய்ந்தவர் எனவும், திருநறுங்கொண்டையைச் சொந்த ஊராகக் கொண்டவர் எனவும் அறியக்கிடக்கிறோம்.[7] பார்சுவநாதர் கோயிலிலுள்ள தீர்த்தங்கரர் உலோகத்திருமேனிகளின் பீடத்தில் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு வரிவடிவத்தைக் கொண்ட தமிழ் எழுத்துக்களில் ஸ்ரீமான் த்ரைவித்யா சக்ரவர்த்தி, சமயநாத முனீஸ்வரர், ஸ்ரீமான் குணபத்திராச்சாரியார் என எழுதப்பட்டிருக்கின்றன.[8] இச்சான்றோர்கள் நறுங்கொண்டையிலிருந்த வீரசங்கத்திற்கும், மடத்திற்கும் தலைமைப்பொறுப்பேற்றவர்கள் எனக்கூறப்படுகிறது.

இக்கோயிலிலுள்ள 16 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் குணபத்திராச்சாரியார் வீரசங்கத்தைப் பிரதிஸ்டை செய்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை பற்றி முன்பே கண்டோம். ஆனால் குணபத்திரர் முதன் முதலாக வீரசங்கத்தை இங்கு தோற்றுவித்தார் என்று கூறுவதற்கில்லை. ஏனெனில் திருநறுங்கொண்டையில் கி. பி. 9 ஆம் நூற்றாண்டிலேயே வீரசங்கம் இருந்தமை பற்றி பிற சாசனங்கள் வாயிலாக அறிய வருகிறோம். கி.பி. 12ஆம் நூற்றாண்டில் மூன்றும் குலோத்துங்க சோழ

ளுட்சியிலும் இச்சங்கம் சிறப்புற்றிருந்திருக்கிறது. எனவே கி.பி. 16ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த குணபத்திரர் இங்கு வீரசங்கத்தை முதன்முதலாகத்தோற்றுவித்திருக்க முடியாது. மாருக, இங்கிருந்த சங்கம் ஏதோ காரணத்தால் திருநறுங்கொண்டையில் சிறிது காலம் செயல்படாமலிருந்து, பின்னர் மீண்டும் அதை பிரதிட்டை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கலாம். அதனைச் செய்தவர் குண பத்திராச்சாரியார் என்று கொள்வதே சாலச்சிறந்ததாகும். இக் கூற்றினை வலியுறுத்தும் வகையில் இங்குள்ள கோயிலில் கி.பி. 15 ஆம் நூற்ருண்டுகாலக் கல்வெட்டுக்கள் எவையும் இல்லை. மிக்க வாறும் இந்த காலக்கட்டத்தில் இங்குள்ள கோயில் சரிவர கண் காணிக்கப்படாமல் இருந்திருக்க வேண்டும். இதற்குப் பின்னர் கி.பி. 16 ஆம் நூற்ருண்டில் குணபத்திர முனிவர் அரும்முயற்சிகள் செய்து வீரசங்கத்தை மீண்டும் நிலைபெறச்செய்து, கோயிலையும் நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும் எனக் கோடல் முறையே !

குணபத்திர முனிவரின் சீடர் மண்டல புருஷராவார். இவரே சூடாமணிநிகண்டினை யாத்த பேரறிவாளராவார். இதனை அப் பாண்டை நாதர் உலா,

''மண்டல மகாபுருடன் மன்னிய வீரேந்திரனல்
கண்ட நிகண்டின் கவிசிறந்தோன் - கொண்டை
குணபத்திர மாமுனிவன் கொண்டுலகம் ஏத்தக்
கணதரராய்க் காசினியில் வந்தோன்''[9]

எனப்பகரும்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளிலிருந்து கி.பி. 9 ஆம் நூற்ருண்டிலேயே திருநறுங்கொண்டையில் வீரசங்கம் என்ற அமைப்பு இருந்தது என்பதுவும், அச்சங்கத்தைச்சார்ந்த அறவோர் கள் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று அருள்நெறி பரப்பி யுள்ளனர் என்பதுவும் தெளிவாகிறது. இச்சங்கத்தின் தொடர்ச்சி யான வரலாற்றினை அறிந்து கொள்ள இயலாவிடினும், கி.பி. 12 ஆம் நூற்ருண்டிலும் இந்த அமைப்பு நன்னிலையில் இயங்கி வந்ததாகத் தெரிகிறது. பின்னர் கி.பி. 15 ஆம் நூற்ருண்டில் ஏதோ காரணத்தினுல் இது முறைப்படி செயல்பட இயலவில்லை என்றும், அதற்குப்பிறகு கி.பி. 16 ஆம் நூற்ருண்டில் குணபத் திராச்சாரியார் இதனை மீண்டும் நிலைநிறுத்தி சிறப்படையச்செய் திருக்கிருர் என்றும் அறியக் கிடக்கிருேம். இதன் பிறகு வீரசங்கம் பற்றிய செய்திகள் எவையும் நமக்குக் கிடைக்கவில்லை. இங்குள்ள கோயில் பதினும் நூற்ருண்டிற்குப் பின்னரும் நன்முறையில்

திகழ்ந்து அதில் வழிபாடுகள் தவறாது நடை பெற்றபோதிலும், வீரசங்கத்தினைப் பற்றிய செய்திகளைக் கூறும் வகையில் சான்றுகள் எவையும் கிடைக்கப்பெறவில்லை.

சைன மடம்

பண்டைக்காலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள மலைக்குகைகளில் சமண முனிவர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்கள் வாழ்ந்த குகைகளில் கற்படுக்கைகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன. இத்தகைய முனிவர்களது உறைவிடங்கள் பாழி, பள்ளி எனப்பொதுவாக அழைக்கப்பெறலாயின. காலப் போக்கில் சமண சமய கட்டக்கோயில்களும், அவற்றுடன் இணைந்த மடங்களும் கூட பள்ளி, பாழி என்னும் பெயரால் அழைக்கப் படலாயின. மலைக்குகை உறைவிடங்களின் அடிப்படையில் தோன்றிய மடங்கள் பிற்காலத்தில் கோயில்களைக் கண்காணிக்க வும், அவற்றிற்குரிய சொத்துக்களை நிர்வகிக்கவும் உரிமை பெறலாயின. இந்த மடங்கள் சமய போதனை, இலவசமாக உண வளித்தல், மருத்துவ வசதி செய்தல், அடைக்கலம் கொடுத்தல் போன்ற பல பணிகளையும் செய்து வந்தமையால், சமுதாயத்தில் மிகுந்த வலிமை மிக்க அமைப்பாகத்திகழமுடிந்தது.

தமிழகத்திலுள்ள திகம்பர பிரிவு சமண சமயத்தவருக்குத் தற்காலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தைச்சார்ந்த மேல் சித்தாமூரில் மட்டும் தான் மடம் என்னும் ஒரு அமைப்பு இருந்து வருகிறது. முன்பு சித்தாமூர் மட்டுமின்றி காஞ்சிபுரம், திருநறுங் கொண்டை, செஞ்சியை அடுத்த தாயனூர் முதலிய இடங்களிலும் மடங்கள் இருந்ததாக அறிய வருகிறோம். ஆனால் இந்த மடங்கள் பற்றிய முழுமையான செய்திகளோ அல்லது மடாதிபதிகள் அனை வரது பெயர்களோ தற்போது அறிவதற்கில்லை. எனினும் திருநறுங் கொண்டையிலுள்ள கல்வெட்டுக்களும், மெக்கன்சி சுவடித் தொகுப்பும் இவை பற்றிய சில செய்திகளைத் தருவனவாகத் திகழ்கின்றன.

கர்னல் மெக்கன்சி அவர்களுக்கு சித்தாமூர் மடாதிபதியாக இருந்த முனிபத்திர தேவபத்திர ஆச்சாரியார் அவர்கள் அளித்த விளக்கம் ஒன்றில் காஞ்சிபுரம், திருநறுங்கொண்டை, தாயனூர், சித்தாமூர் ஆகிய நான்கு ஊர்களில் மடங்கள் இருந்ததாகக்குறிப் பிட்டுள்ளார். காஞ்சிபுரத்தில் சமந்தபத்திர ஆச்சாரியார், சிவகோடி ஆச்சாரியார், பூஜ்யபாதர், அகளங்கர், நிஷ்களங்கர் முதலிய பலர் கி.பி. 688லிருந்து கி.பி. 1615 வரை மடாதிபதிகளாக இருந்திருக் கின்றனர். இதன் பிறகு நாட்டில் குழப்பமும், அமைதியின்மையும் ஏற்பட்டதால் இந்த மடம் அழியலாயிற்று.

திருநறுங்கொண்டையிலிருந்த மடத்தின் தலைமைப் பொறுப்பினை அனந்த வீர்யாச்சாரியார், வித்யானந்தாச்சாரியார், மாணிக்க நந்தாச்சாரியார், கவிபரமேஷ்டியார் முதலிய பலரும், இறுதியில் குணபத்திராச்சாரியாரும் சிறப்புற வகித்து வந்தனர். இந்த மடமும் ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு அழிந்தது. இதைப் போன்று தாயனூரில் ஏற்படுத்தியிருந்த மடமும் காலப் போக்கில் அழிவுறவே, அங்கிருந்தோர் சித்தாமூருக்குச் சென்றிருக்கின்றனர். இச்செய்திகளனைத்தும் கி.பி. 1816 ஆம் ஆண்டில் சித்தாமூர் மடாதிபதிகள் கர்னல்மெக்கன்சிக்கு அளித்துள்ளார்.[10]

திருநறுங்கொண்டையிலிருந்த மடம் 1816 ஆம் ஆண்டிற்கு சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே அழிவுற்றதாகச் சித்தாமூர் மடாதிபதிகள் குறிப்பிட்டிருப்பதை அடிப்படையாகக் கொண்டு, மிக்கவாறும் கி.பி. 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டில் இந்த மடம் அழிந்துபட்டிருக்க வேண்டும் எனக்கூறலாம். ஆனால் குறிப்பாக எந்த ஆண்டில் மடம் வீழ்ச்சியடைந்தது என்று கூறுவதற்கு எந்த சான்றுகளும் இல்லை. இதுபோன்று எப்போது முதல் இங்கு மடம் ஆரம்பிக்கப்பட்டது என்பதனையும் வரையறை செய்ய இயலவில்லை. திருநறுங்கொண்டையிலுள்ள கோயில் கி.பி.17ஆம் நூற்றாண்டிலும் வழிபடப்பட்டு வந்திருப்பதால், இங்குள்ள மடம் மட்டிலும் செயல்பாடற்ற நிலையிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றப் பட்டிருக்க வேண்டுமெனும் மறைபொருள் தெளிவாகிறது.

திருநறுங்கொண்டையில் நிறுவப்பட்ட வீரசங்கத்தினை நடத்தி வந்த அறவோர்களே மடத்தின் தலைவர்களாகவும் திகழ்ந்திருக்கலாம். ஆனால் இக்கருத்திற்கு வலிமையூட்டும் வகையில் எந்தவித சான்றுகளுமே அமையவில்லை. கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் இங்குள்ள சங்கத்துடன் தொடர்புபடுத்தப்படும் ஜினசேனாச்சாரியார் மடத்தினையும் நிர்வகித்து வந்தவரா என்று கூறுவதற்கில்லை. இது எவ்வாறாயினும் இங்குள்ள மடாதிபதிகளின் பெயர் பட்டியலையோ அல்லது அவர்களது தொடர்ச்சியான வரலாற்றினையோ எந்த சான்றுகளும் முறைப்படியாகக் கொண்டிலங்கவில்லை.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த விக்கிரமசோழன் காலத்தில் அப்பாண்டைநாதர் கோயிலில் நடைபெறும் வைகாசித் திருவிழாவிற்கென திருநறுங்கொண்டையிலுள்ள சில நிலங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலங்கள் அப்போதைய மடாதிபதியின் பொறுப்பில் விடப்பட்டிருக்கின்றன. அவர் அந்த நிலங்களைப் பயிரிட வழிவகை செய்து, அவற்றிலிருந்து கிடைக்கும்

நெல்லைக் கொண்டு திருவிழாவிற்கு வரும் மக்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்யக் கடமைப்பட்டிருந்தார் எனவும் அறிய வருகிறோம்.[11]

மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சியில் (கி.பி. 1178-1216) அந்த மன்னனே நறுங்கொண்டையிலுள்ள கோயிலுக்கு சிறு சாந்தை எனப்பட்ட சிறுசாத்தநல்லூரைத் தானமாகக் கொடுத்துள்ளான். அந்த நிலங்களும் மடாதிபதியின் கண்காணிப்பிலேயே இருந்து வந்திருக்கிறது. இதனை,

> ''கூருந்தெரியற் குலோத்துங்க சோழன் கொடுத்த நல்லூர்
> சாரும் பழனஞ்சிறு சாந்தை காத்த மடபதியே''[12]

என்னும் கல்வெட்டுப் பாடற்பகுதி அறிவுறுத்தும். விக்கிரம சோழன், குலோத்துங்கன் ஆகியோர் காலத்தில் மடாதிபதிகள் இருந்தமையையும், அவர்களது பொறுப்பில் கோயிலின் நிலங்கள் இருந்ததையும் கல்வெட்டுக்கள் குறிப்பிட்ட போதிலும், அவர்களுடைய பெயர்கள் கூறப்படவில்லை. இதற்கு சற்று பிற்காலத்தைச்சார்ந்த சாசனங்களும் மடத்தைப் பற்றியோ அல்லது மடாதிபதிகளைப் பற்றிய செய்திகளையோ கொண்டிலங்கவில்லை.

மெக்கன்சி சுவடித்தொகுப்பிலிருந்து திருநறுங்கொண்டையில் அனந்தவீர்யாச்சாரியார், வித்யானந்தாச்சாரியார், மாணிக்கநந்தாச்சாரியார், கவிபரமேஷ்டியார் முதலியோரும், இறுதியில் குணபத்திராச்சாரியாரும் மடத்தின் தலைவர்களாக இருந்திருக்கின்றனர் என்பது தெரிய வருகிறது. இவர்களுள் குணபத்திரர் திருநறுங்கொண்டை ஊரைச்சார்ந்தவரும், இங்கு வீரசங்கத்தை மீண்டும் நிலைபெறச் செய்தவரும், மண்டலபுருடரின் குருவும் ஆவார். இங்குள்ள கி.பி. 16 ஆம் நூற்றுண்டைச்சார்ந்த சில கல்வெட்டுக்கள் இதனை வலியுறுத்துகின்றன. இவர் தமிழ், வடமொழி ஆகிய மொழிகளில் மிகுந்த புலமை உடையவராவார்.

அப்பாண்டைநாதர் கோயிலில் நிறுவப்பட்டுள்ள படிமங்கள் சிலவற்றின் பீடங்களில் த்ரைவித்யா சக்ரவர்த்தி, சமயநாத முனீஸ்வரர், குணபத்ராச்சாரியார் என்னும் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுள் முதலிருவர் குணபத்திரருக்கு முன்பு மடாதிபதிகளாக விளங்கிய அறவோர்களாதல் வேண்டும். குணபத்திரருக்குப் பின்னர் இங்கு மடாதிபதிகள் இருந்ததாகத் தெரியவில்லை. இவருக்குப் பிறகு இங்கு மடம் என்ற அமைப்பு அழிவுற்று தாயனூருக்கோ அல்லது சித்தாமூருக்கோ தலைமைப்பீடம் மாற்றப்பட்டிருக்க வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. **Mackrenzie Manuscripts.,** Mss. No. 68
2. ஏ. ஏகாம்பரநாதன், ***சித்தாமூர்வரலாறு*** பக். 77
3. **Mackenzie Manuscripts,** Mss. No. 12, Sec.5
4. **ARE**. 299/1939-40, **South Indian Temple Inscriptions,** Vol. I, No. 71
5. ***திநநறுங்கொண்டைமலைப்பதிகம்,*** பதிகம். 6
6. **ARE**, 303/1939-40, **SITI**, Vol. I, No. 82
7. **ARE**. 302/1939-40
8. **SITI**, Vol. I, No. 82
9. ***அப்பாண்டைநாதர் உலா,*** கண்ணிகள், 83-84
10. **Ma kenzie Manuseripts,** Mss. No. 68
11. **SITI**, Vol. I, No. 73
12. **Ibid**, Vol. I, No. 71, **ARE,** 299/1939-40

9

திருநறுங்கொண்டையும் பிறதலங்களும்

தமிழகத்தில் சமண சமயம் வேரூன்றத் தொடங்கிய பின்னர் இச்சமயச் சான்றோர் நாட்டின் வெவ்வேறு பகுதிகளுக்கும் சென்று அறநெறியினைப் போதித்து வரலாயினர். சமய முக்கியத்துவம் வாய்ந்த தலங்களில் சங்கம் போன்ற அமைப்பினை ஏற்படுத்தி அங்கிருந்து பல இடங்களுக்கும் சென்று அருள்நெறியைப் பரப்பி வந்துள்ளனர். அரசியல் முதன்மை பெற்ற மதுரை, காஞ்சி முதலிய தலைநகர்களிலும், பிறஇடங்களிலும் இவர்களுக்கு அரசர்கள், செல்வந்தர்கள், பொதுமக்கள் ஆகியோரது பேராதரவும் கிடைத்தது. எனவே தான் இங்கு பெரிய அளவில் கோயில்கள் கட்டப்பட்டு, அவை வலிமைமிக்க அமைப்புகளாகவும் மாற முடிந்தன. இவ்வகையில் சற்று பிற்காலத்தில் திருநறுங் கொண்டையும் சிறப்புமிக்க சமணத்தலமாக விளங்கியது. அக் காலத்தில் திருநறுங்கொண்டையிலிருந்த அறவோர்கள் தமிழ கத்தின் தென்பகுதி வரையிலும் சென்று சமய நன்னெறியினைப் பரப்பியுள்ளனர். இதனால் போக்குவரத்து வசதியற்ற அந்தக் காலத்திலேயே திருநறுங்கொண்டைக்கும், தொலைவிலுள்ள தலங்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த தொடர்பு ஏராளமான தலங்களுடன் இருந்திருந்தாலும், நமக்குக் கிடைத்திருக்கின்ற கல்வெட்டுச் சான்றுகள் திருச்சாரணத்துமலை, கழுகுமலை, ஐவர்மலை ஆகிய இடங்களுடன் இருந்த தொடர்பினை மட்டும் விளக்குவனவாகத் திகழ்கின்றன.

காலம் செல்லச்செல்ல திருநறுங்கொண்டையின் புகழ் வெவ் வேறு இடங்களுக்கும் பரவியதால், ஆங்காங்குள்ள மக்கள் இந்த கோயிலுடன் ஏதாவது ஒருவகையில் தொடர்பு ஏற்படுத்திக் கொண் டிருந்திருக்கின்றனர். அவர்களுள் பெரும்பாலானோர் திருநறுங் கொண்டையிலுள்ள கோயிலுக்கு நிலம், பொருள் முதலிய தானங் களைச் செய்துள்ளனர். சமண சமயத்தவர் மட்டுமின்றி பிறரும் இக்கோயிலுக்குத் தான தர்மங்கள் செய்திருப்பது பெருமைக்குரிய ஒன்றாகும். சமயப்பொது நோக்கிற்கும், சகோதரத்துவத்திற்கும், அன்புடைமைக்கும் இத்தகு செயல்கள் என்றும் நிலைக்களனாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

திருச்சாரணத்துமலை

குமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுகாவிலுள்ள மார்த்தாண்டம் என்னும் ஊரிலிருந்து மூன்று கிலோ மீட்டர் வடகிழக்கிலுள்ள மலை திருச்சாரணத்து மலை எனப்படும். இதனை ஒட்டியுள்ள பகுதி திருச்சாரணம் எனவும் **சிதுரால்** எனவும் பெயர் பெறும். சாரணர்களாகிய சமணத்துறவியர் வாழ்ந்த இந்த மலையில் பார்சுவ நாதர், மகாவீரர், பத்மாவதி ஆகியோருக்குச் சிறிய கருவறைகளும், வரிசை வரிசையாக சிறிய அளவில் வடிக்கப்பட்ட தீர்த்தங்கரர் சிற்பங்களும் உள்ளன. இந்த சிற்பங்களின் அடிப்பகுதியில் கி.பி. 9 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த கல்வெட்டுக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் இம்மலையில் தீர்த்தங்கரர் சிற்பங்கள் நிறுவ ஏற்பாடு செய்த செய்தியைக் கூறுபவையாகும். இவற்றுள் ஒன்று இங்குள்ள சில சமணத்திருவுருவங்களைத் திருநறுங்கொண்டையிலுள்ள மேலைப்பள்ளியைச்சார்ந்த வீரநந்தியடிகள் என்னும் துறவி நிறுவ ஏற்பாடு செய்தார் எனப்பகருகிறது,[1] இதிலிருந்து கி.பி. 9 ஆம் நூற்றுண்டிலேயே திருநறுங்கொண்டையிலுள்ள துறவியாகிய வீரநந்தியடிகள் தென்குமரி வரை சென்று நல்லறம் போதித்ததோடு மட்டுமின்றி, திருச்சாரணத்து மலையில் சமண சிற்பங்களையும் நிறுவ வழிவகை செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது. குமரி மாவட்டத்தில் காலத்தால் முந்திய சமணதலம் திருச்சாரணமாகும். எனவேதான் இப்பண்டைய தலத்துடன் திருநறுங்கொண்டை சமண சமயம் மூலமாக தொடர்பினைக்கொண்டிருந்திருக்கிறது. மேலும் சிதராலிலுள்ள வேறு சில சாசனங்கள் திருப்பருத்திக்குன்று, திருநெடும்பாறை ஆகிய இடங்களிலுள்ள சமணச்சான்றோர்களும் இங்கு வந்து பல தீர்த்தங்கரர் சிற்பங்களை அமைக்கக்காரணமாக இருந்ததைத் தெளிவுபடக்கூறுகின்றன. இப்பகுதியில் சமணம் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்த தென்பதை இந்த சாசனங்களே பறை சாற்றுவதைக் காண்கிறோம்.

திருநந்திக்கரை

குமரி மாவட்டத்தில் திருச்சாரணத்து மலையிலிருந்து ஏறத்தாழ 15 கிலோமீட்டர் வடமேற்கில் அமைந்துள்ள ஊர் திருநந்திக்கரையாகும். இங்கு பாண்டிய மன்னர்கள் காலக் கலைப்பாணியைக்கொண்ட குடைவரைக் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் முன்பு சமணக்கோயிலாக இருந்து பின்னர் சைவ சமயக்கோயிலாக மாற்றப்பட்டதெனும் கருத்து ஒன்று உண்டு[2] ஆனல் இது முன்னர் சமண சமயக்குடைவரையாக இருந்து பிறகு சமய மாற்றம் செய்யப்பட்டதற்கு எந்தவித ஆதாரங்களும் இல்லை. இங்குள்ள

சாசனங்களும், சிற்பங்களும் சைவ சமயத்தொடர்புடையவை யாகவே இருக்கின்றன.[3] இது எவ்வாறிருப்பினும் இங்கு நிலவி வரும் செவிவழிச் செய்தியின்படி இந்த தலம் வீரநந்தியடிகளின் பெயரால் திருநந்திக்கரை என அழைக்கப்பட்டதாகக் கூறப் படுகிறது. இந்த செய்தி ஏற்புடையதாக இருக்குமாயின் திருநறுங் கொண்டையைச்சார்ந்த வீரநந்தியடிகள் திருச்சாரணத்து மலைக்கு வந்த சமயத்தில் இங்கும் வந்திருக்க வேண்டுமெனக் கூறலாம். அதனால் அவரது பெயரின் அடிப்படையில் இத்தலம் நந்திக்கரை எனவும் பெயர் பெற்றிருக்கலாம். ஆனால் இக்கருத்தினை முழுமை யாக ஏற்றுக்கொள்வதற்குத் தகுந்த சான்றுகள் எவையும் இல்லை. மாறாக இங்கு பாயும் சிற்றாறு நந்தியாறு எனப்பெயருடைய தாகையால், அதன் கரையிலுள்ள தலம் நந்திக்கரை என அழைக்கப்படலாயிற்று என்றும் கூறப்படுகிறது.

கழுகுமலை

திருநெல்வேலிமாவட்டத்திலுள்ள கழுகுமலை கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டுகளில் மிகச்சிறந்த சமணதலமாக விளங்கியிருந்தது. இங்குள்ள பாறைகளில் வரிசைவரிசையாக சமண சிற்பங்கள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இத்திருவுருவங்களின் அடிப் பகுதியில் இவற்றை உருவாக்கத் துணைநின்றவர்களின் பெயர் களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலுள்ள பல்வேறு சமணதலங்களிலும் வாழ்ந்த அறவோர்கள் இங்கு சிற்பங்களைச் செதுக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர் என்பது பெருமைக்குரிய தாகும். இக் கழுகுமலையிலுள்ள சிற்பம் ஒன்றினைத் திருநறுங் கொண்டைப் பள்ளியிலுள்ள துறவியாகிய பலதேவக்குரவடிகள் என்பவரது மாணாக்கராகிய கனகவீரஅடிகள் நிறுவியுள்ளார் என அறியக்கிடக்கிறோம்.[4]

கழுகுமலையிலுள்ள கல்வெட்டுகள் பொதுவாக கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையென வரையறைசெய்யப்பட்டுள்ளது. இதுபற்றிக் கருத்துவேறுபாடிருப்பினும், இங்குள்ள சிற்பங்களின் கலைப்பாணி, சாசனங்களிலுள்ள எழுத்துக்களின் வரிவடிவ அமைப்பு ஆகியவற்றைக்கொண்டு, இவற்றின் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு என்று கூறுவதில் தவறில்லை. இந்த காலக்கட்டத்தில் திருநறுங்கொண்டையும் சிறப்புற்றிருந்தமையால்தான், அங்குள்ள துறவியரின் சீடர் இங்குவருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஐவர்மலை

அண்ணாமாவட்டத்தை சார்ந்த ஐவர்மலையிலும் பண்டைக் காலத்தில் ஏராளமான சமணசமயச்சிற்பங்களும், அவற்றின் அடிப்

பகுதியில் அவற்றைச் செதுக்க ஏற்பாடுசெய்தவர்களின் பெயர் களும் வடிக்கப்பட்டிருக்கின்றன. இவையனைத்தும் கி.பி. 9ஆவது நூற்றுண்டைச் சார்ந்தவையாகும். இங்கு காணப்படும் பத்தாவது சிற்பத்தினை பெருமடை என்னும் ஊரைச்சார்ந்த மல்லிசேனப் பெரியார் என்பவர் நிறுவவழிவகை செய்திருக்கிருர், மேலும் இவர் வீரசங்கத்தைச் சார்ந்தவர் எனவும் அறியவருகிரேம்." இங்கு குறிப்பிடப்படும் மல்லிசேனப்பெரியார் திருநறுங்கொண்டையி லிருந்த வீரசங்கத்தைத் சார்ந்தவராவார். இவரது ஊர் பெருமடை, பெருமண்டை, பெருமண்டைப்பாற்புத்தூர் எனப் பலவாருக அழைக்கப்பட்ட பெருமண்டூராகும். தென்னர்காடு மாவட்டத்தில் திண்டிவனத்திற்கு அருகிலுள்ள இவ்வூர் இன்றள சமணத்தலமாகவே திகழ்ந்து வருகிறது."

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளிலிருந்து கி.பி. 9ஆம் நூற் ருண்டில் திருநறுங்கொண்டையைப் போன்று திருச்சாரணத்துமலை, கழுகுமலை, ஐவர்மலை முதலிய இடங்களும் முதன்மை பெற்ற தலங்களாக இருந்திருக்கின்றன என்பது தெளிவாகும். திருநறுங் கொண்டையில் வீரசங்கம் அக்காலத்திலேயே நிறுவப்பட்டிருந்த மையால், அங்குள்ள சமணத்துறவியர் நாட்டின் தென்பகுதி வரை யிலும் சென்று சமயப்பணி ஆற்றிவந்திருக்கின்றனர். எனவே திருநறுங்கொண்டையிலுள்ள கோயிலும், வீரசங்கமும் கி.பி 9ஆம் நூற்றுண்டில் மிகுந்த புகழுடன் திகழ்ந்ததென்பதில் ஐயமில்லை.

நறுங்கொண்டையும் பிற ஊர்களும்

மேற்கூறப்பட்ட செய்திகள் திருநறுங்கொண்டையிலுள்ள துறவியர் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று சமயப்பணியினைச் செய்துவந்ததால் ஏற்பட்ட தொடர்பினை விளக்குபவையாகும். இவையன்றி வேறு தலங்களில் வாழ்ந்த பொதுமக்களும் திருநறுங் கொண்டையுடன் ஏதாவது ஒருவகையில் தொடர்பு கொண்டிருந் தனர் என அறியவருகிரேம். அதாவது தொலைவில் வாழ்ந்த வர்கள்கூட இங்குள்ள கோயிலுக்குப் பலவகையான தானங்களைச் செய்திருக்கின்றனர். இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் கூறும் செய்திகளின் அடிப்படையில் முக்கியமாக எந்த ஊரிலுள்ளோர் என்னென்ன தானம் செய்து இக்கோயிலுடன் தொடர்பு கொண்டி ருந்தனர் என்பதனை இங்கு காண்போம்.

தழக்குடி

கி.பி. 9ஆம் நூற்றுண்டில் திருநறுங்கொண்டையிலுள்ள கீழைப்பள்ளியாகிய சதுர்முகத்திருக்கோயிலையும், அதனையடுத்

துள்ள மண்டபத்தினையும் விசையநல்லுழான் குமரன்தேவன் என்பவர் கட்டியுள்ளார். இவர் காவிரியாற்றின் தென்பகுதியிலிருந்த தழக்குடி என்ற சிற்றூரைச் சார்ந்தவராவார்.[7] இந்த ஊர் தற்போது எந்த பெயரினைக் கொண்டிலங்குகிறது என்பதை அறிவதற்கில்லை. இது எவ்வாருயினும் காவிரி பாயும் சோழ நாட்டைச் சார்ந்த விசையநல்லுழான் தொண்டை நாட்டிலுள்ள திருநறுங்கொண்டையில் கோயில் திருப்பணிகள் செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கேரளாந்தக சதுர்வேதி மங்கலம்

சோழப்பெருவேந்தனுகிய முதலாம் இராசராசனது ஆட்சிக் காலத்தில் அவனது படைத்தலைவனுகிய மும்முடிச்சோழ பிரம்ம மாராயன் என்பவர் நறுங்கொண்டையிலுள்ள பள்ளிகளில் தினமும் இரு நந்தாவிளக்கெரிப்பதற்கு வேண்டி சில நிலங்களை அளித்துள்ளார். இவர் காவிரியாற்றின் தென்கரையிலுள்ள வெண்ணுடு என்னும் நாட்டுப்பிரிவினுளடங்கிய பிரம்மதேயமான கேரளாந்தக சதுர்வேதி மங்கலம் எனும் பிராமணர் குடியிருப்பு ஊரைச் சார்ந்தவராவார்.[8] மறையோதும் பிராமணர்களுக்கு அளிக்கப்பட்ட ஊரில்வாழ்ந்த இப்படைத்தலைவன் சமணசமயத்தைச் சாராதவராக இருந்தபோதிலும் பரந்த நோக்குடன் இப்பள்ளிகளுக்குத் தானம் அளித்துள்ளார்.

திருமணஞ்சேரி

முதலாம் இராசேந்திர சோழன் ஆட்சியிலும் (கி.பி.1012-1044) இங்குள்ள பள்ளியில் அருட்கோலம் கொண்டிருக்கும் பார்சுவ தீர்த்தங்கரர் திருவுருவம் முன் நந்தாவிளக்கெரிப்பதற்கு திருமணஞ்சேரி என்ற ஊரைச்சார்ந்த விசையாலய நல்லுழான் என்பவர் தொண்ணூறு ஆடுகளைக் கொடுத்திருக்கிருர். இந்த ஊர் இராசேந்திரசிம்மவள நாட்டிற்குட்பட்டது எனவும் அறிய வருகிறோம்.[9] திருமணஞ்சேரி என்னும் ஊர் தஞ்சை மாவட்டத்தில மாயவரம் வட்டத்தில் இன்றளவும் இதே பெயருடன் விளங்குகிறது. இராசேந்திரசிம்ம வளநாடு சீர்காழி, மாயவரம் முதலிய பல ஊர்களைக் கொண்ட நாட்டுப் பகுதியாகும்.

இருங்கோளப்பாடி நாடு

பார்சுவ நாதர் கோயிலில் வைகாசி மாதத்தில் தேர்த்திருவிழாவும், தைமாதத்தில் மற்ருெரு திருவிழாவும் சிறப்புறக் கொண்டாடப் பட்டிருக்கின்றன. இந்த விழாக்களுக்குரிய செலவிற்காக இருங்கோளப்பாடி நாட்டைச்சார்ந்த தவத்தாளன் தேவன் என்பவர் சில

நிலங்களைத் தானமாகக் கொடுத்துள்ளார்.[10] இருங்கோளப்பாடி நாடு என்பது செஞ்சி, சித்தாமூர் முதலிய பலஊர்கள் அடங்கிய பகுதியாகும். ஆனால் இந்த நாட்டுப் பிரிவில் தவத்தாளன் தேவனது ஊர் எதுவென்று குறிப்பிடப்படவில்லை.

கொல்லியூர், பாலையூர்

மேலைப்பள்ளியிலுள்ள யக்ஷியின் முன்னர் தினமும் விளக்கெரிப்பதற்கு கி.பி. 1226 ஆம் ஆண்டு சில நிலங்கள் தானமாக வழங்கப் பட்டுள்ளன. இவற்றைக் கொல்லியூர் உடையான் என்பவர் கொடுத்துள்ளார்.[11] திருநறுங்கொண்டையிலுள்ள கோயிலின் திருச்சுற்றுமதில் கி.பி. 1246 ஆம் ஆண்டு கட்டத்தொடங்கப்பட்டிருக்கிறது. இத்திருப்பணிக்கு ஏற்பாடு செய்தவர் பாலையூரில் வாழ்ந்த சிங்கன் என்பவராவார்.[12] மேற்கூறப்பட்ட தானங்களை அளித்தவர்களின் ஊர்களாகிய கொல்லியூர், பாலையூர் ஆகியவை எங்கு எப்பெயர் தாங்கி தற்போது இருக்கின்றன என்பதைக் கூறுவதற்கில்லை.

கிளியூர்

திருக்கோவலூருக்கு அடுத்துள்ள கீழையூர் முன்பு கிளியூர் எனப்பெயர் பெற்றிருந்தது. இதனைத் தலைநகராகக் கொண்டு மலையமான் சிற்றரசர் பலர் சோழர்களுக்கு அடங்கி ஆட்சி புரிந்து வந்தனர். இவர்களதுஆட்சியின் போது திருநறுங்கொண்டை கோயிலுக்கு ஏராளமான நிவந்தங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களைப்போன்று காடவராயர், வாணர் முதலிய சிற்றரச பரம்பரையினருக்கும், திருநறுங்கொண்டைக்கும் மிகுந்த தொடர்பிருந்தமையால், அவர்கள் காலத்தில் இக்கோயில் சிறந்த நிலையை அடைந்திருக்கிறது. இந்த சிற்றரசர்கள் அளித்த தானங்களைப் பற்றிய தகவல்களைக் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் எனும் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட செய்திகளனைத்தையும் ஒருங்கே நோக்கும் போது கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் திருநறுங்கொண்டையிலுள்ள வீரசங்கத்துறவியர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று அறநெறி போதித்தும், ஒரு சில இடங்களில் சிற்பங்களை நிறுவ வழிவகை செய்தும் வந்திருக்கின்றனர். என்பது புலனாகிறது. மேலும் இக்கோயில் கீர்த்தி பெற்று விளங்கியதால் தஞ்சை, திருக்கோவலூர் பகுதிகளிலுள்ள ஊர்களைச்சார்ந்த மக்கள் பார்சுவநாதர் கோயிலுக்குப் பல்வேறு வகையில் தானங்களை அளித்து, அதன் வளர்ச்சிக்கு மிகுந்த துணைபுரிந்திருக்கின்றனர்,

சோழப்பேரரசுடன் தொடர்புடையவர்களும், அப்பேரரசிற்கு அடங்கிய சிற்றரசர்களும், பல்வேறு கிராமங்களைச்சார்ந்த பொது மக்களும் இந்த கோயிலுடன் தொடர்பு கொண்டிருந்தமை ஒரு தனிச்சிறப்பாகும்.

கல்வெட்டுக்கள் குறிப்பிடும் ஊர்களிலுள்ளவர்கள் மட்டும்தான் இந்த கோயிலுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்று கூறுவதற்கில்லை. எத்தனையோ பிற ஊர்களிலுள்ள மக்கள் இக்கோயிலுக்கு வந்து வழிபாடு செய்திருக்கலாம்; தங்களால் இயன்ற சிறிய அளவு தானங்களை அளித்திருக்கலாம். ஆனால் அவற்றையெல்லாம் எடுத்துக் கூறுவதற்குப் போதிய ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் நெடுந்தொலைவிலும் வாழ்ந்த மக்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் திருநறுங்கொண்டை கோயில் இன்றளவும் திகழ்வது சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

திருநறுங்கொண்டையைச் சுற்றியுள்ள சைனத்தலங்கள்

தொண்டை நாட்டிலுள்ள பல்வேறு சமணத்தலங்களைப் பற்றியும், அவற்றிற்கெல்லாம் நடுநாயகமாகத் திகழ்ந்த திருநறுங்கொண்டைத் திருத்தலம் பற்றியும் அப்பாண்டைநாதர் உலா அழகுறக் குறிப்பிடுகிறது. மேலும் அக்காலத்தில் நன்னிலையிலிருந்த கோயில்களைப் பற்றிய செய்தியும் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியவருகிறோம். அப்பாண்டைநாதர் உலா ஏராளமான சமண சமய ஊர்களைக் குறிப்பிட்டிருப்பதை நோக்குங்கால், இந் நூலின் காலமாகிய கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் அந்தந்த இடங்களிலெல்லாம் கோயில்கள் வழிபாட்டிற்குரியனவாகத் திகழ்ந்திருக்கின்றன என்பது தெளிவாகும். இவ்வுலா மஞ்சைக்குளத்தூர், மரக்குண்ணம், முதலூர், செஞ்சி, திருக்குழசை, வங்காரம், பொன்னூர், வளத்தி, குறக்கோட்டை, சிங்கபுரி, வீரை, திருப்பரம்பை, ஆடையூர், கன்னலம், ஆலைப்பதி, கூனம்பாடி, விருதூர், தச்சம்பாடி, எயில். வீடைநகர், குளந்தை, வேலூர், வயலை, விழுக்கம், பேருவூர், வாழைப்பதி, அகலூர், திறக்கோல், கீழைக் களையூர், கிரியருகை, சண்பைநகர், தச்சூர் சயலையூர், பூண்டி, வெண்குணம், ஓதலபாடி, வில்விளந்தை, அருகந்த மங்கலம், திருத்தீபை, விளங்காடு, சேந்தமங்கலம் ஆகிய இடங்களில் சமணக் கோயில்கள் இருந்தமை பற்றிக் குறிப்பிடுகிறது.[13] இந்த ஊர்களுள் பெரும்பாலானவை மேற்கூறப்பட்டுள்ள பெயர்களுடன் இன்றளவும் சைன சமயத்தலங்களாகவே விளங்குகின்றன.

செஞ்சி, பொன்னூர், வலத்தி, சிங்கபுரியாகிய சித்தாமூர், திருப்பறம்பை, கன்னலம், கூனம்பாடி, பிருதூர், தச்சம்பாடி, எயில்,

வேலூர் (உப்பு வேலூர்), விழுக்கம், அகலூர், திறக்கோல், சண்பைநகர் (ஜம்பை), தச்சூர், பூண்டி, வெண்குன்றம், ஓதலபாடி, அருகமங்கலம், இளங்காடு முதலிய இடங்களில் சமண சமயக் கோயில்களோ அல்லது பண்டைய சின்னங்களோ அல்லது சமண சமய மக்களோ இன்றளவும் இருந்து வருவதைக்காணலாம். ஏனைய ஊர்களின் பெயர்கள் தற்போது மாற்றம் பெற்றிருக்கவேண்டும். எவ்வாறாயினும் கி.பி. 16 ஆம் நூற்றுண்டில் வடஆர்க்காடு, தென் ஞர்க்காடு ஆகிய மாவட்டங்களில் ஏராளமான ஊர்கள் சமண சமய மக்கள் வாழ்ந்தவையாக இருந்திருக்கின்றன என்பது நன்கு புலப்படும்.

அடிக்குறிப்புகள்

1. **TAS.**, Vol. II, P. 126
2. S. Padmanaban, **Temples of Kanyakumari district** PP. 119-120
3. A. Ekambaranathan "Tirunandikkarai Rock-Cut Cave temple",

   Bulletin of the Institute of Traditional Cultures. 1979, PP. 66-67
4. **ARE,** 28/1894
5. **ARE,** 697/1905
6. A. Ekambaranathan & C. K. Sivaprakasam, **Jaina Inscriptions in Tamilnadu** PP. 11
7. **ARE** 306/1939-40
8. **ARE**, 385 1902
9. **ARE**, 300/1939-40
10. **ARE**, 884/1902.
11. **SII**, Vol. I No. 76
12. **ARE**, 314/1939-40
13. **அப்பாண்டைநாதர் உலா**, கண்ணிகள் 86-94

10

தலவரலாற்றுச் செய்திகள்

தமிழகத்தில் சிறப்பு வாய்ந்த கோயில்கள் பலவற்றிற்கும் சுவையான தலவரலாறு, பல்வேறு புராணக்கதைகள், புனிதத்தன்மை முதலியவை இருப்பதாகக் கருதப்படுகிறது. திருநறுங்கொண்டையிலுள்ள கோயிலும் இதற்கு விதிவிலக்காகத் திகழவில்லை. இங்குள்ள கோயில் பெருஞ்சிறப்பு பெறத்தொடங்கியதிலிருந்து இதனுடன் பல செவிவழிசெய்திகள் தொடர்பு படுத்தப்பட்டிருக்கின்றன. இங்குள்ள பார்சுவநாதர் சிற்பம் வெளிக்கொணரப் பட்டது பற்றியும், சிலர் இத்தேவரை வழிபட்டு நற்பேறு பெற்றமை பற்றியும், அப்பாண்டைநாதரின் அருட்செயல்கள் பற்றியும் பலசெய்திகள் உள்ளன.

அப்பாண்டைநாதர் தோற்றம்

திருநறுங்கொண்டை கோயிலிலுள்ள அப்பாண்டைநாதராகிய பார்சுவநாதரின் திருவுருவம் தோன்றியமை பற்றிச்சுவையான மரபு வழிச்செய்தி ஒன்று வழங்கி வருகிறது. அதன்படி ஒருசமயம் நறுங்கொண்டை மலையில் வேடன் ஒருவனும், அவனது துணைவியும் கபிலைக்கிழங்கு எடுப்பதற்காகச் சென்று ஓரிடத்தில்தோண்டினர். அவ்வாறு அகழ்ந்து பார்த்தபோது அங்கு மண்ணினுள் புதையுண்டிருந்த பார்சுவநாதர் திருவுருவத்தின்மீது வேடனது தோண்டு கருவிபடவும், உடனே மிகுந்த ஒளியுடன் அருகதேவனின் திருவுருவம் வெளிப்படலாயிற்று. மிகுந்த அவ்வொளிப் பிழம்பினல் வேடன் தனது கண்பார்வையினை இழக்கலானன். இவ்வாறு கண்பார்வை இழந்த வேட்டுவன் தான் அறியாமல் செய்த தவறினை எண்ணி ''அப்பனே, ஐயனே, ஆண்டையே, எனப்பலவாறு அழுது அரற்றி பார்சுவப்பெருமானை வாழ்த்திவணங்கினன். மேலும் தமது தவறினைப் பொறுத்தருளி கண்பார்வையினை மீண்டும் வழங்க வேண்டும் எனவும் நெஞ்சுருகப் பாடினன். பார்சுவநாதரும் வேடன் அறியாமற் செய்த பிழையைப் பொறுத்து அவனுக்கு மீண்டும் கண்பார்வையை நல்கினர். அதிலிருந்து அத்தேவர் அப்பர், ஆண்டவர் என அழைக்கப்பெறலானர்.

இந்த நற்செய்தியினைக் கேட்டறிந்த வேடர் குலத்தவர் மிக்க மகிழ்ச்சியடைந்து, சங்கநாதம் முழக்கியும், பல்வேறு இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டும் ஆங்காங்கிருந்த ஊர்மக்களிடம் செய்தியைத்தெரிவித்தனர். இதனல் மக்கள் அனைவரும் ஒன்று கூடித் திருநறுங்கொண்டை மலையில் பார்சுவநாதரை நிறுவித் திருக்கோயில் கொள்ளச்செய்தனர் என்று கூறப்படுகிறது. இதனை அடிப்படையாகக்கொண்ட பாடல்கள் அண்மைக்காலத்தில் வாழ்ந்த சின்னத்தம்பிதாசன் அவர்களால் இயற்றப்பெற்ற 'அருகர் சிந்து' என்னும் பாடற்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.[1]

பார்சுவநாதர் சிற்பத்தின் காலிலும், அதனையொட்டிப்பாறையிலும் ஏற்பட்டுள்ள சிதைவினை வேடனது கருவியால் ஏற்பட்ட வடு என்று கூறுகின்றனர். திருநறுங்கொண்டையில் பார்சுவநாதர் கோயில் தோன்றியபோது இச்செய்தி வழக்கிலிருந்ததாகத் தெரியவில்லை. இங்குள்ள பார்சுவதேவர் சிற்பம் பாறையில் செதுக்கப்பட்ட சிற்பமாக இருப்பதால், இது மண் மூடிக்கிடந்தது என்றும், வேடன் ஒருவன் கிழங்கு தோண்டும்போது அம்மண்ணினின்று வெளிப்பட்டது என்றும் கூறுவதற்கு வாய்ப்பில்லை. பாறையிலேயே வடிக்கப்பட்ட இச்சிற்பத்தினைத்தனியாக எடுத்துச் சென்று கோயிலில் நிறுவுவதென்பதும் சாத்தியமானதல்ல. எனவே தான் இங்கு முன்பிருந்த பாறைச்சிற்பத்தினை ஒட்டி சற்று பிற்காலத்தில் மண்டபம் ஒன்றினை எழுப்பியுள்ளனர்.

இக்கோயிலிலுள்ள பார்சுவநாதர் ஆரம்ப காலத்திலிருந்து கி.பி. 11 ஆம் நூற்றுண்டு வரை பாழியிலாழ்வார், மேலைப்பள்ளியாழ்வார் என அழைக்கப்பெற்று வந்துள்ளார். கி.பி. 12 ஆம் நூற்றுண்டிலிருந்துதான் இவருக்கு அப்பர், கனகஜினகிரியப்பர், அப்பாண்டை நாயனுர், அப்பாண்டைநாதர் என்னும் பெயர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதனை இங்குள்ள கல்வெட்டுக்களே தெளிவுபடுத்துகின்றன. இந்த பெயர்களின் அடிப்படையில் நோக்கினல், வேடன் இங்குள்ள இறைவனை 'அப்பனே, ஆண்டையே' என வாழ்த்தி வணங்கி கண்பார்வை பெற்றுன் என்னும் கதை அப்பர், அப்பாண்டைநாதர் என இங்குள்ள தீர்த்தங்கரருக்குப் பெயர் வழங்கப்பட்டதற்குப் பிறகுதான் தோன்றியிருக்க வேண்டும். அதாவது கி.பி. 11 ஆம் நூற்றுண்டிற்குப் பின்னர்தான் இந்த வேடன் கதை திருநறுங்கொண்டையுடன் தொடர்பு படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனல் குறிப்பாக எந்த காலத்தில் இத்தகைய கதை எழுந்தது என்பதனை வரையறை செய்ய இயலவில்லை. அப்பாண்டைநாதர் என்னும் பெயர் ஏற்பட்டமைக்கு **அப்பரை ஆண்டநாதர்** எனவும்

மற்ருெரு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அது பற்றி பின் வரும் பகுதியில் காண்போம்.

திருநறுங்கொண்டையும், சைவ நாயன்மார்களும்

சமண சமயத்தலங்கள் வேறெவற்றிலும் நிலவாத தல் வரலாற்றுச்செய்தி யொன்று திருநறுங்கொண்டையுடன் இணைக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அதுவும் சைவ சமயக் குரவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியவர்களுடன் தொடர்புடைய செய்தியாகும். இச்செய்தி மெக்கன்சி சுவடித் தொகுப்பிலும், அப்பாண்டைநாதர் உலாவிலும், திருநறுங் கொண்டைத்தோத்திரமாலையிலும் இடம் பெற்றிருக்கிறது.

மெக்கன்சி சுவடித்தொகுப்பில் அப்பர் என்னும் சமயச் சான்ருேர் முன்பு 8000 சமணத்துறவியரைக் கொண்டை சங்கத்தின் உறுப்பினராக இருந்தவரென்றும், பின்னர் அச்சங்கத்தினின்றும் வெளியேற்றப்பட்டு சைவ சமயத்தைத் தழுவினுர் என்றும் கூறப் பட்டுள்ளது. சமண சங்கத்தினின்றும் வெளியேற்றப்பட்ட அவர் காலப்போக்கில் சமண சமயம் வீழ்ச்சியடைவதற்குரிய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்திருக்கிருர். ஒரு சமயம் நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் கடுமையான பஞ்சம் நிலவியதால் சமணத் துறவியர் பெரும்பாலானேர் சோழ நாட்டிற்குச்செல்லலாயினர். அப்போது சோழ நாட்டை ஆட்சி புரிந்த மன்னனெருவன் தீராத தலைவலியால் அவதியுறவே, அப்பர் அதனைத் தீர்த்து வைத்த தோடல்லாமல் அந்த அரசனை சைவ சமயத்தவனுக மாற்றினுர். பின்னர் அந்த அரசனது உதவியால் ஆங்காங்கிருந்த சமணக் கோயில்களை எல்லாம் சைவக்கோயில்களாக மாற்றியமைக்க ஏற்பாடு செய்தார்.

இவ்வாறு செய்து வருங்கால் ஒரு முறை திருநறுங்கொண் டைக்கு அவர் வருவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டது, இத்தலத்திற்கு வந்தபோது அவர் தனது கண் பார்வையினை இழக்க நேரிட்டது. உடனே இத்தலத்தில் குடிகொண்டுள்ள பார்சுவப்பெருமானை வாழ்த்தி வணங்கி தமக்குக் கண்பார்வையினை வழங்குமாறு வேண்டினுர். அதற்கு அருகப்பெருமான் சைவக்கோயில்களாக மாற்றப்பட்ட சமணக்கோயில்கள் அனைத்தையும் மீண்டும் முன்பு போல் சமணர் வழிபாட்டிடங்களாக மாற்றியமைத்தால் கண் பார்வை பெற இயலும் என்று அருள்வாக்கு மொழிந்தார். அப்பர் அதனை ஏற்றுக்கொண்டதால் திரும்பவும் கண்பார்வை பெற்று அருகக்கடவுளை நெஞ்சார வாழ்த்தி வணங்கினுர். இதனை அறிந்த சம்பந்தரும, சுந்தரரும் அப்பரைச்சுண்ணும்புக்காள வாயிலிட்டுக்

கொன்று விட்டனர். இச்செயலை நினைவூட்டும் வகையில் நறுங்கொண்டைமலையிலுள்ள கோயிலைச் சுற்றி கற்சின்னங்கள் உடைந்து சிதறிக் கிடக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[2]

மேற் கூறப்பட்ட செய்தி சற்று மாறுபட்ட விதத்தில் அப்பாண்டைநாதர் உலாவில் இடம் பெற்றிருக்கிறது. அதாவது நறுங்கொண்டையில் திருக்கோலம் கொண்டுள்ள அப்பாண்டை நாதர் அப்பருக்கு மட்டுமின்றி சம்பந்தருக்கும் விழிகொடுத்தவர் என்பதாகும். இதனை,

''அப்பர் சம்பந்தர்க்கும் அன்பாய் விழி கொடுத்த
அப்பன்சினகிரி வாழய்யன்...''[3]

என்னும் பகுதி அறிவுறுத்தும். மற்றொரு பாடற்பகுதியில்,

''பக்தியுடன் சம்பந்தர் பாடப்பத்தும் பதியம்
வெற்றிபெறப் பெற்ற விழியிரண்டும்-மெத்தவே
அத்திபெறுந் தரணன் அற்புதமாய் தான் செய்த,''[4]

என உரைக்கப்பட்டுள்ளது. இங்கு சம்பந்தர் பக்தி மேலீட்டால் நறுங்கொண்டை நாயகரை வணங்கிப்பாடியதால் விழி இரண்டும் பார்வை பெற்றார் என்னும் பொருள்படுகிறது.

பிற்காலத்தில் எழுதப்பட்ட திருநறுங்கொண்டை தோத்திர மாலையிலுள்ள இரண்டு பதிகங்களுள் ஒன்று சம்பந்தர் பதிகம் எனவும், மற்றொன்று அப்பர் பதிகம் எனவும் பெயர் பெறுகின்றன. இவ்விரு பதிகங்களும் இருபத்திரண்டு பாடல்களைக் கொண்டவை யாகும். இவற்றில் எங்கேனும் அப்பர் அல்லது சம்பந்தர் தாம் கண்பார்வை இழந்த செய்தியையோ அல்லது அப்பரைக் காளவாயிலிட்டமை பற்றிய கருத்தினையோ குறிப்பிடவில்லை. மாறாக, அப்பர்பதிகம் தாம் பெண்டிரின் அன்பு வலையினின்று அகன்றொழிய அருகன் அருள்புரிய வேண்டுமெனவும், பிறவிப் பெருங்கடலிலிருந்து நிலையாக விடுபட வேண்டுமெனவும் வாழ்த்துவதாக அமைந்துள்ளது. சம்பந்தர் பதிகத்தில் அருகக் கடவுளைப் பலவாறு பணிந்தேத்துவதாகவும், தமக்கு அருளிய ஒப்பிலா மணிச்சுடரே எனப்போற்றுவதாகவும் பாடல்கள் இடம் பெறுகின்றன. இன்னும் சில பாடல்களில் அருகதேவன் சம்பந்தரது உள்ளத்திற் புகுந்து இடர்கெடுத்து நற்பணி செய்ய அருள வேண்டுமென்றும், அவர் என்றும் தனது நெஞ்சில் கோயில் கொண்டெழுந்தொழுக வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[5]

அப்பாண்டைநாதர் உலாவைப் பதிப்பித்த மு. சண்முகம் பிள்ளையவர்கள் அப்பரும், சம்பந்தரும் அருகன் அடியார்கள் என்றும், இவர்களுக்கு விழி கொடுக்கப்பட்டதெனக் கூறப்பட்டிருப்பது ஞானக்கண்ணினை வழங்கியமையை-அதாவது ஞானமாகிய மெய்யறிவினை-இறைவன் அளித்ததனைக் குறிக்கும் என்றும் கருதுகிறார். மேலும் சம்பந்தர் வரையறுத்தபாட்டியல் என்னும் நூலையாத்த சமண அறவோர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.[6]

இந்த கருத்தினை வலியுறுத்தும் வகையில் ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள் அப்பரும், சம்பந்தரும் சமண சமய ஆன்றோர்களே என்று 'தமிழகத்தில் ஜைனம்' என்னும் தமது நூலில் எழுதியுள்ளார். இவர்களுள் அப்பர் திருநறுங்கொண்டையில் தருமசேனர் என்னும் பெயருடன் தவம் புரிந்தவர் என்றும், அங்கு வாழ்ந்த மக்கள் பரம்பொருளாகிய அப்பாண்டைநாதரின் பெயரடிப்படையில் இம்முனிவரையும் அப்பர் என அழைத்துவரவே, இப்பெயரே அவருக்கு நிலைக்கலாயிற்று என்றும், அவர் பாடிய பாடல்கள் தான் அப்பர்பதிகங்கள் என அழைக்கப்பெறுபவை என்றும் கருதுகிறார்.[7]

சைன சமய அறவோர்களுள் சம்பந்தர் என்றும், சம்பந்த மாமுனிவரென்றும் இருவர் வாழ்ந்திருக்கின்றனர். இவ்விருவருள் முன்னவர் திருநறுங்கொண்டை மலையையும், ஆங்கு திருக்கோலம் கொண்டுள்ள பார்சுவதேவரையும் பற்றி பதிகங்கள் பாடியவராவார். இப்பாடல்களே சம்பந்தர் பதிகம் எனப்பெறுபவையாகும். இரண்டாவது குறிக்கப் பெறும் சம்பந்த மாமுனிவர் வரையறுத்த பாட்டியல் என்னும் இலக்கண நூலை யாத்தவராவார். இவர் குணவீரபண்டிதரின் ஆசிரியருமாவார். எனவே சைவ சமய இலக்கியங்களில் காணும் அப்பர், சம்பந்தர் ஆகியோர் இவர்களிலும் வேறானவர்கள் என்பது தெளிவாகிறது. மிக்கவாறும் சைவ சமயக்குரவர்களுக்கு இந்த சமணச் சான்றோர்களின் பெயர்களே சூட்டப் பெற்றிருத்தல் வேண்டும் எனவும் கருதப்படுகிறது.[8]

பொதுவாக மேற்கூறப்பட்ட நூற்களிலுள்ள கருத்துக்களையும், மெக்கன்சிசுவடி செய்தியினையும், சைவசமய பக்தி இலக்கியங்களாகிய தேவாரம், பெரியபுராணம் ஆகியவற்றையும் ஒப்பு நோக்கினால், திருநறுங்கொண்டையுடன் தொடர்புபடுத்தப்பட்ட கதைக்குரியவர்கள் சைவசமய நாயன்மார்களாகிய திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர் என்பது நன்கு தெரியவருகிறது.

முதன் முதலாவதாக, சைவசமயக் குரவர்களாகிய அப்பர் எனப்படும் திருநாவுக்கரசர், சம்பந்தர் ஆகியோர் கி. பி. 7ஆம்

நூற்றுண்டையும், சுந்தரர் கி.பி. 8.ஆம் நூற்றுண்டையும் சார்ந்த வர்கள் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. சமணசமய அற வோர்களென்று கூறப்பெறும் அப்பரும், சம்பந்தரும் வரலாற்று நாயகர்களாகத் திகழ்ந்தவர்கள்தான் என்று கருதினுலும், அவர் கள் கி.பி. 12 ஆம் நூற்றுண்டிற்கு முன்பு வாழ்ந்தவராக இருக்க முடியாது. ஏனெனில் இவர்களுடன் தொடர்புடைய கதைக்கு ஏதுவான எந்த சான்றும் கி.பி. 12ஆம் நூற்றுண்டிற்கு முந்தியதாக இருக்கவில்லை. எனவே இருவேறு சமயத்தைச் சார்ந்த இவர்களுக் கிடையே ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு நூற்றுண்டுகள் இடை வெளி இருப்பதை நாம் நன்குணர வேண்டும்.

பெரிய புராணத்தில் திருநாவுக்கரசராகிய அப்பரது வரலாற்றைக் கூறுங்கால், முன்பு அவர் சைன சமயத்தைத் தழுவி தருமசேனர் என்னும் பெயர்பூண்டு திருப்பாதிரிப்புலியூர் (பாடலி புரம்) மடத்தின் தலைவராகத் திகழ்ந்தார் எனவும், அதன்பிறகு சூலைநோயால் மிகுந்த அல்லல்பட்டு சிவனருளால் குணமடைந்து, மீண்டும் சைவசமயத்தவரானுர் எனவும் கூறப்பட்டுள்ளது. மேலும் அவர் சமணத்தை விட்டுச் சைவசமயத்தைத் தழுவியமையால் அப்போது ஆட்சிபுரிந்த பல்லவமன்னன் அவரை நீற்றறையில் இட்டும், நஞ்சுகலந்த பாலடிசில் ஊட்டியும், யானையின் காலால் இடறச்செய்தும், கல்லுடன் இணைத்துக் கடலில் எறிந்தும் துன் பினுன் என்றும், இத்தகைய துன்பங்களை அனுபவித்தும் அவர் இறவாமலிருந்தார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அதிசயச் செயல்களைக்கண்ணுற்ற மன்னன் தானும் சமண சமயத்தை விட்டகன்று சைவனுக மாறியதோடல்லாமல், சமணப் பள்ளிகளை இடித்து, அந்த இடிபாடுகளைக்கொண்டு தனது பெயரை ஒட்டி குணபரஈஸ்வரம் என்னும் சிவன் கோயிலைக்கட்டினுன் என்றும் அறிய வருகிறேம்.[9] தேவாரப்பாடல்களில் இத்தகைய விரிவான செய்தி இடம் பெறவில்லையாயினும், திருநாவுக்கரசர் சமணராக இருந்தமை, சூலைநோயால் இன்னலுற்றமை, சிவபிரானருளால் நோய்நீங்கியமை முதலியகருத்துக்கள் காணப் படுகின்றன.

]பெரியபுராணம் குறிப்பிடும் குணபரன் என்னும் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரபல்லன் (கி.பி. 610-630) என வரலாற்றுசிரியர் கூறுவர். இவன் குணதரன் என்னும் பட்டப் பெயரினைக்கொண்டவனுவான் திருச்சி குடைவரைக்கோயிலிலுள்ள இவனது கல்வெட்டொன்று 'பிறசமயத்திலிருந்து மீண்ட இவனை இலிங்கம் காக்கட்டும்' எனக்கூறுவதை அடிப்படையாகக்கொண்டு, இவன் முன்பு சமணசமயத்தைச் சார்ந்தவன் என்றும், பின்னர் சைவனுக மாறினுன் என்றும் பகருவர்.]

சுந்தரர் அருளியதேவாரப் பதிகங்களில் அவர் பல்வேறு தலங்களிலுள்ள சிவன்கோயில்களை வணங்கிவிட்டு, பின்னர் சென்னையை அடுத்த திருவொற்றியூருக்கு வந்ததாக ஒருசெய்தி இடம் பெறுகிறது. அங்கு அவர் சங்கிலி என்னும் பெண்ணின் மீது காதலுற்று, சிவனருளால் அவளை மணந்து, அவளைப்பிரிந்து ஒருபொழுதும் திருவொற்றியூர் எல்லையைக்கடந்து செல்லமாட்டேன் எனச்சபதம் செய்ததாக அறியவருகிறோம். சிலகாலம் கழித்து அவர் திருவாரூர் திருவிழாவினைக் காணும் பேரார்வத்தால் சங்கிலியைப் பிரிந்து, திருவொற்றியூரைத்தாண்டிச் சென்றமையால் தனது இரு கண்பார்வையையும் இழக்கலானார். கண்ணிழந்த நிலையில் பல ஊர்களுக்கும் சென்று சிவபிரானின் பெருமைபாடித் தனது தவறினைப் பொறுத்தருளுமாறு இறைஞ்சியமையால், இறைவனும் அவருக்குக் கண்பார்வை அளித்து நல்வழி காட்டியதாகத் தேவாரப்பாடல்கள் கூறுகின்றன,[10] பெரிய புராணத்தில் இக்கதை மேலும் விரிவு படுத்தப்பட்டிருக்கிறது.

ஞானசம்பந்தர் வரலாற்றைக் கூறுங்கால் பெரிய புராணம், மதுரையை ஆட்சி புரிந்த கூன்பாண்டியன் என்னும் அரசன் சமண சமயத்தைச் சார்ந்திருந்தவன் என்றும், அவன் தீராத வெப்பு நோயால் துன்பமுற்றபோது சமண முனிவர்கள் அதனைத் தணிவிக்க இயலாமற்போயிற்று எனவும், அதனால் மதுரையம் பதிக்கு வந்த சம்பந்தர் ஆலவாய் ஆழல் நிறக்கடவுளைப்பாடிப்பரவி பாண்டிய மன்னனது வெப்புநோயைக் குணப்படுத்தினார் எனவும் இயம்புகிறது. மேலும் அவர் பாண்டிய மன்னனை சைவ சமயத்தவனாக்கியும் அரசனது ஆணையினால் 8000 சமணர்களைக் கழுவிலேற்றியும், அவர்களது பள்ளிகளை அழித்தும் சைவம் தழைக்க வழிகோலினார் என்றும் கூறுகிறது.[11]

பொதுவாக தேவராம், பெரிய புராணம் போன்ற இலக்கியங்களில் வரும் செய்திகள் அனைத்தையும் வரலாறு என்று எடுத்துக் கொள்ள இயலாவிடினும், அக்காலத்தில் மேற்கூறியது போன்ற சில கதைகள் வழங்கி வந்திருக்கின்றன என்பதையாவது ஏற்றுக் கொள்ள முடியும். தேவாரப் பாடல்களில் குறிக்கப்பட்ட சில கருத்துக்கள், பெரியபுராணப்பாக்களில் மிகுந்த அளவில் விரிவாக்கம் செய்யப்பட்ட கதைகளாக உருவெடுத்திருப்பதையும் காண்கிறோம். இது எவ்வாறாயினும் திருநாவுக்கரசர் சமணராக இருந்தமை, சூலை நோயால் இன்னலுற்றமை, இறையருளால் நோய் அகன்றமை, அவரைச் சுண்ணாம்பு நீற்றறையிலிட்டமை; சுந்தரர் கண்பார்வை இழந்தமை, இறைவனருளால் மீண்டும் பார்வை பெற்றமை; சம்பந்தர் பாண்டிய மன்னனது வெப்பு

நோயைக் குணப்படுத்தியமை, சமணரைப் பழித்தமை முதலிய எல்லாவற்றிற்கும் உரிய செய்திகள் தேவாரப் பாடல்களிலேயே சிறிய அளவில் கருப் பெற்றிருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை

சைவ சமய இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளுள் குறிப்பாக அப்பர் சமணராக இருந்தமை, அவர் சுண்ணும்பு நீற்றறையிலிடப்பட்டமை, சுந்தரர் கண்பார்வை பெற்றமை, சம்பந்தர் பாண்டியனது வெப்புநோய் தணித்தமை, சமணக்கோயில்கள் அழிக்கப்பட்டமை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு, பிற்காலத்தில் அப்பாண்டைநாதர் உலா போன்ற சமண இலக்கியங்களில் அப்பர் திருநறுங்கொண்டையிலுள்ள இறைவனைப் பாடிப் பரவியதால் விழிபெற்ருர் எனவும், இவரைப் போன்று சம்பந்தரும் கண்பார்வை பெற்ருர் என்றும், சோழமன்னனது தலைவலியை அப்பர் போக்கினுர் எனவும், சைவக்கோயில்கள் சமணக்கோயில்களாக மீண்டும் மாற்றம் பெற்றன எனவும், அதனுல் சினமுற்று அப்பரைச் சுந்தரரும், சம்பந்தரும் சுண்ணும்புக் காளவாயிலிட்டுக் கொன்றனர் எனவும் கதைகள் புனையப் பட்டிருக்கின்றன. எனவே இந்த கதைகளுக்கு மூலம் சைவசமய இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்டிருப்பது இனிது புலனுகும். சைவ சமயக்குரவர்களாகிய அப்பர், சம்பந்தர் ஆகியோர் மட்டுமின்றி சுந்தரரும் இக்கதைகளுடன் பிணைக்கப்பட்டிருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சைவ, வைண சமயங்கள் கி.பி. 7 ஆம் நூற்ருண்டிலிருந்து சமண, புத்த சமயங்களின் மீது காழ்ப்புணர்வு கொண்டிருந்ததை தேவாரம், திவ்வியபிரபந்தம், பெரியபுராணம் முதலிய நூல்களிலுள்ள எண்ணிறந்த பாடல்கள் எதிரொலிக்கின்றன. இந்த காழ்ப்புணர்வின் பிரதிபலிப்பைக் குறிப்பாக பெரியபுராணம் பல்வேறு புதிய கதைகளின் மூலம் மிகுதிப் படுத்திக் காட்டுகின்றது. சைவமும், வைணவமும் அதிவேகவளர்ச்சி பெற்று வலிமைமிக்க இயக்கங்களாக மாறியதை இந்த சமயநூற்கள் மட்டுமின்றி அக்காலத்தில் ஆங்காங்கு கட்டப்பெற்ற கோயில்களும், அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களும் பறைசாற்றி நிற்கின்றன. இவற்றின் வளர்ச்சியினுல் சமணமும், புத்தமும் பெரிதும் பாதிக்கப் படலாயிற்று.

சமண சமயத்தவரும் மிக்கவாறும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் தொடர்புடைய செய்திகளை தங்களுக்கேற்றவாறு மாற்றம் செய்திருக்கவேண்டும்.

திருநறுங்கொண்டையிலுள்ள பார்சுவநாதர் கி.பி. 12 ஆம் நூற்ருண்டிலிருந்து அப்பர், கனகஜினகிரியப்பர், அப்பாண்டை

நாதர் எனப்பலவாறு அழைக்கப்பெற்றிருக்கிறர். இறைவனைப் பொதுவாக ''அப்பனே, ஆண்டையே, நாதா'' என்று அழைக்கும் மரபுப்படி நறுங்கொண்டை நாயகரும், அப்பர், அப்பாண்டை நாதர் எனப்பெயர் பெற்றிருத்தல் வேண்டும். அதுவன்றி அப்பரை ஆட்கொண்டதால் தான் அப்பாண்டார் அல்லது அப்பாண்டை நாதர் என்னும் பெயர் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. இது எவ்வாருயினும் கி.பி. 12 ஆம் நூற்றுண்டில் அப்பர், அப்பாண்டை நாதர் போன்ற பெயர்கள் பார்சுவநாதருக்கு வழங்கப்பட்ட பிறகு தான், இக்கோயிலுடன் சமய அறவோர்களான அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோரைத் தொடர்பு படுத்திய கதைகள் புனையப் பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு இறைவனது பெயராகிய அப்பர், அப்பாண்டை நாதர் என்பனவற்றை சற்று பிற்காலத்தில் இங்குள்ள மக்கள் அப்பர் பெருமான் வழிபாடு செய்து பார்வை பெற்றதால்தான் இவருக்கு இப்பெயர்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் எனக்கருதி யிருக்கலாம். அந்த அடிப்படையில் புதியதாகக் கதைகளைத் தோற்றுவித்திருக்க வேண்டும். இந்த கண்பெற்ற அதிசயச் செயல் கதை மக்களிடையே புதிய உணர்வை ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

திருநறுங்கொண்டையில் வேடன் ஒருவன் கிழங்கெடுப்ப தற்காகச் சென்று தோண்டிய போது, அவனது தோண்டு கருவி பார்சுவநாதர் சிற்பத்தின் மீது பட்டு, அதிலிருந்து தோன்றிய ஒளிப்பிழம்பால் வேடன் கண்பார்வை இழந்து, மீண்டும் அருகன் அருளால் பார்வை பெற்றதாகக் கூறப்படும் செய்தியும் இந்த 12 ஆம் நூற்றுண்டிலோ அல்லது அதற்குப் பின்போ ஏற்பட்டிருக்கலாம் அதன் அடிப்படையிலும் பிற்கால மக்கள் கோயிலின் பெருமையை திறம்படக்கூறும் வகையில் அப்பர், சம்பந்தர் முதலானோர் கண் பார்வை பெற்ற கதைகளை உருவாக்கி இருக்கலாம் என்று கூறுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

அடிக்குறிப்புகள்

1. **அருகர் சிந்து**, பாடல்கள்-1-5
2. **Mackenzie manuscirpts,** No 19, Sce 7
3. **அப்பாண்டைநாதர் உலா** கண்ணி, 55
4. **அப்பாண்டைநாதர் உலா** கண்ணிகள், 313-314
5. **திருநறுங்கொண்டை தோத்திரமாலை**, அப்பர்-சம்பந்தர் பதிகங்கள்
6. **அப்பாண்டைநாதர் உலா**, பக்கம். 77
7. டி. எஸ். ஸ்ரீபால், **தமிழகத்தில் ஜைனம்**, பக். 112-113
8. டி. எஸ். ஸ்ரீபால், **தமிழகத்தில் ஜைனம்**, பக். 115-117
9. **பெரியபுராணம்**, திருநாவுக்கரசர் புராணம், பா. 38-146
10. **சுந்தரர்தேவாரம்**, திருவொற்றியூர் பதிகம், பாடல். 1-10
11. **பெரியபுராணம்**, திருஞானசம்பந்தர் புராணம், பா. 773-848

11

திருநறுங்கொண்டை பற்றிய நூல்கள்

திருநறுங்கொண்டை சிறப்புமிக்க சமணத்தலமாகத்திகழ்ந்து, மக்களது இறையுணர்வை மேற்படச் செய்யும் நிலையினை அடைந்தமையால், அத்தலத்தின் பெருமையினை ஆன்றோர் அறியும் வண்ணம் புலவர் பெருமக்கள் பல நூல்களாக வடித்துள்ளனர். இந்நூல்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தபோதிலும், அவற்றிலுள்ள பண்சுமந்த பாடல்கள் அப்போதைய சமய உணர்வினையும், சமுதாய அமைப்புகளிலிருந்த பழக்க வழக்கங்களையும் தெளிவுற எடுத்தியம்புகின்றன. இந்த தலத்தினைப் பற்றிக்கூறும் நூல்கள் **அப்பாண்டைநாதர் உலா, திருமேற்றிசை அந்தாதி திருநறுங்கொண்டை தோத்திரமாலை** என்பனவாகும்.

அப்பாண்டைநாதர் உலா.

திருநறுங்கொண்டையில் எழுந்தருளியிருக்கும் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரராகிய பார்சுவநாதர் மீது பாடப்பெற்ற உலா இலக்கியம் அப்பாண்டைநாதர் உலாவாகும். இத்தீர்த் தங்கரர் அப்பாண்டைநாதர் என அழைக்கப்பெறுவதால் அப் பெயரிலேயே உலா பாடப்பெற்றுள்ளது. இந்த இலக்கியத்தை யாத்தவர் அனந்தவிசயர் என்பவராவார். இவர் கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலோ அல்லது 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ வாழ்ந்தவர் எனக்கருதப்படுகிறது. மேலும் இவ்வுலாவில் சூடாமணி நிகண்டை இயற்றிய மண்டலபுருடரைப் பற்றியும், திருநறுங்கொண்டையில் சிறப்புற வீற்றிருந்து அருளறம் பூண்ட அறவோராகிய குணபத்திர முனிவரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளமையால், 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்பெரியோர்களது காலத்திலோ அல்லது அதற்கு சிறிது காலத்திற்குப் பின்போ அனந்த விசயர் வாழ்ந்தவர் என்பது தெளிவாகும்.

ஏட்டுச்சுவடிகளாக இருந்த அப்பாண்டைநாதர் உலாவினை மேல்சித்தாமூர் ஜினகஞ்சி மடத்திலிருந்து அமரர் ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள் மூலம் பெற்று பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்கள் சில விளக்கக் குறிப்புகளுடன் பதிப்பித்து, சென்னைப் பல்கலைக்கழகம் அதைப் புத்தக வடிவில்

வெளியிட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு இப் பகுதியில் அந்த உலா இலக்கியம் கூறும் சில செய்திகள் இடம் பெறுகின்றன.

இந்த உலா அருகன் காப்புச்செய்யுள் இரண்டு நீங்கலாக அறுநூற்று இருபது கண்ணிகளையும், இறுதியில் மூன்று வெண்பாக் களையும் கொண்டு விளங்குகிறது. அருகக் கடவுள் வாழ்த்தினை யடுத்து தீர்த்தங்கரர்களது பொற்பாதகமலங்களைப்போற்றும் பாடல்களும், கலைமகள் வாழ்த்து, அய்யனார் வாழ்த்து, தருமதேவி இயக்கி வாழ்த்து முதலியன இடம் பெறுகின்றன.

தீர்த்தங்கரரைப்போற்றும் பகுதியில் ஜினகாஞ்சி என அழைக்கப்பெறும் திருப்பருத்திக்குன்றத்திலுள்ள செம்பொற் குன்றுழ்வாராகிய வர்த்தமான மகாவீரரையும், ஆங்கு எழிற் கோலம் பூண்டுள்ள நேமிநாதர், பார்சுவநாதர், சந்திரபிரபா, பத்மபிரபா ஆகிய தீர்த்தங்கரர்களையும், அக்கோயில் வளாகத்தில் நிற்கும் குராமரத்தின் கீழுள்ள மேடையில் அமைக்கப்பட்டிருக்கும் மூன்று முனிவர்களது திருவடிகளையும் வாழ்த்தும் பாடல்கள் முதற் பகுதியை அலங்கரிக்கின்றன. அதன் பின்னர் திருப்பறம்பூராகிய கரந்தையில் குடிகொண்டிருக்கும் குந்துநாதரும், சித்தாமூரில் சிறப்புற வீற்றிருக்கும் சிங்கபுரிநாதர் (பார்சுவநாதர்), நேமிநாதர், மலைநாதர் (ஆதிநாதர்) முதலியவர்களும் வாழ்த்தப்பெறுகின்றனர். இப்பாடற் பகுதியிலிருந்து தொண்டை மண்டலத்தில் கி.பி. 16 ஆம் நூற்றுண்டில் திருப்பருத்திக்குன்றம், திருப்பறம்பூர், சித்தாமூர் ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள் பெரும் புகழ் மிக்கவையாகத் திகழ்ந்திருக்கின்றன என்பது தெள்ளிதின் விளங்கும். அடுத்தபடியாக திருநறுங்கொண்டையில் எழுந்தருளி யிருக்கும் கருமக்கடலைக் கணப்பொழுதிற் கடந்தோராகிய பார்சுவ நாதரைப்பாடிப்பரவும் பகுதியினைக் காணலாம். கொண்டை மலையின் எழில்மிக்க தோற்றத்தையும், அம்மலையில் காட்சியளிக்கும் அப்பாண்டைநாதரின் பொற்பாத நீழலில் சரண் புகுந்தோர் பெறும் ஆனந்தப் பெருவாழ்வினையும் இனிதுற எடுத்துக்கூறப் பட்டுள்ளது.

கல்விச் செல்வத்திற்குரிய கடவுளாகிய கலைமகள், மாசாத்த ஞகிய அய்யனர், தருமதேவி இயக்கி ஆகியோரையும், திருநறுங் கொண்டையுடன் தொடர்பு கொண்டிருந்த மண்டலபுருடர், குண பத்திர முனிவர் ஆகியோரையும் வாழ்த்தி வணங்கும் பாடல்கள் அடுத்தடுத்து இடம் பெற்றுள்ளன. வெள்ளைக்கமலத்தில் வீற்றி ருக்கும் கலைவாணியை அல்லும், பகலும் அகலாது சிந்தித்தால்

அழிவற்ற கல்விச்செல்வத்தினை அளிப்பாள். விரதங்களை எல்லாம் குறைவறக் கடைப்பிடித்து அருகன் அருள்நெறி கொள்பவர்களுக்கு கணதரர் வேண்டிய வரங்களை வழங்குபவர் என்றும், அங்கம், பூர்வாங்கம் முதலிய ஆகம நூற்களைக் கற்றறிந்த பெரியோர் பரவிப்பூசிக்கும் தன்மையுடையவர் பிரம்மதேவர் எனவும், கையினிற் செண்டினைக்கொண்டு யானையை வாகனமாகப்பெற்றுத் திகழும் மாசாத்தன் தீவினையகலும் வண்ணம் அருள் புரிவார் எனவும் போற்றிப் பரவப்பட்டுள்ளனர். திருநறுங்கொண்டையில் திருக்கோலம் கொண்டுள்ள தருமதேவியன்னை செம்மையான அணிகலன்களின் ஒளியைப்போன்றவள் என்றும், ஆகமங்களின் உட்பொருளாய் மலர்பவள் என்றும், எண்ணாயிரம் சமண முனிவர்களுக்கு ஏற்ற அமுதளித்தவள் எனவும், கன்னல் மொழி கூறுபவள் எனவும், கையினில் கிளியைப் பெற்றிருப்பவள் என்றும், தீயோரை அழித்து நல்லறம் பேணி அருள் பாலிப்பவள் என்றும் வாழ்த்தப் பெறுகிறாள்.

திருநறுங்கொண்டைக்கு அண்மையிலுள்ள பல்வேறு சமணந் தலங்களைப்பற்றிய செய்திகளையும், ஆங்காங்கு எழுந்தருளியுள்ள தீர்த்தங்கரர்களின் பெருமைகளையும் கொண்டைமலையின் எழில் மிக்க இயற்கையமைப்பும், அதன் வளமும், அதனை ஒட்டியுள்ள நிலப்பகுதிகளின் சிறப்பினையும் அடுத்தடுத்துள்ள பாடல்கள் திறம்பட விளக்குகின்றன.

அப்பாண்டைநாதர் உலாவின் கருப்பொருளாகிய பார்சுவநாதர் தேரில் பவனி வருதலையும், அதனைப் பல்வேறு மக்கள் கண்டு களித்தலையும், சிறுமியர் முதல் பெண்டிர் வரையுள்ளோர் பார்சுவநாதரின் புகழினைப் பாடிப்பரவுவதையும் எஞ்சியுள்ள பாடற்பகுதிகள் எழிலுற விளக்குகின்றன. முதலில் பார்சுவப்பெருமான் திருவுருவம் பல்லியங்கள் முழங்க பல்லக்கில் ஏற்றப்பட்டு பின்னர் பாங்குடன் ஆங்கு நிற்கும் தேரினில் அலங்காரம் செய்து நிறுவப்படுகிறது. அப்போது அங்கு குழுமியிருக்கும் மக்களனைவரும் சிரம் தாழ்த்தி தீர்த்தங்கரனர ஏத்திப்புகழ்கின்றனர். அப்பெருமான் தேரில் பவனிவரும் காட்சியினைக் கண்ணுற்றுப் பேதை முதலாய எழு பருவ மங்கையினர் பாடிப்பரவுகின்றனர்.

கோபுர வாயிலின் முன்பிருந்து வீதி வழியாகத்தேர் நகர்ந்து செல்லுங்கால் மாடமாளிகையில் மாண்புற நின்ற மங்கையர் மலர்கள் தூவி அருகனை வணங்குகின்றனர். அச்சமயத்தில் ஏழு வயதுப்பருவப் பேதைச்சிறுமியர் திங்கள் நிகர் முக்குடைத் தேவரின் திறம் போற்றி ஆடி மகிழ்கின்றனர். பதினொரு வயது

நிறைந்த பெதும்பையர் தாங்கள் கழங்காடிக்கொண்டிருந்ததை மறந்து விட்டு இறைவன் பெருமைகளை இனிமைபடக் கூறி தேரெதிரே வந்து கரம்கூப்பி இறைஞ்சிப் பரவுகின்றனர். இவர்களைப்போன்றே மடந்தை, அரிவை, தெரிவை, அவ்வை என்னும் வெவ்வேறு பருவங்களடைந்த பெண்மக்கள் வரிசை வரிசையாக வந்து பார்சுவநாதரின் அருமை, பெருமைகளையும், அவரது வாழ்வில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளையும் பண் நிறைந்த பாடல்களாகப் பாடியாடி மகிழ்கின்றனர். இவர்கள் இசைக்கும் பாடல்களில் சமண சமயத்தின் உட்கருத்துக்களும், சமண நெறியின் முதன்மையினையும் புலவர்பெருமான் ஆங்காங்கே விளங்க வைத்துள்ளார். மெய்ப்பொருளின் முதல்வனுகத் திகழும் அருக தேவனே நல்லறத்தின் நாயகன் எனவும், அவன் தாழ்பணிதல் நற் பலன் அளிக்கவல்லது எனவும் குறிப்பிடுகிருர். மேலும் அப் பாண்டை நாதன் அகிலமனைத்திற்கும் ஜினநாதன் எனவும்; முனிவர்களுக்கும், விண்ணவருக்கும், மண்ணகத்தவருக்கும் ஒப்புயர்வற்ற தலைவன் எனவும்; வாசுகி எனும் பாம்பணையிற் பள்ளி கொள்ளும் நீலத்திருமாலிற்கும், மயானத்தில் நீறணிந்து ஆடுகின்ற சிவபிரானுக்கும் மேலான பரம்பொருள் எனவும்; அத்தகு சிறப்பு வாய்ந்த அறவாழிஅண்ணல் கொண்டைமலையில் திருக்கோலம் கொண்டுள்ளார் எனவும் புகழ்படப் பரவியுள்ளமையைக் காணலாம். இறுதியில் அனந்தவிசயர் தாம் இயற்றிய இந்த உலாமாலையினை மக்கள் நித்தம்படித்து மெத்தப் பெருமையடையுமாறும் வேண்டுகிருர்.

திருமேற்றிசை அந்தாதி

திருமேற்றிசை அந்தாதி என்னும் நூல் காப்புச் செய்யுளுடன் நூற்றியொரு பாடல்களைக்கொண்டதாகும். இவற்றையும் பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்கள் விளக்கக்குறிப்புகளுடன் தொகுத்து அப்பாண்டைநாதர் உலா புத்தகத்தின் இறுதியில் வெளியிட்டுள்ளார். இந்த அந்தாதியினை இயற்றிய ஆசிரியரின் பெயரும், அவர் வாழ்ந்தகாலமும் அறிவதற்கில்லை. பாடல்களின் அமைப்பைக்கொண்டு இது அப்பாண்டைநாதர் உலாவிற்குப் பின்னர் யாத்ததாக இருக்கவேண்டும் என்று கூறலாம்.

திருமேற்றிசை என்பது திருநறுங்கொண்டையிலுள்ள சமணக் கோயிலுக்கு வழங்கப்பெற்று வந்த மற்ருெரு பெயராகும். இக் கோயிலில் மூலவராகிய பார்சுவநாதர் மேற்குத் திசைநோக்கி எழுந்தருளியிருப்பதனுல் இந்தகோயில் திசையின் அடிப்படையில் திருமேற்றிசை எனப்பெயர் பெறலாயிற்று. மேலும் இந்நூல் திருநறுங்கொண்டைகோயிலை திருப்பாழி, வடபாழி எனவும் குறிப்

பிடுகிறது. அதே சமயத்தில் மேற்குநோக்கி நின்றருளும் காரணத்தால் அப்பாண்டைநாதர் மேற்றிசையான், 'மேற்றிசைவீரன், குடதிசையான்' எனவும் பலவாருக அழைக்கப்பெறுகிருர். இந்த அந்தாதியின்மூலம் திருநறுங்கொண்டைக்கு திருத்தீபை (தீபை) என்னும் பெயர் இருந்தமையையும் அறியக்கிடக்கிறோம். தீபை என்பது தீபங்குடி என்னும் ஊரைக்குறிக்கும் சொல்லாக இருந்த போதிலும், திருமேற்றிசை அந்தாதி குறிப்பிடுவது நறுங் கொண்டையே அன்றி தீபங்குடியல்ல என்பது இதன்பாடல்கள் வாயிலாகத் தெரியவருகிறது.

இவ்வந்தாதிப் பாடல்கள் திருநறுங்கொண்டையிலுறையும் திருமேற்றிசைத்தெய்வம் பச்சை வண்ணத்துடன், ஞானத்தின் வடிவாகி, திசைகளையே ஆடையாகக்கொண்டு, அணிகலன்கள் எவையும் இன்றி அணியாதஅழகராய், முக்குடையுடன், ஐந்து தலைப்பாம்பின் நிழலில் நின்றவாறு காட்சியளிப்பதனைத் திறம்பட இயம்புகிறது. மேலும் மானிடராய்ப் பிறந்தவர்கள் தாங்கள் மிகுந்த அறிவுடையோம், செல்வம் உடையோம், பெருவாழ்வு உடையோம் என்றெல்லாம் எண்ணிச் செருக்குற்று இருப்பார்கள் என்றும்; இவையெல்லாம் இப்பூவுலகில் நிலையற்றவையாதலால் பன்னக நிழலில் நின்ற கேவலமூர்த்தியின் பாதம் பணிந்து அளவற்ற பேரின்பம் அடைவதே சாலச்சிறந்தது என்றும் தெளிவுற விளக்குகிறது. பாடல்கள் அனைத்திலும் நறுங்கொண்டை நாயகனின் புகழ்மணம் வீசுவதோடு, மனித சமுதாயம் நன்னெறிப் படுவதற்கு இறைமையில் நாட்டம் செலுத்தவேண்டும் என்பன போன்ற கருத்துக்கள் ஏராளம் ஆங்காங்கே விதைக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

திருநறுங்கொண்டைத் தோத்திரமாலை

திருநறுங்கொண்டைத்தலத்தினைப் பற்றிய பல பாடல்கள் 'திருநறுங்கொண்டைத் தோத்திரமாலை' என்னும் வடிவில் தொகுக்கப்பட்டுள்ளன. முன்பு ஜைன கிரந்த நிலையம் வெளியிட்டுள்ள **''தோத்திரத் திரட்டு''** என்னும் நூலில் இப்பாடல்கள் இடம்பெறுகின்றன. இந்த பாடல்களை விளக்க குறிப்புகளுடன் அப்பாண்டைநாதர் உலாவில் பின்னிணைப்பாகச் சேர்த்து பேராசிரியர் மு. சண்முகபிள்ளையவர்கள் பதிப்பித்துள்ளார்கள்.

இந்த தோத்திரமாலை திருநறுங்கொண்டைப்பதிகம், அப்பர் பதிகம், சம்பந்தர் பதிகம், அப்பாண்டைநாதர் பஞ்சகம், பாரீச நாதர் சரணப்பதிகம், சரணப்பத்து, மந்திரப்பத்து, பணவரங்கப் புத்து, மகாசாத்தையன் பதிகம் முதலிய பலபாகங்களாகப் பகுக்கப்

பட்டுள்ளன. திருநறுங்கொண்டை மலையின் இயற்கைவளம், அதன் சிறப்பு, அம்மலையைச் சுற்றியுள்ள பகுதிகளின் எழில், அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருப்புகழ் ஆகியவை பற்றி முதற்பதிகம் கூறுகிறது. இதனையடுத்து அப்பரும், சம்பந்தரும் நறுங்கொண்டைநாதரை வாழ்த்திப்பாடிய பதிகங்கள் இடம்பெறுகின்றன. இப்பதிகங்கள் அப்பரும், சம்பந்தரும் இங்குள்ள பார்சுவநாதரை வாழ்த்தி வணங்கிப்பேறு பெற்றதாகக் கூறப்படும் கதைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். இவ்விரு அறவோர்களும் அருகன் அருள்நெறியினைப் பின்பற்றிப் பிறவிப்பெருங்கடலை நீந்திக்கடக்கவேண்டுமென அறைகூவுவதாகப் பதிகங்கள் அமைத்துள்ளனர். ஏனைய பதிகங்கள் பார்சுவநாதரின் சிறப்புகளைத் தெளிவாகக்கூறும் வகையிலும், சமண நெறிகளின் சாரங்களைக்கொண்டும், பார்சுவப்பெருமானின் பாதங்களில் சரண்புகுவதைப் பெருமைபடக் கூறியும், உலகவாழ்வினின்று விடுபட்டு மெய்யறிவு பெறுவகையினைச் சித்தரிக்கும் வண்ணமும் காணப்படுகின்றன. மேற்கூறப்பட்ட நூற்கள் பல்வேறு காலங்களில் இயற்றப் பெற்றிருந்தாலும், திருநறுங்கொண்டை தொடர்ந்து சிறப்புமிக்க சமணதலமாக விளங்கி இருந்திருக்கிறதென்பதை அறிவுறுத்தப் போதிய சான்றுகளாகத் திகழ்கின்றன என்பதில் ஐயமில்லை.

12

இறுவாய்

தமிழகத்தில் முன்பு சீரும், சிறப்பும் பெற்றிலங்கிய சமண சமயம் காலப்போக்கில் பல்வேறு காரணங்களால் செல்வாக்கு இழக்கலாயிற்று. இச்சமயத்தவர் ஆங்காங்கே தோற்றுவித்த கோயில்கள் கலைக்கூடங்களாகத் திகழ்ந்ததோடு மட்டுமின்றி, மனித சமுதாயம் ஒருங்கிணைந்து செயல்படுவதற்குச் சிறந்த அமைப்புகளாகவும் விளங்கின. ஆனால் இவையும் காலச் சுழலில் கண்காணிக்கப்படாமல் இருந்து வந்துள்ளன. இவற்றைப் பாது காப்பதற்கென தனியமைப்பு இல்லாததாலும், சமண சமயத்தவர் பெரும்பான்மையற்றவர்களாக இருப்பதாலும் இக்குறையினை நிறைவு செய்வதென்பது எளிதான காரியமாக இல்லை. இதனைக் கருத்திற்கொண்டு அண்மைக்காலத்தில் தமிழகச் சமணப்பேரவை என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டு சில நற்பணிகளை மேற் கொண்டு வருகிறது.

திருநறுங்கொண்டைகோயிலின் தற்போதைய நிலை

தமிழகத்தில் வாழும் திகம்பரப்பிரிவு சமணர்கள் திருத்தலப் பயணம் மேற்கொள்ளும் தலங்களுள் முதன்மையானது திருநறுங் கொண்டையாகும். இங்கு திருவிழாக்காலங்களிலும், நற்காட்சியின் போதும், சிறப்பு வழிபாடு நாட்களிலும் மிகுதியானோர் வந்து வழிபாடு செய்கின்றனர். இதுவன்றி தினமும் வழக்கம் போல தவறாது பூசைகள் நடத்தப்பெறுவதாலும், மக்கள் வந்து சென்ற வண்ணம் இருக்கின்றனர். இவ்வாறு ஆண்டு முழுவதும் வழி பாட்டிற்குரியதாகத்திகழ்ந்த போதிலும், இந்த கோயில் சரிவரகண் காணிக்கப்படாமலேயே இருக்கிறது. பார்சுவநாதர் மண்டபக் கோயில் மட்டிலும் நன்னிலையில் உள்ளது. முன்பு வீரசங்கம் நிறுவி நன்னெறி போற்றிவந்த துறவியர் வதிந்த குகைப்பாழி பாழடைந்தும், அங்கிருந்த கற்படுக்கைகள் உடைக்கப்பெற்றும் உள்ளன. எஞ்சியுள்ள படுக்கைகள் சிலவற்றில் கோயிலுக்கு வழி பட வந்து சென்றவர்களுள் சிலர் தங்களது பெயர்களையும் பொறித்து வைத்துச் சென்றுள்ளனர். குகையின் நடுப்பகுதி பள்ளமாக இருந்தமையால் அதில் செங்கல், கருங்கல் துண்டுகளைக் கொட்டி வைத்து, அதன் இயற்கையான அமைப்பு மாற்றப்

பட்டுள்ளது. மேலும் குகையின் வாயிற்பகுதியை ஒட்டி பிற்காலத்தில் சுவர் ஒன்றும் எழுப்பப்பட்டிருக்கிறது. இதனால் குகையினுள் நுழைந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சந்திரநாதர் கருவறையின் வெளிச்சுவர்களும், விமானத்தின் மேற்பகுதியும் பல இடங்களில் உடைந்து செங்கற்கள் வெளியில் தெரியும் வண்ணம் உள்ளது. பார்சுவநாதர் சிற்பம் வடிக்கப்பட்டுள்ள பாறையின் மேலுள்ள விமானத்திலும் சுதைவடிவங்கள் சிதைந்து காணப்படுகின்றன. அழகம்மை மண்டபத்தை அடுத்துள்ள தூங்கானை மாடக்கோயில் வழிபாடின்றி பாழடைந்த நிலையிலிருக்கிறது.

சந்திரநாதர் கருவறைக்கும், உள்திருச்சுற்றுலைக்கும் இடைப்பட்ட பகுதியில் செடி, கொடிகள் வளர்ந்து புதர்மண்டிக்கிடக்கிறது. இந்த செடிகள் மேலும் பெரியனவாக வளர்ந்து கோயிலின் அடித்தளத்திற்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

உள்திருச்சுற்றுலையில் குறுக்குச்சுவர்கள் கட்டப்பட்டு அதன் முழுமையான அமைப்பும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த குறுக்குச்சுவர்களும் சிதைந்து காணப்படுகின்றன. மேலும் திருச்சுற்றுலையின் மேற்குச் சுவரை ஒட்டி அடுப்புகள் பற்றவைத்து நைவேத்தியத்திற்குரிய பொருட்கள் தயாரிக்கப்பட்டு வந்துள்ளமையால், சுவர்முழுதும் கரிபடிந்தும், அழுக்கேறியும் உள்ளது.

அப்பாண்டைநாதர் கோயிலின் வரலாற்றினை அறியப் பெரிதும் துணைபுரிபவை இங்குள்ள கல்வெட்டுக்களாகும். இவற்றுள் சில சாசனங்கள் முன்பே அழிக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ளவையும் பாதுகாக்கப்படாமல் சிறிது சிறிதாக அழிந்து வருகின்றன. குகையின் முகப்பில் பொறிக்கப்பட்ட சாசனங்கள் வெயிலினாலும், மழையினாலும் பெரும் பாதிப்பிற்குள்ளாகி இருக்கின்றன. உள் திருச்சுற்றுலையின் தென்மேற்குப் பகுதியில் தடுப்புச்சுவர் எழுப்பப்பட்டுள்ளதால், அங்குள்ள பாறையில் எழுதப்பட்டிருக்கும் சாசனங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. பல கல்வெட்டுக்கள் மீது தொடர்ந்து வெள்ளையடித்து வந்திருப்பதால், அவற்றைக் கண்ணுறும் வாய்ப்புகூட இல்லாமற்போய்விடுகிறது.

கோயிலுக்கு வடபுறமுள்ள தாமரைக்குளமும் தற்போது உருத்தெரியாமல் மாறியிருக்கிறது. இக்குளத்தினைச் சுற்றிக்கட்டப்பட்டிருந்த படிக்கட்டுகள் உடைந்தும், சிதறியும் காணப்படுகின்றன. முன்பு இந்தகுளத்திலுள்ள நன்னீரைக்கொண்டுதான் பார்சுவப் பெருமானுக்கு அபிடேகம் செய்வது வழக்கமாகும். இந்த குளம் சீர்

கேடுற்றதிலிருந்து இதன் தண்ணீரைப் பயன்படுத்துவதை நிறுத்தியிருக்கின்றனர். இக்குளத்தைச் சரிசெய்து மீண்டும் நல்ல நிலைக்குக்கொண்டு வரவேண்டியது வரவேற்கத்தக்க ஒன்ருகும்.

சிலைகள் திருடப்பெற்றமை

அப்பாண்டைநாதர் கோயிலில் திருவிழாக்களும், சமயச்சடங்குகளும் சிறப்புறகொண்டாடப் பெற்றுவந்தமையால், உற்சவமூர்த்தி திருவுருவங்களும் அதிகமாக செய்யப்பட்டு, அவை ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டிருக்கின்றன. வசதிபடைத்த பல பெருமக்களும் இக்கோயிலுக்கு உலோகத்திருமேனிகளை அளித்து வழிபாடு சிறந்தோங்குவதற்குத் துணைநின்றுள்ளனர். இன்றளவும் அத்திருவுருவங்கள் கோயிலில் அழகுற விளங்குவதைக்காணலாம். ஆனல் இவற்றுள் சிலவற்றைப் பணத்தாசை பிடித்த திருடர்கள் இருமுறை திருடிச்சென்றிருக்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு பார்சுவதீர்த்தங்கரர், தருமதேவி ஆகிய இருவரது சிலைகள் திருடப்பட்டு, பின்னர் அவை மீட்கப்பட்டிருக்கின்றன. இதுபோல் சென்ற ஆண்டிலும் இருதீர்த்தங்கரர் திருவுருவங்கள் திருடப்பட்டிருக்கின்றன. காவல்துறையின் துரிதநடவடிக்கைகளினல் இவை சென்னையிலிருந்து மீட்கப்பட்டன. ஆனல் இவ்விரு திருவுருவங்களிலும் ஒருகை துண்டிக்கப்பட்டுவிட்டன. திருடியவர்கள் இவை தங்கத்தினல் செய்யப்பட்டவையாக இருக்கும் என்ற ஐயத்தில் கைகளைத் துண்டித்து ஒப்பற்ற கலைச்செல்வத்தினைச் சிதைத்துவிட்டனர். தமிழகத்தில் தலைசிறந்து விளங்கிய படிமக்கலையின் ஒப்பற்ற தன்மையினைப் பலகோயில்களில் காணப்பெறும் செப்புத் திருவுருவங்கள் திறம்பட விளக்குபவையாகும். இவற்றுள் பல திருவுருவங்கள் முன்பே வெளிநாடுகளுக்குக் கடத்தப்பட்டும், திருடர்களால் களவாடப்பட்டும் உள்ளன. எஞ்சியுள்ள அரிய கலைச்செல்வங்களையாவது கண்ணும், கருத்துமாய் காப்பது நமது கடமையாகும்.

கோயில் வருமானம்

முன்பொருகால் திருநறுங்கொண்டைக்கோயிலுக்கு ஏராளமான நிலங்கள் சொந்தமாக இருந்திருக்கின்றன. இவை காலப் போக்கில் குறைந்து, தற்போது மூன்று ஏக்கர் நஞ்சைநிலமும், ஐந்தரை ஏக்கர் புஞ்சைநிலமும் தான் எஞ்சியிருக்கிறது. இந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் கோயில் செலவுகளுக்குப் போதியதாக இல்லை. மழைவளம் குன்றியகாலத்தில் பயிர் செய்வதென்பது இயலாத காரியமாகும். இத்தகைய சிரமமான சூழ்நிலைகளிலும் கோயிலில் நித்தியவழிபாட்டினையும், திருவிழாவினையும் தடங்கலின்றி நடத்திவருகின்றனர். விழாக்காலங்களின்போதும்,

சிறப்புவழிபாடு நாட்களிலும் கோயிலுக்கு வரும் பக்தர்கள் காணிக்கை செலுத்துவது வழக்கமாகும். இந்த காணிக்கையின் பெரும்பகுதியும் விழா, வழிபாட்டுச்செலவுகளுக்குப் பயன்படுத்தப் பட்டுவருகிறது. இந்தகோயிலின் வருமானத்தை வியாபார நோக்கில் பெருக்கவேண்டியதில்லை என்றாலும், பணம்படைத்தோர் தாமாகவே முன்வந்து அறக்கட்டளைகள், நிவந்தங்கள் போன்றவை ஏற்படுத்துவது சாலச்சிறந்ததாகும். இவற்றிலிருந்து கிடைக்கப் பெறும் வருமானம் எந்தவித சிரமமின்றி வழிபாடுகளை நடத்தப் பயனுள்ளவையாக இருக்கும். பொதுமக்களும் இத்தகைய நற் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்வதற்கு முன்வர வேண்டும்.

நறுங்கொண்டையில் நற்பணிகள்

திருநறுங்கொண்டைக்குச் செல்வதற்கு முன்பு சரியான சாலை வசதிகள் இல்லாமல் இருந்திருக்கிறது. இதனைக் கருத்திற் கொண்டு முதலில் கருங்கல் சரளையிட்டசாலையும், பின்னர் தார் போடப்பட்ட சாலையும் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்தபின்னரும் இவ்வூரில் பேரேரியிலிருந்து தண்ணீர் வழிந்து செல்லும்பகுதியில் பாலம் கட்டப்படாததால், மழைக்காலங்களில் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்படலாயிற்று. வாகனங்கள் இப் பகுதியினைக் கடக்கமுடியாத நிலையும் இருந்து வந்திருக்கிறது. இந்த நிலையில் சமணப்பெருமக்கள் ஒன்றுபட்டு நன்கொடை வழங்கி நல்லமுறையில் பாலம் ஒன்றினை 1970 ஆண்டு கட்டியிருக் கின்றனர். **அப்பாண்டைநாதர் பாலம்** என அழைக்கப்பெறும் இப்பாலத்தினைக் கட்டுவதற்கு வேதாரண்யம் அனந்தராஜன் அவர் களும், பொறியாளர் சின்னத்துரை அவர்களும் பெரும்முயற்சி எடுத்துள்ளதாக அறியவருகிறோம். இதனால் எவ்வித இடையூறு மின்றி பொதுமக்கள் கோயிலை அடையமுடிகிறது.

நெடுங்காலமாக திருநறுங்கொண்டையிலுள்ள பாறைகள் உடைக்கப்பட்டு அவற்றிலுள்ள கற்கள் கட்டடங்கள் கட்டுவதற் கென வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன. நறுங்குன்றினைச் சுற்றியுள்ள பாறைகள் மட்டுமின்றி கோயில் அமைந்திருக்கும் குன்றிலும் கல்லுடைக்கும் தொழில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே சமண சமயத்தவர் ஒன்றுகூடி இக்குன்றில் கல்லுடைத்தலை நிறுத்தவேண்டும் எனவேண்டுகோள் விடுத்ததற்கிணங்க மேலும் கற்கள் உடைப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. இச்செயல் தொடர்ந்து நடைபெற்றிருந்தால் குன்றின்மீதுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கோயிலும் தானாகவே அழிந்துபட்டிருக்கும்.

நறுங்கொண்டை மலையில் முன்புபோதிய மின்சார வசதி யில்லாமையால் விழாக்காலத்தில் சிரமங்கள் ஏற்பட்டதாகக் கூறப் படுகிறது. எனவே மலையின் அடிவாரத்திலிருந்து மேற்பகுதிவரை யிலும், கோயிலினுள்ளும் மின்இணைப்பு வழங்கி விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இதனால் இரவுநேரத்திலும் எவ்வித இடையூறுமின்றி வழிபாடுகள் நடத்துவதற்கும், விழாகொண்டாடு வதற்கும் வசதி ஏற்பட்டுள்ளது.

கோயில் திருப்பணிக்குழுவும், அதன்தொண்டும்

அப்பாண்டைநாதர்கோயில் நித்தியவழிபாடுடையதாக இருந்த போதிலும், நெடுநாட்களாகப் பராமரிக்கப்படாமையால் ஆங் காங்கே பலபகுதிகள் சிதைந்துகாணப்பட்டது. எனவே இக் கோயிலைச் சீர்செய்து நன்னிலைக்கு கொண்டுவரவேண்டும் என்ற எண்ணத்தில் கோயில்திருப்பணிக்குழு ஒன்று 1979ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தமிழகத்திலுள்ள சமணப்பெருங்குடி மக்களிட மிருந்து நன்கொடை வசூலித்து நல்லபணிகள் சிலவற்றை இக்குழு செய்து கொண்டுவருகிறது.

கோயிலின் பிரகாரச்சுவர் மிகவும் பழுதுபட்டிருந்ததால் அதனைச் சீர்செய்து நல்லநிலையில் அமைக்க ஏற்பாடு செய்திருக் கிறது. தென்புறத்தில் பிரகாரச்சுவர் மேலும் விரிவுசெய்யப்பட்டு சிறப்புற கட்டப்பட்டிருக்கிறது. இக்கோயிலில் வழிபடவரும் பக்தர்களின் விருப்பத்திற்கிணங்க புதியதாக பத்மாவதியம்மன் கோயிலும், மண்டபமும் குன்றின் தென்பகுதியில் கட்டப்பட்டிருப் பதைக்காணலாம். யக்ஷிக்கென முன்பு கோயிலுடன் அமைக்கப் பட்டிருந்த தனிக்கருவறை நாளடைவில் வழிபாடின்றிப்போனதால் புதியதாகக் கோயில்ஒன்றுகட்ட வேண்டிய அவசியம் எழலாயிற்று.

விழாக்காலங்களில் வழிபடவரும் பெருந்திரளான மக்களது குடிநீர் தேவையினை நிறைவுசெய்யும் வகையில் மலைக்குச் சற்று தொலைவில் கிணறுஒன்று வெட்டப்பட்டிருக்கிறது. அண்மைக் காலத்தில் இக்கிணற்றிலிருந்து தண்ணீரைத் தேக்கிவைப்பதற் கெனத் தனியாக தொட்டிகட்டப்பட்டும், அதிலிருந்து மலைக்கு தண்ணீர் கொண்டுசெல்வதற்காக குழாய்கள் பதிக்கப்பட்டும் உள்ளன. இதனால் மலையின் மேற்பகுதிவரையிலும் தண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

அப்பாண்டார் கோயிலிலுள்ள உலோகத் திருவுருவங்கள் இருமுறை திருடப்பட்டதுபற்றி முன்பே கூறப்பட்டுள்ளது. இது போன்று மேலும் சிலைகள் திருடப்படக்கூடாதென்ற கருத்தில்,

பார்சுவநாதர் மண்டபத்தின் மேற்குச் சுவரை ஒட்டி இரும்புக் கம்பிகளால் வேலியிட்ட தனியறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த அறையில் தற்போது உற்சவமூர்த்திகளின் திருவுருவங்கள் அழகுற வைக்கப்பட்டிருக்கின்றன. கம்பிகளால் அறை அமைக்கப் பட்டிருப்பதால் வெளியிலிருந்து இச்செப்புத்திருமேனிகளைக்கண்டு களிக்கும் வாய்ப்பு உள்ளது. இந்த திருமேனிகளின் பாதுகாப்பினை முன்னிட்டு பார்சுவப்பெருமான் மண்டபத்திலிருந்து வெளிச் செல்லும் வாயிலையும் சுவர்எழுப்பி மூடியிருக்கின்றனர்.

இந்தமண்டபம் சிறிய அளவில் இருப்பதால் இங்கு காற்றோட்ட வசதி அதிகம் கிடையாது. விழாக்காலத்திலும், சிறப்பு வழி பாட்டின்போதும் மக்கள் கூட்டம் அதிகமாவதால் காற்றோட்ட மின்றி சிறிது சிரமம் ஏற்படுவதுண்டு. இதனைப்போக்கும் வகையில் மண்டபத்தின் மேற்குச்சுவரில் உள்காற்றினை வெளியிழுக்கும் மின் விசிறி (exhaust fan) அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு திருப் பணிக்குழு பல்வேறு முயற்சிகளைச் செய்து வழிபாடு செவ்வனே நடைபெற வகை செய்திருப்பது போற்றுதற்குரியதாகும்.

இன்னும் செய்யப்பட வேண்டியவை

கோயில் திருப்பணிக்குப் போதிய பொருளாதார வசதியின்மை யால், திருப்பணிக்குழு கோயிலின் எல்லா பகுதிகளையும் நல்ல நிலைக்குக்கொண்டு வருவதென்பது கடினமான காரியமாக உள்ளது. பலவசதிகள் செய்யப்பட்ட பின்பும் கோயிலின் பெரும்பகுதியும் பாழடைந்த தோற்றத்தினைத்தான் கொண்டு விளங்குகிறது. எனவே சமணசமயச் செல்வந்தர்களும், பொதுமக்களும் மனமுவந்து பொருளுதவியளித்து இக்கலைக்கோயிலை நன்னிலைக்கு கொண்டு வருவதற்கு வழிவகை செய்யவேண்டும்.

புதுப்பிக்கும் பணி

முதன் முதலாவதாக நறுங்கொண்டை மலையிலுள்ள குகைப் பாழியினைச் சீர்செய்யவேண்டியது தலையாய கடமையாகும். அருகன் திருவறம் போற்றிய அறவோர்கள் உறைந்த இக்குகை யினுள் எழுப்பப்பட்டிருக்கும் தடுப்புச்சுவர் அகற்றப்படவேண்டும். குகையின் நடுப்பகுதியில் கொட்டி நிரப்பப்பட்டுள்ள கற்கள், செங் கற்கள் ஆகியவற்றையும் அகற்றி, இப்பாழியின் இயற்கையான அமைப்பினை மீண்டும் பெறச்செய்தல் வேண்டும். பல அடுக்குகள் மாசுபடிந்திருக்கும் கற்படுக்கைகளையும் தூய்மைசெய்து நல்ல நிலைக்குக்கொணர்தல் வேண்டும். இவ்வாறு செய்வதனால் கோயி லுக்கு வருவோர் இக்குகையையும் பார்வையிட வசதியாக இருக்கும்.

சந்திரநாதர் கோயில். தூங்கானை மாடக்கோயில், விமானப் பகுதி ஆகியவை அனைத்தும் சிதைந்த நிலையிலிருப்பதால் அவற்றைப் புதுப்பிக்கும் பணிக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இவற்றைப் புதுப்பிக்கும்போது கட்டடக்கலை, தொல்லியல் ஆகிய துறைகளில் அனுபவம் பெற்றவர்களின் அறிவுரைப் படி பண்டைய கலைப்பாணி மாறுபடாமல் புதுப்பிப்பது இன்றியமையாததாகும். உள்திருச்சுற்றுலையை ஒட்டி அமைக்கப்பட்டிருக்கும் சுவர்கள் அகற்றப்பட்டு, திருச்சுற்றுலையின் முழுவடிவமும் தெரியும்படிச் செய்யவேண்டும். இந்த திருச்சுற்றுலைமட்டுமின்றி, கோயிலின் வளாகம் முழுமையுமே தூய்மையாக வைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்வது நல்லதாகும். ஆங்காங்கே வளர்ந்துவரும் செடிகள், கொடிகள், மரங்கள் ஆகியவை அகற்றப் படுவதால் எதிர்காலத்தில் இவற்றால் கோயிலுக்குப் பாதிப்பு நேரிடாது.

பாறைமுகப்பிலும், கோயிற்சுவர்களிலும் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் மேலும் சிதைவுருவண்ணம் காப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். வெயிலையும், மழையையும் தாங்கிநிற்கும் இச்சாசனங்கள் காலச்சுழலில் அழிந்துவிடாதவாறு, ரசாயனப்பொருட்கள் பூசப்பெற்று பாதுகாக்கப்படவேண்டும். இவைபோன்று பிற்காலத்தில் எழுப்பப்பட்டு தேவையற்றிருக்கும் தடுப்புச்சுவர்களையும் அகற்றி, அவை மறைத்திருக்கும் சாசனப் பகுதிகளையும் வெளிக்கொணர வேண்டும். இவ்வாறு மறைக்கப் பட்ட இடங்களில் இக்கோயில் தொடர்புடைய பல உயரிய செய்திகளும் இடம் பெற்றிருக்கலாமல்லவா?

சிலைகளைப்பதிவு செய்தல்

நம் நாட்டுக்கோயில்களிலுள்ள செப்புத்திருவுருவங்கள் திருடப் படுவதைத்தடுக்கும் முயற்சியில் அரசாங்கம் அண்மைக்காலத்தில் ஆணையொன்று பிறப்பித்துள்ளது. அதன்படி பழமை வாய்ந்த பொருட்களை நிழற்படங்கள் எடுத்து, தொல்லியல் துறையில் அவற்றைப் பதிவுசெய்ய வேண்டும். தமிழகத்தில் மாவட்டங்கள் தோறும் தொல்லியல் துறையின் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றிலுள்ள பதிவுஅலுவலர்கள் கோயில்களிலும், தனியாரிடமும் உள்ள கலைச்செல்வங்களைப் பதிவுசெய்துவருகின்றனர். திருநறுங்கொண்டையிலுள்ள உலோகத்திருமேனிகளும் இவ்வகையில் பதிவு செய்யப்படுமாயின், சிலைத்திருட்டு ஏற்பட்ட போதிலும் அவற்றைக் கண்டுபிடிப்பது எளிதான காரியமாக இருக்கும். தற்போது இதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தெரிய வருகிறது.

பேருந்து வசதியைப் பெருக்குதல்

அப்பாண்டைநாதர் கோயில் பெருநகர்களிலிருந்து தொலைவில் அமைந்துள்ள சிற்றூராக இருப்பதாலும், தேசிய நெடுஞ் சாலையினின்றும் ஒதுக்குப்புறமாக இருப்பதாலும் பேருந்து வசதி போதிய அளவில் இல்லாமல் இருந்து வருகிறது. தற்போது காலையிலும், மாலையிலும் இருபேருந்துகள் விடப்பட்டுள்ளன. இந்த பேருந்து போக்குவரத்தினை அதிகரிக்க இயலுமானால் சாதாரண நாட்களிலும் பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் இங்கு வருவ தற்குரிய வாய்ப்பு ஏற்படும். குறைவான பேருந்து வசதியிருப்ப தால்தான் வெகு தொலைவில் வாழும் சமணப்பெருமக்கள் இங்கு அடிக்கடி வந்து செல்ல முடியாத நிலையுள்ளது.

தங்கும் வசதி, உணவு விடுதி

திருவிழாக்காலத்தில் இங்கு ஏராளமானோர் வெளியூர்களி லிருந்து வந்த போதிலும், அவர்கள் தங்கியிருப்பதற்குப்போதிய வசதி இவ்வூரில் கிடையாது. மலையடிவாரத்தில் கட்டப்பட்டுள்ள நூற்றுக்கால் மண்டபம் எனும் சத்திரம் மட்டிலும் வழிபாடு செய்ய வருபவர்களுக்குச் சிறிது ஓய்வெடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பெருந்திரளாக வரும் மக்கள் கூட்டம் அனைத்திற்கும் இந்த மண்டபம் போதியதாக இருக்க முடிவதில்லை. எனவே வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்களது வசதியினை முன்னிட்டு இங்கு தங்கும் அறைகளைக்கொண்ட விடுதி கட்டுவது எதிர் காலத்தில் பயனுள்ளதாக இருக்கும். விழாக்காலம் மட்டு மின்றி எஞ்சிய நாட்களிலும் இங்கு மக்கள் வந்து தங்கி நறுங் கொண்டைக்கோயிலின் எழிலையும், சிறப்பினையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இதுபோன்று இச்சிற்றூரில் உணவு விடுதிகள் எவையும் கிடையாது. இதனால் இங்கு வருகின்ற சமணர் முன்கூட்டியே உணவைத் தயாரித்துக்கொண்டு வர வேண்டியுள்ளது. அதுவன்றி உணவிற்குரிய பொருட்களைத் தங்களுடன் கொண்டுவந்து இங்கு சமைத்து உண்ண வேண்டிய நிலைக்கும் ஆளாகின்றனர். எனவே இங்கு உணவு விடுதிகளைப் பெரிய அளவில் இல்லாவிட்டாலும், சிறியனவாகவாவது கட்டுவது மிகவும் அவசியமாகிறது. பேருந்துகள் அடிக்கடி இன்மையாலும், தங்கும் வசதி, உணவு விடுதிகள் ஆகியவை இல்லாததாலும் இக் கோயிலுக்கு வருவதற்குத் தயக்கம் காட்டும் மக்களை ஈர்க்கும் வகையில் செயல்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

X —— X

துணைநூற்பட்டியல்

கல்வெட்டுத் தொகுப்பு

1. **Annual Report on Epigraphy**, 1902, 1906, 1934-35, 1939-40
2. **Epigraphia Indica**, Vol. VII.
3. **South Indian Inscriptions**, Vol, I, V. VIII
4. **South Indian Temple Inscriptions**, Vol. I
5. **Travancore Archaeological Series**, Vol. I

ஆங்கில நூல்கள்

1. A. Chakravarti, **Jaina Literature in Tamil**. (ed, K. V. Ramesh), Revised, New Delhi, 1974
2. R. Champakalakshmi, **Jainism in south India**, (M. Litt thesis) University of Madras, 1958
3. P. B. Desai, **Jainism in south India**, Sholapur, 1957
4. A Ekambaranathan & C K. Sivaprakasam, **Jaina Inscriptionsin Tamilnadu** (A Topographical list), Madras, 1987
5. A. Ghosh (ed), **Jaina art and Architecture**, New Delhi, 1975
6. T. V Mahalingam (ed), **Mackenzie Manuscripts**, Vol. I, University of Madras, 1972
7. S. Padmanaban, **Temples of Kanyakumari District** Nagercoil, 1975
8. C. Sivaramamurti, **Panorama of Jaina Art-South India**, New Delhi, 1983

தமிழ் இலக்கியங்கள்

1. **அகநானூறு** (பதிப்பு), புலியூர்கேசிகன், சென்னை, 1960

2. **அப்பாண்டை நாதர் உலா** (பதிப்பு) மு. சண்முகம்பிள்ளை, சென்னை, 1974.

3. **குறுந்தொகை** (பதிப்பு), புலியூர்கேசிகன், சென்னை, 1970

4. **சுந்தரர்தேவாரம்** (பதிப்பு), சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, 1929

5. **ஞானசம்பந்தர் தேவாரம்** (பதிப்பு), சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, 1929

6. **திருநாவுக்கரசர் தேவாரம்** (பதிப்பு) பட்டுசாமி, திருச்சி, 1949

7. **திருமேற்றிசை அந்தாதி** (பதிப்பு), மு. சண்முகம்பிள்ளை, சென்னைப்பல்கலைக்கழகம், 1974

8. **தோத்திரத்திரட்டு** (பதிப்பு), ஏ. ஜே. அனந்தராஜய்யன், கும்பகோணம்

9. **பெரியபுராணம்** (பதிப்பு), கே. சுப்பிரமணியம், ஸ்ரீவைகுண்டம், 1974

தமிழ் நூல்கள்

1. ஏ. ஏகாம்பரநாதன், **கல்வெட்டில் சமணம்**, சென்னை, 1979

2. ஏ. ஏகாம்பரநாதன், **சித்தாமூர்வரலாறு**, மேல்சித்தாமூர், 1985

3. மு. சண்முகம்பிள்ளை, **திருநறுங்கொண்டைத்திருத்தல வரலாறு** சென்னை, 1973

4. மயிலை சீனி வேங்கடசாமி, **சமணமும் தமிழும்**, சென்னை, 1970

5. டி. எஸ். ஸ்ரீபால், **தமிழகத்தில் ஜைனம்**, சென்னை, 1975

பின்னிணைப்பு-1

கல்வெட்டு வாசகங்கள்

திருநறுங்கொண்டை கோயில் திருப்பணிக்குழுவின் வேண்டுகோளுக்கிணங்கவும், ஏராளமான சமணசமய அன்பர்களது விருப்பத்தின் பொருட்டும் அப்பாண்டைநாதர் கோயிலிலுள்ள சாசனங்களின் வாசகங்களை **ஜைன இளைஞர் மன்றம்** தாமாகத் தொகுத்து இங்கு பின்னிணைப்பாக வழங்குகிறது. இந்த மூலங்கள் தென்னிந்தியக்கல்வெட்டுத்தொகுதி எண்-7, தென்னிந்தியக்-கோயில் சாசனங்கள், பாகம் 1, திருநறுங்கொண்டைத்திருத்தல வரலாறு ஆகிய நூல்களில் முன்பே வெளியிடப் பெற்றவையாகும்.

சந்திரநாதர் கருவறைக்குத் தென்புறமுள்ள பாறையில் பொறிக்கப்பட்டுள்ள சாசனம்

ஸ்வஸ்தி ஶ்ரீ (காந்தளூர்) சாலை கலமறுத்த கோவிராஜ ராஜகேசரி பர்மர்க்கு யாண்டு 10 ஆவது . பிரநென் பிரானதி காரிச்சியார் ஐயாருன் தேவியம்மனார் இத்திருநறுங்கொண்டை .. . பூமியில்........ வானைமாயுடைய குளப்பட்டு கிடந்த நில முள்ளது திருத்தி செந்நெல் நடைக்கும் திருப்பலி ஊட்டு களுக்கும் திருவாராதனை செய்வாரிருவருக்கும் தேவ......... மா . ...ருவர்க்கு மித்தேவர் பூமியில்... .. இத் திருநறுங் கொண்டை ....யிடை கட்டு ....யாட்ட நிலத்துக்கு அதிகாரிச்சியார் ஐயருன் தேவியார் முன்செய்கின்ற நெய் வேத்தியத்திற்கு முதலாக இவ்வூர் கல்லுடைக்கு . ...ய்ய பிரான் திருநாமத்தாற் குந்தவைப்பேரேரி .. திருநாமத்தாற் தன்......திருத்திக்கொள்ள சந்திராதித்தவல் நிலநிவந்தஞ் செய்ய வறத்துத் தருக வென்ன...குட்டத்திற்கு மேற்குந்தென் பாற்கெல்லை உடும்பங்கல்லுக்கும் கொசக்கா...ம்மிடஞ்சுனைமு மலைக்கல்லுக்குக் கிழக்கும் மீதந்தெற்கிலரியிலொரு ..கெல்லை பெருமாள் கோட்டைக்குத் தெற்கு இந்நாற்பேரெல்லையிலும் நடுவுபட்ட ....

....

(எஞ்சியவை சிதைந்துள்ளது)

SII, Vol. Vii, No. 1017, **ARE,** 385-B/1902.

சந்திரநாதர் கருவறைக்குத் தென்புறமுள்ள பாறையில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

ஸ்வஸ்தி ஶ்ரீ திருமகள்போல இருநிலச்செல்வியுந் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர் சாலை கலமறுத்தருளி செங்கைவீரமுங்கங்க பாடியும் தடிகை பாடியும் நுளம்ப பாடியுங் குடமலை நாடுங்கொல்ல முங்கலிங்கமும் ஆழ்கடல் சூழ்ந்த அருநெதியீழமும் தன்னெழில் வளருழியு ளெல்லாயாண்டுந்தொழுத விளங்கும் யாண்ட செழியரை தேசுகொள்கோவிராஜ (கேசரி பன்மர்க்கு யாண்டுப) தினேழாவது (திரு) முனைப்பாடி பள்ளிச் சந்தம் திருநறுங் கொண்டை பெரிய பாழியில் ஆழ்வார்க்கும் மேலப்பள்ளி பெரிய ஶ்ரீகோயில் ஆழ்வார்க்கும் பிராந்தகன் அருமொழி

யான மும்முடிச்சோழன் ஸ்ரீராஜராஜ தேவருக்கு உத்த ரோத்ச... ..... காவிரித்தென்கரை வெண்ணாட்டில் பிரம்ம தேயம் சேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து நாரசிங்கன் ஸ்ரீயாமகந் ராமன்தேவனான சேனாதிபதி மும்முடிச்சோழ பிரம்ம மாராயன் வைத்த திருநந்தா விளக்கு இரண்டு இவ்விளக்கிரண்டினுக்குச் செய்த நில நிவந்தமாவது இவ்வூர் பெரியவேரி கீழ்ப்புலம் இந்நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை குசவன் செறுவுக்கும் ஊர்க்குண்டிலுக்கு மேற்கு தென்பாற்கெல்லை ஏரி கீழ்வாய்க்காலுக்கு வடக்கும் .... தூம்பினின்று போந்த பெருவாய்க்காலுக்கு கிழக்கும் வடபாற்கெல்லை கிழக்குப்பின்னேக்கிப்போனகை வாய்க்காலுக்கும் ஆற்றூருக் குப்போன வழி வரம்பிற்குத் தெற்கும் இவ்விசைத்த பெரு நான் கெல்லையிலு முண்ணில மொழிவின்றி பதினாறு சாண் கோலால் நூற்றறுவது குழி கொண்டதொரு மாவாக நிலம் பத்துமா இன்னிலம் பத்துமாவு மிரண்டு பள்ளிப்பூ வேற்றி விருளற இறையிலி அனுபவித்துத் திருநந்தா விளக்குச் சந்திராதித்தவல் லெரிப்பதாகவும் இவ்விரண்டு பள்ளிப்பூ வேற்று விருள போனான் இது கொண்டு நின்றான் எரிப்பதாக வும் இந்நிலத்துக்கு வந்த ஆள் அமஞ்சி ஆற்றுக்கால் செய்யுவ தாகவும் தலைநீர் கடைநீர் மிச்சப்பெறுவதாகவும் இந்நந்தா விளக்கு இரண்டுஞ் சந்திராதித்தவல் இதன்றென்றான் அறத் துக்குப் புறம் பானாகவும் கங்கையிடைகுமரியிடை எழு நூற்றுக் காதகத்தார் செய்த பாவமெல்லாங் கொள்வர் அறமறவற்க அறமல்லது துணை இல்லை.

SII, vol, vii, No. 1015, **SITI**, vol, I, No. 70, **ARE**, 385/1902.

உக்கிராண அறை நுழைவாயிலின் கிழக்குப்புறச் சுவரிலுள்ள கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு 10வது திருமுனைப்பாடி ராசராச வளநாட்டு குன்றத்தூர் நாட்டு திருநறுங்கொண்டை நாற்பத்தெண்ணாயிரப் பெரும் பள்ளியில் மேலப்பள்ளியில் இயக்ஷியார்க்கு ஆத்திப்பட்டாலகராகிய புட்பசேன தேவனு ஒரு சந்திவிளக்கு எரிப்பதாக கொல்லியூர் ஒடையான் ராஜராஜ தேவரை வேண்டிக்கொண்டு தருவித்த நிலமாவது இவ்வூர் கடைதலை நஞ்சை நிலத்தில் இருவத்து இரண்டடி கோலால் குழிநூற்றிருவது கொண்டதொருமாவாக இன்னிலம் மூன்று மாவும் இத்தேவர்க்கு சந்தி விளக்கு எரிப்பதாக விடுத்

தேன் இவை சந்திராதித்தவல் இறையிலி நடப்பதாகவும் இவை அன்றென்றான் அறத்துக்கு மறுத்தவராவர்.

SITI, vol. I, No. 76, **SII**, vol. VII, No. 1013. **ARE**, 383/1902.

சந்திரநாதர் கருவறையைச் சுற்றியுள்ள வராந்தாவின் அடிப்பகுதியிலுள்ள கல்வெட்டு.

ஸ்வஸ்தி ஸ்ரீ

வீரன் திருவறம் பேணுமெய் வீரசங்கத்தவரே
சேருங் கனகச் சினகிரியப்பர்க்குத் தெய்வமணம்
கூருந் தெரியற் குலோத்துங்க சோழன் கொடுத்தநல்லூர்
சாரும் பழனச் சிறுசாந்தை காத்த மடபதியே.

SITI, vol. I, No. 71, **ARE**, 299/1939-40.

அழிந்த நிலையிலுள்ள நித்யகல்யாணதேவர் கருவறையின் தென்புறச் சுவரில் காணப்படுவது

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச்சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்குயாண்டு 8வது இராஜராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடித் திருநறுங்கொண்டை நாற்பத்தெண்ணாயிரப் பெரும்பள்ளித் தெற்கிற் கோயிற்கச்சிநாயக தேவர்க்கும்...... .... நாட்டு உலகுடை... . ...ககளகராவராய கேணை ரையன்மன் (?) ஒரு திருநந்தாவிளக்கு எரிப்பதாக மங்கல முடையான் நயச்சநாதேவர்க் கைக்கொண்ட பசுபத்தும் ஆற்று மூர் நாட்டு உலகுடையோர் ஆன்றுழாபைடாசகரசுவைனுட(?) .... கைகொண்ட பசு ஐஞ்சும் தீபங்குடைவி ஓமைநாதன் உடையான் கைகொண்ட பசு ஐஞ்சும் ஆகபசு நாற்பது முதிரு .... தேவற்கு செல்வதாகவிட்டேன் இவை மறுப்பான் பெண்பாதகத்துக்கு அடைவாராவாரே.

SITI, Vol. I, No 80.

உள்திருச்சுற்றுலையின் தென்புறமுள்ள பாறையில் பொறிக்கப்பட்ட சாசனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ பூமாது புணர புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத் தன்னிரு பதமலர் மன்னவர் சூட மன்னிய உரிமையால் மணிமுடிசூடிச் செங்கோல் செ லு ன் று

திசைதொறும் வளர்ப்ப வெங்கலி நீக்கி மெய்யறந்தழைப்ப கலிங்க மிரியக் கடமலை நடாத்தி வலங்கொ ளாழி வரையாழி திரிய இருசுடரளவு மொருகுடை நிழற்ற விஜயாபிஷேகம் பண்ணி வீரசிம்ஹாசனத்து முக்கோக் கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரிவன் மரான திரிபுவனச்சக்கர வர்த்திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்குயாண்டு 6-வது (16வது ?) ராஜராஜ வளநாட்டு திருமுனைப்பாடிக் குன்றத்தூர் நாட்டு திருநறுங்கொண்டையில் வைகாசித் திருநாளில் திரு உத்ஸவம் எழுந்தருளும் அருமொழி தேவர்க்கும் நித்திய கல்யாண தேவர்க்கும் திருப்பள்ளிக்கு விழாப்புறமாக மலையமான் இத்திருநறுங்கொண்டையில் குந்தவை ஏரிகீழ் உடைப்பின்பாடு திருத்திவிட்ட நிலத்தில் கல்லடிச்சுப் போட்டு விட்டதாவது இக்கல்லுக்குத் தெற்கு ஏரிவரை மேற்கும் தவுகால் வரையும் கிழக்கு நஞ்சை கொண்ட வரையும் இதின் உட்பட்ட நஞ்சை நிலமும் இந்நிலத்து உள்பட மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும் மற்ற இவைக்குட்பட்ட யெப்பேற் கொத்த வர்க்கங்களும் இத்தேவர்க்கு இறையிலியாக விட்டுக் கல் வெட்டிக் கொடுத்தேன் இது சந்திராதித்தவரை செல்வதாக விடுத்தேன் இதுக்கு அன்றென்றுன் கெங்கையிடை குமரியிடை பாவஞ்செய்தவராவார் இது விக்கிரமசோழன் எழுத்து இது மலையமான் நம்பி எழுத்து இவை மடபதியாகியான் கை கொண்டு வேண்டும் பயிர் செய்வித்து இத்தேவர்க்கு விசேஷ நாள் அமுதருளிவிக்கக் கடவன் இதுக்கு ரண்டவென்றுன் அற மறந்தவன் அறமல்லது துணையில்லை.

SITI, vol. I, No. 73, **ARE**, 310/1939-40.

மலையின் அடிவாரத்தில் (படிக்கட்டிற்கு வடக்கில்) நட்டுவைக்கப்பட்டுள்ள கல்லொன்றில் காணப்படும் கல்வெட்டு.

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்தி கோனேரின்மை கொண்டான் திருநறுங்கொண்டை நாற்பத்தெண்ணுயிரப் பெரும்பள்ளி தானத்தார்க்கு தங்களூர் நாயனர் அப்பாண் டார்க்கு முன்பிலாண்டு எழுந்தளுகிற திருவைகாசித் திரு நாளுடனே நம்பேராலேயும் ஒரு திருநாள் எழுந்தருள வேணு மென்று இருங்கோளப்பாடிநாட்டு தவத்தாளன் தேவர் சொல்லுகையில் இதுக்கு உடலாக இவ்வூரில் நான்கெல்லைக்கு உட்பட்ட எல்லைக்குஉள் முன்பு இன்னுயனுருக்கு இறை யிலியான நிலத்தில் பயிரேருமற்கிடந்த நிலமுங்குடுத்துப் பயிர் செய்து கொல்லிஏந்தல் உள்பட்ட புறவுடல் முன்பு நாலாவது

கண்டுகொண்டு ஆருவது முதல் நம்பேராலே இராசாக்க ணுயகன் திருநாளென்று தைமாதத்து அத்தத்திலே தித்தமாகத் திருநாள் எழுந்தருளுவிப்பதாகச் சொன்ஞேம் இப்படிக்கு சந்திராதித்தவரை செல்வதாகக்கல்லும் வெட்டிக்கொண்டு இம் முதல்கொண்டு திருநாள் எழுந்தருளுவித்துப்போ...... ... ..
(இதற்கு கீழுள்ளபகுதி மறைந்துள்ளது)

SII. Vol, VII, No. 1014, **ARE**, 384/1902.

சந்திரநாதர் கருவறையைச் சுற்றியுள்ள வராந்தா வின் அடிப்பகுதியிலுள்ள சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்தி கோனேரின்மை கொண்டான் கூடலிலாடற்பாடி வானவன் மாதேவி புரத் தோடுங் கூடினபடியே வேறு இறு(ரு)க்கிற சிறுசாத்த நல்லூர் ஊரார்க்கு ராஜராஜ வளநாட்டுக் குன்றத்தூர் நாட்டுத் திருநறுங்கொண்டைப் பள்ளிக்கு வேண்டும் நிவந்தங்களும் அமண்பிடாரர்களுக்கும் இறுப்பதாகத்தங்களூர் நீர் நிலத்திலே ஒரு பக்கமடைய நிலம் பதிற்றுவேலிக்கு மூன்ருவது முதல் வேலி ஒன்றுக்கு இருபதின் கலமாக இறைகட்டின நெல்லு இரு நூற்றுக்கலத்திஞல் எண்கலப் பிடிபாடை இருபத்தைஞ்சு யாண்டு மூன்ருவது முதல் பள்ளிச்சந்த இறையிலியாக இட்டு வரியிலாரும் வரிக்கு கூறுசெய்வார்களும் எழுதிட்ட உள்வரி போதக காட்டச்சொன்ஞேம் இன்னிலத்துக்கு அமண்பிடாரர் கள் சொன்னபடி செய்வது இவர்கள்வசங் கடமை இறுக்க இவை குலோத்துங்க சோழ காங்கையராயன் எழுத்து இவை மீனவன் மூவேந்த வேளான் எழுத்து யாண்டு 3 நாள் 89.

SII, Vol. vii, No. 1012, **ARE**, 382/1902.

தானக சாலையின் வாயிலை ஒட்டி மேற்கிலுள்ள சுவரின் அடிப்பகுதியிலிடம் பெறும்சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு 10-வது முதல் திருமுனைப்பாடி குன்றத்தூர் நாட்டு திருநறுங்கொண்டை மேலப்பள்ளியில் பாரீஸ்வநாத ஸ்வாமிக்கு திருநந்தாவிளக்கு ஒன்றுவிட்ட நிலநிவந்தமாவது. இவ்வூர் ஏரி கீழ்புலத்தில் நீர் நிலத்தில் தேவர் அளக்கும் தடி பதிஞறு சாணிஞல் 240 குழி கொண்டதொரு மாவாக இன்னிலம் பத்துமாவும் மற்றும் பெரும்பாடிக்காவலும் தறியிறை தட்டார்பாட்டமும் ஆயமும் இதில்வரும் கடமையும் விடுத்து மற்றும் இன்னிலத்து ஆள் அமிஞ்சி பெருதாகவும் இத்

தேவற்கு சந்திராதித்தவற் செல்வதாத விட்டேன் கூடல் ஆளப் பிறந்தான் ஏழிசை மோகன் காடவராயனென் இதழிப்பார் கங்கைக்குமரியிடைப் பாவஞ்செய்தார் பாவங்கொள்வார்.

SITI, vol. I, No. 74.

சந்திரநாதர் கருவறையைச் சுற்றியுள்ள வராந்தா வின் அடிப்பகுதியிலுள்ள கல்வெட்டு.

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்ரவர்த்திகள் ஸ்ரீகுலோத் துங்க சோழதேவற்கு யாண்டு 9ஆவது ராஜராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடித் திருநறுங்கொண்டை நாற்பத்தெண்ணாயிரப் பெரும்பள்ளித் தேவர்க்குத் திருநாமத்துக்காணியாக ஆற்றூர்ப் பள்ளிச்சந்தமும் உள்ளூரும் ஏனதிமங்கலமும் நன்செய் புன் செய் தறியிறை தட்டார்ப்பாட்டமும் மற்றும் எப்பேர்பட்ட ஆயமும் ஆளமஞ்சியும் ஆடிக்கார்த்திகை பச்சை எச்சோறு அகப்பட இவ்வாண்டு முதல் ஐயன் விட்டபடியே சந்திராதித் தவல் செல்வனவாக விட்டேன் அரைசநாராயணன் ஆள்ப் பிறந்தானை வீரசேகர காடவராயனென் ஸ்வஸ்தி.

SITI, Vol. I, No. 71, **SII**, Vol. VII, No. 1011, **ARE**, 381/1902.

நித்திய கல்யாணசுவாமி கருவறைச் சுவரிலுள்ள கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன் மர்த்திரிபுவனச் சக்ரவர்த்தி கள் விக்கிரம பாண்டிய தேவர்க்குயாண்டு ... நடுவில் மண்ட லத்து மாநாயகரான வாணிக நகரத்தோம் எம்மண்டல......... யான் நாற்பத்தெண்ணாயிரப் பெரும் பள்ளியில் நாயனார் அப்பாண்டைநாயனார்... ....மருவா வாகெகராய (?) அஞ்சாவரையும் முதலான..............பெரிகசி முயிக (?)........ ....இமடநேசி எப்பேர்பட்டது வர்க்கங்களும் ஆளுவது முதல் இன்னாயனாராகிய அப்பாண்டை நாயனார்க்கு.... . ... இவர்கள் முன்பிலாண்டுயிறுக்கும் படியே இறுப்பார்களாக விட்டோம் நடுவில் மண்டலத்து மாநாயகரான வாணிகத்தார் ....தோம் (எஞ்சிய பகுதி சிதைந்துள்ளது)

SITI, Vol. I, No. 78.

கோயில் பிரகாரத்தினுள் அழிந்த நிலையிலிருந்த நித்திய கல்யாணதேவர் கருவறைச்சுவரிலுள்ள சாசனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச்சக்ரவர்த்தி விக்கிரமபாண்டிய தேவர்க்கு யாண்டு ஏழாவது ராசராச வளநாட்டு திருமுனைப் பாடி குன்றத்தூர் நாட்டு திருநறுங்கொண்டை நாற்பத் தெண்ணாயிரப் பெரும்பள்ளி நாயனாரான அப்பாண்டை நாயனாருக்கு நித்திய அமுதுபடி நடக்கும்படி இவ்வூர் நஞ்சை நிலத்தில் நிவந்தமாவது அய்யன் இருவது அடிகோலால் இரு நூறு குழிகொண்டதொரு மாவாக இம்மா ஆறு இம்மா ஆறும் இந்நாயனார்க்கு அமுதருளும்படி யிவ்வாண்டு முதல் சந்தி ராதித்தவரை விடுத்தேன் மற்றும் இக்கூற்றத்து நடுவில் மண்டலத்து உடையார் பெரிய உடையார் இம்............ யிக் குன்றத்தூர் கூற்றத்து மற்றும் தறி கடமை தட்டாரபாட்டமும் எப்பேர்பட்ட வர்க்கங்களும் வருங்கடமையும் இந்நாயனார்க்கு நித்தியபடி அமுது செய்தருளவும்படியும் ஒரு நந்தாவிளக்கு எரிப்பதாகவும் விடுத்தேன் இவை அழிவுசெய்வார் கெங்கை குமரியிடை பாவஞ்செய்தார்க்குள்ளாவார் இவை நடுவில் மண்டலத்து பெரிய உடையான் எழுத்து இது மலையநம்பி எழுத்து இது அறமறவற்க அறமல்லது துணையில்லை.

SITI, vol. I, No. 75

சந்திரநாதர் கருவறைக்குத் தென்புறமுள்ள பாறையிலுள்ள சாசனம்.

ஸ்வஸ்திஸ்ரீ திருநறுங்கொண்டைக் கீழைப்பள்ளிக்கு (கேணி) ஸ்ரீதரன் பொலியூட்டு வைத்த பொன் பதினைங் கழஞ்சு.

SII, Vol, vii, No. 1016, **ARE**, 385-A / 1902.

ஏரியின் மதகில் பொறிக்கப்பட்டுள்ள சாசனம்

மாடமதிளாறை மன்னுபுகழ்ப்பெருமா
ணீடு நறுங்கொண்டை நெல்விளையப் பீடார்ந்த
காருக்கு நேராகு மண்கையன் கார்க்கடல்போல்
ஏரிக்குத் தூம்ப மைத்தான் இன்று.

ARE, 320 / 1939-40.

மு. சண்முகம்பிள்ளை, **திருநறுங்கொண்டைத் திருத்தல வரலாறு**, பக் 22

தானக சாலையின் தென்புறமுள்ள சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு.

திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீராஜாதி ராஜதேவர்க்கு யாண்டு 13-வது முதல் திருநறுங்கொண்டை மேலிற்பள்ளி யக்ஷியாற்கு ஆதிபட்டாலகன் புப்பதேவன் ஒரு சந்திவிளக்கு எரிப்பானுக கொல்லியூருடையான் ஒப்பிலாதான் குடுத்த காசு 6, இது சந்திராதித்தவற்.

SII, vol. VII, No.1013, **SITI**, vol. I, No.81, **ARE**, 383/1902

அப்பாண்டார் கோயில் நுழைவாயிலின் மேற்பகுதியிலுள்ள கல்வெட்டு.

வண்டமிழின் பண்பும் வடநூலும் நன்குணர்ந்து
தெண்டிரைசூழ் மண்மீது சீர்பெற்றன்—கொண்டைமலை
வித்தகன ருட்கடல்மி குத்தபுகழ் வெற்பிலிசை வைத்த
குணபத்திரமுனிவன்.

திருநறுங்கொண்டைத்திருத்தல வரலாறு, பக். 24,
ARE, 302/1939-40.

அப்பாண்டைநாதர் கோயில் பிரகாரச்சுவரில் (மேற்கு) காணப்படும் கல்வெட்டு

....

திருநறுங்கொண்டைத் தெற்கில் ஸ்ரீகோயில்
திருநடை மாளிகை செய்வித்தான்
பாலையூர்ச் சிங்கனேன்..... ......

திருநறுங்கொண்டைத் திருத்தல வரலாறு, பக், 30,
ARE, 314 / 1939-40.

பிரகாரச்சுவரில் மேற்குப்புறம் சுனையை ஒட்டிக் காணப்படும் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்ரவர்த்திகள்
கோப்பெருஞ் சிங்கதேவர்க்கு யாண்டு
6வது ராசராச வளநாட்டு திருமுனைப்பாடி
குன்றத்தூர் நாட்டு திருநறுங்கொண்டை
தெற்கில் ஸ்ரீகோயில் திருநடை மாளிகை
செய்தான்...........ஐயனென்............
கக்கியராயன்..............பாங்கிமான........

SITI, Vol. I, No. 77

முகமண்டபத்தின் தென்புறமுள்ள சாசனம்

ஸ்ரீ குணபத்ராச்சார்யார் ஸ்ரீ வீரசங்க பிரதிஷ்டாச்சார்யார்

SITI. vol. I, No. 82-A

முகமண்டபத்தின் தென்புறம்
பொறிக்கப்பட்டுள்ளது

இயங்குஞ் செயலுமிருக்குஞ் செயலு மிருவினைக்குள்
முயங்குஞ் செயலுந் தவத்தே..... ......மெசந்தலே
தயங்குஞ் செயலுந் சிவன்செயலேயென்று சந்ததஞ்சா
வயங்குந் சதபத்திரத் ெ.................. ...

SITI, vol. I, No. 82-B, **ARE**, 305/1939-40.

முகமண்டபத்தின் வடபுறத்திலுள்ளது

ஸ்ரீ அறம் வளர்த்தான் மகன்
அனந்தப்பன் சதாசேர்வை

SITI, vol, I. No. 82-C.

முகமண்டபத்தின் வடபுறத்திலுள்ளது

ஸ்வஸ்தி ஸ்ரீ இந்தப் படி வெட்டுவித்தான்
திருநறுங்கொண்டைத் தட்டான்
குணவீரதேவன் பண்டிததேவன் தருமம்,

SITI, vol. I, No, 82-**D**,

சந்திரநாதர் உலோகத்திருமேனியின் பீடத்தில் எழுதப்பட்டுள்ள சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமந் ஸ்ரீகுணபத்ராச்சார்யன்
ஸ்ரீ வீரசங்க பிரதிஷ்டாச்சார்யன்,

SITI, vol. I, No.82-E,

வேறு சில திருவுருவங்களின் பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ளவை

ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீமான் திரைவித்யா சக்ரவர்த்திகள்
சமயநாத முனிஸ்வரர்
ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமந் குணபத்ராச்சார்யார்,

SITI, vol. I, No, 82-F

கோபுரத்தில் வடபுறமாக உள்ள சாசனம்

யுவ ஸ்ரீ பங்குனி மீ 2உ துதியையும்
ரேவதி நட்சத்திரமும் நாயற்று நன்னாள்
திருநறுங்கொண்டை அப்பாண்டார் கோபுரம்
கல்வேலை மட்டும் பறமசிந தேவசீயர்
மேலைதேசம் தீர்த்தவந்தனை பண்ணி இதுவே
நிமந்தம் ஆக கட்டடம் முகிஞ்சது தர்மம்
சிநநாகள்ளுர் சதா சேர்வை உ.

திருநறுங்கொண்டைத் திருத்தலவரலாறு, பக். 29,
ARE, 315/1939-40.

× —— ×